
# கல்வியின் அடிப்படைகள்
# Principles of Education









இலங்கைக்கல்வியின் தந்தை


**தொகுப்பாக்கம்**

திரு.வீ.கருணலிங்கம்


அதிபர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை

கலாநிதி செ.திருநாவுக்கரசு

ஓய்வுநிலைப் பிரதியதிபர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை

# கல்வியின் அடிப்படைகள்

## Principles of education



### தொகுப்பாக்கம்


**திரு வீ. கருணலிங்கம்**
(Special Trained Art, BA, PGDE, MEd, SLTES - iii)
அதிபர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை

**கலாநிதி .செ திருநாவுக்கரசு**
ஓய்வுநிலைப் பிரதியதிபர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை

# நூல் விபரம்


| | | |
|---|---|---|
| நூலின் தலைப்பு | : | கல்வியின் அடிப்படைகள் |
| | | Principles of education |
| நூலாசிரியர்கள் | : | திரு.வீ.கருணலிங்கம் |
| | | கலாநிதி. செ.திருநாவுக்கரசு |
| முதற்பதிப்பு | : | 24.09.2015 |
| பதிப்புரிமை | : | நூலாசிரியர்களுக்கு |
| முகவரி | : | இல 135, கன்னாதிட்டி வீதி, |
| | | யாழ்ப்பாணம் |
| மொத்தப் பக்கங்கள் | : | 224 + 06 |
| பிரதிகள் | : | 1000 |
| விற்பனை விலை | : | ரூ. 400.00 |
| ISBN இலக்கம் | : | ISBN 978 - 955 - 42642 - 0 - 5 |


# அணிந்துரை



கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் தற்போதைய அதிபர் திரு.வீ.கருணலிங்கம் அவர்களும், இதே கலாசாலையின் ஓய்வு நிலைப் பிரதியதிபர் கலாநிதி செ.திருநாவுக்கரசு அவர்களும் இணைந்து **கல்வியின் அடிப்படை கள்** என்னும் நூலினை எழுதி வெளியிடுவது மிகவும் வரவேற்கத தக்கதும், மனமகிழ்ச்சி அளிப்பது மாகும். நூலாசிரியர்கள் இருவரும் என்மீது அன்பும், மதிப்பும் கொண்டவர்கள். அவர்கள் இருவரும் கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபராக நான் கடமையாற்றிய காலத்தில் என்னால் கலாசாலைக்கு உள்ளீர்க்கப் பட்டவர்கள். இருவரும் தத்தம் துறைசார் கற்பித்தலில் நேர்மையும், புலமையும், செயற்படு தன்மையும் கொண்டவர்கள். கலாசாலை மாணவர்களின் விருப்பத்துக்குரிய விரிவுரையாளர் களாகவும் திகழ்ந்தவர்கள். கலாசாலை நிர்வாகச் செயற்பாடுகளில் எனக்கு உதவியாய் விளங்கியவர்கள். அனைவருடனும் இன்முகத் துடன் பழகுபவர்கள். இத்தகையவர்கள் ஆசிரிய மாணவர்களின் நலன்கருதிக் கல்வியியல் சார்ந்த நூலொன்றினை எழுதியிருப்பது காலமறிந்து செய்த பேருதவியாகும். ஆசிரியர் பயிற்சி பெறுபவர் களுக்கும், பட்டப்பின் கல்வித் துறைகளில் பயில்வோருக்கும் இந்நூல் ஒரு வரப்பிரசாதமாக அமையுமென நம்புகின்றேன். ஆசிரிய மாணவர்களும், ஏனையோரும் இந்நூலினை வாங்கிப் பயன்பெற வேண்டுமென விரும்புகின்றேன். நூலாசிரியர்களின் பணி மேன்மேலும் சிறக்க வாழ்த்துகின்றேன். இவர்களது முயற்சி சமூகமளாவிய நன்மை யினைப் பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**திரு.முருகேசு பரஞ்சோதி**
**B.Sc, Dip .in. Education,SLEAS வகுப்பு 1,**
முன்னாள் அதிபர்,
கோப்பாய் ஆசிரிய கலாசாலை.
கொழும்பு
09.09.2015.

# முன்னுரை





**கல்வியின் அடிப்படைகள்** என்னும் இந்நூலானது வினா-விடை ரீதியாகவும், சில குறிப்புகளுடனும் எம்மால் எழுதப்பட்டு வெளி வருகின்றது. ஆசிரியர் கலாசாலைகள், தேசிய கல்விக் கல்லூரிகள் ஆகியவற்றில் பயிலும் மாணவர்களுக்கான பாடத்திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு, எளிமையான முறையில் மாணவர் பயன்பெறும் பொருட்டுப் பன்முகப் பரிமாணங்களுடன் இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. கல்வியியல் சார்ந்த இந்நூல் ஏதோ எங்களின் சொந்தமான தேடல்கள் எனக் கருதிவிடக்கூடாது. தேசிய கல்வி நிறுவகத்தினரின் குறிப்பிட்ட பாடத்துக்கான **ஆசிரியர் வழிகாட்டி** நூல், ஏனைய **பட்டப்பின் கல்வி டிப்புளோமாக் கற்கைக்கான நூல்கள்** மற்றும் எம்.கே.எம்.மன்சூர் அவர்களின் **கல்வித்தத்துவங்கள்** நூல், திரு.ஆ.நித்திலவர்ணன் அவர்களின் **இலங்கையில் கல்வியின் நவீன போக்குகள் (2008)** நூல் போன்றவை எமக்குப் பெரிதும் உதவியுள்ளன. இருப்பினும் கல்வி தொடர்பாகக் கற்பவர்கள் எத்தரத்தினராயினும் அவர்களுக்குத் துணை செய்யும் விதமாக மிகுந்த கவனத்துடன் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. எனவே ஆசிரியர்களும், மாணவர்களும், ஏனைய கற்றல் நாட்டமுடையோரும் இந்நூலினை வாங்கிப் பயன்பெற வேண்டுமென விரும்புகின்றோம்.

இந்நூலுக்கான அணிந்துரையைக் கோப்பாய் ஆசிரியர் கலா சாலையின் முன்னாள் அதிபரும், எமது வழிகாட்டியுமான **திரு.மு.பரஞ்சோதி** அவர்கள் வழங்கி எம்மைப் பெருமைப் படுத்தியுள்ளார். இந்நூலுக்கான விடயங்களைக் கணினி அச்சில் செம்மையுற உருவாக்கித் தந்தவர் **திருமதி.நிசந்தி பிரதீபன்** அவர்கள். இந்நூலினைக் கணினியில் ஒழுங்கமைத்துத் தந்தவர் **திரு.சூ. சஞ்ஜீவ்காந்த்** அவர்கள். இந்நூலுக்கான அட்டையினைக் கணினிமூலம் வடிவமைத்துத் தந்தவர்கள் நல்லூர், **MV கிறபிக்ஸ்** நிறுவனத்தினர். இந் நூலினை மிக அழகாக அச்சிட்டு ஒழுங்குபடுத்தித் தந்தவர்கள் ஸ்ரீ மாருதி பதிப்பகம். 555,நாவலர் வீதி யாழ்ப்பாணம். இவர்கள் அனைவருக்கும் எமது மனங்கனிந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

**- நூலாசிரியர்கள் -**

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| அணிந்துரை | - iii |
| முகவுரை | - iv |
| 01. கல்வி என்றால் என்ன? | - 01 |
| 02. கல்வித் தத்துவவியலாளர்கள் | - 10 |
| 03. பல்வேறு கல்வியியல் அணுகுமுறைகள் | - 45 |
| 04. கல்வியின் புதிய போக்கு | - 65 |
| 05. ஆசிரியரின் முகாமைத்துவ வகிபாகம் | - 75 |
| 06. சமூகமயமாக்கல், சமூகமயமாக்கல் காரணிகளின் பங்களிப்பு | - 92 |
| 07. சமூகப் பல்வகைமையும் சமூக வளங்களுக்கு ஏற்பக் கற்றல் கற்பித்தல் செயன்முறையை மேற்கொள்ளலும் | - 114 |
| 08. பாடசாலைக்கும் சமூகத்திற்கும் இடையிலான தொடர்புகள் | - 124 |
| 09. ஆசிரிய வாண்மைத்துவம் | - 129 |
| 10. இலங்கையின் கல்வி வரலாறு | - 139 |
| 11. விளைதிறன் மிக்க பாடசாலை | - 166 |
| 12. அனர்த்த முகாமைத்துவக் கல்வி | - 183 |
| 13. கலைத்திட்டம், கற்றல் - கற்பித்தல் முறைகள், கற்றல் வளங்கள் | - 192 |
| 14. கல்விசார் குறிப்புகள் | - 216 |

# 01. கல்வி என்றால் என்ன?

**01. 'கல்வி' என்பதனை வரையறை செய்க.**

"கல்வி" என்பதற்கான வரையறை நாளுக்குநாள் பெறும் அறிவு, எழுத்து, கணிப்பீடு காரணமாய்ப் புதிய புதிய அர்த்தத்தினைப் பெற்றுக் கொள்கிறது. பல்வேறு கல்வியியலாளர்கள், தத்துவவியலாளர்கள் போன்றோர் தங்கள் அனுபவங்களின் துணைகொண்டு கல்விக்கான வரைவிலக்கணங்களைத் தந்துள்ளனர். கல்வி என்பது சமூகத்தில் எப்பொழுதும் வாழக்கூடிய தகுதியை அளிப்பதும், தொழிலுக்கான சிறப்புப் பயிற்சியை அளிப்பதும், தேவையான துறைகளில் பெறு மதிமிக்க சக்தியை அளிப்பதுமாகும்.

**02. கல்வி பற்றிய வரையறையினை மேற்கொண்டவர்களின் சிந்தனைகள் எவ்வாறு காணப்படுகின்றன?**

i. "கல்வி என்பது அறிவின் பெறுமதியாகும்" **சோக்கிரட்டீஸ்** - (ஒருவரது உள்ளார்ந்த ஆற்றல் கல்வி ஆகும்)

ii. "கல்வி என்பது அழுத்தங்களிலிருந்து விடுபட்ட இயற்கையான வளர்ச்சியாகும்" -**ரூசோ**

(பிள்ளை தானே பெறும் அனுபவங்களினூடாகச் சூழலிலிருந்து கற்றுக் கொள்கிறான் என்பதே ரூசோவின் கருத்தாகும்)

iii. "எந்தவொரு சந்ததியினரும் பின்பற்றுவதற்காக அல்லது முன்னேறுவதற்காகத் தமது இளைய சந்ததியினருக்குக் கலாசாரத்தை ஒப்படைத்தலே கல்வியாகும்".

iv. "பிள்ளைக்குத் தனது சூழலில் வாழ்வதற்குத் தேவையான அனுபவங்களை வழங்குதல் கல்வியாகும்" - **ஜோன்டூயி**

"அனுபவங்களை அனுபவங்களால் அனுபவங்களுக் கேற்பப் புனரமைத்துக் கொள்வது கல்வியாகும்" -**ஜோன்டூயி**

v. "சிறு வயதில் இயற்கையில் வளரும் பிள்ளைக்கு நல்ல பயிற்சி, பழக்கவழக்கங்கள் ஆகியவற்றை வழங்கி அபிவிருத்தி செய்தலே கல்வியாகும்".

vi. "நுண்மதி, மனவெழுச்சிகள் மற்றும் உடல், உளரீதியில் முன்னேறியுள்ள மனிதன் மேற்கொள்ளும் சதாகாலச் செயற்பாடே கல்வியாகும்" -**ஹேர்மன் ஹொன் -.**

vii. "தான் வாழும் சமூகத்தில் தனக்குக் கிடைக்க வேண்டிய இடத்தைப் பெற்றுக் கொள்வதற்குரிய அனுபவங்களை வழங்குவதே கல்வியாகும்". **-ஈ.சீ.மூவர்**

viii. "யுத்தத்திலும் சமாதானத்திலும் தனித்தும், பொதுவாகவும் அனைத்துச் செயல்களையும் நீதியாகவும், முன்மாதிரியுடனும் நிறைவேற்றக் கூடிய மனிதனை உருவாக்குவதே கல்வியாகும்" **-ஜோன் மில்டன்.**

ix. "கல்வியென்பது அனுபவங்கள் பற்றித் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் புதுப்பித்தலாகும். கல்விச் செயலொழுங்கின் இலக்கும் அதுவேயாகும்." **- ஏ.மேயர்**

x. "கல்வி என்பது பிள்ளையில் உயர் மானிடப் பண்புகளைப் பயிற்றுவிப்பதற்கான திட்டமிட்ட முயற்சியாகும்."- **ஆர்.எஸ்.பீட்டர்ஸ்**

xi. "நாட்டுக்கு நன்மையளிக்கக் கூடிய சிறந்த அறிவுள்ள பிரசையை உருவாக்குவதே கல்வி" **- பிளேட்டோ.**

xii. "கல்வி மூலம் சிறந்த பிரசைகள் உருவாவது மட்டுமன்றி அவர்களைச் சிறந்த முறையில் செயற்படவும் பயிற்றுவிக்க முடிகிறது" **-த லொஸ்.**

xiii. "கல்வி என்பது ஒருவரின் தலை, உள்ளம், கைகள் ஆகியவற்றின் திறன்களை அறிந்து முழுமையாக விருத்தியடையச் செய்தலாகும்" **-மகாத்மாகாந்தி.**

**03. கல்வி பற்றிய வரையறைகளில் அடங்கியுள்ள பொதுவான அம்சங்கள் யாவை?**

i. அறிவு, திறன், மனப்பாங்கில் ஒருவர் பெற்றுக் கொள்ளும் நிலையான, தொடர்ச்சியான நடத்தைமாற்றம்.

ii. ஒரு சந்ததியினர் இன்னொரு சந்ததியினருக்குக் கலா சாரத்தைக் கையளித்தல்.

iii. நற்பிரசைகளைத் தோற்றுவித்தல்.

iv. அனுபவங்களை மீள ஒழுங்கமைத்தல்.

v. இயற்கையான முறையில் அனுபவம் பெறல்.

vi. உயர் மனிதப் பண்புகளை வழங்கல்.

vii. வாழ்க்கையை வாழச் செய்தல்.

viii. நிலையான முழுமையான விருத்தியை உடலும் உள்ளமும் அடைதல்.

ix. கற்றல் - கற்பித்தல் ஆகிய இரு விடயங்களைக் கொண்டிருத்தல்.

x. தொடர்ச்சியான வாழ்நாள் செயற்பாடாய் இருத்தல்

**04. யுனெஸ்கோவின் அறிக்கையில் வாழக்கற்றல் (Learning to be) எனக் கூறப்பட்டமையின் விளக்கம் என்ன?**

வாழ்க்கைக்குத் தேவையற்ற விடயங்களை மனனஞ் செய்யாது, அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான அறிவு, திறன், மனப்பாங்கைத் திரட்டிக் கொள்வதற்கான செயன்முறையே கல்வியாகும் என்பதே வாழக்கற்றலாகும்.

யுனெஸ்கோ அறிக்கையில் (Edgar Pourer ஒட்கார் பொரே)

**05. உலகக் கல்வி தொடர்பான ஐ. நாவின் ஜெக்ஸ் டெலர் சர்வதேச ஆணைக்குழுவின் அறிக்கை ( Learning the Treasure with in 1996) கூறும் பிரதான விடயம் யாது?**

அறிவு, திறன், மனப்பாங்கை விரிவுபடுத்தித் துரிதமாக மாற்றமடைந்து வரும் சிக்கலான ஆளிடைத் தொடர்புகளைக் கொண்ட உலகில் வாழ்வதற்கேற்ற ஆற்றலைப் பெற்றுக் கொள்வதற்கு நான்கு தூண்களை அடிப்படையாகக் கொண்ட கல்விச் செயன்முறையை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதாகும்.

**06. ஐ. நாவின் 1996 ஆம் ஆண்டைய அறிக்கையில் கூறப்பட்டுள்ள கல்வியின் நான்கு தூண்களும் எவை?**

i. அறிவதற்காகக் கற்றல் (Learning to know).

ii. செய்வதற்காகக் கற்றல் (Learning to do).

iii. இணைந்து வாழ்வதற்காகக் கற்றல் (Learning to live together).

iv. நிலைத்திருப்பதற்காகக் கற்றல் (Learning to be).

**07. கல்வியானது இயற்கைக்கேற்ப வழங்கப்படும் ஒரு செயற்றொடராகும். பிள்ளையின் கல்வியை அவரவர் ஆற்றலுக்கும் தேவைகளுக்கும் விருப்புகளுக்கும் ஏற்ப வழங்கப்பட வேண்டும் எனக் கூறியவர் யார்?**

ரூசோ

**08. கல்வி ஒரு வாழ்க்கைச் செயன்முறையன்றி, எதிர்கால வாழ்க்கைக்கான ஆயத்தமன்று என எடுத்துரைத்தவர் யார்?**

ஜோன் டூயி

**09. கல்வியின் பிரதான நோக்கமாக அமைவது புதியவற்றைச் செய்யக்கூடிய நிர்மாணத்திறனுள்ள, புத்தாக்கத் திறனுள்ள, தேடியாயும் தனிநபர்களை உருவாக்குவதாகும் எனக் கருத்துரைத்தவர் யார்?**

ஜீன் பியாஜே

**10. கல்வித் தத்துவம் என்பது யாது?**

கல்விச் செயலொழுங்கு, பாட உள்ளடக்கம், கல்வியின் பல்வேறு துறைகள், கல்வி முறையியல் ஆகியவற்றுக்குரிய எண்ணக்கருக்கள், பிரச்சினைகள் தொடர்பான கருத்துகளின் தொகுப்பினைக் கல்வித்தத்துவம் எனலாம்.

**11. கல்வியும் தத்துவமும் ஒரு நாணயத்தின் இருபக்கங்கள் எனக் கூறியவர் யார்?**

W.D றொஸ்

**12. கல்விக்கும் தத்துவத்திற்கும் இடையிலான தொடர்பை ஜே. எஸ். புரூணர் எவ்வாறு குறிப்பிட்டுள்ளார்?**

"ஒவ்வொரு கல்வி முறையும் யாதேனும் வாழ்க்கைக் கண்ணோட்டத்தின் அடிப்படையில் ஒழுங்கமைகின்றது". எனக் குறிப்பிட்டுள்ளார்.

**13. கல்வியும் தத்துவமும் தொடர்பாகக் கல்வியியலாளர்களால் முன்வைக்கப்பட்ட முக்கியமான கருத்துகள் யாவை?**

i. கல்வியானது தத்துவத்தின் செயற்படு அம்சமாகும்.

ii. கல்விக்கும் தத்துவத்திற்கும் இடையில் மிக நெருங்கிய தொடர்பு காணப்படுகிறது.

iii. தத்துவம் உண்மையை அறிவதற்கான அறிவை வளர்க்கிறது. அந்த அறிவை வளர்க்கும் பிரயோகப் பாதை கல்வியாகும்.

iv. சகல கல்வியியலாளர்களும் தத்துவவியலாளர்களாக இருக்க வேண்டும். **– றொபட் றஸ்க் )**

v. கல்விசார் பிரச்சினைகளுக்கான தீர்வுகளைக் கண்டறியச் சரியான வழி காட்டுதல்களைத் தத்துவம் வழங்குகிறது.

vi. கல்வித்துறையில் புதிய சிந்தனைகளுக்குத் தத்துவம் வழிகாட்டுகிறது.

**14. கல்வித் தத்துவவியலாளர்களின் கருத்துக்களிலும், சிந்தனை களிலும் பெரிதும் செல்வாக்குச் செலுத்தும் காரணி யாது?**

அவர்கள் வாழ்ந்த சமூகச் சூழல்

**15. கல்விக் கருமத் தொடரில் விமர்சனத்துக்கு உள்ளாகும் முக்கியமான எண்ணக்கருக்கள் யாவை?**

i. அறம் என்பது யாது?

ii. நல்லொழுக்கத்தைக் கற்பிக்க முடியுமா?

iii. கல்வியின் நோக்கம் தொழில்சார் பயிற்சிகளைப் பெற்றுக் கொடுப்பது தானா?

iv. பொருளுள்ள விதத்தில் எவ்வாறு கற்பிக்க முடியும்?

v. கற்பித்தல் என்பது புறத்தே இருந்து விடயங்களைக் கொண்டு வந்து மனத்தினுள் புகுத்துவதா? அல்லது மனத்திலுள்ள அழுத்தச் சக்திகளைக் கிளர்ந்தெழச் செய்வதா?

**16. நவீன கல்வித் தத்துவ ஞானிகளின் செயற்பாடுகள் இடம்பெறும் முக்கியமான கல்வி விடயங்கள் யாவை?**

i. கல்வி, கற்பித்தல் பயிற்சி ஆகிய எண்ணக் கருக்களைப் பகுத்தாய்தல்.

ii. கல்வியின் விடய வரையறைகள்

iii. கற்றலும் கற்பித்தலும்

iv. சமகல்வி வாய்ப்புகள்

v. கற்றலும் கற்றலுக்குத் தூண்டுதலும்

vi. அறிவும் கல்வியும்

vii. அறிவின் தன்மை

viii. பாடவிதான அபிவிருத்தி

ix. சம்பிரதாய பூர்வக் கல்வி

x. முற்போக்குக் கல்வி

xi. ஒழுக்க விழுமியக்கல்வி

xii. பொறுப்புடைமை

xiii. மனித இயல்புகள்

xiv. ஆக்கபூர்வத் தன்மை

xv. சுயாதீனத் தன்மை

**17. கல்வித் தத்துவத்தில் அடங்கியுள்ள பிரதான பிரிவுகள் எவை?**

i. அதீத பௌதீகவியல்

ii. அறிவியற் கொள்கை
iii. ஒழுக்கவியல்
iv. அளவையியல்
v. அழகியல்

**18. கல்வி வழங்கப்படும் பிரதானமுறைகள் (செயன்முறை அம்சங்கள்) யாவை?**

i. முறைசார்ந்த கல்வி
ii. முறைசாராக் கல்வி
iii. முறையில் கல்வி

**19. முறைசார்ந்த கல்வி என்றால் என்ன?**

"குறித்ததொரு படிமுறையிலான கட்டமைப்பின்படி தரங்களின் அடிப்படையில் ஆரம்பப் பாடசாலையில் தொடங்கிப் பல்கலைக்கழகம் வரையிலான விசேட திட்டமிடல்களுடன் கைத்தொழில், தொழில்சார் துறைகளையும் உள்ளடக்கிய முழுநேரக் கல்வி முறையே முறைசார்ந்த கல்வியாகும்" என பிலிப் கூம்ஸ் என்பவர் வரைவிலக்கணப்படுத்தியுள்ளார்.

i. இலங்கையில் முறைசார்ந்த கல்வியானது ஆரம்பப் பாடசாலைகளில் தரம் 1 இல் இருந்து பல்கலைக்கழகம் வரை வழங்கப்படுகிறது.

ii. பாடசாலைகளே முறைசார்ந்த கல்வியை வழங்கும் பிரதான நிறுவனமாகும்.

iii. முன்பள்ளிகள் முறைசார்ந்த கல்வியின் ஒரு பகுதியாக விளங்கினாலும், எல்லா நாடுகளிலும் ஒரே விதமாக நடைமுறைப்படுத்தப்படுவதில்லை.

iv. இலங்கையில் முன்பள்ளிகள் உள்ளூராட்சி நிறுவனங்கள் மூலமும், தனியார் மூலமும் நடத்தப்படுகின்றன. அவற்றைக் கண்காணிப்பதற்குக் கல்வி வலய மட்டங்களில் முன்பள்ளிக்கான உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் செயற்படுகின்றனர். மாகாணக் கல்வியமைச்சு மேற்பார்வை செய்கிறது. முன்பள்ளி ஆசிரியர்களுக்கு அதுவே ஊதியம் வழங்குகிறது.

v. முறைசார்ந்த கல்வியில் கலைத்திட்டம், பாடசாலை அனுமதி வயது எல்லை, வகுப்புத் தரங்கள், பாடசாலை

நேரம், பாடசாலை நிர்வாக முறை முதலான பலவற்றில் நாட்டுக்கு நாடு வேறுபாடுகள் காணப்படுகின்றன. இவை தவிர நாட்டுக்குள்ளும், காலத்துக்குக் காலமும் வேறுபாடுகள் காணப்படுகின்றன.

**20. முறைசார்ந்த கல்விக்கு எதிராக முன்வைக்கப்படும் விமர்சனங்கள் யாவை?**

i. போட்டித் தன்மை வாய்ந்தது.

ii. தேசிய மற்றும் தனியாள் தேவைகளுக்குப் பொருத்தமற்றது.

iii. பரீட்சையை மையமாகக் கொண்டது.

iv. ஏட்டுக் கல்விச் சார்பை அதிகம் கொண்டது.

**21. முறைசாராக் கல்வியை எவ்வாறு வரையறை செய்யலாம்?**

பிலிப்கூம்ஸ் என்பவரின் கூற்றின்படி "சனத்தொகையின் உபகுழுவாகிய வயதுவந்தோர் மற்றும் பிள்ளைகளுக்காக முறைசார்ந்த கல்வி முறைக்குப் புறம்பான வகையில் தெரிவு செய்யப்பட்ட யாதேனும் கற்றலை விசேடமாக வழங்குவதற்காக நடைமுறைப்படுத்தப்படும் முறைமைப்படுத்தப்பட்ட ஒழுங்கமைப்பின் கல்விச் செயன்முறைகள் அனைத்தும் முறைசாராக் கல்வி எனப்படும்".

**22. முறைசாராக் கல்வியின் விசேட பண்புகள் யாவை?**

i. பாடசாலை முறைமைக்குப் புறம்பாகச் செயற்படுதல்.

ii. பாடசாலையிலிருந்து இடைவிலகியோர், பாடசாலைக் கல்வியைப் பூர்த்தி செய்தோர், பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ளோர் முதலான அனைவருக்கும் நடைமுறைப் படுத்தப்படுதல்.

iii. வயது வரையறையின்மை (பெருமளவிற்கு) காணப்படல்.

iv. கல்வி பெறுவோரின் தேவைக்கேற்றதாய் வழங்கப்படல்.

iv. குறுங்காலத்தைக் கொண்டதாய் இருத்தல்.

v. நுட்பமுறைகளைக் கொண்டதாகவும், கூடுதலாகப் பயிற்சி அனுபவங்களாகவும் விளங்குதல்.

vi. நெகிழ்வுப் போக்குக் காணப்படல்.

vii. பல்வேறு நிறுவனங்கள் மூலம் நடைமுறைப்படுத்தப்படுதல்.

**23. இலங்கையில் முறைசாராக் கல்வியை வழங்கும் பிரதான அமைப்புகள் யாவை?**

i. அரச நிறுவனங்கள்.

ii. அரசோடு இணைந்த நிறுவனங்கள்

iii. அரசு சாரா நிறுவனங்கள்.

**24. இலங்கையில் முறைசாராக் கல்வி வழங்கும் நிறுவனங்கள் சிலவற்றைப் பட்டியலிடுக.**

i. தொழினுட்பக் கல்லூரிகள்

ii. கல்வி வலயங்களின் முறைசாராக் கல்விப் பிரிவு

iii. தேசிய கல்வி நிறுவகத்தின் முறைசாராக் கல்விப் பிரிவு

iv. சர்வதேச, இலங்கை செஞ்சிலுவைச் சங்கங்கள்

v. சர்வதேச நிதி நிறுவனங்கள் (உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி போன்றவை)

vi. யுனெஸ்கோ, UNDP, யுனிசெப் முதலான ஐ.நாவின் அமைப்புகள்

vii. சர்வோதயம், இளைஞர் சேவை மன்றங்கள், மாதர் சங்கங்கள், இளைஞர் கழகங்கள், சமய நிறுவனங்கள் போன்றவை

viii. தனியார் நிறுவனங்கள்

ix. கிராம அபிவிருத்திச் சங்கங்கள்

**25. இலங்கையின் முறைசாராக் கல்விச் செயற்பாடுகளில் இடம்பெறும் பயிற்சி நெறிகள் சிலவற்றைப் பட்டியற்படுத்துக.**

i. கணினி.

ii. தையல்.

iii. தட்டச்சு.

iv. மோட்டார் இயந்திரம் திருத்துதல்.

v. குளிர்சாதனப் பெட்டி வகைகள் திருத்துதல்.

vi. தொலைக்காட்சிப் பெட்டி திருத்துதல்.

vii. கைபேசி திருத்துதல்.

viii. மின்னிணைப்பு.

ix. மேசன் வேலை.

x. தச்சுவேலை.

xi. தகர வேலை.

xii. வெல்டிங்.

xiii. புத்தகம் கட்டுதல்.

xiv. கேக் ஐசிங்

**26. முறையில் கல்வி என்றால் என்ன?**

மனிதன் பிறப்பு முதல் இறப்புவரை முறைசார்ந்த முறையில் அல்லாது வேறு எவ்வழியிலேனும், எவ்விடத்திலேனும், எந்நேரத்திலேனும் பெற்றுக் கொள்ளும் அறிவு, அனுபவம், பயிற்சி ஆகியவை முறையில் கல்வி எனப்படும்.

**27. முறையில் கல்வியின் விசேட பண்புகள் யாவை?**

i. பாடசாலைக் கல்விக்குமுன், பாடசாலைக் கல்வி பெறும் காலத்தில், பாடசாலைக் கல்வியின் பின் சமூக வாழ்க்கையின் பல்வேறு கட்டங்களிலும், தொழிலுலகிலும் பெறும் அனுபவங்களாக அமைதல்.

ii. வாழ்நாட் செயற்பாடாக அமைதல்.

iii. குடும்பத்தினர், அயலவர்கள், சமய சமூக நிறுவனத்தினர், சமவயதுக் குழுவினர் முதலானவர்களினூடாகவும், தொடர்பாடல் சாதனங்கள் போன்றவற்றினூடாகவும் பெறுவதாக அமைதல்.


**28. முறையில் கல்விக்கான சில உதாரணங்கள் தருக.**

i. சமையலில் ஈடுபட்டுக் கொண்டே வானொலியில் சமையற்கலை பற்றிக் கேட்டறிதல்.

ii. உணவு உட்கொண்டபடி தொலைக்காட்சியில் குறிப்பிட்ட விடயந் தொடர்பான அறிவைப் பெறல்.

iii. இருவர் அரசியல்பற்றி உரையாடுகையில் அருகிலிருந்து கேட்டு விடயங்களை விளங்கிக் கொள்ளல்.

iv. பத்திரிகை, சஞ்சிகை மூலம் புதிய தகவல்களைத் தெரிந்து கொள்ளல்.



# உ. கல்வித் தத்துவவியலாளர்கள்

**1. கல்வி தொடர்பான தத்துவக் கருத்துக்களின் இருவகைப் பாகுபாடுகள் யாவை?**

i. *மேலைத்தேயக் கல்வித் தத்துவம்*

ii. *கீழைத்தேயக் கல்வித் தத்துவம்*

**2. மேலைத்தேயக் கல்வித் தத்துவ ஞானிகளில் முக்கியமான சிலரின் பெயர்களைக் குறிப்பிடுக.**

i. *பிளேட்டோ (கி.மு 427 – 347)*

ii. *சோக்கிரட்டீஸ் (கி..பி 469 – 399)*

iii. *அரிஸ்டோட்டில் (கி.மு 384 – 322)*

iv. *ஜீன் ஜக்ஸ்ரூசோ (கி.பி 1712 – 1778)*

v. *கார்ல் மாக்ஸ் (கி.பி 1818 – 1883)*

vi. *ஜோன் டூயி (கி.பி 1859 – 1952)*

vii. *பெஸ்டலோசி (கி.பி 1746 – 1826)*

viii. *கொமீனியஸ் (1592 – 1670)*

ix. *மரியா மொண்டிசோரி ( கி.பி 1870 – 1952)*

x. *பவ்லோ பிரேயர் (1921 – 1997)*

xi. *ஜீலியஸ் நியரேரே (1922 – 1999 )*

xii. *ஹோபோட் ஸ்பென்சர் (கி.பி 1820 – 1903)*

xiii. *சேர் றிச்சாட் லிவிங்ஸ்ரோன் (கி.பி 1880 – 1960)*

xiv. *பேர்டினன்ற் றசல்*

xv. *பிரடெறிக் புறோபல் (கி.பி 1782 – 1852)*

xvi. *தோமஸ் எச் ஹக்லி (கி.பி 1825 – 1895)*

xvii. *ஜோன் பிரடெரிக் ஹேபார்ட் (கி.பி 1776 – 1841)*

**3. கீழைத்தேய கல்வித் தத்துவஞானிகளில் முக்கியமான சிலரின் பெயர்களைக் குறிப்பிடுக.**

i. *மகாத்மா காந்தி (கி.பி 1869 1948)*

ii. *ஶ்ரீ அரவிந்தர் (கி.பி 1872 – 1950)*

iii. *மாவோசேதுங் (கி.பி 1893 1976)*

iv. *ரவீந்திரநாத்தாகூர் (கி.பி 1861 – 1941)*

v. *டாக்டர் ராதா கிருஷ்ணன் (கி.பி 1888 – 1975)*

vi. சுவாமி விபுலாநந்தர் (1892 – 1947)
vii. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் (கி.பி 1822 – 1879)
viii. டாக்டர் ஜி.பி மலலசேகர (கி.பி 1899 – 1973)
ix. C.W.W. கன்னங்கரா (கி.பி 1884 – 1969)
x. ஜி.கிருஸ்ணமூர்த்தி (கி.பி 1895 – 1986)

**4. பௌத்த சமயக் கல்வித் தத்துவம் கூறும் முக்கியமான கருத்துக்கள் எவை?**

i. வாழ்க்கைக்கு இன்றியமையாதது கல்வி.
ii. இவ்வுலகிலும், இறப்பின் பின்னரும் வாழ்க்கைக்கு வழிகாட்டுவது கல்வி.
iii. கல்வியால் உலகம், தனிமனிதன் பற்றிய உண்மை விளங்கும். அறிவு, திறன்,மனப்பாங்கு வளரும். ஆக்கத்திறன் வளரும்.
iv. வாழ்க்கை முழுவதும் கல்வி நீடிக்க வேண்டும்.
v. பயிற்சியால் கல்வி பெறப்படும்.
vi. சுதந்திரத்தை அளிப்பது கல்வி.
vii. உடல், உள்ளம், வாக்கு ஆகியவற்றை நல்வழிப்படுத்துவதே கல்வியின் நோக்கம்.

**5. இந்து சமயக் கல்வித் தத்துவத்தில் அடங்கியுள்ள முக்கியமான விடயங்கள் எவை?**

i. இறைவனை அடைவதற்குரிய மார்க்கங்களில் ஒன்றாகக் கல்வியறிவு விளங்குகிறது.
ii. ஒருவர்,தான் விரும்பிய எதிர்பார்ப்பினை அடைந்து கொள் வதற்குக் கல்வி உதவும்.
iii. கல்வியால் சிறப்படையவும், உள்ளத்தை உறுதி செய்யவும் முடியும்.
iv. ஞானநூல்களைக் கற்றுத் தெளியக் கல்வி அவசியம்.
v. தனியாள் ஒழுக்கமும், சமூக ஒழுக்கமும் முக்கியமான தாகையால் இதற்குக்கல்வி துணை செய்யும்.

**6. இஸ்லாமிய கல்வித் தத்துவம் காட்டும் கல்விக் கருத்துகள் யாவை?**

i. சமூகத்தின் இருபாலார்க்கும் கல்வி வழங்கப்படல் வேண்டும்.
ii. ஒருவர் தான் கற்றல், பிறருக்குக் கற்பித்தல், பிறர் கற்க உதவுதல் ஆகியவற்றில் ஈடுபடுவதைத் தவிரக் கல்வி தொடர்பாக வேறொன்றும் இல்லை. **– முகம்மது நபி (ஸல்)**
iii. அறியாதவற்றை அறிந்து கொள்ளல், உலகின் சகல விடயங்களையும் கற்றல், ஆராய்வினூடாகவும்

நம்பிக்கையூடாகவும் கல்வி வழங்கப்படல், கற்பதற்கான விடயங்கள் பலவுள என்பதை அறிந்து கற்றல் ஆகியன முக்கியம் பெறவேண்டும்.

iv. புனிதகுர்ஆனைக் கற்பதுடன் இஸ்லாமியக் கல்வி ஆரம்பமாகும்.

**7. கிறிஸ்தவக் கல்வித் தத்துவம் கூறுவன யாவை?**

i. கல்வியின் உண்மையான நோக்கம் பூரண கிறிஸ்தவத்தை அடைவதாகும்.

ii. கல்வியானது பூரணமான மனித ஆளுமையின் பயணமாகும்..

iii. உண்மையான கிறிஸ்தவர்கள் ஆக்குவதும், சமயத்தையும் நல்லொழுக்கத்தையும் கடைப்பிடிப்பதும் கல்வியின் குறிக்கோளாகும்.

**8. பண்டைய கிரேக்க தத்துவ ஞானிகளில் குருசீடமுறையில் விளங்குபவர்கள் யாவர்?**

*சோக்கிரட்டீஸ், பிளேட்டோ, அரிஸ்டோட்டல் ஆகியோர்.*

**9. 'எனது அறியாமையை அறிந்து கொள்ளக்கூடிய ஞானம் எனக்குண்டு' எனக் கூறிய தத்துவஞானி யார்?**

*சோக்கிரட்டீஸ்*

**10. 'மனிதனது பிரச்சினைகள் என்னும் கார்முகில்களை அப்பாற்றள்ளி விளக்கம் எனும் ஒளியைப் பெற்றுக் கொடுக்கும் பேரொளிக் கற்றையே தத்துவமாகும்' எனக் கூறியவர் யார்?**

*ஆர்னோல்ட் ரீட்*

**11. அறிவியல் தத்துவக் கொள்கை அல்லது இலட்சியவாத தத்துவக் கொள்கையின் முன்னோடிகள் யாவர்?**

*சோக்கிரட்டீஸ், பிளேட்டோ ஆகியோர்*

**12. சோக்கிரட்டீசின் தத்துவ ஆராய்ச்சி முறை எத்தகையது?**

*வாதமுறை ஆராய்ச்சி*

**13. மனிதரின் மூன்றுவிதமான நிலைகள் எவையெனச் சோக்கிரட்டீஸ் கருதுகிறார்?**

i. தனிமனிதக் கோட்பாட்டு நிலை (Opinion)
ii. பகுத்தறிவு நிலை (Analytieal Stage)
iii. தொகுத்தறிவு நிலை (The Synthetic Stage)

தான் அறிவு பெற்றமையை நம்பினாலும் அதற்கான காரணங்களைக் கூறவியலாத நிலை தனிமனிதக் கோட்பாடு ஆகும். திறமையான வினாக்கள் மூலம் தான் பெற்றுள்ள அறிவை வெறும் புராணக்கதையென உணர்வது பகுத்தறிவு நிலையாகும். தானாகவே சிந்தித்து உண்மையைக் கண்டறிவது தொகுத்தறி நிலையாகும்.

**14. சோக்கிரட்டீசின் கல்விசார் தத்துவத்தின் பயன்பாடுகள் யாவை?**

i. பல விடயங்களையும் விதிவருமுறையின் மூலம் ஆராய்ந்து பொதுக் கொள்கைகளை வகுக்கக் கூடியதாயிருத்தல்.
ii. பொருள் தொடர்பான கற்றலிலிருந்து விலகி மனிதன் , அரசு ஆகியன தொடர்பாகச் சிந்திக்கக் கூடியதாயிருத்தல்.
iii. விரிவுரை முறை அல்லது சொற்பொழிவு முறைக்குப் பதிலாகக் கலந்துரையாடல் முறையைப் பின்பற்ற முடிதல்.
iv. மெய் விளக்கங்களை விடுத்து உண்மையினைக் கண்டறியக் கூடியதாகச் செயற்படல்.
v. வினவுதல், உரையாடல் முறைகளைக் கற்பித்தலுக்குப் பயன்படுத்தக் கூடியதாயிருத்தல்.

**15. பிளேட்டோவின் இலட்சியவாதக் (அறிவியல்) கல்வித்தத்துவத்தில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் எவை?**

i. பண்டைய கிரேக்க நாடு பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஆளப்பட்ட சூழலில் பிளேட்டோ வாழ்ந்த எதென்ஸ் நகரை ஸ்பாட்டானியர் கைப்பற்றியமையாலும், அவர்களது ஆட்சியில் “வாழ்க்கை வாழ்வதற்கே” என்ற விதத்தில் ஆபாசவாதிகள் நடந்து கொண்டதாலும் ஒழுக்க விழுமியங்கள் சீர்குலைந்தமை.
ii. பிளேட்டோ வாழ்ந்த காலச் சமூகப்பின்னணி
iii. சீர்திருத்த வாதியான சோக்கிரட்டீசிடமிருந்து பெற்றுக் கொண்ட அறிவு.

**16. பிளேட்டோவின் இலட்சியவாதக் கல்வித்தத்துவத்தில் காணப்பட்ட முக்கியமான சிந்தனைகள் யாவை?**

i. கல்வியின் மூலம் பூரண ஒழுக்கம் நிறைந்த நபர்களை

உருவாக்குதலும், அதனூடாகத் தேசப்பற்றுடைய இலட்சிய வாத நபர்களை உருவாக்குதலும் கல்வியிற் பிரதான நோக்கங்களாகும்.

ii. உண்மை, நன்மை, அழகு ஆகியவற்றைப் பெறுவதே கல்வியின் இன்னொரு நோக்கமாகும்.

iii. பரம்பொருளைப் பற்றிய உண்மையை அறிவதே கல்வியாகும்.

iv. சாதாரண மனிதனிடம் வெளியுலகுடன் பின்னிப்பிணைந்த அபிப்பிராயமே காணப்படுகிறது. தத்துவ ஞானியிடம் காணப்படுவது அறிவாகும். அது நிலையற்ற வெளியுலகு பற்றியதல்ல. நித்தியமான உலகம் பற்றியது. அதுவே உயரிய அறிவாகும்.

v. கல்வி உண்மையின் மீது கட்டியெழுப்பப்படுதல் வேண்டும்.

vi. கல்வி மனிதனின் சமநிலையான ஆளுமையை வளரச் செய்ய வேண்டும்.

vii. கல்வி வாழ்க்கை முழுவதும் நீடித்ததாக விளங்குதல் வேண்டும்.

viii. பொதுக்கல்வியானது ஆண், பெண் அனைவருக்கும் உரியதாகும்.

ix. கல்வி தனியாள் அபிவிருத்தியை ஏற்படுத்துவதுடன் நாட்டின் அபிவிருத்தியையும் ஏற்படுத்த வேண்டும்.

x. விசேடமான கலைத்திட்டமொன்றினூடாகக் கல்வி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

**17. பிளேட்டோ சிபார்சு செய்த கல்விக்கான கலைத்திட்டத்தின் அம்சங்கள் யாவை?**

i. முறைசார்ந்த கல்வி 06 வயதில் ஆரம்பித்தல்.

ii. 06 வயதின் முன்னர் வீட்டுச் சூழலில் முன்பள்ளிக் கல்வியைப் பெறல்.

iii. ஐந்து படிநிலைகள் கொண்ட கலைத்திட்டம் பின்பற்றப்படல்.

அ. 0 – 17 வயது ⟶ ஆரம்பக் கல்வி (சங்கீதம், உடற்றொழிற்பாடுகள்ஆகியன முக்கியம். பரந்த பாடவிதானமுடைய சுயமான கல்வியாகும்)

ஆ. 17 – 20 வயது → விசேட உடல்சார் பயிற்சிக் கல்வி (உடற்பயிற்சி ஆரோக்கியமான உள்ளம்)

இ. 20 – 30 வயது → இடைநிலைக் கல்வி (கணிதம், விஞ்ஞானம், முக்கியம் வாதவியல், தர்க்கவியல் கற்றல்)

ஈ. 30 – 50 வயது → உயர் கல்வி (போர்பயிற்சி, நிருவாகப் பொறுப்புகள்,தத்துவார்த் விதிமுறை கள்)

உ. 50 வயதின்மேல் → சமூக சேவைக்கல்வி இதுவரையிலான ஞானப்பயிற்சி, செயன்முறை அனுபவங்கள் ஆகியன மூலம் நன்மை பற்றிய விதிமுறைகள் விளங்கும். எனவே நியம உலகினை விளங்கக் கூடிய சக்தி கிடைக்கும்).

iv. பொதுக் கல்வி கட்டாயமானது, அரசே கல்வி வழங்கும் பொறுப்பினை ஏற்க வேண்டும்.

v. தாய்மொழியிலேயே கல்வி புகட்ட வேண்டும்.

vi. பொருத்தமான நுழைவுத்தேர்வொன்றினைக் கல்வி மட்டங்களிடையே நடத்துதல் வேண்டும்.

**18. பிளேட்டோவின் ஆரம்பக்கல்விக் கலைத்திட்ட நடவடிக்கைகளில் கற்றல் - கற்பித்தல் முறைகள் பற்றிக் கூறப்பட்டுள்ளவை யாவை?**

i. 6 வயதுவரை நற்பழக்கங்கள், உடனலம் ஆகியவற்றில் விருத்தி.

ii. 3 – 6 வயதில் சந்தத்துக்கு இசைவான விளையாட்டுக்களைப் பழக்கல்.

iii. 6 – 17 வயதில் சங்கீதமும், தசைப்பயிற்சியும் முக்கியம். இசையின் ஒரு பகுதியாக இலக்கியம் விளங்கும். நல்லொழுக்க வளர்ச்சி முக்கியம். சித்திரம், நடனம், நாடகம் உள்ளடங்கும் கல்வி தொடக்கமாகும். வளமான வரலாற்றுக் கதைகளைக் கூறல், மெய்ப் பொருளை அடிப்படையாகக் கொண்ட கதைகளைக் கூறல், நல்ல கதைகள் மூலம் மனதைச் சீராக்கல் (தாய்மார், தாதிமார் பற்றிய கதைகள்).

iv. ஆரம்பக் கல்வியில் இராட்சதப் போர்கள், தேவர்கள் கலகங்கள் பற்றிய எதிர்மறைக் கதைகள் கூடாது. கடவுள்

நன்மையின் காரணகர்த்தா என்பதை எடுத்துக் காட்ட வேண்டும்.

v. போலச் செய்தல் (போறல்) பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

vi. இசைப்பயிற்சி, சந்தம், உடற்பயிற்சி, விளையாட்டு ஆகியன மூலம் ஆன்மாவைப் பயிற்றுவித்தல் வேண்டும்.

**19. பிளேட்டோவின் இடைநிலைக் கல்விக் கலைத்திட்டச் செயற் பாடுகள் எவ்வாறு அமைய வேண்டுமெனக் கூறப்பட்டுள்ளது?**

i. பத்து வருடங்கள் கற்றல்

ii. எண்கணிதம், கேத்திரகணிதம், வானியல், இசை, வாதவியல் போன்ற பாடங்களைக் கற்றல்.

**20. பிளேட்டோவினால் ஏதெனஸ் நகரில் அமைக்கப்பட்ட கல்விக் கழகத்தின் பெயரென்ன?**

அக்கடமியா என்னும் கலாநிலையம்.

**21. பிளேட்டோவின் அக்கடமியில் ஆசிரியர்களாகப் பணிபுரிந்தவர்கள் யாவர்?**

தியடேடஸ் Theactetus , இயடொக்ஸ் Eudexes, அரிஸ் டோட்டல் போன்றோர்.

**22. பிளேட்டோ எழுதிய முக்கியமான நூல்கள் யாவை?**

பிளேட்டோ இருபத்தைந்து நூல்கள் வரையில் எழுதி யுள்ளார். அவற்றுள் முக்கியமானவை வருமாறு

i. குடியரசு (Republic).

ii. சட்டங்கள் (The laws).

iii. புரொட்டகோரஸ் (Pratagoras)

iv. Symbosium (உண்மை, அழகு, நன்மை பற்றியதும் சோக்கிரட்டீசின் ஒழுக்கக் கோட்பாடுகள் பற்றியதும்)

v. மினோ (Meno)

vi. சோபிஸ்ற் (Shophist)

vii. தியட்டேடஸ் (Theactetus)

vii. பார்மொனடைஸ் (Parmonidas).

**23. பிளேட்டோவின் நூல்களில் கல்வி தொடர்பான கருத்துகள் இடம் பெற்ற நூல்கள் எவை?**

குடியரசு, சட்டம், மினோ, புரட்டோகோரஸ் முதலியன.

**24. பிளேட்டோவின் உரையாடல் தொடர்பாக அவர் கடைப்பிடித்த முறைகள் எவை?**

உரையாடல் முறை, விடுகதைமுறை.

**25. பிளேட்டோ சமூகத்தினரை வகுத்த மூன்றுபடி நிலைகள் எவை?**

i. இரும்பு மயமானவர்கள்
ii. வெள்ளி மயமானவர்கள்
iii. பொன் மயமானவர்கள்

**26. பிளேட்டோவின் சமூகப்பிரிவினருள் இடம்பெறுவோர் யாவர்?**

i. தத்துவஞானி அரசர்கள் (Philosopher Kings) - பொன்மய மானவர்கள்
ii. பாதுகாவலர்கள்/போர்வீரர்கள் (Guardians )- வெள்ளி மயமானவர்கள்
iii. தொழிலாளர்கள் (Laboures) அல்லது நுட்பவியலாளர்கள் (Craftsmen) - இரும்புமயமானவர்கள்.

**27. பிளேட்டோ தாம் வகுத்த சமூகத்தினரிடம் காணப்படக்கூடிய குணாம்சங்கள் எவையெனக் குறிப்பிட்டுள்ளார்?**

முதற் பகுதியினரிடம் அறிவும், இரண்டாம் பகுதியினரிடம் மனத்திட்பமும், மூன்றாம் பகுதியினரிடம் ஆசையும் காணப்படும் என்கிறார்.

**28. பிளேட்டோ வகுத்துக் கொண்ட சமூகப் பிரிவினரிடையே ஏற்படக் கூடிய மாற்றங்கள் எவையெனக் குறிப்பிட்டுள்ளார்?**

பொன்மயமான பிள்ளை, வெள்ளிமயமான தந்தைக்குப் பிறக்க வாய்ப்புண்டு. முதலிரு பகுதியினருக்கும் கல்வியின் தேவையைப் பிளேட்டோ வலியுறுத்தினார். படிநிலையாக மூன்றாவது படியிலிருந்து முதனிலைக்குச் செல்ல முடியும் என்றார். முதனிலையிலுள்ளவர்களே நாட்டை ஆளவேண்டும் என்றார். இரும்புமயமானவர்கள் நாட்டை ஆளத் தொடங்கினால் இராச்சியம் அழிந்துவிடும் என்றார்.

**29. பிளேட்டோவின் ஆசிரியர், மாணவர் ஆகியோர் யாவர்?**

பிளேட்டோவின் ஆசிரியர் சோக்கிரட்டீஸ், மாணவர் அரிஸ்டோட்டல்

**30. 'உன்னையே நீ அறிவாய்' எனக் கூறியவர் யார்?**

*பிளேட்டோவின் ஆசிரியரான சோக்கிரட்டீஸ்*

**31. பிளேட்டோ கல்வி தொடர்பாக எழுதிய நூல்களில் பிரதானமான இரண்டும் எவை?**

*குடியரசு, சட்டங்கள்*

**32. 'சட்டங்கள்' நூலைவிடக் 'குடியரசு' நூல் கொண்டுள்ள முக்கியத்துவம் யாது?**

*"சட்டங்கள்" நூலில் கல்வி தொடர்பாகக் கூறப்பட்டிருந்தாலும், "குடியரசு" நூலில் கல்வித்திட்டம் (கலைத் திட்டம்) மற்றும் சமூகப்பிரிவு ஆகியன கூறப்பட்டுள்ளதால் முக்கியத்துவம் பெறுகிறது.*

**33. பிளேட்டோவின் கல்விச் சிந்தனைகளில் அடங்கியுள்ள பிரதான விடயக் கூறுகள் எவை?**

i. *பண்பளவான விருத்தி.*
ii. *கல்வியை வழங்கும் பொறுப்பு அரசுரிமையாதல்.*
iii. *ஆண், பெண் இருசாராருக்கும் கல்வி.*
iv. *தகுதியானோருக்கு உயர்கல்வி.*
v. *முதிர்ச்சி இன்றி விஞ்ஞானம், தத்துவம் கற்பிக்காமை.*
vi. *எளிமையிலிருந்து கடினத்திற்குச் செல்லும் கலைத்திட்டம்.*
vii. *கல்விக் கருமத்தினை முறையாக ஒழுங்குபடுத்தல்.*
viii. *கட்டாயக் கல்வி.*
ix. *உயர்கல்விக்காக விசேட கலைத்திட்டம்.*
x. *பொருத்தமான பரீட்சையொன்றுக்குக் கல்வி முறை உள்ளாதல் (அளவறி, நடத்தையறிவாகிய இரண்டும்).*
xi. *கல்வி ஆயுட்கருமத் தொடராதல்.*
xii. *ஐந்து படிநிலைகளில் வழங்கப்படும் கல்வி.*
xi. *அறிவுடைய பிரசையைத் தோற்றுவிக்கும் கல்வி*
xii. *தாய்மொழிக் கல்வி.*

**34. பிளேட்டோவின் கல்வித் தத்துவம் பிற்காலத்தின் கல்வி முறையில் ஏற்படுத்திய செல்வாக்குகள் யாவை?**

i. *வாழ்நாள் கல்வி*
ii. *பிள்ளைமையக் கல்வி*

iii. விழுமியக் கல்வி
iv. ஆண், பெண் இருபாலாருக்கும் சமமான கல்வி.
v. அரச நிர்வாகத்தின் கீழ் கல்வி வழங்கப்படல்.
vi. குடும்ப அடிப்படையிலான பிரசைகள் கல்வி.
vii. ஆரம்பக் கல்விக் கற்பித்தல் முறைகளில் விளையாட்டு, நடிப்பு, இசை, போலச் செய்தல், கதை சொல்லல் போன்றவை.
viii. பொதுப் பரீட்சை முறை.
ix. தாய்மொழிமூலம் கல்வி.
x. இடைநிலைக் கல்வியில் விஞ்ஞானம், கணிதம், அளவையியல் போன்ற பாடங்கள் இடம்பெறுதல்.

**35. தொழிலாளர் கல்வி பற்றிய பிளேட்டோவின் கருத்து யாது?**

"குடியரசு" நூலில் தொழிலாளர் கல்வி பற்றிக் குறிப்பிடாத பிளேட்டோ, "சட்டங்கள்" நூலில் சிறுவயதிலிருந்தே தெரிந்த தொழிலில் தேர்ச்சியடைய வேண்டும் என்கிறார்.

**36. பிளேட்டோவின் வாழ்க்கை வரலாற்றினைச் சுருக்கமாகக் குறிப்பிடுக.**

i. பிளேட்டோ கிரேக்க தேசத்தின் ஏதென்ஸ் நகரில் கி.மு 427 இல் பிறந்தவர்.
ii. பிளேட்டோ வாழ்ந்த கால ஏதென்ஸ், ஸ்பாட்டானியருக்க அடிமைப்பட்டு, ஒழுக்க விழுமியங்கள் சிதைவுற்றுக் காணப்பட்டது.
iii. கல்தச்சர் குடியிற் பிறந்து யாரிடமும் கல்வி கற்காத சோக்கிரட்டீஸ் (கி.மு 469 399) செல்வந்தரான பிளேட்டோவின் குருவானார்.
iv. "ஆசிரியர்கள் ஞான விளக்குகள்" அவர்கள் பொருளின் பொருட்டு அறிவை விற்கக் கூடாது என்ற சோக்கிரட்டீசின் அறப் பண்பாட்டைப் பிளேட்டோ பின்பற்றி இலட்சியவாதக் கல்வித்திட்டத்தைச் சமர்ப்பித்தார்.
v. ஞானத்தில் பல படைகள் உண்டு. அதில் உச்சப் படையை அடைவதே நோக்கமாகக் கொள்ள வேண்டும். தின்பபட்ட முறையில் உளப் பயிற்சியில் ஈடுபடுவதன் மூலம் உயர்மட்ட ஞானப்படையை அடைய முடியும் என்றார் பிளேட்டோ.

vi. ஏதென்ஸ் நகர இளைஞர்களைத் திசை திருப்பியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு நஞ்சருந்தி இறந்தார் சோக்கிரட்டீஸ். தாய்நாடு தனக்களித்த தண்டனையை அவர் ஏற்றுக் கொண்டார். இது பிளேட்டோவை மிகவும் வருத்தியது. பிளேட்டோவின் 28 வயதில் சோக்கிரட்டீஸ் காலமானார்.

vii. சோக்கிரட்டீசின் மறைவுக்குச் சில வருடங்களின் பின்னர் சிசிலித்தீவுக்குச் (இத்தாலி) சென்ற பிளேட்டோ ராரென்ரனில் ஆக்கைட்டஸ் என்பவரிடம் விஞ்ஞானம் கற்றார். அங்கு பைதகரஸ் தத்துவம், கணிதம், இயற்கையியல் தொடர்பான அறிவையும் பெற்றுக் கொண்டார்.

viii. பிளேட்டோவினால் ஏதென்ஸ் நகரில் "அக்கடமியா" என்னும் கல்விக் கழகம் ஆரம்பிக்கப்பட்டது. அங்கு அவரிடம் மாணவராயிருந்த அரிஸ்டோட்டல் பின்னர் அங்கு கற்பித்தார்.

ix. "கேத்திர கணிதம் கல்லாதவன் இங்கு நுழையக் கூடாது" என அக்கடமியா வாசலில் எழுதப்பட்டிருந்தது.

x. பிளேட்டோ தனது 40வது வயதில் "குடியரசு"வையும், 70வது வயதில் சட்டங்களையும் எழுதினார்.

xi. கி.மு 347 இல் பிளேட்டோ தனது 80வது வயதில் காலமானார்.

**37. ரூசோவின் கல்வித் தத்துவம் எவ்வாறு அழைக்கப்படுகிறது?**

இயற்கைவாதக் கல்வித் தத்துவம் அல்லது பிள்ளை மையக் கல்வித் தத்துவம்

**38. ஜீன்ஜக்ஸ் ரூசோவின்** (Jean Jacques Rousseau) (1712 - 1778) **இயற்கைவாதக் கல்வித் தத்துவத்தில்** (Naturalism) **காணப்படும் முக்கியமான அம்சங்கள் யாவை?**

i. இயற்கையின் சூழலுக்கேற்ப பிள்ளை வளர வேண்டும். இயற்கைச் சூழலுடன் இணைந்து அவதானித்துக் கற்க வேண்டும்.

ii. பிள்ளையைப் பிள்ளையாகக் கருத வேண்டும். பெரிய மனிதனாகக் கருதி விடயங்களைத் திணிக்கக் கூடாது.

iii. கல்வியானது ஐந்து கட்டங்களாக வழங்கப்படல் வேண்டும்.

அ. குழந்தைப் பருவம் (பிறப்பிலிருந்து 2 வயதுவரை)

ஆ. பிள்ளைப் பருவம் (02 - 12 வயதுவரை)

இ. முன்கட்டிளமைப் பருவம் (12 - 15 வயதுவரை)

ஈ. கட்டிளமைப் பருவம் (15 - 19 வயதுவரை)

உ. வளர்ந்த பருவம் (20 வயதுக்கு மேல்)

iv. பிள்ளைக்குக் கல்வி அளிப்பதைவிடக் கல்வி பெறுவதற்கான ஆயத்த சூழலை அளிப்பது முக்கியமானது.

v. ஆசிரியரில் மாத்திரம் தங்கியிராது அவதானிப்பு, சுற்றுலா, தேடல் முதலான பல்வேறு ஊடகங்களையும் பயன்படுத்திக் கற்றல் வேண்டும்.

vi. மாணவர்களின் ஆற்றல்கள், விருப்பங்கள் ஆகியவற்றிற் கேற்பப் பாடத்திட்டத்தினைத் தயாரித்தல் வேண்டும்.

vii. தேர்ச்சிமையக் கற்பித்தல் பின்பற்றப்படல் வேண்டும்.

viii. தண்டனை முறையைத் தடை செய்ய வேண்டும்.

ix. தனியாள் கற்பித்தல் முறையில் அதிக கவனஞ் செலுத்தல் வேண்டும்.

x. பிள்ளை, தானே கண்டுபிடித்துக் கற்க உதவ வேண்டும்.

xi. பிரச்சினைகளுக்கான தீர்வுகளைப் பிள்ளைகளே காணவேண்டும்.

xii. உளவியல், மதக் கல்வி, தேசியவுணர்வு, கைவினைச் செயற்பாடுகள் ஆகியனவற்றிற்கு இடங்கொடுக்க வேண்டும்.

**39. ரூசோ, தனியாள் கல்வியைப் பெறும் ஊடகங்களாகக் குறிப்பிட்டவை யாவை?**

சுற்றாடல், மனிதர்கள், பொருட்கள்.

**40. ரூசோ எழுதிய கல்வி பற்றிய நூல் எது?**

எமிலி (Emili) - 1764

**41. ரூசோ எழுதிய சமுதாயப் புரட்சிக்கு வித்திட்ட நூல் எது?**

சமுதாய ஒப்பந்தம் (Social Contract) - 1762

**42. ரூசோவின் கல்விச் சிந்தனைகளில் செல்வாக்குச் செலுத்தியோர் யாவர்?**

பிளேட்டோ, அரிஸ்டோட்டல், ஜோன்லொக், பினீஸ், ரென்தெகார்த்த.

**43. ரூசோ, எமிலிக்கு விதந்துரைத்த கல்வித் திட்டத்தில் குழந்தைப் பருவம் பற்றிக் கூறிய விடயங்கள் யாவை?**

i. *பிறப்பிலிருந்து கல்வி தொடங்குகின்றது.*

ii. *பிள்ளைக்கு அதிக அளவு கட்டுப்பாடுகள் விதிக்கக் கூடாது.*

iii. *பிள்ளை பெறுகின்ற புதிய புதிய அனுபவங்களைப் பெற்றோர் பொறுப்பேற்க வேண்டும்.*

iv. *புலன்களினூடாக அனுபவம் பெறவும் சுதந்திரமாகச் செயற்படவும், நல்ல பழக்கவழக்கங்களை விருத்தி செய்யவும் இடமளிக்க வேண்டும்.*

v. *தனியாள் முயற்சி, உளச்சான்றற்ற போறல் ஆகியன தவிர்ந்த வேறு கற்பித்தல் தேவையில்லை.*

**44. 'எமிலிக்கு' ரூசோ சிபார்சு செய்த பிள்ளைப் பருவத்துக்கான கற்றற் செயற்பாடுகள் யாவை?**

i. *படிப்படியாக , சிறிதுசிறிதாகக் கற்றுக் கொள்ளல் வேண்டும்.*

ii. *பிள்ளைப் பருவத்தின் ஆரம்பக் கல்வி பிள்ளையின் மனதையும், இதயத்தையும் பிழைகள், பாவங்களிலிருந்து காத்துக் கொள்ளக் கூடியதான எதிர்மறைத் தன்மையைக் கொண்டிருத்தல் வேண்டும். இதற்கு உளப் பயிற்சிகளையும் நற்பழக்கங்களையும் பயிற்றுதல் வேண்டும்.*

iii. *அறம், மெய்ப் பொருள், ஒழுக்கவியல், வரலாறு, மொழி, புவியியல், உண்மைக் கதைகள், ஆகியவற்றைக் கற்பிப்பதால் பயன் கிடையாது. அதற்கேற்ற மனம் விருத்தியடையாததால் பொருள் நிறைந்த கற்றல் நிகழாது.*

vi. *விளையாட்டுச் செயற்பாடுகளினூடாகக் கல்வி வழங்கப்பட வேண்டும்.*

v. *கைகள், கால்கள், காதுகள், நாக்கு ஆகியவற்றைப் பயன்படுத்தி அனுபவங்களைப் பெறுவதனூடாக, மெது வாகக் கற்றல் வேண்டும். கற்றது கொஞ்சமானாலும் அவை யனைத்தும் எமிலிக்குச் சொந்தமானதாகும்.*

vi. *நீண்டதான பிள்ளைப் பருவத்தில் நேரத்தை விரயஞ் செய்து, உடற்றொழிற்பாடுகளினூடாக மனதைப் பயிற்றுவித்தல், உடல் உள ஆரோக்கியம் பெறல், வாய்ப்புக்களைக் கூடுதலாகப் பெற்று அனுபவம் பெறல் முக்கியமானதாகும்.*

**45. முன் கட்டிளமைப் பருவத்தில் எமிலிக்கான கற்றல் - கற்பித்தல் எவ்வாறு அமைய வேண்டுமென ரூசோ குறிப்பிட்டுள்ளார்?**

i. அறிவு துரிதமாக வளரும் பருவம் இதுவாகையால், புதுமை நாட்டம் வளரும் பருவமாகையால் புவியியல், வான சாஸ்திரம், பௌதீகவியல், விஞ்ஞானம் முதலான பாடங்களைக் கற்பிக்கலாம்.

ii. ஆசிரியர், தான் கற்பித்தலுக்கு முயலாது தனிப்பட்ட தேடியறிதல் முறை மூலம் பிள்ளை அறிவைப் பெற்றுக் கொள்ள வாய்ப்பளிக்க வேண்டும்.

iii. கண்டுபிடித்தல் முறை, செயன்முறை ஆகிய கற்பித்தல் முறைகளைப் பின்பற்றல் வேண்டும்.

iv. விடயங்களைக் கற்பதிலும் பார்க்கக் கருத்துக்களைக் கற்றுக் கொள்ளவும், ஆராய்வுகளில் இடம் பெறவும் செய்தல் வெண்டும்.

v. உடற் பயிற்சி அவசியமானது.

**46. முன் கட்டிளமைப் பருவமாணவர்க்கு வாசித்தலுக்காக ரூசோ சிபார்சு செய்த நூல் எது?**

றொபின்சன் குருசோ

**47. கட்டிளமைப் பருவத்தினருக்கான கல்வி பற்றிய ரூசோவின் கருத்துகள் யாவை?**

i. மனதில் தோன்றும் ஆசைகளைக் கட்டுப்படுத்த நடிவடிக்கை எடுத்தல்.

ii. சமயம், இலக்கியம், மொழி, வரலாறு, விஞ்ஞானம் ஆகிய பாடங்களைக் கற்பித்தல்.

iii. சமூகத் தொடர்பை வளர்த்துக் கொள்ளல்.

iv. விழுமியப் பண்புகளை விருத்தி செய்தல்

v. பாடவிடயங்களைக் கற்பதற்கு முக்கியம் அளித்தல்.

vi. பிரித்தறி சிந்தனைத்திறன் வளரும் பருவமாகையால் அதற்கேற்பக் கல்வியைத் திட்டமிடல்.

vii. பாலியல் கல்வி புகட்டப்படல்.

**48. வளர்ந்த பருவத்தினருக்கான கல்வி பற்றிய ரூசோவின் சிபார்சுகள் யாவை?**

i. நாடகங்கள் மூலம் கல்வி

ii. சுற்றுப்பயணங்கள் மூலம் அறிவும் அனுபவமும் பெறல்.

iii. அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுதல்.
iv. சமூகத்தில் பழகுவதன் மூலம் கற்றுக் கொள்ளல்.
v. சமூகப் பிரசையாக மாறல்.
vi. இல்லறத்தில் ஈடுபடுதல்.

**49. பெண்கல்வி பற்றிய ரூசோவின் சிபார்சுகள் யாவை?**

i. சோபி என்ற கதாபாத்திரத்தின் மூலம் பெண் கல்வி பற்றிய கருத்துகளை வெளிப்படுத்தல்.
ii. சிறுவயது முதல் உடற்பயிற்சியில் ஈடுபடல்.
iii. உடலழகைப் பேணல்.
iv. சமய அறிவு பெறல்.
v. கணவனுக்குக் கீழ்ப்படிவுள்ள, பண்புள்ள மனைவியாதல்.
vi. தொழிலுக்காகத் தையல் வேலையில் ஈடுபடுதல்.
vii. தேவைப்பட்ட போது மாத்திரம் வாசித்தல், எழுதுதல் போன்றவற்றை மேற்கொள்ளல்.
viii. ஆண், பெண் இருபாலாருக்கும் தனித்தனியான கல்வி முறை.

**50. ரூசோவின் கல்வித் தத்தவம் பற்றிய விமர்சனங்கள் எவை?**

i. ஆணைவிடப் பெண்ணைத் தாழ்ந்த நிலையில் கருதியமை.
ii. கலப்புக் கல்விக்கு இடந்தராமை.
iii. இருவருக்கும் வெவ்வேறு தொழில்களை (எமிலிக்குத் தச்சு வேலையையும் சோபிக்குத் தையல் வேலையையும்) சிபார்சு செய்தமை.
iv. குடும்பப் பொறுப்பு, பிள்ளை வளர்ப்பு ஆகியவற்றைச் சோபிக்குச் சிபார்சு செய்தமை.

**51. பிளேட்டோவின் கல்வித் தத்துவம், ரூசோவின் கல்வித் தத்துவத்தில் இருந்து எவ்வாறு வேறுபடுகின்றது?**

பிளேட்டோவின் கல்வித் தத்துவம் அறிவியல் கல்வித்தத்துவம். ரூசோவினது இயற்கைவாதக் கல்வித தத்துவம்.

**52. சமுதாயப் புரட்சி, கல்விப் புரட்சி ஆகியவற்றுக்கு வழிகோலிய ரூசோவின் நூல்கள் எவை?**

சமுதாயப் புரட்சி - சமுதாய ஒப்பந்தம்
கல்விப் புரட்சி - எமிலி

**53. ரூசோவைப் பிள்ளைமையக் கல்வியின் தந்தை என ஏன் அழைக்கப்படுகிறது?**

பிள்ளையின் சுதந்திரத்துக்கு முதலிடம் அளித்தல், பிள்ளையின் முதிர்ச்சிக்கேற்பக் கல்வி வாய்ப்புகளை ஏற்படுத்துதல். வளர்ந்தோர் ஆதிக்கத்திலிருந்து பிள்ளையைக் காத்தல் முதலிய கருத்துகளை முன்வைத்ததால்.

**54. ரூசோ சமர்ப்பித்த கருத்துகளின்படி தற்போதைய வகுப்பறைகளுக்குப் பொருந்தக் கூடிய கற்பித்தல் முறைகள் யாவை?**

i. பிரச்சினை தீர்க்கும் முறை.
ii. விளையாட்டு முறை.
iii. அவதானிப்பு முறை.
iv. ஆராய்வு முறை.

**54. 1. ரூசோ தன் வாழ்க்கையில் எதிர்கொண்ட சவால்கள் எவை?**

பிரான்ஸ் நாட்டவரான ரூசோ, மனிதன் தனித்துப் பிறந்தவனாயினும் எங்கும் சங்கிலிகளால் பிணைக்கப் பட்டிருக்கிறான் என்றார். ரூசோவின் கருத்துகள் அரசினதும், தேவாலயத்தினதும் கருத்துகளுக்கு எதிராக இருந்தமையால் அவர் பிரான்சிலிருந்து தப்பியோட வேண்டியிருந்தது. அவரது நூல்களை ஏற்கப் பல்கலைக் கழகங்களும் மறுத்தன. "மனிதன் இயற்கையிலேயே நல்லவன், நிறுவனங்களே அவற்றை தீயனவாக்குகின்றன" என்றார்.

**55. ஜோன்டூயியின் கல்வித் தத்துவம் எவ்வாறு அழைக்கப்படுகிறது?**

பயன்பாட்டுவாதம் (Pragmalism) அல்லது கருவிவாதம் (Lnstrumenbalism) .

**56. ஜோன் டூயியின் கல்விச் சிந்தனையில் செல்வாக்குச் செலுத்தியோர் யாவர்?**

பிளேட்டோ இ ஹெகல், கான்ற், வில்லியம் ஜேம்ஸ், பி எஸ் பியர்ஸ் ஆகியோர்.

**57. டூயியின் சிந்தனைகளுக்கு மையக் கருத்தாக விளங்கும் பிரதான எண்ணக்கருக்கள் யாவை?**

i. மனிதனும் அவனது சிந்தனையின் தன்மையும்.
ii. அனுபவங்கள் தொடர்பான அபிப்பிராயங்கள்.
iii. முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட முடிவுகள் அனைத்தையம் மறுதலித்தல்.

**58. டூயியின் கல்விச் சிந்தனைகளில் காணப்படும் பிரதான கருத்துக் கள் யாவை?**

i. பொருட்கள் நிலையற்றவை, மாற்றங்களுக்கு உட்பட்டவை, தனியான மெய்ப் பொருள் கிடையாது.

ii. மனிதன் தாழ்நிலை உயிரியிலிருந்து கூர்ப்படைந்துள்ளான், அவனுக்கும் இயற்கைக்கும் இடையே இடையீடற்ற தொடர்புண்டு. மனிதனை உயிரற்ற பொருட்கள், தாழ்மட்ட விலங்குகள் ஆகியவற்றோடு ஒப்பிடக் கூடாது, மனிதன் தனது உயர் சிந்தனையால் முன்னேற முடியும்.

iii. மனிதன் சுற்றாடலுடன் மோதுவதாலும், தொடர்பு கொள்வதாலும் முன்னேறிச் செல்ல முடியும். உயிர்ப்பான அனுபவங்களால் அறிவைப் பெறமுடியும்.

iv. கல்வி என்பது அனுபவங்களின் ஒழுங்கமைப்பாகும். அனுபவம் என்பது மனிதன் சுற்றாடலுடன் காட்டும் இடைத் தொடர்பாகும்.

v. பாடசாலைக் கல்வி வாய்ப்புகளுடன் அனுபவங்களை வழங்க வேண்டும்.

vi. வகுப்பறையில் மேசைகளை அகற்றி வேலைக்களங்கள், மணல், செங்கற்கள் ஆகியவற்றைக் கொணருதல் வேண்டும். புத்தகக் கல்வி குறைவாகவும் இயற்கை, சுற்றாடல் தொடர்பு அதிகமாகவும் இருத்தல் வேண்டும். மரப்பலகை, சுத்தியல், ஆணி, வர்ணங்கள் ஆகியவற்றுடன் மாணவர்கள் தொடர்புற வேண்டும்.

vii. அறிவைப் பெறும் ஊடகங்களாக அவதானித்தல், பரிசோதித் தல், உண்மையறிதல் ஆகியன அமைதல் வேண்டும்.

viii. சுய தொழிற்பாடு, ஆராய்ச்சி செய்யும் சந்தர்ப்பம், தடைகள் ஏற்பட்ட போது பிரச்சினை தீர்த்தல் ஆகியன மூலம் கற்றல் இடம்பெற வேண்டும்.

ix. பிரச்சினை விடுவித்தல் கற்றல் முறையானது அனுபவம் பெறும் வழியாகும்.

x. பிரச்சினை வராத வரை மீளச் சிந்தித்தல் நடைபெறாது. பிரச்சினை விடுவித்தலின் போது தகவல் தேடல், கருது கோள்களை அமைத்தல், கருமமாற்றல், பரிசோதனைக்குட் படுத்தல் முதலானவற்றை மேற்கொள்ளலாம் (இது விஞ்ஞான பூர்வச் சிந்தனையாகும்).

xi. நாம் உண்மையென ஏற்றுக் கொண்ட ஒன்று எதிர்காலத்தில்

வேறுபடுகின்றது. எனவே நிலையான குறிக்கோள்கள், உறுதியான முடிவுகள் பயனற்றவை.

xii. கல்வியில் குறித்த நோக்கங்கள் இல்லை. எல்லாப் பருவங்களிலும் அவ்வச் சந்தர்ப்பங்களுக்கு ஏற்பப் பொருத்தமான நோக்கங்களுடன் செயற்படுவதே கல்வியின் அடிப்படையாகும்.

xiii. கல்வி என்பது வாழ்க்கைக்குத் தயாராதல் அல்ல; வாழ்க்கையை வாழ்வதேயாகும்.

xiv. அனுபவங்களை அனுபவங்களால் மீண்டும் புனரமைப்பதே கல்வி.

**59. சமகாலக் கல்வி முறை பற்றிய டூயியின் கருத்துகள் எவ்வாறு காணப்பட்டன?**

i. கல்வி முறையில் பல குறைபாடுகள் உள்ளன. பாடசாலைகளில் கல்விக்கான தேவைகளின் சிறு பகுதி மட்டுமே நடைமுறைப் படுத்தப்படுகின்றன.

ii. சமகாலக் கல்வியில் குறிக்கோள்களை நோக்கிச் செல்லும் செயற்பாடு பொருத்தமற்றது. இதனால் பிள்ளைகளின் பல்வேறு திறன்கள் மழுங்கடிக்கப்படுகின்றன.

iii. பிள்ளைகளின் உள்ளார்ந்த ஆற்றல்கள், ஊக்கல்கள் நசுக்கப் படுகின்றன.

iv. பிள்ளையின் இயல்பு, சமூக வியல்பு ஆகியன பற்றிக்கருதாது நோக்கங்கள் தீர்மானிக்கப்படுதல் கூடாது. பிள்ளையின் கல்வி நோக்கமானது செயற்படும் சந்தர்ப்ப அடிப்படையில் கட்டியெழுப்பப்படல் வேண்டும்.

v. பாடசாலைகளில் பிள்ளைகளுக்கு உரிய கல்விசார் அனுபவங்கள் வழங்கப்படாமை, உயிரற்ற அறிவுத் தொகுதியை வழங்கும் முயற்சி, மனனம் செய்வித்தல் ஆகியன இடம் பெறுவது கூடாது.

vi. பாடசாலைக்கும் பாடசாலைக்கு வெளியேயும் பெறும் அனுபவங்களுக்கிடையில் ஒற்றுமை அவசியம்.

vii. பாடசாலை வலிமை வாய்ந்த கல்விக் கருவியாக அமைதல் வேண்டும்.

viii. மாணவர்கள் உரிய விதத்தில் கற்றுக் கொள்ளும் தனியாள் ஆராய்ச்சியாளராக விளங்குதல் வேண்டும்.

ix. உளவியல், சமூகவியல் அடிப்படைகளைக் கவனத்திற் கொண்டே பாடசாலை நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் வேண்டும்.

x. பாடசாலை அனுபவங்கள் வாழ்க்கை அனுபவங்களுடன் தொடர்புபட்டிருத்தல் வேண்டும்.

xi. கலாசாரத்தைப் போதித்தலும், நல்லதையும் கெட்டதையும் வேறுபடுத்திக் காட்டுவதும் பாடசாலையின் பணிகளாகும்.

**60. ஜோன் டூயி சமர்ப்பித்த கல்விமுறையின் மூன்று நிலைகளும் எவை?**

i. *விளையாட்டுப் பருவம் (4 – 8 வயது)*

ii. *புறத்தூண்டலற்ற அல்லது தன் விருப்பமான கவனப் பருவம் (8 12 வயது).*

iii. *சிந்தனையுடன் சேர்ந்த கவனப் பருவம் (12 வயதுக்கு மேல்)*

**61. ஜோன் டூயியின் பயன்பாட்டுவாதக் கல்வியின் முக்கியமான அம்சங்களை எவ்வாறு வகைப்படுத்தலாம்?**

i. *பிள்ளை மையக் கல்வி.*

ii. *செயன் முறைக் கல்வி.*

iii. *குழுமுறையிலான செயற்றிட்ட முறைக் கல்வி.*

iv. *வளர்சிச்க்கான கல்வி.*

v. *சமூகத்திறனுக்கான கல்வி.*

vi. *அனுபவ மேம்பாட்டுக் கல்வி*

vii. *வாழ்க்கைக்கான கல்வி*

**62. ஜோன் டூயியின் கல்வித் திட்ட அடிப்படையிலான கற்றல் - கற்பித்தல் முறைகள் யாவை?**

i. *செயற்பாட்டு முறைக் கற்றல்.*

ii. *தேடல் முறைக் கற்றல்.*

iii. *பிரச்சினை தீர்த்தல் முறைக் கற்றல்.*

iv. *கூட்டுக் கற்பித்தல்.*

v. *தேர்ச்சிமையக் கற்றலும், கற்பித்தலும்.*

vi. *பாடசாலையை விடப் பாடசாலைக்கு வெளியேயான கற்றல் சந்தர்ப்பங்களை உருவாக்கல்.*

vii. *தேர்ச்சி மட்டமொன்றில் அறிவு, திறன், மனப்பாங்கு உள்ளடங்கல்.*

viii. கடத்தல் வகிபாகத்தைவிட, நிலைமாறும் வகிபாகத்தினை ஆசிரியர் முன்னிலைப்படுத்தல்.

**63. ஜோன் டூயி பிரதான கற்றல் ஊடகமாக எதைக் கருதினார்?**

தாய்மொழியினை.

**64. ஜோன் டூயி முன்வைத்த மூன்று படிநிலை மாணவர்க்கான கற்றல் முறைகள் யாவை?**

i. முன்பள்ளி மாணவர்கள் - உடற் பயிற்சி மூலம் உடல் விருத்தி.

ii. அடுத்த நிலை மாணவர்கள் - கருவிகள், பொருட்கள் மூலம் சுற்றாடலிலிருந்து கண்டுபிடித்துக் கற்றல்.

iii. மூன்றாவது நிலை மாணவர்கள் - புதிய விடயங்களைக் கண்டுபிடித்தல், பரீட்சித்தல், பயன்படுத்தல் மூலம் கற்றல்.

**65. பயன்பாட்டுவாதத்தின் அடிப்படையாக அமைவன யாவை?**

கூர்ப்பு வாதக் கருத்துகளும், விஞ்ஞானரீதியான அணுகு முறைகளும்.

**66. டூயியின் சமூகம் பற்றிய கருத்து யாது?**

சமூகம் என்பது அனுபவங்களைச் சேகரிக்கும் நிறுவனமாகும். அது பொதுநோக்கமொன்றுக்கு, பொது உணர்வொன்றுக்கு, பொது வழிவகையொன்றுக்கு ஏற்பக் கருமமாற்றும் மனிதக் குழுவின் கூட்டமைப்பாகும்.

**67. டூயி, தனது மாதிரிப் பாடசாலையில் செயற்படுத்திய தொழில்கள் யாவை?**

உணவு சமைத்தல், துணிதுவைத்தல், தையல், கைப்பணி ஆகியன.

**68. டூயியின் கல்வித் தத்துவம் ஏற்படுத்திய தாக்கங்கள் யாவை?**

ஜோன் டூயி John Dewey (1859 1952 ) பத்தொன்பதாம் , இருபதாம் நூற்றாண்டுகளில் அமெரிக்காவில் வாழ்ந்தவராதலால், அவரது கல்வித் தத்துவம் ஐ. அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகளின் கல்வித் துறையில் பங்களிப்புச் செய்துள்ளது.

**69. கல்வித் தத்துவ ஞானிகளிடையே அதிகமான நூல்களை எழுதியவர் யார்?**

ஜோன் டூயி ஆவார். இவரது நூல்கள், கட்டுரைகள், விரிவுரைகள், ஆய்வுரைகள், நுண்ணாய்வுகள் ஆகியன 600க்கு மேற்பட்டவைகளாகும்.

**70. ஜோன் டூயி எழுதிய முக்கியமான நூல்கள் எவை?**

i. பாடசாலையும், சமூகமும் (The School and Society) 1899
ii. The Pedagogic Creed 1897.
iii. பிள்ளையும் பாடவிதானமும் (The child and the curriculum) 1902.
iv. நாம் எப்படிச் சிந்திக்கிறோம்? (How we think) 1910.
v. சனநாயகமும் கல்வியும் (Democracy and the Education) 1916.
vi. அனுபவமும் கல்வியும் (Experience and Education) 1938.
vii. அறிதலும் அறிவும் (Knowing and the known) 1949.

**71. ஜோன் டூயியின் வாழ்வியற் கூறுகளைச் சுருக்கமாக எடுத்துக் காட்டுக.**

i. ஐக்கிய அமெரிக்கரான இவர் வர்மன்ற் பல்கலைக்கழக விஞ்ஞானப் பட்டதாரி.
ii. முதலில் நகரப் பாடசாலையொன்றில் ஆசிரியராகப் பணியாற்றிய பின் கிராமியப் பாடசாலைக்கு மாற்றம் பெற்றார். அங்கு தத்துவார்த்தக் கட்டுரைகள் எழுதினார்.
iii. மேற்படிப்புக்காக ஜோன் ஹெப்சின்ஸ் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து தத்துவம், ஹெகெலிய அறிவியல், ஜெர்மன் அறிவியல் கற்றார்.
iv. இம்மானுவல் கான்ட்டின் உளவியல் தொடர்பான நூலினைத் தயாரித்தார். மேலும் சார்ள்ஸ் டார்வினின் கூர்ப்புக் கொள்கை பற்றியும் கற்றார்.
v. 1884 ஆம் ஆண்டு தமது 25 வது வயதில் டாக்டர் பட்டம் பெற்றதுடன், சிலவாண்டுகளின் பின்னர், மிக்சிகன் பல் கலைக்கழகத் தத்துவப் பேராசிரியரானார்.
vi. பேராசிரியராய் இருக்கையில் அமெரிக்காவின் நவீன மயமாக் கல் மற்றும் பல்வேறுபட்ட நிலைமைகள் தொடர்பாகக் கவனஞ் செலுத்தினார்.

vii. பத்து வருடங்கள் பாடசாலைக் கல்விப் பணிப்பாளர் பணியில் இருந்தார். கல்வித் துறையில் தத்துவ, உளவியல் சார்ந்த ஆராய்ச்சிகளில் ஈடுபட்டார். இவற்றுக்கு ஆராய்ச்சிப் பாடசாலையைத் துணையாகக் கொண்டார்.

viii. ஆரம்பத்தில் ஹெகலிய சிந்தனைச் செல்வாக்குக்கு உட்பட்ட போதிலும், பின்னர் டார்வினின் கூர்ப்புக் கொள்கை, பரிசோதனையிலான விஞ்ஞான முறை ஆகியன அறிவைப் பெறும் வழிகளென ஏற்றுக் கொண்டார்.

ix. சுற்றாடலுடன் மோதுகையில் வலிமைமிக்க அங்கிகள் நிலைத்து வாழ்கின்றன ஏனையவை அழிந்து போகின்றன. இந்த டார்வினின் கொள்கையினை டூயி ஏற்றுக் கொண்டார்.

**72. டூயியின் விஞ்ஞான முறைப் படிமுறைகள் யாவை?**

i. கற்பவரின் அனுபவத்திற்கு உகந்த சூழ்நிலையும் அதன் செல்வாக்கும்.

ii. பிரச்சினையும் அதனை விடுவித்தல் முறையும்.

iii. பிரச்சினை விடுவித்தலுக்கான தகவல்களை அறிதல்.

iv. பிரச்சினை விடுவித்தல்.

v. பிரச்சினை விடுவித்தலில் பயன்படுத்திய முறைகளை மீள்பரிசீலனை செய்தல்.

**73. கார்ல் மாக்ஸ் என்பவரின் கல்வித் தத்துவம் எவ்வாறு அழைக்கப் படுகிறது?**

பொதுவுடைமைக் கல்வித் தத்துவம் அல்லது மார்க்சீய கல்வித் தத்துவம் அல்லது சோசலிசக் கல்வித் தத்துவம் என அழைக்கப்படுகிறது.

**74. கார்ல் மாக்ஸ் எந்நாட்டவர்?**

ஜெர்மன் நாட்டவரான கார்ல்மாக்ஸ் 1818 1883 வரை வாழ்ந்தார்.

**75. கார்ல் மாக்ஸின் மாக்சியக் கல்வித்திட்டத்தில் காணப்படும் பிரதான அம்சங்கள் யாவை?**

i. கல்வியானது அரசினால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

ii கல்வியில் சமயச் செல்வாக்கை நீக்குதல் வேண்டும்.

iii. ஆரம்பக் கல்வியானது அனைவருக்கும் கட்டாயமாக்கப் படல் வேண்டும்.

iv. கல்வியானது வர்க்க பேதமின்றி அனைவருக்கும் வழங்கப்பட வேண்டும்.

v. கற்றல், தொழிலுடன் ஒன்றிணைந்ததாக இருத்தல் வேண்டும்.

*9 – 12 வயது, நாளொன்றுக்கு 2 மணிநேரம் வேலை செய்தல்.*

*13–14 வயது, நாளொன்றுக்கு 4 மணிநேரம் வேலை செய்தல்.*

*14 – 17 வயது, நாளொன்றுக்கு 6 மணிநேரம் வேலை செய்தல்.*

vii. கல்வியில் சமவாய்ப்புகளைத் தேசிய உற்பத்தியோடு தொடர்புபடுத்த வேண்டும்.

viii. கல்வியின் மூலம் முழுமையான விருத்தி பெற்ற மனிதனை உருவாக்க வேண்டும்.

ix. கல்வியும் அரசியலும் எப்போதும் தொடர்புடையதாக இருத்தல் வேண்டும்.

x. அனைத்துப் பிள்ளைகளுக்கும் பொதுப் பாடசாலைகளில் இலவசமாகக் கல்வி வழங்க வேண்டும்.

xi. கல்வியில் ஞானம் சார்ந்த, உடல் சார்ந்த, தொழினுட்பம் சார்ந்த அம்சங்களிடையே நெருங்கிய தொடர்பு காணப்பட வேண்டும்.

xii. கல்வியில் மொழி தொடர்பாகக் கவனம் செலுத்த வேண்டும்.

xiii. பாடசாலைக்குச் சமூகத்தின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

**76. கார்ல் மாக்ஸின் கல்வித் தத்துவத்தில் செல்வாக்குச் செலுத்தியோர் யாவர்?**

ஹெகல், ஹொப்ஸ், பியூலாச் ஆகிய தத்துவ ஞானிகளின் கருத்துக்கள் செல்வாக்குச் செலுத்தியுள்ளன.

**77. கார்ல்மாக்சின் சிந்தனைகள் உலகில் ஏற்படுத்திய தாக்கங்கள் எவை?**

i. உலகின் மூன்றிலொருபகுதி நாடுகளில் கம்யூனிசக் கொள்கை வளரவும், 1990 வரை உலக நாடுகள் பலவற்றுள் கம்யூனிச ஆட்சி நிலவவும் வழிவகுத்தது.

ii. "மனிதனையும் சுற்றாடலையும் இணைப்பதும், சுரண்டலுக்குச் சமயத்தைப் பயன்படுத்துவதைத் தடுப்பதும், மனிதனை அடிமைத் தளையிலிருந்து விடுதலை பெறச் செய்து சுதந்திரமாக வாழச் செய்வதும் மாக்சின் நோக்கங்களாய் விளங்கியமை உலகினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

iii. "கடந்த காலத்தில் சேகரிக்கப்பட்ட பொருள்சார்ந்த அனுபவங்களை நிகழ்காலச் சந்ததி உரிமையாக்கிக்

கொள்வதே மனிதனின் கற்றலாகும்” என்ற மாக்சின் கருத்து உலகில் செல்வாக்குப் பெற்றது.

iv. கல்வியின் மூலம் கிடைக்கும் உண்மை விளக்கத்தினூடாக, மனிதன் அடிமைத்தளையிலிருந்து நீங்கிச் சுயமாகச் செயற்படுவான் என்ற மாக்சியக் கருத்தும் உலகில் செல்வாக்குப் பெற்றுள்ளது.

**78. மார்க்சீய கல்வித் தத்துவத்தின் குறிக்கோளாக அமைவது எது?**

“மனித , பௌதிக வளங்களை உச்ச அளவில் விருத்தி செய்து, அவற்றின் பெறுபேறுகளை நியாயமான விதத்திலும், விகிதாசாரப்படியும் பகிர்ந்தளிப்பதே” மாக்சீய கல்வித் தத்துவத்தின் குறிக்கோளாகும்.

**79. கார்ல் மாக்ஸ் எழுதிய உலகப் புகழ் பெற்ற நூல் எது?**

தமிழில்”மூலதனம்” என்றும் ஆங்கிலத்தில் The captical என்றும் , ஜெர்மனி மொழியில் “ டாஸ் கப்பிற்றல்” என்றும் அழைக்கப்படும் நூலாகும்.

**80. இந்திய நாட்டில் தோன்றிய கல்வித் தத்துவவாதிகள் சிலரைப் பட்டியலிடுக.**

i. மகாத்மா காந்தி
ii. அரவிந்தர்
iii. வினோபாவே
iv. ரவீந்திரநாத்தாகூர்
v. டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன்
vi. பி.கிருஷ்ணமூர்த்தி

**81. மகாத்மா காந்தியின் (1869 1948) கல்வி வழங்கல் திட்டத்தின் பிரதான அடிப்படைகள் மூன்றும் எவை?**

i. உடல்சார் பயிற்சி
ii. நுண்மதிப் பயிற்சி
iii. ஆத்மீகப் பயிற்சி

**82. காந்தியடிகள் கல்வித் தத்துவத்தின் பிரதான நோக்கங்கள் ஐந்தும் எவை?**

i. ஆரம்பக் கல்வி அனைவர்க்கும் கட்டாயமானதாகும்.
ii. கல்வியானது கைத்தொழில் துறை நோக்கி ஒழுங்கமைக்கப் படல் வேண்டும்.
iii. கல்வியின் மூலம் சுயகட்டுப்பாடும், சுயஒழுக்கமும் வளர்க்கப்படல் வேண்டும்.

iv. கல்வியானது தாய்மொழியில் வழங்கப்படல் வேண்டும்.

v. கல்வியானது பலவந்தமாகத் திணிக்கப்படக் கூடாது.

**83. காந்தியடிகளின் கல்விக் கருத்துகளின் முக்கியமான அம்சங்கள் யாவை?**

i. தாய்மொழிமூலம் கல்வி புகட்டல்.

ii. தொழில் மையக்கல்வி

iii. பொருளாதார முக்கியத்துவமுடைய ஒரு தொழில் கல்வியுடன் தொடர்புறல்.

vi. ஆயுள் முழுவதும் கல்வி.

v. கல்வியில் சமசந்தர்ப்பம் வழங்கல்.

vi. சமுதாயக் கல்வி

vii. முதியோர் கல்வி

viii. வயதுக்கேற்ற கற்பித்தல் முறைகள்

ix. சுய நல்லொழுக்கம்.

x. ஆசிரியர் பரந்த அறிவும் செயற்றிறனும் மிக்கவராக விளங்குதல்.

xi. தேசப்பற்றும் விடுதலையுணர்வும்.

**84. காந்தியடிகளின் கல்வித் தத்துவத்தில் செல்வாக்குச் செலுத்தியோர் யாவர்?**

i. ராய் சாந்த்பாய் (அகிம்சை, நல்லொழுக்கம் பற்றிய சிந்தனைக்கான கருணைகாட்டல்)

ii. டால்ஸ்டாய் (தென்னாபிரிக்காவில் ஸ்பீனிக் பூங்காவிலும், டாஸ்டால் பண்ணையிலும் சத்தியாக்கிரகம், அகிம்சை, நன்னடத்தை, தொழிற்பயிற்சி, தோட்டவேலை, இலக்கியம் கற்றல் முதலானவற்றில் ஈடுபட்ட அனுபவம்).

iii. புஸ்கின் ("கடையர்க்கும் கடைத்தேற்றம்" எனும் நூலின் கருத்துகள்)

**85. முழுமையான மனிதனைத் தோற்றுவிக்க விருத்தி செய்ய வேண்டியன யாவை எனக் காந்தியடிகள் குறிப்பிட்டுள்ளார்?**

தலை, இருதயம், கைகள்

**86. காந்தியடிகளின் கல்வித்தத்துவத்தின் அடிப்படைகள் எவை?**

உண்மையும், அகிம்சையும்.

**87. காந்தியடிகளின் வார்தா கல்வித்திட்டம் என்றால் என்ன?**

*1937ஆம் ஆண்டு வார்தா நகரில் கல்வியாளர் சம்மேளனத்தைக் கூட்டி ஆரம்பக் கல்வி பற்றி ஆதாய்ந்து வேலைத் திட்டமொன்றைச் சமர்ப்பித்தமையே வார்தாக் கல்வித் திட்டமாகும்.*

**88. நைதாலிம் (Nai thalim) எண்ணக்கரு எதைப்பற்றியது?**

*1942 இல் தோற்றுவிக்கப்பட்ட கல்வி இடையறாது வழங்கப் படல் வேண்டும் என்பது (வாழ்நாட் கல்வி) பற்றியதாகும்.*

**89. மகாத்மாகாந்தி கல்விக்குக் கொடுத்துள்ள வரைவிலக்கணம் ஒன்று கூறுக.**

*"பிள்ளையின் உளத்திலும் ஆன்மாவிலும் காணப்படும் சிறப்பான தன்மைகளைக் கூட்டாக மலரச் செய்வதே கல்வியாகும்."*

**90. போதனாமொழி பற்றிய காந்தியடிகளின் கருத்து யாது?**

*தனியாள் விருத்தியை ஏற்படுத்துவதற்குத் தாய்மொழியே போதனா மொழியாக விருத்தல் வேண்டும் என்பதாகும்.*

**91. கல்வியுடன் தொடர்புட்ட கைத்தொழிலாகக் காந்தியடிகள் எதனைச் சிபார்சு செய்தார்?**

*நெசவுக் கைத்தொழிலை.*

**92. பெண் கல்வி பற்றிய காந்தி மகானின் கருத்துக்கள் யாவை?**

i. *பெண்களுக்கான கல்வி ஆண்களுக்கான கல்வியினின்றும் வேறுபடத் தேவையில்லை.*

ii. *சமூகக் கல்வி மூலம் பெண்களுக்குக் குடும்ப பரிபாலனமும், கர்ப்பகாலப் பராமரிப்பு, குழந்தைப் பராமரிப்பு ஆகியன தொடர்பான அறிவை வழங்கல்.*

**93. முதியோர் கல்வி தொடர்பான காந்தி மகானின் கருத்துக்கள் யாவை?**

i. *விரிவுரைகள், கலந்துரையாடல்கள், கருத்தரங்குகள், கூட்டங்கள், சத்தியாக்கிரக இயக்கங்கள் மூலம் கல்வியறிவை வழங்கல்.*

ii. *இரவுப் பாடசாலைகளை அமைத்தல்.*

iii. தேவைப்படின் எழுத்து, வாசிப்பு, கணிதம் போன்றவற்றைக் கற்பித்தல்.

**94. சிறு பிள்ளைகளுக்கான கற்பித்தல் முறை எவ்வாறு காணப்படல் வேண்டுமென மகாத்மா காந்தி கூறியுள்ளார்?**

கதைகள் மூலம் விடயங்களை வழங்குதலினூடாகப் பாரதப் பண்பாட்டினை அவர்களது இதயங்களில் பதியச் செய்ய வேண்டும் எனக் கூறியுள்ளார்.

**95. ஆசிரியர் பற்றிய மகாத்மா காந்தியின் கருத்துகள் யாவை?**

i. ஆசிரியர் பாடசாலைக்கு மட்டுமன்றிக் கிராமத்துக்கும் ஒளிவிளக்கானவர்.

ii. ஆசிரியரிடம் நூலறிவுடன் கருணை, அன்பு முதலான பண்புகளும், தலைமைத்துவ ஆற்றலும், சமூக சேவைக்கான அர்ப்பணிப்பும் காணப்பட வேண்டும்.

iii. பிள்ளையின் தாயாக மாறாத ஆசிரியர், ஆசிரியத் தொழிலுக்கு ஏற்றவரல்லர்.

iv. ஆசிரியர் நல்லொழுக்கமுடையவராகவும், சிறுவர்களைப் போசிப்பவராகவும் இருத்தல் வேண்டும்.

**96. காந்தியடிகளின் கல்வித்தத்துவம் சமகாலக் கல்வியில் வழங்கிய பங்களிப்புகள் யாவை?**

i. விழுமியக் கல்வி

ii. ஆரம்பக் கல்வி

iii. தாய்மொழிக் கல்வி

iv. தொழிற்கல்வி

v. கட்டாயக் கல்வி

vi. உடற்பயிற்சிக் கல்வி

vii. பண்பாட்டுக் கல்வி

viii. வாழ்நாட் கல்வி.

**97. மகாத்மா காந்தியின் வாழ்க்கை பற்றிச் சுருக்கமாக அறிமுகஞ் செய்க.**

i. வட இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் போர்பந்தர் என்னுமிடத்தில் 1869 இல் பிறந்தவர்.

ii. மேற்படிப்புக்காக இங்கிலாந்து சென்று 1893 இல் பாரிஸ்டராக இந்தியா திரும்பி வழக்கறிஞராகக் கடமையாற்றினார்.

iii. தென்னாபிரிக்கா சென்று, அங்குள்ள இந்தியர்களின் அடிமை நிலை நீங்க உழைத்தார், *1914* வரை அங்கிருந்தார். அங்கு ஸ்பீனிக் பூங்கா, டால்ஸ்டாய் பண்ணை ஆகியவற்றில் அகிம்சை ரீதியான செயற்பாடுகளிலும் தொழில் முயற்சிகளிலும் மக்களைச் செயற்படுத்தினார்.

iv. *1995* இல் இந்தியா திரும்பி, சபர்மதி நதிக்கரையில் ஆச்சிரமம் அமைத்தார். இந்தியாவுக்குப் பொருந்தக்கூடிய கல்வி முறை நடவடிக்கைகளில் ஈடுபட்டார்.

v. *1920* இல் ஒத்துழையாமை இயக்கம், *1930* இல் உப்புச் சத்தியாக்கிரகம் ஆகியவற்றிலீடுபட்டு இந்திய சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுத்தார்.

vi. உண்மை, அகிம்சை, தேசவிடுதலை ஆகியவற்றின் அடிப்படையில் கல்விமுறையினை ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொண்டார்.

**98. மரியா மொண்டிசோரி (Maria Montessori (1870 1952) அம்மையாரின் கல்விமுறையிற் காணப்பட்ட முக்கியமான அம்சங்கள் யாவை?**

i. முன்பிள்ளைப் பருவத்துக்கான கல்வியை அறிமுகம் செய்தமை.

ii. மகிழ்ச்சிகரமான விளையாட்டுக்கள் மூலம் கல்வி வழங்கல்.

iii. வீட்டில் கிடைக்கக் கூடிய ஆரம்பக் கல்வியில் கவனம் செலுத்தல்.

iv. பிள்ளையின் சுதந்திரமான செயற்பாட்டுக்குப் பாதகமேற்படுத்தாத வகையில் ஆசிரியர் நடந்து கொள்ளல்.

v. பிள்ளை கற்கின்ற வகுப்பறை மிகவும் விருப்பத்துக்குரியதோர் இடமாகக் காணப்படுதல்.

**99. மொண்டிசோரி அம்மையார் குழந்தைகளின் கல்விக்காக மேற்கொண்ட கல்வி முறை எத்தகையது?**

குழந்தைகள் முதிர்ச்சி காணும் வரை அவர்களின் உள்ளார்ந்த வளர்ச்சிக்கு உதவும் ஒழுங்குபடுத்தப்பட்ட கல்வி முறையாக விளங்கியது.

**100. மொண்டிசோரி அவர்களின் உருவாக்கத்திலான வகுப்பறைக் கோலம் எவ்வாறு அமைந்திருந்தது?**

i. மாணவர்களிடையே இயற்கையாகவுள்ள ஆற்றல்களை வெளிக்கொணரக் கூடியவாறு வகுப்புக்கள் அமைந்திருந்தன.

ii. மகிழ்ச்சியும் சுயகட்டுப்பாடும் உள்ளதான வகுப்பறைச் சூழல் காணப்பட்டது.

iii. பயிற்றப்பட்ட ஆசிரியர்களினால் வரையறுக்கப்பட்ட நோக்கத்துடனான சுயாதீனமான செயற்பாடுகள் வழங்கப்பட்டன.

iv. மாணவர்களின் கொள்ளளவுக்கு ஏற்றதாகச் செயற்பாடுகள் இடம்பெற்றன. ஒவ்வொரு வகுப்பிலும் மூன்று வருடப் பிள்ளைகள் கற்றனர். வகுப்பறைகள் 3 - 6, 6 – 9, 9 – 12, 12 – 15 வயதுடைய பிள்ளைகளைக் கொண்டவையாக விளங்கின.

v. சிறு வயதுப் பிள்ளைகள் வளர்ந்தோரிடம் கற்றுக் கொள்வர். வளர்ந்தோர் சிறுவர்களிடம் கற்றுக் கொள்வர்.

**101. மொன்டிசோரி அவர்கள் முன்வைத்த மனித வாழ்க்கைக் கற்றல் பருவங்கள் யாவை?**

i. பிறப்பு முதல் 06 வயதுவரை (Sensorial Explorer) புலனியக்க ஆய்வு நிலை - புலனுணர்வினூடாகக் கற்றலும், சூழலின் மொழி, கலாசாரம் என்பவற்றைப் பெற்றுக் கொள்ளலும் இப்பருவத்துக்குரியன.

ii. 6 – 12 வயதுவரை ( Conceptural Explorer ) எண்ணக்கரு ஆய்வுநிலை - வேறுபடுத்தும் திறன், கற்பனை செய்தல், அறிவை வேறு செயற்பாடுகளுக்கு உபயோகப்படுத்தல் ஆகியன இப்பருவத்துக்குரியன.

iii. 12 - 18 வயதுவரை (Humanistic Explorer) மனிதத்துவ ஆய்வுநிலை - சமூகத்துக்கு உதவ முனைகின்ற பருவம் இதுவாகும்.

iv. 18 - 24 வயது வரை (Specialised Explorer) சிறப்பியல் ஆய்வுநிலை - சமூகத்தில் தமக்குரிய நிலையை அடைந்து , சர்வதேசப் பார்வைக்கு முனைகின்ற பருவம் இதுவாகும்.

**102. மொண்டிசோரி அம்மையார் எத்தகைய ஆசிரியர்கள் மாணவர்களுக்குத் தேவையெனக் கருதியுள்ளார்?**

i. மாணவர்களுடனான இடைத் தொடர்புகளைக் குறைத்துக் கொண்டு அவர்களைத் தொடர்ச்சியாக அவதானிப்பவர்கள்.

ii. மாணவர்களின் தன்னம்பிக்கை வளரவும், சுயகட்டுப் பாட்டைப் பேணவும் உதவுபவர்கள்.
iii. மாணவர்கள் கற்கக் கூடிய அமைதியும், மகிழ்ச்சியும் நிறைந்த சூழலினை உருவாக்குபவர்கள்.
iv. மாணவர்களின் தேவைகளை இனங்கண்டு அதற்கேற்ற வாறு உதவுபவர்கள்.

**103. குழந்தைகளுக்கான கல்வியில் மொண்டிசோரிமுறை சிறப்பிடம் பெறக் காரணமென்ன?**

இத்தாலியரான மொண்டிசோரி அம்மையார், முதலில் விசேட தேவையுடைய பிள்ளைகளுக்காகவே மொண்டிசோரிப் பாடசாலையை நிறுவினார். அங்கு அவர்கள் கையாளத்தக்க தான கற்றல் சாதனங்களை உருவாக்கிப் பயன்படுத்தினார். பின்னர் இதுவே அனைவருக்கும் பொதுவான கற்றல் முறைகளில் ஒன்றாக மாறியது.

**104. மொன்டிசோரி அம்மையார் எழுதிய நூல்கள் சிலவற்றைப் பெயரிடுக.**

உயர் மொண்டிசேரி முறை.

**105. ஜூலியஸ் நியரேரே (1922 - 1999)யின் கல்விக் கொள்கைகளில் இடம்பெற்றுள்ள பிரதான விடயங்கள் யாவை?**

i. தன்ஸானியாவின் சனாதிபதியாக இரண்டு தசாப்தங்களுக்கு மேலாகப் பதவி வகித்த ஜூலியஸ் நியரேரே, மேற்குலகக் கல்வி முறையினைப் புறக்கணித்து, தமது சொந்த நாட்டுக்குப் பொருந்தக் கூடிய கல்வி முறையினை முன்வைத்தார்.
ii. கிராமிய விவசாயச் சுயதேவைப் பொருளாதாரத்துக்குப் பொருத்தமான கல்வி முறையை அறிமுகஞ் செய்தார்.
iii. நடைமுறையில் இருந்த பாடசாலை முறை சமுதாயத்துடன் தொடர்பற்றதாகவும், செயன்முறைத் திறன்கள் அற்றதாக வும், வெறும் நூற்கல்வியை மட்டும் வழங்குவதாகவும் இருப்ப தாக விமர்சித்ததுடன், குடியேற்ற நாட்டு ஆட்சிமுறை யினால் வழங்கப்பட்ட கல்வி பொருத்தமற்ற தென உணர்ந்து புதிய மாறுதல்களைச் செய்தார்.
iv. கல்வியானது சுய முன்னேற்றத்துக்கானது எனக்கருதினார்.
v. 1976 ஆம் ஆண்டைய **அருஷா** வெளியீட்டின் மூலம் தான்ஸானியாவின் கல்வி நோக்கங்கள் விளக்கப்பட்டன.

இதன் மூலம் பாடசாலை முறையின் போட்டித் தன்மை நிராகரிக்கப்பட்டது.

vi. கல்வி வழங்கும் கட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

1. முன்பள்ளி
2. ஆரம்பப் பாடசாலைக் கல்வி
3. இடைநிலைக்கல்வி
4. உயர்கல்வி

**106. அருஷா வெளியீட்டுக் கல்வித் திட்டத்தின் பிரதான நோக்கங்கள் எவை?**

1. கல்வியானது வாழ்க்கைக்கு உதவுவதாயிருத்தல்.
2. கல்வியானது சுயதிறன்களை வளர்ப்பதாயிருத்தல்.
3. பாடசாலை அமைப்பில் காணப்படும் சகல முதலாளித்துவப் போட்டி நிலைமைகளை நீக்கல்.
4. நல்ல மனப்பாங்குடன் கிராம அபிவிருத்திக்கும், விவசாய மறுமலர்ச்சிக்கும் உதவக் கூடிய மக்களை உருவாக்கல்.

**107. தான்ஸானியாவின் முன்பாடசாலைக் கல்வி எவ்வாறு முன்னெடுக்கப்பட்டது?**

1. 7 வயதுவரை முன் பாடசாலைக் கல்வி வழங்கப்படுதல்.
2. தனியார் பாலர் பாடசாலைகள் நகரங்களில் செயற்படுதல்.
3. வளர்ந்தோர் கல்வி மூலம் வீடுகளில் பிள்ளைகளின் பராமரிப்பை உணர்த்தல்.
4. நற்பழக்கங்கள், சிறுவயது முதல் உற்பத்திச் செயல்களில் ஈடுபடும் பழக்கங்கள் ஆகியன செயற்படுத்தப்படல்.

**108. ஆரம்பக் கல்வியானது தான்ஸானியாவில் 1970 க்குப் பின்னர் எவ்வாறு வழங்கப்பட்டது?**

1. இலவசமாக வழங்கப்பட்டது
2. 7 – 13 வயதுவரை வழங்கப்பட்டது.
3. சகல ஆரம்பப் பாடசாலைகளும் அரசினால் நிர்வகிக்கப் பட்டன.
4. எழுத்தறிவைக் கொடுக்கும் பிரதான பாடங்கள், நன்மனப் பாங்கை உருவாக்கும்இயற்கை வளங்கள் பற்றிய கல்வி ஆகியன பாடவிதானத்தில் காணப்பட்டன.

5. ஆரம்பக் கல்வி 1978 இல் சட்டபூர்வமாகக் கட்டாயமாக்கப் பட்டது.

**109. தான்ஸானியாவின் இடைநிலைக் கல்வி நடவடிக்கைகள் எவ்வாறு மூன்றாம் உலக நாடுகளுக்கு முன்மாதிரியாக அமைந்தன?**

1. இடைநிலைக் கல்விக்கு அரசு தீர்மானிக்கும் கட்டணம் செலுத்த வேண்டியிருந்தது.
2. 14ஆம் வயதில் இடைநிலைக் கல்வி ஆரம்பமாகி ஆறு ஆண்டுகள் தொடர்ந்தது.
3. இடைநிலைக் கல்வியானது இரு கட்டங்களைக் கொண்டிருந்தது. முதலாம் கட்டம் 04 ஆண்டுகளையும், இரண்டாம் கட்டம் 02 ஆண்டுகளையும் அடக்கியிருந்தது.
4. தேவையான பாடசாலைகளை அரச உதவியுடன் மக்கள் அமைத்துக் கொள்ள முடிந்தது.
5. பாடசாலை சனசமூகக் கல்விக்கான ஒரு நிலையமாக்கப் பட்டது.
6. பாடசாலை சமூகத்துடன் தொடர்பபடுத்தப்பட்டது.
7. சகல பாடசாலைகளிலும் ஒவ்வொரு விவசாய நிலையம் ஏற்படுத்தப்பட்டது.
8. கிராமத்தின் அபிவிருத்திக்குப் பாடசாலை தலைமைத்துவம் வழங்கியது.
9. பாடசாலை உற்பத்திச் செயல்களுடன் தொடர்படுத்தப் பட்டது.
10. தன்னிறைவை அடைவதற்குக் கல்வியை அர்ப்பணித்தது.

**110. தான்ஸானியாவின் உயர்கல்வி நடிவடிக்கைகள் யாவை?**

i. தொழினுட்பரீதியான உயர்கல்வியில் கவனம் செலுத்தப் பட்டது.
ii. ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதற்காக ஆசிரியர் கலா சாலைகள் நிறுவப்பட்டன.
iii. தாருஸ்ஸலாம் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது. அதனுடன் அபிவிருத்திக் கல்வி நிறுவனம், கிஸ்வாஹிலி ஆய்வு நிலையம், சன்சிபாரிலுள்ள சமுத்திர விஞ்ஞான நிறுவனம் ஆகியன இணைக்கப்பட்டன.
iv. தான்ஸானியாவில் விவசாயப் பல்கலைக்கழகமும் இயங் கியது.

v. தொழினுட்பக் கல்லூரிகளில் தொழினுட்பக் கல்வி, தொழிற்கல்வி ஆகியன வழங்கப்பட்டன.

vi. தாருஸ்ஸலாம் **அர்தி** நிறுவனம் நகர, கிராமத்திட்டமிடல், அளவையியல், தோட்ட முகாமைத்துவம், கட்டடக்கலை ஆகிய பாடநெறிகளைப் பயில வாய்ப்பளித்தது.

vii. தாருஸ்ஸலாம் வணிகக் கல்வி நிறுவனம் மூன்று வருட டிப்புளோமாப் பாட நெறியைப் பயில வாய்ப்பளித்தது.

viii. தாருஸ்ஸலாம் கிங்கோனிக் கல்லூரி விடுதிவசதிகளுடன் கற்பதற்கு உதவியது.

ix. மேலும் தேசிய கல்விச்சாலை, கூட்டுறவுக் கலாசாலை, கிழக்கு தெற்கு ஆபிரிக்க முகாமைத்துவ நிறுவனம், அபிவிருத்தி முகாமைத்துவ நிறுவனம், சமுதாய நலன்புரிப் பயிற்சி நிறுவனம், வர்த்தகப் பாடசாலை போன்றனவும் தான்ஸானியாவில் செயற்பட்டன.

**111. பவ்லோ பிரேயர் Paulo Freire (1921 - 1997) என்பவரின் நவீன கல்விச் சிந்தனையில் முக்கியத்துவம் பெறுவது எது?**

ஒடுக்கு முறைக்கு எதிரான கல்வி.

**112. பவ்லோ பிரேயரின் கல்விச் சிந்தனைகளில் முக்கியமான அம்சங்கள் எவை?**

i. வயது வந்தோர் தொடர்பான கருத்துக்கள்.

ii. மனிதரின் வாழ்வை முன்னேற்றுவதற்காகக் கல்வியைத் தேர்ந்தெடுத்தல்.

iii. கல்விக்கான வங்கிமுறையை அறிமுகப்படுத்தல்.

iv. கலாசாரத்தின் மூலம் கல்வி நடைமுறைப்படுத்தப்படல்.

**113. பவ்லோ பிரேயர் எந்நாட்டைச் சேர்ந்தவர்?**

பிரேசில் நாட்டைச் சேர்ந்த றெசிலி என்னும் கிராமத்தவர்.

**114. பவ்லோ பிரேயரின் கல்வி தொடர்பான கருத்துக்களும் அவற்றுக் கான காரணிச் சூழல்களும் எவை?**

i. ஒடுக்கு முறைக்கு எதிரான மாற்றுவகைக் கல்விச் சிந்தனை கள் காலத்தின் தேவை கருதி முன்வைக்கப் பட்டன.

ii. கல்வியியலுடன் இலக்கியம், அரங்கியல், சமூகவியல் போன்றவற்றிலும் ஒடுக்கு முறைக்கு எதிரான சிந்தனைகள் முன்வைக்கப்பட்டன.

iii. காலனித்துவச் சுரண்டல் கொள்கையே வறுமைக்குக் காரணம். ஒடுக்குவோர் காலனித்துவ நாடுகளில் தமது ஒடுக்கு முறைக்குச் சார்பான கல்வி முறையையே உரு வாக்கி வைத்துள்ளனர். அது அவர்களுக்குச் சாதகமாயும், ஒடுக்கப்படுவோருக்குப் பாதகமாயும் அமைந்துள்ளது. இதனை மாற்றியமைக்கும் கருத்துகள் முன்வைக்கப்பட்டன.

iv. ஒடுக்குமுறைக் கல்வியானது வளர்ந்தோரிடம் அடிமை மனநிலையினை ஏற்படுத்தியுள்ளது. இதிலிருந்து அவர் களை மீட்டெடுப்பதற்கு வளர்ந்தோர் கல்வியை வழங்க வேண்டும்.

v. ஒடுக்கு முறையிலிருந்து மக்களை விடுவிக்கப் பலமுள்ள தொழிற்சங்கங்களை அமைக்க வேண்டும்.

vi. கல்வியைச் சமூகப் பங்குபற்றல் மிக்க செயற்பாடாக மாற்றியமைப்பதன் மூலம் நீதியையும், சமத்துவத்தையும் ஏற்படுத்த முடியும்.

vii. கல்வியானது மீள உற்பத்தி செய்யும் விதமாக மக்களின் உளப்பாங்கை இடமாற்றல் அல்லது நிலைமாற்றல் செய்ய வேண்டும்.

viii. கல்வியிலே முன்வைக்கப்படும் முக்கியமான முறை வங்கி முறைக் கல்வியாக ஒழுங்கமைக்கப்பட்டது. ஆசிரியர், மாணவர் மீது அறிவை வைப்பிலிடுகின்றனர். மாணவர் மீது வைப்புச் செய்த அறிவை மீள எடுக்கின்றனர்.

ix. எழுத்தறிவு என்பதும் வாசிப்பு என்பதும் நூல்களோடு தொடர்புடைய விடயமல்ல. வாசித்தல் என்பது சமூகத்தை வாசித்தலாகவும், சமூகப் புரட்சிகளை இனங்காணும் வகையில் வாசிப்பைப் பயன்படுத்துவதாகவும் அமைய வேண்டும்.

x. பண்பாட்டு வேலையாட்களாகத் தொழிற்படும் ஆசிரியர்கள், ஒடுக்குமுறைப் பண்பாட்டுக்கு எதிராக, மாணவர்களைச் செயன்முறையில் ஈடுபடுத்த வேண்டும்.

xi. மக்களின் மொழி தழுவியதாக அறிதலைப்புகள் இருத்தல் வேண்டும்.

xii. அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதன் மூலம் கல்விப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும்.

**115. மக்கள் சீனாவின் பிரதமராயிருந்த மாவோ சேதுங்கின் Maszedong (1893 - 1976) கல்விக் கருத்துகளில் காணப்படும் முக்கியமான விடயங்கள் எவை?**

i. கல்வியின் துணையினால் சமவுடைமைவாதத் தொழிலாளர் உருவாக்கப்படல் வேண்டும். இவர்கள் ஒழுக்கம், அறிவு, உடலியல் சார்பாக விருத்தியடைய வேண்டும்.

ii. கல்வியின் சகல மட்டங்களிலும் உரிமை மறுக்கப்பட்ட மக்களைக் கருத்திற் கொண்டு செயற்பாடுகள் உருவாக்கப் படல் வேண்டும்.இதன் மூலமே கல்வியின் உதவியினால் தொழிலாளர் களின் வாழ்க்கை விருத்தியடைய முடியும்.

iii. சிறந்த அறிவினை செய்ம்முறை வேலைகளினூடாகவே பெற்றுக் கொள்ள முடியும்.

iv. கல்வியின் நோக்கம் சிறப்பையும், நிபுணத்துவத்தையும் ஏற்படுத்துவதாகும்.

v. அரசியலையும் கல்வியையும் இணைத்து உற்பத்திக்கான திறன்களை விருத்தி செய்ய வேண்டும். இதற்காகக் கல்விபெறும் சகலரும் உடல், உள, நல்லொழுக்க வளர்ச்சியினைப் பெற வேண்டும். அதற்குச் சமாந்தரமாகப் பொதுவுடைமைக் கலாசாரம் தொடர்பான விளக்கம் பெற்றி ருத்தல் வேண்டும்.

vi. பாடநெறி இலகுவானதாகவும், தரம் கூடியதாகவும், செய்ம்முறைப் பயிற்சி அதிகமுள்ளதாகவும், கற்பித்தலில் நவீன உபகரண உபயோகமும் காணப்படல் வேண்டும்.

vii. முறைசார் கல்வியிலும் பார்க்க வளர்ந்தோர் கல்வி முக்கியமானது. எனவே படிக்காத வளர்ந்தோர்க்குக் கல்வி வழங்கி அவர்களிடம் புதிய மனப்பாங்கையும், சிந்தனை யையும் உருவாக்க வேண்டும்.

viii. ஆசிரியர்கள் அரசியலையும் கல்வியையும் ஒன்றிணைத்தல், விவசாயிகள், தொழிலாளர்களிடமிருந்து கல்வியைப் பெறல், கிராம தொழிற்சாலைகளில் அனுபவம் பெறல், கல்விப் புரட்சிக்கான திறன்களைப் பெறல் ஆகியவற்றை மேற் கொள்ள வேண்டும்.



# 03. பல்வேறு கல்வியியல் அணுகுமுறைகள்

**01. கல்வியியல் அணுகுமுறைகள் நாட்டுக்கு நாடு வேறுபடும் பிரதான அம்சங்கள் எவை?**

i. முறைசார் கல்வி நோக்கங்கள்/குறிக்கோள்கள்
ii. கலைத்திட்டம்
iii. நோக்கங்களை அமுற்படுத்தல்
iv. கற்றல் - கற்பித்தல் முறைகள்
v. மதிப்பீட்டு முறைகள்
vi. கல்விச் சமூகத் தொடர்புகள்
vii. கற்றல் வளங்கள்

**02. சமகாலத்தில் பின்பற்றக் கூடியதாகவுள்ள கல்வியியல் அணுகு முறைகள் யாவை?**

i. ஆசிரியர் மையக்கல்வி
ii. சமூகமையக் கல்வி
iii. மாணவர் மையக் கல்வி
iv. அபிவிருத்தி மையக்கல்வி

**03. ஆசிரியர் மையக் கல்வியில் இடம் பெறும் செயற்பாடுகள் யாவை?**

i. கற்றல் - கற்பித்தல் செயன்முறைகளைத் திட்டமிடல், ஒழுங்கமைத்தல், நடைமுறைப்படுத்தல், தீர்மானம் எடுத்தல் முதலானவை ஆசிரியரால் மேற்கொள்ளப்படும்.
ii. ஆசிரியர் கொண்டுள்ள பாட அறிவு அவராலேயே வழங்கப்படும் சம்பிரதாய பூர்வக் கல்வியாக விளங்கும்.
iii. ஆசிரியரின் குரலுக்குப் பிரதானம் கொடுக்கும் விரிவுரை முறைக் கற்பித்தலாகவும், மாணவர் செயற்பாட்டுக்கு இடமளிக்காததாகவும், மாணவர் செவிமடுப் போராக மட்டும் விளங்கும் உயிர்ப்பற்ற கற்றல் இடம்பெறும்.
iv. கற்றல் வளங்கள் பயன்படுத்தப்படாது.
v. மாணவர்களின் இயலுமை, இயலாமை கருத்தில் கொள்ளப் படமாட்டாது.
vi. மாணவர் சுதந்திரம் கட்டுப்படுத்தப்பட்டிருக்கும்.
vii. மாணவர்கள் தூண்டலுக்குத் துலங்கும் சந்தர்ப்பங்கள் குறைவாயிருக்கும்.

**04. மாணவர் மையக் கல்விச் செயற்பாடுகளில் இடம்பெறக் கூடியவை யாவை?**

- *i.* பழையதான ஆசிரியர் மையக் கல்விமுறை கடுமையான விமர்சனங்களுக்கு உட்பட்ட நிலையில் **20** ஆம் நூற்றாண்டில் மாணவர் மையக் கல்வியானது உயிர்ப்புடையதாக அறிமுகம் செய்யப்பட்டது.
- ii. கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் யாவும் மாணவரை மையமாகக் கொண்டு இடம் பெறும்.
- iii. மாணவர்களின் தேவைகள் ஆற்றல்கள், இயலுமைகள், விருப்பு வெறுப்புகள், பிரச்சினைகள் ஆகியன கவனத்திற் கொள்ளப்படும்.
- iv. கற்பித்தலைவிடக் கற்றல் முக்கியத்துவம் பெறும்.
- v. மாணவர்கள் கண்டறிந்து கற்றல், செய்துபார்த்துக் கற்றல், தேடல் முறைக் கற்றல் முதலான பல்வேறு கற்றல் முறைகளைக் கையாளுவர்.
- vi. மாணவர்களின் தனியாள் வேறுபாடுகள் கவனத்தில் கொள்ளப்படும்.
- vii. பல்வேறுபட்ட கற்றல் சூழல்கள் ஒழுங்கமைக்கப் பட்டிருக்கும்.
- viii. மாணவர்களின் சுதந்திரத்துக்கும், கலந்துரையாடலுக்கும் இடமளிக்கப்பட்டிருக்கும்.
- ix. செயன்முறைக் கற்பித்தலுக்கு முக்கியமான இடம் கொடுக்கப்படும்.
- x. ஆசிரியர் வளவாளராகச் செயற்படும் வேளையில் ஆசிரியர் - மாணவர் இருவழித் தொடர்பு உயர்ந்த மட்டத்திலிருக்கும்.

**05. மாணவர்மையக் கல்வியின் அறிமுகத்தில் பெரிதும் செல்வாக்குச் செலுத்திய தத்துவவாதிகளும் உளவியலாளர்களும் யாவர்?**

ரூசோ, பிளேட்டோ, பெஸ்டலோசி, புரோபல், மொண்டிசோரி, ஜோன் டூயிமுதலான தத்துவவியலாளர்களும் பியாஜே, ஏபிரகாம் மாஸ்லோ, சிக்மண்ட் புரோயிட் போன்ற உளவியலாளர்களும் ஆவர். சமூக விஞ்ஞானிகள் பலரின் கருத்துக்களும் மாணவர்மையக் கல்வியில் பங்களிப்பைச் செய்துள்ளன.

**06. 'பிள்ளை ஒரு சிறிய மனிதன் அல்ல, அவன் காண்பது சிந்திப்பது, உணர்வது, செயற்படுவது வயது வந்தோரைவிட வேறுபட்டதாகும்'-இவ்வாறு குறிப்பிட்டவர் யார்?**

ரூசோ

**07. பெஸ்டலோசி, புரோபல் ஆகியோர் மாணவர் மையக் கல்வி பற்றிக் கூறிய பொருத்தமான ஒவ்வொரு கூற்றைக் குறிப்பிடுக.**

"பிள்ளையின் ஆசைகளுக்கும் திறன்களுக்கும் ஏற்பக் கற்பித்தல் ஒழுங்குபடுத்தப்படல் வேண்டும்" **-பெஸ்டலோசி**
"பிள்ளைகள் விளையாட்டின் மீது காட்டும் பிடிப்பைக் கற்பித்தலுக்கும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்" **-புரோபல்**

**08. பிள்ளைமையக் கல்வியில் கூடுதலாக உற்றுநோக்கலை (அவதானித்தல்) வலியுறுத்திய தத்துவவியலாளர் யார்?**

பெஸ்டலோசி

**09. குழந்தைப் பூங்கா முறையினை (Kinder Garden) உருவாக்கிய தத்துவவியலாளர் யார்?**

புரோபல்

**10. 'வார்த்தைகளால் கற்பிப்பதைவிட அங்கங்களின் மூலம் கற்பதற்கு இடமளிக்க வேண்டும். இயற்கையே சிறந்த ஆசிரியராகும்' - இது யாருடைய கூற்று?**

கொமினியஸின் கூற்றாகும்.

**11. மொண்டிசோரி அம்மையார் பிள்ளைமையக் கல்வி தொடர்பாக முன்வைத்த கருத்தொன்றினைக் குறிப்பிடுக.**

"மாணவருக்குச் சுயமாகக் கற்பதற்குத் தேவையான சுதந்திரமும், சூழலும் உருவாக்கப்படல் வேண்டும்."

**12. 'கற்றலுக்காகத் தூண்டப்படுவதற்கு மாணவர்களிடையே செயற்பாடுகளின் மீது பிடிப்பை ஏற்படுத்துதல் வேண்டும்'. - இக் கருத்தினை வெளியிட்ட தத்துவவியலாளர் யார்?**

ஜோன்டூயி

**13. 'பிள்ளைகளின் இரட்சகர்' எனக் கூறப்பட்ட கல்வித்தத்துவ வியலாளரின் பெயரென்ன?**

ரூசோ

**14. சமூக மையக் கல்வி என்றால் என்ன?**

சமூகத்தின் தேவைகள், எதிர்பார்ப்புகள் ஆகியவற்றை நிறைவு செய்வதை இலக்காகக் கொண்டு கல்வியை ஒழுங்கமைத்தலும், நடைமுறைப்படுத்தலும் சமூகமையக் கல்வியாகும்.

**15. சமூகம் பற்றிய கிரேக்க தத்துவவியலாளர்களின் கருத்து யாது?**

சமூகமானது மனிதத் தேவைகளை நிறைவேற்றுவதற்காகக் கட்டியெழுப்பப்படுகிறது. மனிதர்கள் சுகமாக வாழ்வதற்கு ஒட்டுமொத்தச் சமூகத்தைப் பாதுகாத்தலும், முரண்பாடு களின்றிச் சமாதான முறையில் நடத்திச் செல்லலும் இன்றியமையாதது. இதற்குச் சுயநலத்துக்குப் பதிலாகப் பொதுநலம் தேவைப்படும். அப்போதுதான் சமூகத்தை நலமுடன் வாழ்வதற்காக ஒழுங்கமைக்க முடியும். எனவே சமூகத் தேவைகளை மையமாகக் கொண்டு கல்வி வழங்கப்பட வேண்டும்.

**16. சமூகமையக் கல்வி பற்றிய அறிஞர்களின் கருத்துகள் சிலவற்றைக் குறிப்பிடுக.**

i. கல்வி வழங்கும் ஒவ்வொரு உறுப்பினருக்கும் பொருத்தமான தொழிற் பயிற்சியையும் வழங்க வேண்டும். **– மகாத்மா காந்தி, கார்ல்மாக்ஸ்.**

ii. "மனிதன், அவன் பிறந்த குடும்பத்துக்கன்றிச் சமூகத்திற்கே உரித்துடையவன்" **– பிளேட்டோ.**

iii. "சப்பாத்துத் தைப்பவன் எந்த வகையிலும் விவசாயம், கைத்தொழில், கட்டட நிர்மாணம் அல்லது வேறெந்தத் தொழிலிலும் ஈடுபட முயற்சித்தல் கூடாது" **– பிளேட்டோ.**

**17. சமூகமையக் கல்வியின் பண்புகள் யாவை?**

i. சமூகத் தேவைகள், எதிர்பார்ப்புகள், இலக்குகள் ஆகிய வற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்தல்.

ii. தொழிற்பயிற்சியைக் கருத்திற் கொள்ளல்.

iii. சமூகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதை இலக்காகக் கொள்ளல்.

iv. ஒவ்வொரு மனிதரிலும் இயல்பாகவே அமைந்துள்ள திறன்களுக்கேற்ப அவரைப் பயிற்றுவித்தல்.

v. சமூகமானது அளவு ரீதியிலும் பண்புரீதியிலும் வளர்ச்சி காணச் செய்தல்.

vi. பாடசாலைக்கும் சமூகத்துக்கும் இடையில் நெருங்கிய உறவினைப் பேணுவதனூடாகச் சமூகத்தின் தேவைகளைப் பாடசாலையும், பாடசாலையின் தேவைகளைச் சமூகமும் நிறவேற்றுவதில் ஒன்று மற்றதற்கு உதவமுடிதல். பாடசாலையும் ஒரு சமூக நிறுவனமாகும்.

**18. அபிவிருத்தி மையக் கல்வி என்றால் என்ன?**

தனியாள் அபிவிருத்தியையும், சமூக அபிவிருத்தியையும் கருத்தில் கொண்டு கல்வியை ஒரு முதலீடாகக் கருதி அளவுரீதியாகவும், பண்புரீதியாகவும் வளர்ச்சிகாணச் செய்யும் இலக்குடன் கல்விச் செயற்பாடுகளை மேற்கொள்ளல் அபிவிருத்தி மையக் கல்வியாகும்.

**19. அபிவிருத்தி மையக் கல்வியில் இடம்பெறும் பிரதான எண்ணக் கருக்கள் யாவை?**

i. கல்வியை ஒரு முதலீடாகக் கருதிச் செயற்படல்.

ii. மனிதனது தேவைகளைக் கருத்தில் கொள்ளுதல்.

iii. மனிதனில் முழுமையான வளர்ச்சியை ஏற்படுத்துதல்.

iv. தனியாளின் அறிவு, திறன், மனப்பாங்கு ஆகியவற்றை அபிவிருத்தி செய்தல்.

v. சமூகத்தின் தேவைகளுக்கேற்பச் சமூக அபிவிருத்தி, வளப்பாதுகாப்பு, கூட்டாகச் செயற்படல் போன்றவற்றை மேற்கொள்ளல்.

vi. தனிநபரின் நோக்கமும் சமூக நோக்கமும் சம அளவில் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைக் கருத்திற் கொண்டு செயற்படல்.

vii. கல்வி மூலமும் மனிதனின் தொழில் திறமையை விருத்தி செய்தல் மூலமும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்.

viii. கல்வியானது நுகர்வுப் பொருள் என்ற எண்ணக்கருவி லிருந்து விலகி, வணிகப் பொருள் என்ற நிலைக்கு மாற்றமடைந்ததைக் கருத்திற் கொள்ளல் (இது உலகக் கிராமம் (Global Village) என்ற எண்ணக் கருவினால் ஏற்பட்டது).

**20. அபிவிருத்திமையக் கல்வியில் தவிர்க்க வேண்டிய பண்புகள் எவை?**

i. வளங்களின் வீண் விரயங்களைத் தவிர்த்தல்.

ii. இடைவிலகலைத் தவிர்த்தல்.

iii. பரீட்சையில் சித்தியடையத் தவறுதலைக் குறைவடையச் செய்தல்.

iv. தொழிற்றிறன் விருத்திக் குறைவினை இல்லாதொழித்தல்.

v. தனியாள் – சமூக இணைப்புக் குறைபாடுகளை நீக்குதல்.

**21. மூளைசாலி, உழைப்பாளியைப் போன்றே உடல் உழைப்புடன் கூடிய மூளைசாலியை உருவாக்குதல் வேண்டுமெனக் கூறியவர் யார்?**

மாவோசேதுங்

**22. கல்வியின் குறிக்கோள்களுக்கும் நோக்கங்களுக்கும் இடையிலான வேறுபாடு யாது?**

i. கல்விக் குறிக்கோள் என்பது கல்விச் செயன்முறையின் இறுதியில் அடைந்து கொள்ள எதிர்பார்க்கப்படும் நோக்கமாகும். கல்வியின் நோக்கம் என்பது இறுதிக் குறிக்கோளை அடைவதற்கு முன் நிறைவேற்றப்பட வேண்டிய குறிக்கோளாகும். எனவே இரண்டுக்கும் இடையில் இருவழித் தொடர்பு காணப்படுகிறது.

ii. நோக்கங்கள் (Aims) எனும் சொல் யாதேனும் கருமத் தொடரின் மூலம் எய்தக் கூடிய முடிபுநிலையைக் குறிக்கின்றது.

உ–ம் : நல்லொழுக்கத் தனியாளை உருவாக்குதல், நற்பிரசையை உருவாக்குதல். நோக்கங்கள் பரந்தவை, அடைவதற்கு நீண்டகாலம் எடுக்கும். கல்விச் செயற்பாடுகளின் நீண்ட காலப் பெறுபேறுகளாக அமைபவை, சில வேளைகளில் அவற்றை அடைய முடியாது போகலாம். கண்ணாற் காணவும் முடியாது. ஆனால் குறிக்கோள்கள் (Objectives) எனும் சொல் நோக்கங்களை விடக் குறுகியது. நோக்கத்தினை அடைவதற்கான பல வழிமுறைகளைக் கொண்டது. சிறுசிறு குறுகிய இலக்குகள் குறிக்கோள்களாகும். **உ - ம்:** நற்பிரசை ஒருவரிடம் காணப்பட வேண்டிய பண்புகள் (எழுதும் திறன், வாசிக்கும் திறன், பொறுமை, கருத்துக்களை வெளியிடும் திறன்,

தேசியப் பிரச்சினைகளை இனங்காணுந்திறன், தேசிய வளங்களை இனங்காணுந்திறன், வாக்குரிமையைச் சுதந்திரமாகப் பயன்படுத்தும் திறன்).

iii. எனினும் குறிக்கோள்கள், நோக்கங்கள், இலக்குகள், எதிர்பார்ப்புகள் ஆகியன ஒரே குடும்பத்தைச் சார்ந்த எண்ணக்கருக்களாகும்.

**23. கல்விக் குறிக்கோள்களைத் தயாரிக்கும் போது செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் யாவை?**

i. மேலைத்தேய, கீழைத்தேயத் தத்துவக் கருத்துகள்.

ii. அரசியல், பொருளாதார , சமூக, கலாசார, சமய, விஞ்ஞான, தொழினுட்பமாகிய தேசியத் தேவைகள்.

iii. உளவியல் ரீதியான சிந்தனைகள்.

**24. கல்வியின் நோக்கங்கள், குறிக்கோள்கள் பற்றிய விமர்சனங்கள் எவ்வாறு காணப்படுகின்றன?**

i. கல்விக்காக முழு உலகத்துக்கும் பொதுவான நோக்கமொன்றினைக் குறிப்பிடுவதற்கான முயற்சி தோல்வி கண்டுள்ளது என சேர். பன்சினன் குறிப்பிட்டுள்ளார். நாடுகளுக்கிடையேயுள்ள விசேட தன்மைகள் காரணமாக ஒவ்வொரு கல்வி நோக்கமும் அவ்வவ் நாட்டின் வாழ்க்கைத் தத்துவத்துடன் பின்னிப் பிணைந்திருப்பதே இதற்குக் காரணமாகும். ஒரு நாட்டின் அரசியல், பொருளாதாரம், சமயம், சமூகம், கலாசாரம் ஆகிய தேசியத் தேவைகளின் பங்களிப்புக்குத் தகுந்ததாகவே நோக்கங்கள் உருவாக்கப் படுகின்றன.

ii. கல்வி நோக்கங்களை

(அ). தனியாள் நோக்கங்கள்

(ஆ) சமூக (பொது) நோக்கங்கள்

(இ) தனியாள், சமூக (பொது) நோக்கங்கள் என வகைப் படுத்தலாம்.

iii. தனியாள் நோக்கமும் பொது நோக்கமும் சம அளவில் வளர்ச்சிகாண வேண்டும் எனலாம். அரிஸ்டோட்டல், பிளேட்டோ போன்றோர் தனியாள் நோக்கத்தைவிடப் பொது நோக்கத்துக்கே முதலிடங் கொடுத்தனர். சேர். பன்னியன் தனியாள் நோக்கம் சார்பாகக் கருத்து வெளியிட்டுள்ளார்.

iv. யுனெஸ்கோ, யுனிசெப், சேவ் த சில்றன் போன்ற சர்வதேச

நிறுவனங்கள் மூலம் தேசியமட்டத்தை மீறிய கல்வி நோக்கங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. ஐ.நாவின் மனித உரிமைகள் தொடர்பான வெளியீடு, கொம்யூனிஸ்ட் வெளியீடு போன்றவை தேசியத்தை மீறிய கல்வி நோக்கங்களை வெளிப்படுத்தியுள்ளன.

v. ஐ.அமெரிக்கா, ஐ.இராச்சியம் போன்றவற்றின் கல்வி நோக்கங்களில் தனியாளின் பூரண விருத்திக்கு முதலிடம் அளிக்கப்பட்டுள்ளது. 1990க்கு முந்திய சோவியத் ஒன்றியத்தில் தனியாள், சமூக நோக்கங்கள் ஒன்றிணைக்கப் பட்ட கல்வி முறை நோக்கம் காணப்பட்டது. சீனாவில் மார்க்சிய தத்துவ அடிப்படையிலான வளர்ச்சிக்கும், யப்பானில் பூரண ஆளுமை மிக்க சமூகத்தினைக் கட்டியெழுப்பவும் கல்வி நோக்கங்கள் முன்வைக்கப்பட்டன.

vi. சமகாலத்தில் உலகம் ஒரு கிராமமாக மாறி வருகையில் நாடுகளின் தேசிய எல்லைகளை மீறிய கல்வி நோக்கங்கள் முதன்மை பெறுகின்றன.

vii. இலங்கையில் கல்வி நோக்கங்கள் காலத்துக்குக் காலம் முன்வைக்கப்பட்டுள்ளன. அவை மாற்றமுறாத, மாற்றமடைந்த வைகளாகக் காணப்பட்டன.

viii. 1998 கல்விச் சீர்திருத்தத்தில் 09 கல்வியின் தேசிய குறிக்கோள்கள் அல்லது நோக்கங்கள் விதந்துரைக்கப் பட்டுள்ளன.

**25. கல்வி நோக்கங்களை நடைமுறைப்படுத்துகையில் எவ்வாறு பாகுபடுத்தலாம்?**

i. நீண்டகால நோக்கங்கள் (பரந்தவை)
ii. சிறப்பான நோக்கங்கள் (நடத்தை நோக்கங்கள்)
iii. குறிக்கப்பட்ட நோக்கங்கள் எனப் பாகுபடுத்தலாம்.

**26. பீ.மஸ் என்பவரது அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட கல்வி நோக்கப் பாகுபாடு எவ்வாறு காணப்படுகிறது?**

வரிசைக் கிரம முறையும் அறிவுசார் ஆட்சி, எழுச்சிசார் ஆட்சி, உள இயக்கம் சார் ஆட்சி என்றவாறும், அவற்றுக் கிடையிலான நெருக்கமும் காணப்படுகிறது.

**27. பெஞ்சமின் புளூம் (1956) அவர்களின் அறிவுசார் ஆட்சி நோக்கப் பாகுபாடுகள் எவை?**

i. அறிவு (Knowledge).
ii. விளக்கம் (Comprehension)
iii. பிரயோகம் (Application)
iv. பகுத்தல் (Analysis)
v. தொகுத்தல் (Synthesis)
vi. மதிப்பீடு (Evaluation)

**28. கிரத் வோல்ட்டின் (1964) எழுச்சிசார் ஆட்சியில் இடம் பெறும் ஐந்து நோக்கங்களும் எவை?**

i. அவதானத்தைப் பெறல் (Receiving - relates to)
ii. துலங்குதல் (Responding)
iii. பெறுமானம் காணல் (Valuing)
iv. ஒழுங்கமைத்தல் (Organization)
v. பண்புகளைப் பெறல் (Charactrization)

**29. சிம்சன் என்பவர் (1966) உள இயக்கம் சார் ஆட்சியின் நோக்கங்களை எவ்வாறு பாகுபடுத்தியுள்ளார்?**

i. காட்சி (Refierc movements)
ii. ஆயத்தம் (Fundamental movements)
iii. வழிகாட்டப்பட்ட துலங்கல் (Perceptual abilities)
iv. பொறிமுறைப்படுத்தல் (Physical abilities)
v. சிக்கலான வெளிக்காட்டப்பட்ட துலங்கல் (Skilled movements)
vi. பொருத்தப்பாடு (Nondiscursive communication)
vii. ஆக்கம் (Creative)

**30. கல்வியில் நவீன எண்ணக்கருக்கள் எவ்வாறு உருவாகின?**

i. 17ஆம் நூற்றாண்டு முதல் கல்வி தொடர்பாக முன்வைக்கப்பட்ட பல்வேறு தத்துவ, உளவியல், சமூகவிஞ்ஞானக் கருத்துகளின் விளைவாகப் பல்வேறு அணுகுமுறைகள் கல்வியில் ஏற்பட்டன.
ii. அதுவரை பேணப்பட்டுவந்த கற்றல் - கற்பித்தல் முறைகள், ஆசிரியர்களின் செயற்பாடுகள், கலைத்திட்டங்கள் ஆகியவை விமர்சனத்துக்கு உள்ளாகின.

iii. இவற்றின் விளைவாக ஆசிரியர் மையக் கல்வி முறையானது மாணவர் மையக் கல்வியாகவும், அபிவிருத்திமையக் கல்வியாகவும் மாறவேண்டிய தேவை உண்டாயிற்று.

iv. அபிவிருத்திக் கல்விக்கான பயணம், தனியாள் அபிவிருத்தியை யும் சமூக அபிவிருத்தியையும் நோக்கமாகக் கொண்டதாக அமைந்தது.

v. கல்வியானது நலன்புரி நடவடிக்கைகளுடன், எதிர் காலத்தில் வினைதிறனுடையதாகவும் விளைதிறனுடை யதாகவும் விளங்குவதற்காக நிகழ்காலத்தில் மேற்கொள்ளப் படும் முதலீடாகக் கருதப்பட்டது. இதற்காகப் பல செயற் பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

**31. சமூக அபிவிருத்திக்காகக் கல்வியைப் பயன்படுத்தும் போது கருத்தில் கொள்ள வேண்டிய சமூக அபிவிருத்திச் செயற்பாடுகள் யாவை?**

i. தனியாள் அபிவிருத்திக்கான கல்வி

ii. தேசிய ஒருங்கிணைப்புக்கான கல்வி

iii. பொருளாதார அபிவிருத்திக்கான கல்வி

iv. சமூக நவீனமயப்படுத்தலுக்கான கல்வி

v. நிலையான அபிவிருத்திக்கான கல்வி அல்லது தளராநிலை அபிவிருத்திக்கான கல்வி.

vi. சிறப்புத் தேர்ச்சிக்கான கல்வி.

**32. தனியாள் அபிவிருத்திக் கல்வி என்றால் என்ன?**

தனியொருவரிடையே உடல், உள, மனவெழுச்சி, ஒழுக்கம் சார்ந்த அபிவிருத்தியையும் அதனுடன் இணைந்ததாக நுண்மதி, அறிவு அபிவிருத்தியையும் ஏற்படுத்துவது தனியாள் அபிவிருத்திக் கல்வி எனலாம்.

**33. சமகாலத்தில் தனியாள் அபிவிருத்திக் கல்வியில் மேலும் எவற்றை அபிவிருத்தி செய்ய வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது?**

இன்றைய கல்வியானது தனிநபரின் திறன்கள், இயலுமைகள், ஆற்றல்கள், தேவைகள் போன்றவற்றுடன் சவால்களை வெற்றி கொள்ளல் ஆகியவற்றையும் விருத்தி செய்வதாக அமைய வேண்டும்.

**34. தேசிய ஒருங்கிணைப்புக்கான கல்வி என்பதனால் கருதப்படுவது யாது?**

நாட்டில் வாழ்கின்ற பல்வேறு இனக் குழுமங்களிடையே சமத்துவம், புரிந்துணர்வு, விட்டுக் கொடுப்பு, ஏற்றுக் கொள்ளல், கௌரவிப்பு ஆகியவற்றினூடாக ஒருமைப்பட்ட வாழ்வை ஏற்படுத்தும் பொருட்டு நடைமுறைப்படுத்தப்படுவது தேசிய ஒருங்கிணைப்புக் கல்வியாகும்.

**35. இன்றைய உலகில் பன்மைச் சமூகக் கோலங்கள் காணப்படுவதற்கான காரணங்கள் யாவை?**

i. விஞ்ஞான தொழினுட்ப வளர்ச்சி, இடப் பெயர்வுகள், ஆக்கிரமிப்புகள், நவீனமயமாக்கம், உலக மயமாக்கம் முதலான பல காரணிகளால் அநேகமான சமூகங்கள் பல்லின , பன்மதச் சமூகங்களாக மாறியுள்ளன.

ii. இதன் விளைவாகப் பல மொழிகளைப் பேசுதல், பல் வேறு சமயங்களைப் பின்பற்றுதல், பல்வேறு சடங்குகள், சம்பிரதாயங்கள் பேணப்படுதல் ஆகியவற்றால் உலகில் பன்மைச் சமூகங்களும், பல்பண்பாட்டுச் சமூகங்களும் பெருமளவுக்குக் காணப்படுகின்றன.

iii. நாட்டுக்கு நாடு மாத்திரமன்றி ஒரே நாட்டுக்குள்ளும் அரசியல், பொருளாதார, சமூகப், பண்பாட்டுக் காரணிகளால் இனக் குழுக்களுக்கிடையில் முரண்பாடுகள் தோன்றுகின்றன.புறக்கணித்தல், இழிவுபடுத்தல், உரிமை மறுத்தல், பலாத்காரத்தைப் பிரயோகித்தல், பார பட்சம் காட்டுதல் போன்றவற்றால் இனக்குழுமங்களிடையே பல்வேறு பிரச்சினைகள் தோன்றி அலைக்கழிக்கின்றன.

**36. பொருளாதார அபிவிருத்திக்கான கல்வி என்பதன் கருத்து யாது?**

கல்வியின் மூலம் தனிநபரொருவரின் முன்னேற்றம், சமூக முன்னேற்றம் ஆகியவற்றை இலக்காகக் கொண்டு செயற்படுதல் பொருளாதார அபிவிருத்திக்கான கல்வி எனப்படும். இதனைப் பொதுப் பண்பாகக் கொண்டு கல்வியினால் தனிநபரொருவரின் நடத்தையை ஒழுங்குபடுத்தலும் அதனூடாகச் சமூக அபிவிருத்திக்குப் பங்காற்றலும் இதனுள் அடங்கும். கல்வியும் பொருளாதாரமும் பிரிக்க முடியாத தொடர்புடையவை என்பதையும் கவனத்திற் கொள்ளுதல் வேண்டும்.

**37. கல்விக்கான முதலீடு எவ்வாறு அமைதல் வேண்டும்?**

i. கல்விக்கான முதலீடானது எதிர்காலத்தில் குறித்த நபரின் முன்னேற்றத்துக்கும், நாட்டின் உற்பத்தி அபிவிருத்திக்கும், ஆளிடைத் தொடர்பு வளர்ச்சிக்கும், புதிய படைப்புகளை உருவாக்குவதற்கும் உதவ வேண்டும்.

ii. கல்விக்கான முதலீட்டு வளங்களைச் சிக்கனமாகப் பயன் படுத்த வேண்டும்.

iii. கல்விக்கான வளங்களை வீணாக்குதல், பயன்படுத்தா திருத்தல், கவனக் குறைவாய்ப் பயன்படுத்தல் ஆகியன தவிர்க்கப்படல் வேண்டும்.

**38. ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தி தங்கியுள்ள முக்கிய காரணிகள் எவை?**

i. மூலதனம்

ii. உழைப்பு

iii. கல்வி

**39. ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்குக் கல்வி எவ்வாறு உதவும்?**

i. செல்வந்த வகுப்பினருள் கற்றவர்கள் அதிகமாயுள்ளனர். கற்றோரின் உழைப்பானது கல்லாதோரின் உழைப்பைவிட அதிகமானதாகும்.

ii. பயிற்றப்படாத உழைப்பாளர் தொகையைக் குறைத்துப் பயிற்றப்பட்ட உழைப்பாளர் தொகையை அதிகரிக்கச் செய்வதால் பயன் கூடுதலாகும்.

**40. அபிவிருத்தியை இலக்காகக் கொண்ட கல்வி வழங்கல் எவ்வாறு அமைதல் வேண்டும்?**

i. தனது நாட்டுக்கும் சமூகத்திற்கும் பொருத்தமான தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு கல்வியைக் கட்டியெழுப்ப வேண்டும்.

ii. போட்டித் தன்மையில்லாது ஒத்துழைப்படன் கல்வியைத் திட்டமிட வேண்டும்.

iii. ஆக்கபூர்வமான சிந்தனைகளினூடு வழிப்படுத்தும் கற்றல் சந்தர்ப்பங்களை வழங்குதல் வேண்டும்.

**41. நிலையான அபிவிருத்திக்கான கல்வி அல்லது தளராநிலை அபிவிருத்திக்கான கல்வி அல்லது பேண்தகு அபிவிருத்திக்கான கல்வி (Sustainable Development /Snstainable operation) என்பதன் பொருள் யாது?**

எதிர்காலச் சந்ததியினரும் தமது தேவைகளைப் பூர்த்தி செய்யத் தக்கவாறு அவர்களின் தேவைகளுக்கு இடையூறு

விளைவிக்காமல் தற்காலத்திலான தேவைகளுக்கேற்றவாறு கல்வியின் மூலம் அபிவிருத்தியில் ஈடுபடும் செயற்பாட்டினைத் தளராநிலை (பேண்தகுநிலை) அபிவிருத்திக்கான கல்வி எனலாம்.

**42. தளராநிலை அபிவிருத்தியில் இடம்பெற வேண்டிய முக்கிய அம்சங்கள் எவை?**

i. எதிர்காலச் சந்ததி தமது தேவைகளை நிறைவேற்றுவதான வளங்களையும் வாய்ப்புகளையும் நிகழ்காலத்தில் பேணல்.

ii. அவற்றுக்குத் தீங்குவராது பாதுகாத்தல்.

iii. தற்காலச் சந்ததியினரின் தேவைக்கேற்ப இயற்கைச் சூழலையும், உயிரினச் சூழலையும் கையாளல்.

iv. சிறந்த முகாமைத்துவத்தினால் தளராநிலை அபிவிருத்தியை மேற்கொள்ளல்.

**43. தளராநிலை அபிவிருத்தியின் போது கவனிக்க வேண்டிய துறைகள் யாவை?**

i. உலகின் இயற்கை மற்றும் கனிய வளங்களை அவற்றின் வளர்ச்சியை விடவும் துரிதமாகப் பயன்படுத்தல் (தங்கம், பெற்றோலியம், கனியம்) முதலானவை.

ii. சமூகத்தால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை பூமியில் முறையாக இடப்படுத்த முடியாமை (பொலித்தீன், பிளாஸ்ரிக், றெஜிபோம்) முதலானவை.

iii. இயற்கைச் சமநிலையைப் பேண முடியாமை.

iv. இயற்கை, பொருளாதார, சமூக இலக்குகளை அடைவதற்காக மனிதவளங்களைப் பயன்படுத்தல்.

**44. தளராநிலை அபிவிருத்தியின் அடிப்படைகள் எவை?**

i. அடிப்படைக் கல்வி அபிவிருத்தி

ii. சுயதிறன் விருத்தி

iii. ஒழுக்கவிருத்தி

iv. பங்குபற்றல்

v. தீர்மானமெடுத்தல் திறன்களை விருத்தி செய்தல்

vi. கல்வி, பொருளாதார வளர்ச்சி, பொருளாதார வினைத்திறன், சமூக அபிவிருத்தி போன்றவற்றுடன் சூழலுக்கான பொறுப்பையும் பாதுகாத்துச் செயற்படல்.

vii. பொதுமக்களுக்கான விளக்கத்தையும், அறிவூட்டும் சந்தர்ப்பங்களையும் விரிவுபடுத்தல்.

viii. மனித வளங்களைப் பயிற்றுவித்தல்.

**45. உலகளாவிய ரீதியில் தளராநிலை அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்பட்ட சட்டபூர்வமான நடவடிக்கைகள் யாவை?**

i. ரம்சா உடன்படிக்கை (1971 – ஈரான்)

ii. புசி உச்சிமகாநாடு (1992 ரியோடீஜெனரோ)

iii. தளராநிலை அபிவிருத்திக் கல்விக்கான ஐக்கிய நாடுகள் தசாப்தம் (2006 – 2015)

**46. சமூக நவீனமயமாக்கலுக்கான கல்வி என்பதனால் கருதப்படுவது யாது?**

சமூக அபிவிருத்திக்கு வழிகாட்டக் கூடிய காரணிகளை இனங்கண்டு கல்வியினூடாக அவற்றை நடைமுறைப்படுத்தல் சமூக நவீன மயமாக்கலுக்கான கல்வி எனப்படும்.

**47. சமூக நவீனமயமாக்கலுக்கான கல்வியின் தேவை இன்று அவசியமாயுள்ளது ஏன்?**

இன்று உலகமயமாதல் காரணமாகக் கல்வி என்பது அறிவை வழங்கும் ஒரு செயற்பாடு என்ற நிலை மாறி, நாடு ஒன்றின் எதிர்காலமும் சிறப்பும் அந் நாட்டில் செயற்படுத்தப்படும் கல்வி முறையிலேயே தங்கியுள்ள நிலைக்கு மாறியுள்ளது. எனவே உலக மயமாக்கத்துக்கு ஏற்றதான நவீனமயமான கல்வி முறை இன்றைய காலத்தில் இன்றியமையாததாய் உள்ளது.

**48. சமூக நவீனமயமாக்கலுக்கான கற்றலில் உள்ளடங்க வேண்டிய விடயங்கள் யாவை?**

i. தேசிய ரீதியிலும் உலகளாவிய ரீதியிலும் ஏற்படக்கூடிய, ஏற்பட்ட அரசியல் பொருளாதார, சமூக, தொடர்பாடல் போன்ற மாற்றங்களை கல்வியினூடாக அறிந்து கொள்வதற்குச் சந்தர்ப்பம் வழங்கல்.

ii. சமூக முரண்பாடுகளை உண்டாக்கும் இனம், மதம், பால் தொடர்பான தப்பெண்ணங்களை விலக்கி அனைவருடனும் ஒத்துழைத்துச் செயற்படக்கூடிய தேவையான வலுவூட்டலைக் கல்வியினூடாக (சமாதானத்துக்கான கல்வி, தேசிய ஒருங்கிணைப்புக்கான கல்வி, இணைந்து வாழத்தக்க கல்வி) வழங்கல்.

iii. கல்வியைப் பாடசாலைக் கட்டிடத்தினுள்ளும், குறிப்பிட்ட நேரத்திற்குள்ளும் கட்டுப்படுத்தாமல் திறந்த தொலைக் கல்விச் சந்தர்ப்பங்களை வழங்கல்.

iv. கல்விசார் நிறுவனங்களுடன் ஏனைய நிறுவனங்களும் ஒன்றிணைந்து திறந்த கல்வியைப் பெறக்கூடியதாக அமைதல்.

v. தொடர்பாடல் ஊடகத்தில் சிறப்பான முறையில் புதிய நுட்பங்கள் அனைத்தையும் பயன்படுத்துதல்.

vi. பாடசாலைகளிலிருந்து இடைவிலகியிருப்போர் அனைவரினதும் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ளல்.

**49. சிறப்புத் தோச்சிக்கான கல்வி எவ்வாறு மேற்கொள்ளப்படும்?**

ஏதாவது குறிப்பிட்ட துறையில் வாண்மை விருத்தியடையும் பொருட்டு சிறப்புத் தோச்சிக் கல்வி வழங்கப்படும். ஆசிரியர் கல்வித்துறை முகாமைத்துவத்துறை, தொழினுட்பத்துறை, மீன்பிடித்துறை, அழகியற்றுறை, கைத்தொழிற்றுறை என்றவாறு சிறப்புத் தேர்ச்சிக்கான கல்வி வழங்கப்படும்.

**50. சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதில் அக்கறை கொண்டுள்ள சர்வதேச நிறுவனங்கள் யாவை?**

யுனெஸ்கோ, யுனிசெப், சேவ்தசில்றன், மனித உரிமைகள் கண்காணிப்பகம் முதலான ஐ.நாவின் துணை நிறுவனங்கள்.

**51. கல்வியின் மூலம் மனித உரிமைகளைப் பாதுகாத்தல் தொடர்பான சர்வதேச நடவடிக்கைகள் யாவை?**

கல்வி ஒரு மனித உரிமையாகும், மனித உரிமை என்பது எல்லா மனிதர்களுக்கும் பொதுவானதாகும். நிறம், இனம், பால், சாதி, சமூகம் முதலான வேறுபாட்டைக் கவனத்திற் கொள்ளாது மக்கள் அனைவருக்கும் சமமான உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்பது சர்வசமூகத்தினால் ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளது. இந்த மனித உரிமைகள் தொடர்பான அனைத்துலக பிரகடனம் ஐ.நா சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

**52. அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனத்தின் முக்கியமான அடிப்படைகள் யாவை?**

i. அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம்

ii. சர்வதேச பொருளாதார, சமூக, கலாசாரத்திற்கான உடன் படிக்கைகள்.

**53. சர்வதேசரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட மனித உரிமைகள் சாசனத்தின் பிரதான பகுதிகள் எவை?**

i. சிவில் உரிமைகள்

ii. அரசியல் உரிமைகள்
iii. பொருளாதார உரிமைகள்
iv. சமூக உரிமைகள்
v. பண்பாட்டு உரிமைகள்

**54. சிறுவர் உரிமைக்கான அனைத்துலகப் பிரகடனம் எவ்வாறு அழைக்கப்படுகிறது?**

*சிறுவர் சமவாயம்*

**55. சிறுவர் உரிமைகள் தொடர்பான அனைத்துலகப் பிரகடனமான ஐ.நாவின் சிறுவர் சமவாயத்தில் காணப்படும் முக்கியமான விடயங்கள் எவை?**

i. *பிள்ளைகளின் உடல், உள, சமூக வளர்ச்சிக்கான உரிமைகள் பேணப்படுதல்.*
ii. *18 வயதுக்கு உட்பட்டோர் அனைவரும் சிறுவர்கள் ஆவர் எனக் கருதுதல்.*

**56. சிறுவர் சமவாயத்தின் உறுப்பு நாடுகளின் எண்ணிக்கை யாது?**

*54*

**57. சிறுவர் சமவாயத்தின் சிறுவர் உரிமைகள் அனைத்துலகப் பிரகடனம் ஐ.நா சபையினால் எப்போது அங்கீகரிக்கப்பட்டது?**

*1989 ஆம் ஆண்டு*

**58. சிறுவர் உரிமைகள் தொடர்பான அனைத்துலகப் பிரகடனத்தை ஏற்றுக் கொண்ட நாடுகளின் எண்ணிக்கை எவ்வளவு?**

*159 நாடுகள்*

**59. சிறுவர் உரிமைகள் உலக சாசனத்தை எப்போது உலக நாடுகள் ஏற்றுக் கொண்டன?**

*1993 ஆண்டு மே மாதம் 18 ஆந் திகதி.*

**60. அனைத்துலகச் சிறுவர் சமவாயம் மூலம் பிள்ளைகளின் உரிமைகள் பேணப்படக்கூடிய வழிமுறைகள் யாவை?**

*பிள்ளைகளின் சிவில் உரிமைகள், சுதந்திரம், குடும்பச் சூழலும், பிள்ளைப் பாதுகாப்பும், அடிப்படைச் சுகாதார மற்றும் நலன்புரி நடவடிக்கைகள், கல்வி, பிள்ளைகளுக்கான விசேட பாதுகாப்புப் போன்ற துறைகள் தொடர்பாகக் கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது.*

**61. சிறுவர் சமவாயத்தின் 28வது உறுப்புரையில் கூறப்பட்டுள்ள விடயம் எது?**

"கல்வியைப் பெறுவதற்கு அனைத்துப் பிள்ளைகளுக்கும் உரிமை உள்ளதுடன் குறைந்தபட்சம் ஆரம்பக் கல்வியைக் கட்டாயமாக்குவதுடன், அதனை இலவசமாக வழங்க நடவடிக்கை எடுப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகும்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**62. சிறுவர் சமவாயத்தின் 28வது உறுப்புரைக்கு அமைவாகக் கல்வியைப் பெறும் அடிப்படை உரிமையைப் பாதுகாப்பதற்காகச் செய்ய வேண்டியவை யாவை?**

(அ). ஆரம்பக் கல்வியைக் கட்டாயமாக்குவதும் அதனை எல்லோருக்கும் இலவசமாக வழங்குவதும்.

(ஆ). பல்வேறு வழிகளிலும் இடைநிலைக் கல்வியைப் பெற வலியுறுத்தல்.

(இ). கல்வி மற்றும் தொழில் தொடர்பான தகவல்களைச் சகல பிள்ளைகளும் பெற்றுக் கொள்வதற்கும் அதற்குரிய அனுமதியைப் பெறவும் வழிவகுத்தல்.

(ஈ). பாடசாலையில் இடைவிலகலைக் குறைப்பதற்கும், முறையாக வந்து கற்பதற்கும் நடவடிக்கை எடுத்தல்.

(உ) பிள்ளைகளின் கல்வி பெறும் உரிமையைப் பாதுகாக்க நடிவடிக்கை எடுத்தல்.

**63. சிறுவர் கல்வி உரிமைப் பாதுகாப்புக்காக எடுக்கக் கூடிய நடவடிக்கைகள் யாவை?**

i. கல்வியில் சமவாய்ப்புக்கான நடிவடிக்கை எடுத்தல் (கட்டாயக் கல்வி)

ii. பொதுக் கலைத்திட்டம் ஒன்றை உருவாக்கல்

iii. புலமைப் பரிசில் முறையைப் பின்பற்றல்

iv. பாடசாலைகளுக்கு இடையிலான வேறுபாட்டைக் குறைக்க நடிவடிக்கை எடுத்தல்.

v. இலவசப் பாடநூல்களை வழங்கல்.

**64. இலங்கையில் சிறுவர் கல்விக்கான சமவாய்ப்பு நடவடிக்கைகள் எவ்வாறு காணப்படுகின்றன?**

i. பொதுக் கலைத்திட்டம்

ii. இலவசச் சீருடை

iii. இலவச உணவு

iv. இலவசப் பாட நூல்கள்

v. ஐந்தாந்தரப் புலமைப் பரிசில் பரீட்சை முதலானவற்றின் மூலம் கல்வியில் சமவாய்பபுகளை நோக்கி நகர்ந்தாலும், கிராமப்பாடசாலைகளுக்கான வளப்பற்றாக்குறை, கிராம நகரப் பாடசாலை வேறுபாடுகள் உள்ளிட்ட பல பிரச்சினை களும் காணப்படுகின்றன. உயர் கல்வித் துறையிலும் மட்டுப் படுத்தப் பட்ட பல்கலைக்கழக அனுமதி முறையினால் கல்வியில் சமவாய்ப்புப் புறக்கணிக்கப் பட்டுள்ளது.

**65. சிறுவர் உரிமைகளின் அடிப்படையில் மாணவர்களுக்கான பிரதான உரிமைகள் எவை?**

அ. கல்வியில் சமவாய்ப்புப் பெறும் உரிமை.

ஆ. பாடசாலையின் நற்பெயருக்குப் பாதிப்பேற்படாவண்ணம் பத்திரிகைச் சுதந்திரம்.

இ. தாம் விரும்பும் கழகங்கள், மன்றங்கள் போன்றவற்றில் அங்கத்தவராயிருக்கும் உரிமை.

ஈ. தன்னை வெளிப்படுத்தும் உரிமை.

உ. தண்டனை வழங்கப்படுமுன் அதற்கான காரணங்களை அறியும் உரிமை.

ஊ. தமக்கான இரகசியங்களைக் கொண்டிருக்கம் உரிமை.

எ. தமது சொந்த மதத்தினைப் பாடசாலையில் பின்பற்றும் உரிமை.

ஏ. சிறுவர் துஸ்பிரயோகத்திலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் உரிமை.

ஒ. ஆசிரியரால் துன்புறுத்தப்படவோ, உடல் பாதிப்புகளை ஏற்படுத்தவோ முடியாத உரிமம்.

இவ்வாறான பல உரிமைகள் மாணவர்க்குக் கிடைத்துள்ளன.

**66. யுனெஸ்கோ (UNESCO) வினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள சிறுவர் உரிமைகள் சிலவற்றைப் பட்டியலிடுக.**

| | |
|---|---|
| தலைப்பு 1 | பதினெட்டு வயதுக்குட்பட்டோர் அனைவரும் சிறுவர்கள் ஆவர். |
| தலைப்பு 2 | எவ்விதவேறுபாடுகளும் ஒதுக்குதல்களும் இன்றி எல்லாச் சிறுவர்களுக்கும் எல்லா உரிமைகளும் கிடைத்தல். |
| தலைப்பு 9 | பெற்றோருடன் வசிப்பதற்கான உரிமை |
| தலைப்பு 22 | அகதிச் சிறுவர்களுக்கான உரிமை |

| | |
|---|---|
| தலைப்பு 23 | அங்கவீனச் சிறுவர்களுக்கான உரிமை |
| தலைப்பு 28 | கல்வி பெறுவதற்கான உரிமை |
| தலைப்பு 30 | சிறுபான்மையினச் சிறுவர்களுக்கான உரிமை. |
| தலைப்பு 32 | சிறுவர் தொழிலாளர் தடையுரிமை |
| தலைப்பு 34 | பாலியல் துஸ்பிரயோகத்திற்கு எதிரான உரிமை. |
| தலைப்பு 37 | சித்திரவதைக் கெதிரான உரிமை |
| தலைப்பு 38 | 15 வயதிற்குட்பட்டோர் ஆயுத மோதலுக்குச் செல்லா திருப்பதற்கான உரிமை. |

**67. சிறுவர் கல்வி உரிமைகளைப் பாதுகாக்க இலங்கை மேற்கொண்டுள்ள நடிவடிக்கைகள் யாவை?**

i. கல்வி பெறுவதற்கு உரிமை
ii. கட்டாயக் கல்வி (5 – 14 வயது நடைமுறையில் உள்ளது)
iii. இலவசக் கல்வி (சீருடை , உணவு, பாடநூல், புலமைப் பரிசில்)
iv. கல்வியில் சமவாய்ப்புப் பெறுவதற்கான உரிமை
v. கல்வி நோக்கங்களை அடைவதற்கான உரிமை
vi. சிறுவர் உரிமை தொடர்பாகப் பாடசாலை வகை கூறல்
vii. சித்திரவதைக்கெதிரான உரிமையும் தண்டனைகள் விலக்கப்பட்டமையும்.
viii. சிறுவர் தொழிலாளர் தடையுரிமை
ix. ஆயுதமோதலுக்குச் செல்லாதிருப்பதற்கான உரிமை.

**68. இலங்கையில் சிறுவர் அபிவிருத்தி, பாதுகாப்பு, மேம்பாடு ஆகியவற்றுக்காகச் செயற்படும் அரச நிறுவனங்கள் எவை?**


i. பிள்ளை அபிவிருத்திச் செயலகம்.
ii. சிறுவர் நன்னடத்தைச் செயலகம்
iii. சிறுவர், மகளிர் முறைப்பாட்டுப் பிரிவுக்கான பொலிஸ் திணைக்களம்

**69. சிறுவனர் உரிமை தொடர்பாக இலங்கையில் நடைமுறையிலுள்ள கட்டங்கள் யாவை?**

i. தேசிய சிறுவர் பாதுகாப்புச்சட்டம்.
ii. சிறுவர் மகவேற்புக் கட்டளைச்சட்டம்.
iii. சிறுவர், இளம் பிராயத்தவர் கட்டளைச்சட்டம்.
iv. ஆபாச வெளியீடுகள் கட்டளைச் சட்டம்.
v. சிறுவர், இளம் பிராயத்தவர், பெண்கள் தொழிற்சட்டம்.

**70. சிறுவர் துஸ்பிரயோகங்கள் எவ்வாறானவை?**

i. உடல், உள ரீதியான துன்புறுத்தல்கள்.
i. பாலியல் ரீதியான துன்புறுத்தல்கள்
ii. சிறுவனர் உழைப்புச் சுரண்டல்.
iii. உரிமைகளையும் சலுகைகளையும் பெறவிடாது தடுத்தல்.



# 04. கல்வியின் புதிய போக்கு

**01. கல்வியின் புதிய போக்குகள் என்றால் என்ன?**

20ஆம் நூற்றாண்டிலும், 21 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் (முதல் தசாப்தத்திலும்) தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் கல்வித் துறையில் ஏற்பட்டுள்ள பல கருத்துகளும் அவற்றையொட்டிய செயற்பாடுகளும் கல்வியின் புதிய போக்குகளாகக் கருதப்படுகின்றன.

**02. கல்வியின் புதிய போக்குகளில் இடம்பெற்றுள்ள பிரதான விடயங்கள் யாவை?**

i. திறந்த கல்வியும் திறந்த பாடசாலையும்.
ii. தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட கலைத்திட்டமும் கற்றலும்.
iii. இணையத்தின் மூலம் கற்றல்.
iv. பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட ஆசிரியர் அபிவிருத்தி.
v. நிலைமாற்று ஆசிரிய வகிபாகம்.

**03. திறந்த கல்வி, திறந்த பாடசாலை ஆகிய எண்ணக்கருக்கள் உணர்த்துவன யாவை?**

திறந்த கல்வி என்பது கல்வியை அனைவர்க்கும் திறந்து விடுதல் என்னும் பொருளை உணர்த்துவதாகும். திறந்த பாடசாலை என்பது பல்வேறு தடைகள், குறைபாடுகள், கஷ்டங்கள் காரணமாகக் கல்வியைப் பெறமுடியாதோர் தாம் விரும்பியதைக் கற்பதற்கு வாய்ப்பளிக்கும் பாடசாலை நிறுவனமாகும். பாடசாலையிலிருந்து இடைவிலகியோர், வயது சென்றோர், சிறப்பான கற்றல் அனுபவங்களை மேலும் பெற விரும்புவோர் ஆகியோருக்கு அவர்கள் விரும்பும் எளிமையான வழிமுறைகளூடாக வழங்கப்படும் கல்வி திறந்த கல்வியாகவும், வழங்கும் பாடசாலை திறந்த பாடசாலையாகவும் காணப்படும்.

**04. திறந்த கல்வியை வழங்கும் நிறுவனங்கள் யாவை?**

i. திறந்த பாடசாலைகள்
ii. திறந்த பல்கலைக்கழகம்.

**05. திறந்த கல்வி நிறுவனங்களில் நடைமுறைப்படுத்தப்படும் கல்வி முறைகள் யாவை?**

i. இடைக்காலப் பாடநெறி
ii. விடுமுறைகாலப் பாடநெறி
iii. தொலைநிலைப் பாடநெறி
iv. தபால் மூலப் பாடநெறி.

**06. திறந்த கல்விமுறையில் காணப்படும் பண்புகள் யாவை?**

i. பாடநெறியின் நோக்கங்களை விளக்குவதற்கு வழிகாட்டல்.
ii. சம்பிரதாயபூர்வமான வயதுக் கட்டுப்பாடு இல்லாதிருத்தல்.
iii. சம்பிரதாயபூர்வமான தகைமைகளுக்கு உட்படாதிருத்தல்.
iv. தொடர்பாடல் ஊடகத்தைப் பயன்படுத்தல்.
v. பல்வேறு கற்றல் முறைகளைப் பயன்படுத்தல்.
vi. எளிமையான மதிப்பீட்டு முறையைப் பயன்படுத்தல்
vii. சுயகற்றலுக்கும் வேகத்துக்கும் ஏற்பக் கற்பித்தல்
viii. அனைத்து நபர்களுக்கும் தேவையைப் பொறுத்து விரிவுபடுத்தல்
ix. பொருத்தமான முறையில் நாட்பாடசாலை, மொடியூல்கள், ஒப்படைகள் மூலமான கற்றலை மேற்கொள்ளல்.

**07. இலங்கையில் திறந்த கல்விக்கு உதவும் நிறுவனங்கள் எவை?**

i. 1980 இல் நிறுவப்பட்ட இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்.
ii. பல் தொழினுட்பக் கல்லாரிகளும் ஏனைய முறைசாராக் கல்வி நிறுவனங்களும்
iii. இடைவிலகியோருக்கான பாடசாலை முறைசாராக் கல்விப் பிரிவு
iv. திறந்த பாடசாலைகள்.

**08. தேர்ச்சி என்றால் என்ன?**

அறிவு, திறன், மனப்பாங்கு, ஆளுமைப்பண்புகள், பெறுமானங்கள் ஆகியவற்றை நிரந்தரமான வாழ்க்கைப் பழக்கமாக மாற்றிக் கொள்ளல் **தேர்ச்சி** எனலாம்.

**09. தேர்ச்சிகள் தொடர்பாக இலங்கையின் தேசிய கல்வி ஆணைக்குழு குறிப்பிடுவது யாது?**

"வாழ்க்கையின் பல்வேறு சந்தர்ப்பங்களின் போதும், அன்றாட நடிவடிக்கைகளின் போதும் பொது நோக்கங்களை

*அடைந்து கொள்வதற்காகத் தேவைப்படும் அறிவு, குணவியல் புகள், திறன்கள் ஆகியன ஒன்றிணைந்து தேர்ச்சிகளாக மாறுகின்றன".*

*(தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கை - 1992)*

**10. இலங்கையில் தோச்சிகளை அடிப்படையாகக் கொண்ட கலைத்திட்டம் (தேர்ச்சிமையக் கலைத்திட்டம்) எப்போது அறிமுகஞ் செய்யப்பட்டது?**

*1998 இல்*

**11. தேர்ச்சி மையக் கலைத்திட்டம் என்றால் என்ன?**

*வாழ்க்கையின் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் அறிவு, திறன், மனப்பாங்கு ஆளுமைப் பண்புகள் போன்றவற்றை வாழ்வின் நிரந்தரப் பழக்கமாக மாற்றிக் கொள்ளும் திறனை அடிப்படை யாகக் கொண்ட கலைத்திட்டமாகும்.*

**12. 1998இன் தேர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட கலைத் திட்டத்தில் அறிமுகம் செய்யப்பட்ட தேர்ச்சிகள் எத்தனை?**

*05 தேர்ச்சிகள்*

**13. தேர்ச்சிகளின் எண்ணிக்கை ஏழாக அதிகரிக்கப்பட்ட ஆண்டு எது?**

*2003*

**14. ஆரம்பக் கல்வியில் காணப்படும் இரண்டு விதமான தேர்ச்சிப் பாகுபாடுகள் எவை?**

i. *அத்தியாவசிய கற்றல் தேர்ச்சிகள்*
ii. *விருப்புக்குரிய கற்றல் தேர்ச்சிகள்.*

**15. இடைநிலைக் கல்வியில் தோச்சிகளுக்கான அறிமுகம் எத்தகையது?**

i. *அந்தந்தப் பயிற்சிகளுக்குரிய பாடங்கள் அறிமுகப் படுத்தப் பட்டுள்ளன.*
ii. *கற்றலின் போது சம்பிரதாய முறையிலிருந்து கற்றல் - கற்பித்தல் முறை வேறுபடும்.*
iii. *மாணவர்களின் தேடலுக்கும் கண்காணிப்பிற்கும், படைப்பாக்கத்திற்கும் இடமளித்து ஒத்துழைப்புடன் செயற் படுவர்.*

iv. மாணவர் தாம் பெற்றுக் கொள்ளும் அனுபவத்தைப் பகிர்ந்து கொள்வர்.
v. மாணவர் தமது அனுபவங்களைத் தொகுப்பதற்கும், திருத்திக் கொள்வதற்கும் வாய்ப்பு ஏற்படும். அதன் மூலம் மாணவரின் ஆளிடைத் தொடர்பு கட்டியெழுப்பப்படும்.
vi. மாணவரிடையே பொறுப்புகளை ஏற்று கொள்ளத் தலைமைத்துவம் அளித்தல் முதலான சமூகத்திறன்கள் வளர்ச்சியடையும்.

**16. தேர்ச்சிமையக் கற்றல் இலங்கைப் பாடசாலைகளில் எவ்வாறு பேணப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது?**

i. ஆசிரியரால் தேர்ச்சிமையக் கற்றலுக்கான சந்தர்ப்பங்கள் பல்வேறு முறைகளினூடான செயற்பாடுகளாக உருவாக்கப்படல் வேண்டும்.
ii. கற்றல் செயற்பாடுகளுக்கான திட்டமிடல் மேற்கொள்ளல் வேண்டும்.
iii. **'5E'** மாதிரி முறையிலான செயற்பாடுகளும் மதிப்பீடுகளும் இடம்பெறல் வேண்டும்.
iv. இயன்றளவு மாணவர்மையக் கல்விச் செயற்பாடுகள் இடம்பெறல் வேண்டும்.
v. ஆசிரியர் வளவாளராகச் செயற்பட்டு வழிகாட்டி உதவ வேண்டும்.

**17. '5E' மாதிரி கற்றல் கற்பித்தல் செயன்முறையில் அடங்குவன யாவை?**

i. ஈடுபடல்
ii. கண்டறிதல்
iii. விளக்கமளித்தல்
iv. விரிவாக்கல்
v. கணிப்பீடும் மதிப்பீடும்.

**18. இணையத்தளத்தின் மூலம் கற்றல் என்பதனால் கருதப்படுவது யாது?**

i. இன்றைய காலகட்டத்தில் தகவல் தொழில்நுட்ப முன்னேற்றங் காரணமாகப் பாடசாலையும், ஆசிரியரும் பிரதானமான கற்றல் ஊடகங்கள் என்ற நிலை மாறியுள்ளது.

வளமுள்ள ஒரு பாடசாலையில் முதலாந்தரத்தில் கற்கும் மாணவர்கள் தொகையிலும் குறைந்ததாக அக் கல்விக் கோட்டத்திலுள்ள ஏனைய பாடசாலைகளிலுள்ள மாணவர் களின் மொத்த எண்ணிக்கை காணப்படல்).

**26. ஆங்கில மொழி மூலக் கற்பித்தல், கட்டாய சர்வதேச மொழி என்ற ரீதியில் ஆங்கில மொழி கற்பித்தல் போன்றவற்றில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் யாவை?**

i. தேவையான அளவு ஆசிரியர்களின்மை
ii. பயிற்சி பெற்ற ஆசிரியர் பற்றாக்குறை
iii. கிராமப்புறங்களில் பல பாடசாலைகளில் ஆசிரியர் இன்மை.

**27. முன்பள்ளிக் கல்வி தொடர்பாகக் காணப்படும் பிரச்சினைகள் யாவை?**

i. ஒழுங்கமைக்கப்பட்ட பொதுவான கலைத்திட்டச் செயற்பாடுகள் காணப்படாமை.
ii. உள்ளூராட்சி மன்றங்கள் (பிரதேச, நகர சபைகள்) நடத்தும் முன்பள்ளிகளுக்கும், தனியார் நடத்தும் முன்பள்ளி களுக்கும் இடையில் ஒருமித்த போக்குக் காணப்படாமை.
iii. முன்பள்ளி ஆசிரியர்களில் பலருக்குப் போதிய கல்வித் தகைமையும், பயிற்சியும் இல்லாமை.
iv. பல பள்ளிகளில் உயிர்ப்பற்ற விதத்தில் சம்பிரதாயபூர்வமான கல்வி இடம்பெறல்.
v. முன்பள்ளி ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் வேதனம் போதாமை.

28. **இடைநிலைக் கல்வியைப் பூர்த்தி செய்த மாணவர்களிடையே காணப்படும் பிரச்சினைகள் யாவை?**

i. உயர் கல்வியைப் பெறமுடியாத பொருளாதாரப் பிரச்சினை.
ii. தமக்கு வசதியான சூழலில் தொழிற் கல்வியைப் பெறமுடியாமை.
iii. பொருத்தமான தொழில் வாய்ப்புகள் கிடையாமை.

**29. உயர் கல்வியில் (க.பொ.த உயர்தரம்) சித்தியடையும் மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் யாவை?**

i. 90 வீதமானோர் பல்கலைக்கழகக் கல்வியைப் பெற முடியாமை.

ii. பல்வேறு நிறுவனங்களில் கற்பதற்கு அல்லது பயிற்சி பெறுவதற்குப் போட்டித் தன்மை நிலவுதல்.

iii. பெறுகின்ற பயிற்சிகள் போதாமையும் முறையான வழிகாட்டல் இன்மையும்.

iv. தாழ்ந்த பொருளாதாரச் சூழலினால் குடும்பப் பொறுப்பை ஏற்கும் நிலை.


v. பொருத்தமான வேலை வாய்ப்புகள் கிடையாமை.

**30. பட்டதாரிகளிடையே காணப்படும் தொழிலின்மையினால் ஏற்படக் கூடிய பிரச்சினைகள் யாவை?**

i. சமூக, பொருளாதாரப் பிரச்சினைகள் ஏற்படல்.

ii. மனவிரக்தியும், சமூக விரோத செயற்பாடுகளில் ஈடுபாடும் ஏற்படல்.

iii. தீவிரவாதத் தன்மை அதிகரித்தல்.



சந்தர்ப்பங்களில் மாணவருக்கு உதவுதலும் வழிகாட்டலும், குழுரீதியாக மாணவர் செயற்படும் போது குழுவினுள்ளும், குழுக்களுக்கிடையிலும் பொருத்தமாகச் செயற்பட மாணவரை ஊக்குவித்தல், மாணவர்களின் கற்றற் செயற்பாடுகளுக்குப் பொருந்தும் விதத்தில் வகுப்பறையை ஒழுங்குபடுத்தல் முதலானவை நிலைமாற்று வகிபாகத்தின் போதுள்ள ஆசிரியரின் செயற்பாடுகளாகும்.

**23. ஆசிரியர் வகுப்பறையைப் பொருத்தமாக ஒழுங்குபடுத்தும் சந்தர்ப்பங்கள் எவை?**

i. தொடர்புபடுத்தல், முன்வைத்தல், விளக்குதல் ஆகிய செயற்பாடுகளின் போது முழு வகுப்புக்கும் பொருத்தமா கவும்,

ii. தேடலின் போது சிறு குழுவினருக்குப் பொருத்தமாகவும் வகுப்பறையை ஒழுங்குபடுத்தல் வேண்டும்.

**24. இலங்கையின் பல்வேறு வகையான கல்விப் பிரச்சினைகள், சவால்கள் தொடர்பாக இனங்காணக் கூடிய அம்சங்கள் யாவை?**

i. *1948* இல் இலங்கை சுதந்திரமடைந்ததற்குப் பின்னர் தேசிய தேவைகளைக் கருத்திற் கொண்டதாகக் கல்விச் சீர் திருத்தங்கள் பல கொண்டுவரப்பட்ட போதிலும் இன்னமும் தீர்க்கப்படாத பிரச்சினைகள் பலவும் கல்வித் துறையில் காணப்படுகின்றன.

ii. தெளிவானதும் நிலையானதுமான கல்விக் கொள்கை இல்லாதிருத்தல்.

iii. அவ்வக்கால அரசியல் மாற்றங்களுக்கு ஏற்றதாகக் கல்வி யில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்களால் கற்றலில் விரும்பத் தகாத நிலைமைகள் ஏற்பட்டமை.

iv. கல்வியில் சமவாய்ப்பை வழங்குவதற்கான பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும், இன்னமும் பல குறைபாடுகள் காணப்படல்.

v. இனம், மதம், பால், கிராமம், நகரம், சமூக வகுப்பு, சமூக மட்டம் முதலான வேறுபாடுகளின் காரணமாக, அனைவ ருக்கும் ஆரம்பக் கல்வியை வழங்குதல் என்னும் கொள்கை யிலும் முரண்பாடுகள் காணப்படல்.

vi. விஞ்ஞான ஆய்வுகூட வசதி, விஞ்ஞானக் கல்வி வசதி, விஞ்ஞான கணித ஆசிரியர் வளம் ஆகியன நகரங்களுக்கு அதிகளவில் உள்ள போதிலும் கிராமப் பிரதேசங்களில் குறைந்தளவு அல்லது இன்மை காணப்படல்.

vii. ஆசிரிய ஆளணியினர் நகரப் புறங்களில் மேலதிகமாகக் காணப்படுகையில் கிராமங்களில் பற்றாக்குறை நிலவுதல்.

viii. ஆசிரிய வளம் சமமாகப் பகிரப்படாமை, பாடசாலை இடைவிலகல் கிராம மட்டங்களில் அதிகரித்துக் காணப் படல்.

ix. அரசாங்கப் பாடசாலைகளில் முதலாந்தரத்துக்கு அனுமதி பெறும் மாணவர்கள் தொடர்பாகப் பிரச்சினை காணப்படல்.

x. ஆங்கில மொழி கற்பித்தலில் ஆசிரிய வளம் பற்றாக்குறை காணப்படல்.

xi. முன்பள்ளிக் கல்வியில் போதிய கவனம் செலுத்தப்படாமை.

xii. இடைநிலைக் கல்வியைப் பூர்த்தி செய்த மாணவர்கள் மத்தியில் பல பிரச்சினைகள் காணப்படல்.

xiii. பரீட்சை மையக் கல்வி முறையே தொடர்ந்தும் நிலவுதல்.

xiv. பட்டதாரி மாணவர்கள் எதிர்நோக்கும் தொழில் வாய்ப் பின்மை தொடர்பான பிரச்சினை காணப்படல்.

xv. அளவறி ரீதியில் ஓரளவுக்கு முன்னேற்றம் கண்டாலும் பண்பறி ரீதியான அடைவுகள் கல்வித்துறையில் பின்தங்கி யிருத்தல்.

**25. அரசாங்கப் பாடசாலைகளில் முதலாந்தரத்திற்கு அனுமதி பெறுவதில் மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் யாவை?**

i. பொருத்தமான பாடசாலைகள் மாணவர்களுக்குக் கிடைக்காமை.

ii. நகரப்புறங்களில் வளமுள்ள பாடசாலைகளில் மாணவர் அனுமதிக்கான போட்டி அதிகமாயிருத்தலும், கிராமப்புறப் பாடசாலைகளிலும், நகர்ப்புற வளக்குறைவான பாடசாலை களிலும் மாணவர் தொகை வெகுவாகக் குறைவடைதலும்.

iii. பொருளாதார பலமுள்ள பிள்ளைகள் தனியார் பாடசாலை களுக்குச் (சர்வதேச பாடசாலைகளுட்பட) செல்லல்.

iv. பாடசாலை வகுப்புகளில் கூடுதலான மாணவர் தொகை காணப்படல் (சட்டத்திற்குப் புறம்பான வகையில்).

v. முதலாந்தரத்தில் மாணவர்களை அனுமதிப்பதில் போட்டி அதிகமுள்ள பாடசாலைகள் பின்பற்றும் பொருத்த மற்ற நடைமுறைகள்.

vi. வளமுள்ள பாடசாலைகளில் முதலாந்தரத்தில் அதிக சமநிலைப் பிரிவுகள் காணப்படுவதால் ஏனைய சிறு பாடசாலைகள் பாதிக்கப்படல் (ஒரு கல்விக் கோட்டத்தில்

வளமுள்ள ஒரு பாடசாலையில் முதலாந்தரத்தில் கற்கும் மாணவர்கள் தொகையிலும் குறைந்ததாக அக் கல்விக் கோட்டத்திலுள்ள ஏனைய பாடசாலைகளிலுள்ள மாணவர் களின் மொத்த எண்ணிக்கை காணப்படல்).

**26. ஆங்கில மொழி மூலக் கற்பித்தல், கட்டாய சர்வதேச மொழி என்ற ரீதியில் ஆங்கில மொழி கற்பித்தல் போன்றவற்றில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் யாவை?**

i. தேவையான அளவு ஆசிரியர்களின்மை
ii. பயிற்சி பெற்ற ஆசிரியர் பற்றாக்குறை
iii. கிராமப்புறங்களில் பல பாடசாலைகளில் ஆசிரியர் இன்மை.

**27. முன்பள்ளிக் கல்வி தொடர்பாகக் காணப்படும் பிரச்சினைகள் யாவை?**

i. ஒழுங்கமைக்கப்பட்ட பொதுவான கலைத்திட்டச் செயற்பாடுகள் காணப்படாமை.
ii. உள்ளூராட்சி மன்றங்கள் (பிரதேச, நகர சபைகள்) நடத்தும் முன்பள்ளிகளுக்கும், தனியார் நடத்தும் முன்பள்ளி களுக்கும் இடையில் ஒருமித்த போக்குக் காணப்படாமை.
iii. முன்பள்ளி ஆசிரியர்களில் பலருக்குப் போதிய கல்வித் தகைமையும், பயிற்சியும் இல்லாமை.
iv. பல பள்ளிகளில் உயிர்ப்பற்ற விதத்தில் சம்பிரதாயபூர்வமான கல்வி இடம்பெறல்.
v. முன்பள்ளி ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் வேதனம் போதாமை.

28. **இடைநிலைக் கல்வியைப் பூர்த்தி செய்த மாணவர்களிடையே காணப்படும் பிரச்சினைகள் யாவை?**

i. உயர் கல்வியைப் பெறமுடியாத பொருளாதாரப் பிரச்சினை.
ii. தமக்கு வசதியான சூழலில் தொழிற் கல்வியைப் பெறமுடியாமை.
iii. பொருத்தமான தொழில் வாய்ப்புகள் கிடையாமை.


**29. உயர் கல்வியில் (க.பொ.த உயர்தரம்) சித்தியடையும் மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் யாவை?**

i. 90 வீதமானோர் பல்கலைக்கழகக் கல்வியைப் பெற முடியாமை.

ii. பல்வேறு நிறுவனங்களில் கற்பதற்கு அல்லது பயிற்சி பெறுவதற்குப் போட்டித் தன்மை நிலவுதல்.
iii. பெறுகின்ற பயிற்சிகள் போதாமையும் முறையான வழிகாட்டல் இன்மையும்.
iv. தாழ்ந்த பொருளாதாரச் சூழலினால் குடும்பப் பொறுப்பை ஏற்கும் நிலை.
v. பொருத்தமான வேலை வாய்ப்புகள் கிடையாமை.

**30. பட்டதாரிகளிடையே காணப்படும் தொழிலின்மையினால் ஏற்படக் கூடிய பிரச்சினைகள் யாவை?**

i. சமூக, பொருளாதாரப் பிரச்சினைகள் ஏற்படல்.
ii. மனவிரக்தியும், சமூக விரோத செயற்பாடுகளில் ஈடுபாடும் ஏற்படல்.
iii. தீவிரவாதத் தன்மை அதிகரித்தல்.



# 05. ஆசிரியரின் முகாமைத்துவ வகிபாகம்

**01. முகாமைத்துவம் என்றால் என்ன?**

i. முகாமைத்துவம் என்பது எந்தவொரு நிறுவனத்திலும் அல்லது ஒழுங்கமைப்பிலும் குறிப்பிட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக அவற்றின் செயற்பாடுகளை வினைத்திறனுடன் மேற்கொள்ளும் சமூகச் செயற்பாடாகும்.

ii. குறித்தொரு நிறுவனத்தின் குறிக்கோள்களை அடையும் பொருட்டுக் கிடைக்கக் கூடிய வளங்களை வினைத் திறனுடன் உச்ச அளவில் பயன்படுத்தித் தேவையான விளைதிறனை அடையச் செய்வதே முகாமைத்துவம் எனலாம்.

**02. முகாமைத்துவத்தின் பிரதான கூறுகள் எவை?**

i. திட்டமிடல் (Planing)
ii. ஒழுங்கமைத்தல் (Organizing)
iii. நெறிப்படுத்தல் (Directing)
iv. கட்டுப்படுத்தல் (Controlling)

**02. முகாமைத்துவம் தொடர்பாக அறிஞர்கள் முன்வைத்த கருத்துகள் சிலவற்றைக் குறிப்பிடுக.**

i. “பொது நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக மனிதர்கள் கூட்டாகக் கடமையாற்றி முறையாக வழிப் படுத்தப்படும் கலையே முகாமைத்துவம் ஆகும்”. - **டொனல்க்லஸ்**

ii. “முகாமைத்துவம் என்பது வளங்களுக்கும் நோக்கங் களுக்கும் இடையிலான தொடர்புகளினூடாக மேற் கொள்ளப்படும் மானிட, நுண்மதி, உடல்சார் செயன் முறையாகும்”. - **ஓட்ரி, லென்பெயிசே**

iii. “மாறிவரும் சூழலினுள் வளங்களை வினைத்திறனுடன் பயன்படுத்தி நிறுவனத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு ஏனையோரைக் கொண்டு கருமமாற்றுதல் முகாமைத்துவமாகும்”. - **றொபர் கிறீம்கர் -**

**03. பாடசாலையொன்றில் ஓர் ஆசிரியர் சிறந்த முகாமைத்துவப் பண்புடையவராக விளங்க வேண்டியதன் முக்கியத்துவம் யாது?**

i. மேன்மேலும் தமது முகாமைத்துவத் திறனை வளர்த்துக் கொள்ள முடியும்.

ii. பாடசாலை நிர்வாகத்துக்கும், முகாமைத்துவத்துக்கும் உதவ முடியும்.

iii. முகாமைத்துவத்தினூடாகத் தனது ஆளுமையையும், தலைமைத்துவத்தையும் வளர்த்துக் கொள்ள முடியும்.

iv. விரிவான கண்ணோட்டத்துடன் செயலொன்றில் அல்லது பிரச்சினையொன்றில் தலையிட முடியும்.

v. வினைத்திறனுடன் நோக்கங்களை அடையவும், வளங் களைச் சிக்கனமாக விரயமின்றி உச்ச அளவில் பயன் படுத்தவும் முடியும்.

vi. மாணவருடன், ஏனைய ஆசிரியர்களுடன், அதிபருடன், பாடசாலைச் சமூகத்தினருடன், ஏனைய தனிப்பட்டவர் களுடன் உவப்பான, நெருங்கிய தொடர்புகளைப் பேண முடியும்.

vii. கற்றல் - கற்பித்தலில் பொருத்தமான வளங்களைக் கையாளவும், மாணவர்மையக் கற்றலை முன்னெடுக்கவும், முகாமைத்துவச் செயன்முறையைப் பொருத்தமாகப் பிரயோகிக்கவும் முடியும்.

viii. செயற்பாடுகள் வினைதிறனுடன் அமைவதால் எதிர்பார்க்கப் பட்ட விளைதிறனை அடைய முடியும்.

**05. ஆசிரியரின் முகாமைத்துவப் பணிகள் எவை?**

i. திட்டமிடல்.

ii. ஒழுங்கமைத்தல்

iii. நெறிப்படுத்தல்/வழிகாட்டல்.

iv. கட்டுப்படுத்தல்

v. மதிப்பிடல்.

**06. திட்டமிடல் என்றால் என்ன?**

i. எதை, எவ்வாறு, எங்கே, எப்பொழுது செய்ய வேண்டு மென்பதை முன்கூட்டியே தீர்மானித்துக் கொள்வது திட்ட மிடல் எனப் பொதுவாகக் கூறலாம்.

ii எந்தவொரு பணியினதும் நோக்கத்தைத் தீர்மானிக்கவும், அந்நோக்கங்களை அடையவும் தேவையான உபாயங் களையும் வளங்களையும் தீர்மானித்தல் திட்டமிடலாகும்.

**07. பாடசாலையொன்றில் ஆசிரியர் ஒருவரின் திட்டமிடற் பணிகளுக்கு உதாரணங் காட்டுக.**

i. பாடத்தைத் திட்டமிடல்

ii. கற்றல் – கற்பித்தற் செயன் முறையைத் திட்டமிடல்.

ii. மாணவர் செயற்பாடுகள், அவர்களது முன்னேற்றத்துக்கான பணிகள், கற்பித்தல் வளங்கள் முதலானவற்றைத் திட்டமிடல்.

**08. ஒழுங்கமைப்பு என்னும் முகாமைத்துவக் கூறானது எவ்வாறு அமையும்?**

திட்டமிட்ட பணிகளை நடைமுறைப்படுத்துவற்குத் தேவையான மனித, பௌதிக வளங்களுடன் நேரம் முதலான வளங்களையும் ஒழுங்கமைத்துக் கொள்வதாக அமையும்.

**உதாரணம் :**

1. சுற்றுநிருபம், பாடத்திட்டம், ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி, பாடப்புத்தகம், கற்றல் உபகரணங்கள், நேரம், மாணவர் பங்குபற்றல் முதலான நடவடிக்கைகளை ஒழுங்கு படுத்தல்.
2. பௌதிகச் சூழலை ஒழுங்குபடுத்தல்.
3. தேவையான நிதிவளத்தினை ஒழுங்குபடுத்தல்.
4. ஆலோசனை கூறல், பரிகாரம் போன்றவற்றை ஒழுங்கு படுத்தல்.

**09. முகாமைத்துவத்தில் வழிகாட்டல் முக்கியம் பெறுவது ஏன்?**

தேவையான ஆலோசனைகளை வழங்கிப் பணிகளை நிறைவேற்ற உதவுவது வழிகாட்டல் ஆகும். வழிகாட்டப்படாத செயல்கள் குறித்த நோக்கத்தை அடைவதில் தவறிவிடக் கூடும்.

**10. வழிகாட்டல் இடம்பெறும் முறைகள் யாவை?**

i. ஆலோசனை கூறல்

ii. அபிப்பிராயம் வழங்கல்

iii. தலைமைத்துவம் வழங்கல்

iv. தேவையான போது பொறுப்புகளை ஏற்றுச் சரியாக வழிகாட்டல்.

v. மனிதர்களின் செயற்பாடுகளைப் புரிந்து கொண்டு, ஒப்படைக்கப்பட்ட வேலையை வினைத்திறனுடன் செய்வதற்குத் தூண்டுதல்.

vi. மனிதத் தேவைகளைக் கவனத்திற் கொள்ளல்.

vii. மின்சாரம், உபகரணங்கள், நீர்விநியோகம் ஆகியன செயலிழந்தால் பொருத்தமாக வழிகாட்டல்.

**11. கட்டுப்பாடு எனும் முகாமைத்துவக் கூறினைப் பின்பற்றக் கூடிய சந்தர்ப்பங்கள் யாவை?**

i. முன்னேற்றம்.

ii. மேற்பார்வை

iii. தொடர் மதிப்பீட்டுக்கு உதவுதல்

iv. மதிப்பீடு

**12. இடையிட்ட மதிப்பீட்டின் போது கவனத்திற் கொள்ள வேண்டியவை யாவை?**

i. எதிர்பார்க்கும் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கான வளப் பயன்பாட்டுக்குரிய தேடல்கள் இடம்பெற்றுள்ளனவா?

ii திட்டமிட்டதற்கு ஏற்ற முறையில் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நோக்கியதாகப் பணி நடைபெறுகிறதா?

iii. பணியானது பின்னோக்கிச் செல்வதாயின் எடுக்க வேண்டிய நடிவடிக்கைகள் யாவை?

iv நோக்கங்கள் எந்த அளவுக்கு நிறைவேறியுள்ளன? இவற்றுக்கான விடைகளை மதிப்பிட்டுச் செயலாற்றுவதுடன், உரிய மாதிரிப் படிவமொன்றையும் பயன்படுத்துதல் வேண்டும்.

**13. வகுப்பறை முகாமைத்துவம் என்றால் என்ன?**

சிறந்த முறையில் ஒருங்கமைக்கப்பட்டதும், பயனுறுதியுள்ளதுமான ஒரு வகுப்பறையை நடைமுறைப் படுத்துவது வகுப்பறை முகாமைத்துவம் என எளிமையாகக் குறிப்பிடலாம். வகுப்பறையொன்றில் கற்றல் - கற்பித்தல் செயன் முறைகள் விளைதிறனுடையதாக அமையுமாறு சூழலைக் கட்டியெழுப்புவதற்கும், அதனை நடத்திச் செல்வதற்கும், தேவையான மனித, பௌதிக, நேர வளங்களை வினைத்திறனுடன் பயன்படுத்துவதற்குத் தேவையான உத்திகளைக் கையாளும் செயற்பாடாக வகுப்பறை முகாமைத்துவம் விளங்குகிறது.

**14. வகுப்பறை முகாமை தொடர்பான வரைவிலக்கணங்கள் சிலவற்றைக் குறிப்பிடுக.**

i. மாணவர், ஆசிரியர் ஆகியோரின் விருப்பத்துககுரிய இடமாகவும், எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்களை அடையக் கூடிய விதத்தில் ஊக்கத்துடன் செயற்படக்கூடிய சூழலைக் கொண்ட இடமாகவும், வகுப்பறையை மாற்றியமைப் பதற்கான முயற்சி வகுப்பறை முகாமையாகும்.

ii. சாதகமான நடத்தைகளை மீள வலியுறுத்தியும், பாதகமான நடத்தைகளை நீக்கியும் வகுப்பறைச் சூழலைப் பேணுவது வகுப்பறை முகாமைத்துவமாகும்.

iii. மாணவரது கவனம், ஊக்கம், ஆக்கத்திறன், உள்ளார்ந்த ஆற்றல்கள் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கு இலகுவான முறையில் பௌதிக மானிடச் சூழலை வகுப்பறையில் உருவாக்கிக் கொள்வது வகுப்பறை முகாமையாகும்.

**15. வகுப்பறை முகாமைத்துவத்தின் முக்கியத்துவ அம்சங்கள் யாவை?**

i. எதிர்பார்க்கப்படும் முதன்மைக் குறிக்கோள்களை அடைதல்.

ii. வினைதிறன் மிக்க கற்றல் - கற்பித்தல் செயன் முறை யினூடாகக் குறிக்கோளை அடைதல்.

iii. வளங்களை உச்ச அளவில் பயன்படுத்தி எதிர்பார்க்கப்பட்ட விளைதிறனை அடைதல்.

iv. மனித கௌரவம் தொடர்பான நடத்தை, ஐக்கியம், கூட்டுணர்வு ஆகியன கட்டியெழுப்பப்படல்.

v. தமது வேலைகளைத் தாமே செய்யத்தக்கவாறு மாணவரை நெறிப்படுத்தல்.

vi. குழு ஒத்துழைப்புணர்வை வழங்கல்.

vii. வகுப்பறையின் கவிநிலையை விருப்பத்துக்கரியதாக்குதல்.

viii. நல்லொழுக்க விழுமியங்களை வளர்த்தெடுத்தல்.

ix. ஆசிரியர் - மாணவர் தொடர்பு, மாணவர் - மாணவர் தொடர்பு ஆகியவற்றை உச்ச நிலையில் வளர்த்தெடுத்தல்.

x. குறிக்கோள்களை அடைவதற்குச் சாதகமான பௌதிக, மனித வளச் சூழலை உருவாக்கல்.

xi. பாடசாலைச் சமூகத்தினர் மத்தியிலான இடைத் தொடர் பினை உவப்பான முறையில் பேணுவதால் கற்றல் விளைவுகளைப் பேறாக்குதல்.

**16. வகுப்பறை முகாமையாளர் என்ற வகையில் ஆசிரியரின் பணிகள் யாவை?**

திட்டமிடல், ஒழுங்கமைத்தல், நெறிப்படுத்தல், கட்டுப்படுத்தல்.

**17. திட்டமிடலின் அடிப்படை அம்சங்கள் எவை?**

குறிக்கோள்களைத் தீர்மானித்தல், குறிக்கோள்களை அடைவதற்கான முறைகள், தேவையான வளங்களைத் தீர்மானித்தல் முதலியன.

**18. வகுப்பறை மட்டத்தில் குறிக்கோள்களைத் தீர்மானிக்கும் போது கவனஞ் செலுத்த வேண்டிய காரணிகள் யாவை?**

கலைத்திட்டம், மாணவர், சமுதாய எதிர்பார்ப்புகள், பாடசாலையிலுள்ள வளங்கள், ஆசிரியர் போன்றவை.

**19. கலைத்திட்டம் தொடர்பாகக் கவனிக்கப்பட வேண்டியன யாவை?**

கலைத்திட்டம் பற்றிய சுற்றுநிருபங்கள், பாடத்திட்டங்கள், ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகள், பாடநூல்கள், மேலதிக வாசிப்பு நூல்கள் போன்றவை.

**20. மாணவர் அல்லது பிள்ளைகள் தொடர்பாகக் கவனஞ் செலுத்த வேண்டிய விடயங்கள் யாவை?**

i. பெயர், வயது போன்ற பிள்ளையின் அடிப்படைத் தகவல்கள்
ii. அங்கத்தவர்கள், பொருளாதார நிலை, வீட்டுச் சூழல் போன்ற குடும்பத்தகவல்கள்.

**21. சமுதாய எதிர்பார்ப்புகளாக விளங்குபவை எவை?**

சமுதாய எதிர்பார்ப்புகளாகச் சமுதாயம் பாடசாலையிலிருந்தும், பாடசாலை சமுதாயத்திடமிருந்தும் எதிர்பார்ப்பவைகளும், சமுதாயத்தினரின் மனப்பாங்குகளும்.

**22. பாடசாலை வளங்கள் தொடர்பாகக் கவனிக்க வேண்டியவை?**

மனித, பௌதக, நேர வளங்கள் தொடர்பான தகவல்கள்.

**23. ஆசிரியர் தொடர்பாக வகுப்பறை மட்டக் குறிக்கோள்களைத் தீர்மானித்தலின் போது கவனஞ் செலுத்த வேண்டியவை யாவை?**

i. கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டுக்குத் தேவையான அறிவு, திறன், மனப்பாங்கு ஆற்றல்கள்.

ii. நல்லாசிரியரின் நடத்தை இயல்புகள்.

iii. முகாமைத்துவம், பிரச்சினை தீர்த்தல் முதலானவை.

iv. எண்ணக்கரு, தொடர்பாடல், தொழினுட்பம், மானுடத் தொடர்புகள் சார்ந்த திறன்கள்.

v. பாடங்கள் தொடர்பான பாட அலகுகளைத் திட்டமிடல், பாட வேலைத்திட்டம், செயற்பாட்டுத் திட்டம், தினக்குறிப்பு, பூர்த்தி செய்ய வேண்டிய பாடஅலகுகளைத் திட்டமிடல், கற்பித்தல் முறைகளைத் திட்டமிடல், கணிப்பீடு, பின்னூட்டல், பரிகார நடிவடிக்கைகளைத் திட்டமிடல் போன்றவை.

vi. தவணைப் பரீட்சைகள், மாணவரின் வீட்டு வேலைகள், வகுப்பு வேலைகள், இணைப்பாடவிதான நடிவடிக்கைகள் போன்றவற்றைத் திட்டமிடல்.

**24. வகுப்பறை முகாமைத்துவத்தில் ஒழுங்கமைத்தல் என்பதனால் கருதப்படுவது யாது?**

ஆசிரியர், தாம் ஒழுங்கு செய்த திட்டத்தினை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்குரிய பின்னணியை அல்லது சூழலை உருவாக்கிக் கொள்வதே ஒழுங்கமைத்தல் எனப்படுகிறது.

**25. வகுப்பறை ஒழுங்கமைப்பின் போது கவனஞ் செலுத்த வேண்டிய விடயங்கள் யாவை?**

i. வகுப்பறையின் பௌதீகச் சூழலைப் பொருத்தமாக அமைத்தல்.

ii. வகுப்பறையின் நியமங்கள் (விதிமுறைகள்), ஒழுங்கு முறைகள், பிரமாணங்கள் முதலியவற்றைப் பேணல்.

iii. வகுப்பறையின் தலைமைத்துவ வகிபாகத்தை வழங்கல்.

iv. வகுப்பறையின் சமூகத் தொடர்புக் கோலங்களைக் கட்டியெழுப்பல்.

v. ஒழுக்க விழுமியம் தொடர்பான நடத்தைகளை ஒழுங்குபடுத்தல்.

**26. வகுப்பறையின் பௌதிகச் சூழலைத் தயார்ப்படுத்தலில் அடங்குவன யாவை?**

இடவசதி, சத்தம், ஒளியோட்டம், காற்றோட்டம், தளபாடங்கள், கற்றல் சாதனங்கள், மாணவரது ஆக்கங்கள் முதலானவை.

**27. வகுப்பறை நியமங்களாகக் கருதக் கூடியவை எவை?**

பாடசாலையின் ஆரம்பமும் முடிவும், பாடவேளைகளின் ஆரம்பமும் முடிவும், மணியடித்தல், வகுப்பறைச் செயன் முறைகள், வகுப்புத் தலைவர், பாடத் தலைவர் ஆகியோரின் ஒழுங்கு முறைகள், இணைப் பாடவிதான நடவடிக்கைகள், பாடசாலைக்கு வெளியேயான சமூகச் செயற்பாடுகள் முதலான பல்வேறு விடயங்களாகும்.

**28. வகுப்பறை ஒழுங்கமைப்பில் தலைமைத்துவச் செயற்பாடுகளாக விளங்குவன யாவை?**

தலைமைத்துவத்துக்கான சந்தர்ப்பங்களை வழங்குதல், மேற்பார்வை செய்தல், தேடியறிதல் போன்றவை.

**29. வகுப்பறையின் சமூகத் தொடர்புக் கோலங்கள் எவை?**

i. மாணவர் - மாணவர் தொடர்பு
i. மாணவர் - ஆசிரியர் தொடர்பு
ii. சமூகமான சோதனைகள்
iii. பெற்றோர் - பாடசாலைத் தொடர்பு
iv. பாடசாலைச் சமூகத் தொடர்பு.

**30. வகுப்பறையில் ஒழுக்க விழுமியங்களை ஒழுங்குபடுத்தல் எவ்வாறு நிகழ முடியும்?**

i. ஒழுக்க விழுமியங்களை அறியச் செய்தல், பேணச் செய்தல், அடுத்த சந்ததிக்குக் கடத்தச் செய்தல்.
ii. முன்மாதிரியான நடிவடிக்கைளை எடுத்தல்.
iii. பயன்பாடுகளை அறிந்து நடக்கச் செய்தல்.
iv. ஒழுக்கமற்ற செயற்பாடுகளின் பாதக விளைவுகளை இனங் காட்டல்.
v. பண்பாட்டு அம்சமாக ஒழுக்கம் நிலவுவதை உறுதிப் படுத்தல்.

**31. வகுப்பறை முகாமைத்துவத்தில் நெறிப்படுத்தல் என்றால் என்ன?**

திட்டமிட்டு ஒழுங்கமைத்த பணிகளை நடைமுறைப்படுத்தும் போது பொருத்தமான தலைமைத்துவம் வழங்கல்,

அறிவுறுத்தல்களை வழங்குதல், மேற்பார்வை செய்தல் முதலானவற்றினூடாகக் குறிக்கோளை நோக்கி நகர்வடையச் செய்வதை நெறிப்படுத்தல் எனலாம்.

**32. நெறிப்படுத்தல் தொடர்பாக இடம்பெறக்கூடிய விடயங்கள் யாவை?**

1. திட்டங்கள், தீர்மானங்கள், குறிக்கோள்கள் தொடர்பான அறிவித்தல், பயிற்சி முதலியன.
2. தனியாட்களின் பல்வகைமைகளுக்குத் தக்கவாறு பணிகளை ஒப்படைத்தல்.
3. தனியியல்புகளுக்கேற்றவாறு பணிகளை வழங்குதலும், சகலருக்கும் சந்தர்ப்பம் அளித்தலும்.
4. பொருத்தமான நடத்தைகளை மீளவலியுறத்தலும், பொருத்தமற்ற நடத்தைகளைக் களைதலும்.
5. நெருக்கடி நிலைமைகளின் போது தீர்மானமெடுத்தலும், பிரச்சினைகளைத் தணித்தலும்.
6. மாணவர்களது பணிகளை நெறிப்படுத்தல்.

**33. மாணவர் பணிகளை ஆசிரியர் நெறிப்படுத்துகையில் இடம் பெறக்கூடிய விடயங்கள் யாவை?**

i. கற்றல் அடைவை மேம்படுத்துவதற்காகத் தலைமைத்துவம் வழங்கல்.
ii. தொடர்பாடல் செயன்முறை.
iii. ஊக்குவித்தல், வழிகாட்டல்
iv. பெற்றோருக்கு அறிவுரை வழங்கல்
v. பாடவிடயங்களை வழங்கல்
vi. தனியாள் வேறுபாடுகளைக் கவனத்தில் கொள்ளல்.
vii. கற்பித்தலில் எளிமையிலிருந்து கடினத்துக்குச் செல்லல், தெரிந்ததிலிருந்து தெரியாததற்குச் செல்லல், பொதுமையிலிருந்து சிறப்புக்குச் செல்லல்.
viii. கற்றல் பணிகளைக் கணிப்பிடல் (பாடசாலை மட்ட மதிப்பீடு (அலகு), அத்தியாவசியத் தேர்ச்சி அடைவு, மறுசீரமைப்புப் பணிகள், பரிகார வேலைத்திட்டங்களின் நடைமுறை).
ix. முரண்பாட்டு முகாமைத்துவம்.

**34. முரண்பாட்டு முகாமைத்துவச் செயற்பாட்டில் ஆசிரியரின் நெறிப்படுத்தல் எவ்வாறு அமையலாம்?**

i. வகுப்பு மட்டம், உள்ளக மட்டம் ஆகியவற்றிற்கு ஏற்றதாக நடவடிக்கை எடுத்தல்.

ii. தனியாளின் தேவைகள், இயல்பூக்கங்கள், நடத்தைகள் ஆகியவற்றைக் கவனத்திற் கொண்டு நடவடிக்கை எடுத்தல்.

iii. குடும்பப் பின்னணியை ஆராய்ந்து நடவடிக்கை எடுத்தல்.

**35. வகுப்பறை முகாமைத்துவச் செயன்முறையில் கட்டுப்பாடு என்பதனால் கருதப்படுவது யாது?**

குறித்த செயன் முறைக்குரிய மேற்பார்வை, முடிவு, மதிப்பீடு ஆகிய செயல்கள் தொடர்பான முன்னேற்றக் கட்டுப்பாடே இதனால் கருதப்படுகிறது. முகாமைத்துவச் செயன்முறையின் இறுதி அம்சம் கட்டுப்பாடு ஆகும்.

**36. வகுப்பறை முகாமைத்துவச் செயன்முறையில் கட்டுப்பாட்டை மேற்கொள்ளும் நோக்குடன் ஆசிரியர் கையாள வேண்டிய முறைகள் யாவை?**

i. திட்டமிட்டவாறு பாடங்களின் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் இடம் பெறுகின்றனவா?

ii. திட்டமிட்டவாறு குறிக்கோள்கள் எதிர்பார்ப்பு மட்டத்தில் அடையப்பட்டுள்ளனவா?

என்பதைக் கவனித்தலுடன், திட்டம் நடைமுறைப் படுத்தப்படும் காலத்திலும், இறுதியிலும் மதிப்பீடுகளை மேற்கொள்ளவும் வேண்டும். முன்னேற்றம் பற்றிய பதிவுகளையும், அறிக்கைகளையும் பேணிக் கொள்ளவும் வேண்டும்.

**37. வகுப்பறை முகாமைத்துவச் செயற்பாட்டின் போது முன்னேற்றக் கட்டுப்பாட்டின் முக்கியத்துவம் யாது?**

i. திட்டமிட்டதிலிருந்து விலகிச் சென்றாலோ, அப்பால் சென்றாலோ அவற்றை இனங்கண்டு வழிப்படுத்தல்.

ii. மீளத் திட்டமிடல்

iii. ஆலோசனைப் பணிகளை ஒழுங்கமைத்தல்.

iv. முன்னேற்றகரமானவற்றை மேலும் வளர்த்தெடுத்தல்.

v. குறைபாடுகளை இல்லாமற் செய்தல்

இவை போன்ற செயற்பாடுகள் முன்னேற்றக் கட்டுப் பாட்டின் முக்கியத்துவத்தைக் காட்டுகின்றன.

**38. வகுப்பறை முகாமையின் போது கணிப்பீடு அல்லது மதிப்பீடு இடம் பெறும் போது கவனத்தில் கொள்ள வேண்டியன யாவை?**

i. மதிப்பீட்டுக்கு உள்ளாகுவோர்

ii. மதிப்பீட்டை நடத்துவோர்.

iii. மதிப்பீட்டுக்குரிய விடயம்

iv. மதிப்பீடு நடைபெறும் முறை

v. மதிப்பீட்டின் பின்னரான பின்னூட்டல் வழங்கப்படும் முறை என்பன பற்றிக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

**39. வகுப்பறை முகாமைத்துவப் பிரச்சினைகள் எவை?**

i. வளப்பற்றாக்குறை தொடர்பானவை.

ii. மாணவர் தொடர்பானவை

iii. பெற்றோர் உதவி தொடர்பானவை.

vi. நிருவாகம் தொடர்பானவை.

**40. வகுப்பறை முகாமைத்துவத்தில் வளப் பற்றாக்குறைப் பிரச்சினைகள் யாவை?**

i. இடவசதி போதாமை.

ii. கற்றல் சாதனங்கள் போதாமை அல்லது பாரம்பரியத் தன்மை.

iii. புதிய வளப்பற்றாக்குறை அல்லது அவற்றைக் கையாளுவதற்குப் பயிற்சி பெற்றோர் இன்மை (கணினி)

**41. வகுப்பறை முகாமைத்தவத்தில் காணப்படும் மாணவர் தொடர்பான பிரச்சினைகள் யாவை?**

i. வரவு ஒழுங்கின்மை

ii. தொடர்ச்சியாக வரவின்மை

iii. பாட அடைவுகளில் குறைபாடு

iv. பாதகமான வீட்டுச்சூழல்

v. பெற்றோர் ஒத்துழைப்பின்மை

vi. வறுமையும் பொருளாதார நலிவும்

vii. ஒழுக்கவீனங்கள்

viii. பொருத்தமற்ற சமூகச் சூழல்

**42. வகுப்பறை முகாமையின் போது ஏற்படக்கூடிய பெற்றோர் தொடர்பான பிரச்சினைகள் யாவை?**

i. கல்வி அறிவின்மை

ii. வேலைப்பளு

iii. பிள்ளையின் கல்வியில் அக்கறையின்மை

vi. பாடசாலை தொடர்பாகக் கவனமின்மை

v. சகல பொறுப்புகளையும் பாடசாலை மீது சுமத்துதல்.

vi. பரீட்சையை மாத்திரம் கவனத்தில் கொண்டு மேலதிக வகுப்புகளில் அக்கறை காட்டுதல்.

vii. பாடசாலை இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் பிள்ளை ஈடுபடத் தடைவிதித்தல்.

**43. வகுப்பறை முகாமைத்துவம் எதிர்கொள்ளும் நிருவாகப் பிரச்சினைகள் எவை?**

i. வகுப்பில் மாணவர் தொகை அதிகரிப்பு.

ii. புறவாரிச் செயற்பாடுகளுக்காகக் கற்றல் நேரத்தைச் செலவு செய்தல்.

iii. கற்றலுக்கான நேரம் குறைவடைதல்.

iv. கற்றல் வளங்கள் போதியளவு கிடைக்காமை.

v. பதிற்கடமை நேரசூசி பயன்படுத்தாமை அல்லது நடைமுறைப் படுத்தாமை.

vi. வகுப்பறையின் பொருத்தப்பாட்டின்மை (இடையூறுகள் அதிகரித்தல்).

**44. வகுப்பறை முகாமைத்துவம் எதிர்கொள்ளும் பொதுவான பிரச்சினைகளை எவ்வாறு தீர்க்கலாம்?**

i. பெற்றோர் – பாடசாலைச் சமூக ஒத்துழைப்பைப் பெறல்.

ii. பயிற்சியளித்தலும் அறிவூட்டம் செய்தலும்.

iii. மாற்று வளங்களைப் பயன்படுத்தல்.

iv. அர்ப்பணிப்புடனான ஆசிரியர் செயற்பாடு.

v. மனப்பாங்குகளில் ஆசிரியர் – மாணவர் விருத்தியேற்படல்.

vi. முன்னேற்றக் கட்டுப்பாடுகளில் பயிற்சியளித்தல்.

vii. வகுப்பறை முகாமைத்துவம் தொடர்பான புதிய நியதிகளை உருவாக்கல்.

viii. ஆலோசனையும் வழிகாட்டலும்.

இவ்வாறான செயற்பாடுகளைக் கலந்துரையாடல்கள் மூலம் சகல மட்டங்களிலும் அணுகுவதனூடாக நடைமுறைப் படுத்த முடியும்.

**45. பாடசாலை ஆசிரியரின் பல்வேறு முகாமைத்துவப் பணிகள் யாவை?**

i. வகுப்புப் பொறுப்பாசிரியர்.

ii. பாடஇணைப்பாளர்

iii. பாடப் பொறுப்பாசிரியர்

அறிவுறுத்தல்களை வழங்குதல், மேற்பார்வை செய்தல் முதலானவற்றினூடாகக் குறிக்கோளை நோக்கி நகர்வடையச் செய்வதை நெறிப்படுத்தல் எனலாம்.

**32. நெறிப்படுத்தல் தொடர்பாக இடம்பெறக்கூடிய விடயங்கள் யாவை?**

1. திட்டங்கள், தீர்மானங்கள், குறிக்கோள்கள் தொடர்பான அறிவித்தல், பயிற்சி முதலியன.
2. தனியாட்களின் பல்வகைமைகளுக்குத் தக்கவாறு பணிகளை ஒப்படைத்தல்.
3. தனியியல்புகளுக்கேற்றவாறு பணிகளை வழங்குதலும், சகலருக்கும் சந்தர்ப்பம் அளித்தலும்.
4. பொருத்தமான நடத்தைகளை மீளவலியுறத்தலும், பொருத்தமற்ற நடத்தைகளைக் களைதலும்.
5. நெருக்கடி நிலைமைகளின் போது தீர்மானமெடுத்தலும், பிரச்சினைகளைத் தணித்தலும்.
6. மாணவர்களது பணிகளை நெறிப்படுத்தல்.

**33. மாணவர் பணிகளை ஆசிரியர் நெறிப்படுத்துகையில் இடம் பெறக்கூடிய விடயங்கள் யாவை?**

i. கற்றல் அடைவை மேம்படுத்துவதற்காகத் தலைமைத்துவம் வழங்கல்.
ii. தொடர்பாடல் செயன்முறை.
iii. ஊக்குவித்தல், வழிகாட்டல்
iv. பெற்றோருக்கு அறிவுரை வழங்கல்
v. பாடவிடயங்களை வழங்கல்
vi. தனியாள் வேறுபாடுகளைக் கவனத்தில் கொள்ளல்.
vii. கற்பித்தலில் எளிமையிலிருந்து கடினத்துக்குச் செல்லல், தெரிந்ததிலிருந்து தெரியாததற்குச் செல்லல், பொதுமையிலிருந்து சிறப்புக்குச் செல்லல்.
viii. கற்றல் பணிகளைக் கணிப்பிடல் (பாடசாலை மட்ட மதிப்பீடு (அலகு), அத்தியாவசியத் தேர்ச்சி அடைவு, மறுசீரமைப்புப் பணிகள், பரிகார வேலைத்திட்டங்களின் நடைமுறை).
ix. முரண்பாட்டு முகாமைத்துவம்.

**34. முரண்பாட்டு முகாமைத்துவச் செயற்பாட்டில் ஆசிரியரின் நெறிப்படுத்தல் எவ்வாறு அமையலாம்?**

i. வகுப்பு மட்டம், உள்ளக மட்டம் ஆகியவற்றிற்கு ஏற்றதாக நடவடிக்கை எடுத்தல்.

ii. தனியாளின் தேவைகள், இயல்பூக்கங்கள், நடத்தைகள் ஆகியவற்றைக் கவனத்திற் கொண்டு நடவடிக்கை எடுத்தல்.

iii. குடும்பப் பின்னணியை ஆராய்ந்து நடவடிக்கை எடுத்தல்.

**35. வகுப்பறை முகாமைத்துவச் செயன்முறையில் கட்டுப்பாடு என்பதனால் கருதப்படுவது யாது?**

குறித்த செயன் முறைக்குரிய மேற்பார்வை, முடிவு, மதிப்பீடு ஆகிய செயல்கள் தொடர்பான முன்னேற்றக் கட்டுப்பாடே இதனால் கருதப்படுகிறது. முகாமைத்துவச் செயன்முறையின் இறுதி அம்சம் கட்டுப்பாடு ஆகும்.

**36. வகுப்பறை முகாமைத்துவச் செயன்முறையில் கட்டுப்பாட்டை மேற்கொள்ளும் நோக்குடன் ஆசிரியர் கையாள வேண்டிய முறைகள் யாவை?**

i. திட்டமிட்டவாறு பாடங்களின் கற்றல் - கற்பித்தல் செயற் பாடுகள் இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் இடம் பெறுகின்றனவா?

ii. திட்டமிட்டவாறு குறிக்கோள்கள் எதிர்பார்ப்பு மட்டத்தில் அடையப்பட்டுள்ளனவா?

என்பதைக் கவனித்தலுடன், திட்டம் நடைமுறைப் படுத்தப்படும் காலத்திலும், இறுதியிலும் மதிப்பீடுகளை மேற்கொள்ளவும் வேண்டும். முன்னேற்றம் பற்றிய பதிவுகளையும், அறிக்கைகளையும் பேணிக் கொள்ளவும் வேண்டும்.

**37. வகுப்பறை முகாமைத்துவச் செயற்பாட்டின் போது முன்னேற்றக் கட்டுப்பாட்டின் முக்கியத்துவம் யாது?**

i. திட்டமிட்டதிலிருந்து விலகிச் சென்றாலோ, அப்பால் சென்றாலோ அவற்றை இனங்கண்டு வழிப்படுத்தல்.

ii. மீளத் திட்டமிடல்

iii. ஆலோசனைப் பணிகளை ஒழுங்கமைத்தல்.

iv. முன்னேற்றகரமானவற்றை மேலும் வளர்த்தெடுத்தல்.

v. குறைபாடுகளை இல்லாமற் செய்தல்

இவை போன்ற செயற்பாடுகள் முன்னேற்றக் கட்டுப் பாட்டின் முக்கியத்துவத்தைக் காட்டுகின்றன.

**38. வகுப்பறை முகாமையின் போது கணிப்பீடு அல்லது மதிப்பீடு இடம் பெறும் போது கவனத்தில் கொள்ள வேண்டியன யாவை?**

i. மதிப்பீட்டுக்கு உள்ளாகுவோர்

ii. மதிப்பீட்டை நடத்துவோர்.

**50. வகுப்பு இணைப்பாளரின் முகாமைத்துவ வகிபாகத்தில் அடங்குவன யாவை?**

i. தேவையான கற்றல் வளங்களைப் பெற்றுக் கொடுத்தல்.

ii. சமாந்தர வகுப்புகளுக்கிடையே இடத் தொடர்பினைப் பேணல்.

iii. மாணவர் முன்னேற்றம், நலன்புரிச் செயற்பாடுகள், நேரசூசி தயாரித்தலில் தமது வகுப்புத் தொடர்பாக ஆலோசனை வழங்கல், வகுப்புப் பொறுப்பாசிரியாகளுக்கு வேலைகளைப் பகிர்ந்தளித்தலும் மேற்பார்வை செய்தலும் முதலானவற்றில் ஈடுபடல்.

iv. தரங்களுக்கிடையே நிர்வாகம், பாடச் செயற்பாடு போன்ற வற்றினூடாகச் சிறந்த தொடர்பாடலைப் பேணல்.

v. கற்பித்தல் மதிப்பீடு, நிர்வாக நடவடிக்கைகள் ஆகியவற்றை ஆவணப்படுத்தல்.

vi. பிரிவுத் தலைவர்கள் மற்றும்உயரதிகாரிகள் ஆகியோ ரிடையே ஆளிடைத் தொடர்பையும் ஒத்துழைப்பையும் விருத்தி செய்தல்.

**51. பிரிவுத் தலைவர்களின் முகாமைத்துவ வகிபாகத்தில் காணக்கூடிய விடயங்கள் யாவை?**

i. தமக்குரிய பிரிவின் நேரசூசி தயாரிப்பும் நடைமுறைப் படுத்தலும், சலுகை நேரசூசி தயாரிப்பும் நடைமுறைப் படுத்தலும்.

ii. தமது பிரிவின் கற்பித்தலில் பண்புத்தர அபிவிருத்திக்கு நடவடிக்கை எடுத்தல்.

iii. ஆசிரியர் வாண்மை விருத்தி, நலன்புரி விடயங்களுக்கு உதவுதல்.

iv. மாணவர் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள், நலன்புரித் திட்டங்கள் போன்றவற்றை முன்னெடுத்தல்.

v. குறித்த பிரிவுக்குரிய நிர்வாக நடிவடிக்கைகள், கலைத்திட்ட அபிவிருத்தி ஆகியவற்றில் பொறுப்பானவர்களுக்கு உதவுதல்.

vi. மாணவர் ஒழுக்கம் தமது பிரிவு மாணவரின் முழுமையான அபிவிருத்தி ஆகியவற்றில் கவனம் செலுத்துதல்.

vii. பாட ஆசிரியருடன் கலந்துரையாடல், பிரச்சினைகளைத் தீர்த்தல், மேற்பார்வை செய்தல், சகல ஆசிரியர்களுடனும்

சிறந்த நல்லுறவைப் பேணி ஒத்துழைப்பைப் பெறல்.

viii. வேலைத்திட்டம், பாடக்குறிப்பு ஆகியவற்றைப் பரிசீலித்துக் கையொப்பம் இடலும், பாடப் பூர்த்தி தொடர்பாகக் கவனஞ் செலுத்தலும்.

ix. அதிபர், பிரதியதிபர் ஆகியோர் ஒப்படைக்கும் கடமைகளை நிறைவேற்றல்.

**52. சிறந்த வகுப்பறை முகாமைத்துவத்தின் அடிப்படை விதிகளாகக் கருதத்தக்கவை எவை?**

i. நேரந்தவறாமை

ii. நன்றாக ஆயத்தஞ் செய்திருத்தல்

iii. இயன்றளவு விரைவாக வகுப்பை வேலையிலீடுபடுத்தல்

iv. முழுவகுப்பினது பங்குபற்றலும் ஒத்துழைப்பும் காணப்படல்

v. வகுப்பறையில் நடைபெறுவன பற்றிய கவனவுணர்வு

vi. வகுப்பறை விடயப் பகுப்பாய்வு

vii. நெருக்கடிகளில் பயன்படுத்துவதற்கான உறுதியான, தெளிவான வழிமுறைகளின் ஆயத்த நிலை

viii. பயிற்சிகள், ஒப்படைகள் ஆகியவற்றை உரிய வேளையில் பார்வையிட்டுக் கொடுத்தல்

ix. செய்ம்முறை வேலைகட்குப் போதிய இடமளித்தல்

x. மாணவர்மையக் கல்வி

xi. மாணவர் பிரச்சினையில் அக்கறை காட்டல்

xii. குறித்த பாடத்தை வெற்றிகரமாக முடித்து வைத்தல்.

**53. பாடப் பொறுப்பாசிரியரின் முகாமைத்துவ வகிபாகத்துடன் தொடர்புடைய பணிகள் ஐந்தினைக் குறிப்பிடுக.**

i. கற்றல் – கற்பித்தல் முகாமைத்துவத்தைப் பேணல்.

ii. ஏனைய ஆசிரியர்களுடன் நல்லுறவைப் பேணல்

iii. பாடசாலை முடிந்ததன் பின்பு இலவச விசேட வகுப்புகளை நடத்துதல்

iv. பொதுவான பாடசாலை அபிவிருத்திக்கு உதவுதல்

v. கற்றல் உபகரணங்களைப் பயன்படுத்தல்.

**54. சிறந்த வகுப்பறை முகாமைத்துவத்தின் முக்கியமான இயல்புகளைக் குறிப்பிடுக.**

i. முதன்மையாக எதிர்பார்க்கப்படும் குறிக்கோள்களை அடையக் கூடியதாக இருத்தல்.

ii. வினைதிறன், விளைதிறன் குறிக்கோள்களை அடைதல்.

iii. வகுப்பறையை உயிரோட்டமுள்ள, விருப்பத்துக்குரிய சூழலாக மாற்றுதல்.

iv. சுயமாக அலுவல்களைச் செய்யக் கூடியவாறு மாணவர்களை நெறிப்படுத்தல்.

v. மாணவர்கள் சேர்ந்து பங்குபற்றுவதற்கான சந்தர்ப்பம் அளித்தல்

vi. உயிரோட்டமுள்ள தொடர்பாடல் காணப்படுதல்.

vii. நல்லொழுக்கத்தினைப் பேணல்

**55. வகுப்பறை முகாமைத்துவத்தின் போது ஆசிரியர் முகங்கொடுக்கின்ற முக்கியமான பிரச்சினைகளைக் குறிப்பிடுக.**

i. இடவசதி போதாமை

ii. வகுப்பறைக் கற்றல் சாதனங்கள் பழைமை வாய்ந்ததாயிருத்தல்.

iii. கல்வி அறிவற்ற பெற்றோர்கள் காணப்படுதல்

iv. பாடப் புறச் செயற்பாடுகளில் ஈடுபட இயலாமை

v. மாணவர் இடைவிலகலும் வகுப்பறைக்குச் சமுகந்தராமையும்.

vi. பரீட்சைமையக் கற்பித்தல்

vii. விரும்பத்தகாத குடும்பச் சூழலிலிருந்து மாணவர் வருதல்

vii. மேலதிக வகுப்புகளுக்குப் பிள்ளைகளை அனுப்புகின்றமை (தனியார்).

**56. ஆசிரியர் வகுப்பறை முகாமைத்துவ நிபுணத்துவம் உடையவராயிருத்தல் வேண்டும் எனப்படுவது ஏன்?**

i. வகுப்பறை - வகுப்புத் தலைவர் முகாமை செய்வதற்கு.

ii. வகுப்பறையில் சுமுகமான சூழலைப் பேணுவதற்கு.

iii. வகுப்பறையில் நாளாந்த செயற்பாடுகளை முகாமை செய்வதற்கு (நேரசூசி, ஆவணங்கள், பொதுவளங்கள், செயற்பாடுகள்).

iv. வகுப்பு ஆசிரியர், பாட ஆசிரியர் போன்றோரை இணைப்புச் செய்வதற்கு.

iv. பாட ஆரம்பம், வகுப்ப ஆரம்பம், இணைப்பாடங்கள் முதலானவற்றை முகாமை செய்வதற்கு.

# 06. சமூகமயமாக்கல், சமூகமயமாக்கல் காரணிகளின் பங்களிப்பு

**01. சமூகமயமாக்கல் என்றால் என்ன?**

i. ஒருவர் , தனது சமூகச் சூழலிலுள்ள நிலைமைகளுக்கு ஏற்பப் பொருத்தப்பாடு அடைவதைச் சமூகமயமாக்கல் (Socialization) எனலாம்.

ii. குறித்ததொரு சமூகத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட விழுமியங்களைப் பேணலும், நல்லவை, கெட்டவை, செய்யக்கூடியவை, செய்யக்கூடாதவை ஆகியவற்றை அறிந்து அதற்கேற்ப நடத்தலும், ஒரு சந்ததியிலிருந்து அடுத்த சந்ததிக்குக் கலாசாரத்தைக் கடத்தலும் சமூக மயமாக்கலில் அடங்குவதாகும்.

iii. சமூகத்துடன் இசைவாக்கம் அடைவதனூடாகச் சமூக எதிர்பார்ப்புகள், விருப்புகள், வெறுப்புகள், விழுமியப் பண்புகள் ஆகியவற்றைத் தெரிந்து கொள்ளல், கடைப்பிடித்தல், அடுத்த சந்ததிக்குக் கடத்துதல் ஆகியன சமூகமயமாக்கலில் இடம்பெறுவனவாகும்.

**02. சமூகமயமாக்கல் பற்றி அறிஞர்கள் முன்வைத்த வரைவிலக கணங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.**

i. சூழலுக்குப் பழக்கப்பட்ட ஒரு நபர், அந்தச் சமூகத்தின் நிலைமைகளுக்கேற்ற வகையில் இசைவாக்கப்படுதல் சமூகமயமாக்கல் எனப்படும்".

ii. சமூகத் தாக்கங்களுக்கேற்ப ஒரு நபரினுள் ஏற்படும் நெகிழ்வுத் தன்மை சமூகமயமாக்கல் எனப்படும்" - கேட்டென்சிபார் -

**03. நபரொருவருக்கான சமூகமயமாக்கலின் தேவைகள் யாவை?**

i. தான் வாழும் சமூகம் பற்றி அறிந்து கொள்வதற்கு.

ii. சமூகத்திற்கு இசைவாக்கமடைவதற்கு.

iii. சமூகச் சட்டதிட்டங்களுக்கு அமைவாக நடப்பதற்கு.

iv. சமூகத்திற்கு உதவுவதற்கு.

v. சமூக நிலைமைகளுக்கு ஏற்ற வகையில் அவ்வப்போது பொருத்தப்பாடு அடைவதற்கு.

**04. சமூகமயமாக்கல் காரணிகள் என்றால் என்ன?**

ஒரு பிள்ளை சமூகமயமாக்கப்பட்டு வளர்ந்தவராக மாறுவதற்கு அப்பிள்ளைக்குப் பாதுகாப்பு அளிக்கும், அவரைப் பாராட்டும், ஏற்றுக் கொள்ளும், தேவைப்படின் தண்டனை வழங்கும், அவருக்குக் கற்பிக்கப்படும் எல்லாவிதமான சமூக சம்பந்தமானவைகள் சமூகமயமாக்கல் காரணிகள் எனப்படும்.

**05. சமூகமயமாக்கல் காரணிகள் எத்தனை வகைப்படும்?**

மூன்று வகைப்படும். அவையாவன:-

i. முதன்மையான சமூகமயமாக்கல் காரணிகள் - குடும்பம், சமவயதுக் குழுக்கள், சகோதர சகோதரிகள், சகபாடிகள்.

ii. துணையான சமூகமயமாக்கல் காரணிகள் - பாடசாலை, சமய நிறுவனங்கள், சமூகக் குழுக்கள், சுயாதீனக் குழுக்கள்.

iii. புடைக் காரணிகள் (தொடர்பூடகங்கள்) - தொலைக்காட்சி, கணினி, தொலைபேசி, செய்தித்தாள், இணையம், வானொலி, சஞ்சிகை, நாடகம், சினிமா.

**06. சமூகமயமாக்கல் நுட்பமுறைகள் யாவை?**

i. முன்மாதிரியாக நடத்தல் (சமூக சேவைகளின் தன்மை, தேசிய உணர்வை ஏற்படுத்தல், நிறுவனத் தலைவர்களின் நடைமுறை ஒழுங்குகள், விழுமியங்களைக் கடைப் பிடித்தல், பொது நலம் முதலானவை தொடர்பாக முன்மாதிரியாக நடத்தல்).

ii. ஆலோசனைகள் (மதுபானம், போதைப் பொருள் பாவனைகளை விலக்குதல், சமூக நோய்களின் தாக்கம், உளப் பாதிப்பு, ஒழுக்க விழுமியங்களைப் பேணல் முதலானவை பற்றி செஞ்சிலுவைச் சங்கம், பாடசாலை உள ஆலோசகர், உளவளத்துணை நிறுவனங்கள் மூலமாக ஆலோசனை வழங்கல்).

iii. பரிசுகள் (தலையைத் தடவுதல், முதுகில் தட்டி உற்சாகப்படுத்தல், மகிழ்வுடன் பாராட்டல், சிறுசிறு பரிசுப் பொருள்களை அன்பளிப்புச் செய்தல், விழாக்களில் அல்லது கூட்டங்களில் விருதுகள், பரிசுகள் போன்றவற்றை வழங்குதல் முதலானவை).

iv. கணிப்பு (பிள்ளைகளின் செய்திகளைக் கவனத்துடன் செவிமடுத்தல், அவர்களை அன்புடனும் மரியாதையுடனும் அழைத்து உரையாடுதல், அவர்களது கோரிக்கைகளை நிறைவேற்ற முயற்சித்தல் போன்றவை).

v. தண்டனை (பிழையான நடத்தைகளைச் சுட்டிக்காட்டல், புறக்கணித்தல், பொருத்தமான முறையில் சிறுசிறு தண்டனைகள் வழங்கல் பல தடவை எழுதச் செய்தல், முழங்காலில் விடுதல், தோப்புக் கரணம் போடல், பின்வாங்கில் இருக்கச் செய்தல், பாடவேளை முடியும் வரை எழுந்து நிற்கச் செய்தல், பெற்றோரை அழைத்துக் கொண்டு வருமாறு கூறல், அதிபரிடம் முறைப்பாடு செய்தல் போன்றவை)

**07. சமூகமயமாக்கும் காரணியாகப் பாடசாலையின் பங்களிப்பு யாது?**

i. நிருவாகம், முகாமைத்துவம், கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் ஆகியவற்றினூடாகப் பிள்ளைகளைச் சமூகமயமாக்குவதற்குத் துணை செய்கிறது.

ii. பின்தங்கிய மாணவர்கள் கல்வியை முன்னெடுக்கத் தக்கவிதத்தில் குழுக்களை அமைத்தல், எச்சரிக்கை விடுத்தல், வீட்டுச் சூழல் பற்றிய விளக்கத்தை ஏற்படுத்தல் முதலான செயற்பாடுகளில் ஆசிரியர்களை ஈடுபடுத்துகிறது.

iii. நெகிழ்ச்சியான கொள்கை, பாடசாலைக்குள் பொறுப்புகளைப் பகிர்ந்தளித்தல் மூலமாகப் பிள்ளைகளை இடப் படுத்துவதற்கு (முன்னுக்குக் கொண்டு வருவதற்கு) ஆசிரியர்களால் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

iv. பிள்ளைகளை வரவேற்றல், விரக்திக்கான காரணங்களைத் தேடியறிந்து தீர்வு கொடுத்தல், தேவையான விடயங்களில் தகுந்த வழிகாட்டுதல்களை வழங்கல் ஆகியவை ஆசிரியர்களால் மேற்கொள்ளப்படுகின்றன.

v. குடும்பங்களில் நிறைவேற்ற முடியாத பல விடயங்கள் பாடசாலையில் நிறைவேற்றப்படுகிறது.

vi. குடும்பங்களில் கற்பிக்கப்படும் விடயங்களைப் பாடசாலை உறுதிப்படுத்துகிறது.

vii. நாட்டின் சிறந்த குடிமகனாக இசைவாக்கம் அடைவதற்கான திறன்களைப் பாடசாலை வழங்குகிறது.

viii. சமூகத்துடன் இசைவாக்கம் அடைவதற்கான பின்னணியையும், சமூகமயமாதல் திறன்களையும் பாடசாலை வழங்குகிறது.

ix. பரந்த சமூகத்தின் உபதொகுதியாகப் பாடசாலை பங்களிப்பைச் செய்கிறது.

x. கலைத்திட்டம், ஆளிடைத் தொடர்பு முதலியவற்றினூடாகச் சமூகமயமாக்கல் பணிகளைப் பாடசாலை முன்னெடுக்கிறது.

இவையனைத்தும் பாடசாலையின் சமூகமயமாக்கல் பணிகளாகவும், சமூகமயமாக்கலுக்கான பங்களிப்பாகவும் விளங்குகின்றன.

**08. சமூக மயமாக்கலுக்காகப் பாடசாலைகளில் பயன்படுத்தப்படும் முறைகள் யாவை?**

i. கலைத்திட்டம் - முறைசார் கலைத்திட்டம், முறைசாராக் கலைத்திட்டம், முறையில் கலைத்திட்டம்.

ii. பாடசாலையின் ஆளிடைத் தொடர்புகளும் ஏனைய தேவைகளும்.

iii. பிற சமூகவியல் காரணிகளினால் ஏற்படும் பாதகமான விளைவுகளைக் குறைப்பதற்குப் பங்களிப்பைச் செய்தல்.

**09. சமூகமயமாக்கல் செயன்முறையின் போது இனங்காணக் கூடிய சமூகப் பிரச்சினைகள் யாவை?**

i. தற்கொலை முயற்சி

ii. பாலியல் வக்கிரங்கள், போதைப்பொருட்கள் பாவனை முதலான ஒழுக்கமற்ற செயல்களில் ஈடுபடல்.

iii. இன, வர்க்க முரண்பாடுகள்

iv. சாதி, சமய முரண்பாடுகள்

v. ஆண், பெண் சமூக முறைமைகள் தொடர்பான பிரச்சினைகள்

vi. கலாசாரச் சீர்கேடுகள்

vii. சிறவர் துஸ்பிரயோகம்

viii. விளம்பரங்களினூடாகப் பாலியல் துஸ்பிரயோகங்களுக்கு உள்ளாதல்

ix. முறையற்ற ஆடை அலங்காரங்களைப் பேணுதல்

x. பாதிப்பை உருவாக்கும் நுகர்வுப் பழக்கங்களுக்கு ஆளாதல்.

xi. முறைகேடான வாழக்கையினால் ஆபத்தான நோய்களுக்கு ஆளாதல்

xii. தீவிரவாதச், பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடல்.

**10. சமூகமயமாக்கல் தொடர்பாகக் குடும்பங்களினால் நிறைவேற்ற முடியாத விடயங்கள் எவையென இனங்காணலாம்?**

i. பிள்ளையின் சுயவிருப்பினைக் கவனியாது கல்வியைத் திணித்தல்.

ii. அன்பு, அரவணைப்பு, பொறுப்பு, கவனிப்பு இன்மை

iii. பொருளாதார நிதியூட்டம் காரணமாகப் பிள்ளைகளுடன் நேரம் செலவழிக்கப்படாமை.

iv. சுயவிருப்பினை, இயலுமையைக் கருத்திற் கொள்ளாது அந்தஸ்தை மட்டும் கருத்திற் கொண்டு பாடத்துறைகளைப் பெற்றோரே தெரிவு செய்தல்.

v. குடும்பத்திலான பிளவுகள், பெற்றோர் வெளிநாடு செல்லல், கட்டுப்பாடற்ற பொழுது போக்குச் சாதனப் பாவனை முதலியன.

**11. சமூகமயமாக்கும் முகவர்கள் யாவர் என்பதனை அறிமுகஞ் செய்க.**

சமூகத்தில் உள்ள பிரசை ஒருவருக்கு அன்பு, காப்பு, கணிப்பு, மதிப்பு, பாராட்டு, தண்டனை, ஊக்கப்படுத்தல் போன்ற உத்திகள் மூலம் சிறந்த நடத்தையை உருவாக்க முற்படும் நிறுவனங்கள் சமூகமயமாக்கும் முகவர்கள் எனப்படும். இதில் ஆரம்பநிலை (முதனிலை), இடைநிலை (துணைநிலை), மூன்றாம் நிலை (புறநிலை) முகவர்களென மூன்று வகையுண்டு.

**12. சமூகமயமாக்கும் ஒரு முகவர் (காரணி) என்ற வகையில் குடும்பத்தினால் ஆற்றப்பட வேண்டிய பிரதான பணிகள் எவை?**

i. ஒழுக்க, விழுமிய, பண்பாட்டு அம்சங்களைப் பேணச் செய்தல்.

ii. பேச்சு மொழியைப் பயிற்றுதல்.

iii. மூத்தோரை மதிக்கப் பழகுதல்.

iv. தொழில் ஒன்றுக்குத் தயார்ப்படுத்துதல்.

v. எதிர்கால வாழ்க்கைக்கு ஏற்றவிதத்தில் ஆற்றப்படுத்துதல்.

**13. சம வயதுக் குழு என்பதனால் கருதப்படுவது யாது?**

ஒரே வயதைக் கொண்ட, ஒத்த எண்ணங்களைக் கொண்ட குழுவினரைச் சமயவயதுக் குழு எனலாம்.

**14. சமவயதுக் குழுவொன்றின் விசேட இயல்புகள் யாவை?**

i. ஒரே மார்க்க விழுமியங்களைக் கொண்டிருப்பர்.

ii. ஒரே சமூக நடத்தைகளைக் கொண்டிருப்பர்.

iii. ஒரே கலாசாரத்தைக் கொண்டிருப்பர்.

iv. ஒரே எண்ணங்களையும், குறிக்கோள்களை நீண்ட நாட்களுக்குக் கொண்டிருக்க மாட்டார்கள்.

**15. சமூகமயமாக்கும் காரணியாகக் குடும்பத்தின் பணியை எல்லைப்படுத்தும் சந்தர்ப்பங்கள் சிலவற்றைக் குறிப்பிடுக.**

i. குழந்தைகளைப் பகல் பராமரிப்பு நிலையங்களுக்கு அனுப்பதல்.
ii. பிள்ளைகளை ரியூசன் வகுப்புகளுக்கும், பாடசாலை களுக்கும் அனுப்புதல்.
iii. பிள்ளைகளை வீட்டுப் பணியாளரிடம் ஒப்படைத்துப் பராமரித்தல்.
iv. பிரச்சினையான குடும்பச் சூழலில் பிள்ளைகள் வாழுதல்.

**16. சமூகமயமாக்கும் செயன்முறையினால் பாடசாலை மாணவரிடையே ஏற்படும் குறைபாடுகள் யாவை?**

i. எந்தக் காரியத்துக்கும் முன்வரத் தயங்குதல்.
ii. ஒதுங்கி இருத்தல்.
iii. கோபம், பயம், பிடிவாதம் முதலான மனவெழுச்சிக் குறைபாடுகள்.
iv. பிற மாணவர்களுடன் இணைந்து செயற்பட முடியாமை.
v. பதட்டமடைதல்.

**17. பாடசாலை மாணவரிடையே காணப்படும் சமூகமயமாக்கல் குறைபாடுகளை இழிவளவாக்க (குறைவடையச் செய்ய) ஆசிரியர் கையாளக்கூடிய வழிமுறைகள் யாவை?**

i. மாணவர் குழுக்களில் பொறுப்புகளை வழங்கல்.
ii. போட்டிகள், நிகழ்ச்சிகள் போன்றவற்றில் பங்குபற்றச் செய்தல்..
iii. செயற்பாடுகளில் ஈடுபடுத்தி ஊக்கப்படுத்தல்.
iv. அவர்கள் வெற்றியடையத்தக்கதான நிகழ்ச்சிகளையும், செயன்முறைகளையும் உருவாக்கிக் கொடுத்தல்.

**18. சமூகவியலின் பிரதான எண்ணக்கருவான சமூகம் பற்றிய வரையறை யாது?**

i. "ஆட்களை ஒருவரோடொருவர் இணைத்து வைத்திருக்கும் இடைத் தொடர்பு முறையே சமூகம் ஆகும்". - **கிட்டன்ஸ் Giddens - 1993**

ii. “சமூகம் என்பது சமூகத் தொழிற்பாடுகள், சிக்கலான சமூகத் தொடர்புகள் ஆகியவற்றைக் கொண்ட வலையமைப் பாகும்”.

iii. ஆட்களுக்கிடையிலான எளிமையான, சிக்கலான தொழிற் பாடுகள் மூலமே சமூகம் உருவாகின்றது.

**19. அமெரிக்க சமூகவியலாளர் ஹரி எம். ஜோன்சன், சமூகம் பற்றிய எண்ணக்கருவை எவ்வாறு வியாக்கியானம் செய்துள்ளார்?**

குறித்ததொரு நிலப்பிரதேசத்தைக் கொண்டிருப்பதும், பண்பாட்டு அம்சங்கள் காணப்படுவதும், பொதுவான பண்புகளை உள்ளடக்கிய சமூக இருத்தல் நிலை காணப் படுவதும், பால் ரீதியான இனப்பெருக்கம் நிகழ்வதும் சமூகமாகும் என்கிறார்.

**20. சமூகவியல் என்றால் என்ன?**

சமூகத் தொடர்புகளில் செல்வாக்குச் செலுத்தும் ஆட்கள், நிறுவனங்கள், குழுக்கள், குழுமங்கள், சந்தர்ப்பங்கள், நிகழ்வுகள், சமூக அமைப்புகள் போன்றவை பற்றி விஞ்ஞானபூர்வமாகப் பயிலும் பாடம் சமூகவியல் (Sociology) ஆகும்.

**21. சமூகக் குழுமம் என்பதை வரையறை செய்க.**

“கணிசமான காலம் இடைத்தொழிற்பாடுகளில் ஈடுபடுவதும், பொதுவான எதிர்பார்ப்புகளைப் பங்கிட்டு அனுபவிப்பதும், நடத்தை தொடர்பான நியமங்களை அமைத்துக் கொண்டது மான இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்களைக் கொண்ட மனிதக் கூட்டம் சமூகக் குழுமம் எனப்படும்” **- சாண்டர் Zander - 1965**

**22. சமூகக் குழுமங்கள் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட முக்கியமான கருத்துக்கள் யாவை?**

i. வெவ்வேறு வகையான சமூகக் குழுமங்கள் காணப் படுகின்றன.

ii. சமூகக் குழுமங்களில் நன்கு ஒழுங்கமைந்த நிலையிலுள்ள குழுமங்களும், ஒழுங்கமைவு குறைவான நிலையிலுள்ள குழுமங்களும் காணப்படுகின்றன.

iii. சமூகக் குழுமங்களில் சிறியவை தொடக்கம் பெரியவை வரை காணப்படுகின்றன.

iv. சமூகக் குழுமங்களுக்கு இடையிலான வேறுபாடுகளைக் கருத்திற் கொண்டு அவற்றை வகைப்படுத்தச் சமூகவியலாளர்கள் முனைந்துள்ளனர்.
v. சமூகக் குழும வகைப்படுத்தலுக்காகச் சில அளவு கோல்கள் பயன்படுத்தப்படும்.

**23. சமூகக் குழுமங்களின் வகைப்படுத்தலுக்காகப் பயன்படுத்தப்படும் அளவு கோல்கள் யாவை?**

i. குழுமத்தில் அடங்கியுள்ளோரின் எண்ணிக்கையும் தொடர்புகளும்.
ii. குழுமம் நிலவும் காலப்பகுதி.
iii. குழுமத்தின் அமைப்பு.

**24. சமூகக் குழும வகைப்படுத்தலில் இனங்காணப்பட்ட இருவிதங்களும் எவை?**

i. முதன்மையான குழுக்கள்
ii. துணையான குழுக்கள்

**25. பிரதான இரண்டு வகைகளை விட மேலும் இனங்காணக் கூடிய சமூகக் குழுமப் பாகுபாடுகள் எவை?**

i. சிறிய, பரந்த குழுமங்கள்
ii. நிலைக்குத்து , கிடைநிலைக் குழுமங்கள்.
iii. முறையான , முறைமையில் குழுமங்கள்.

**26. மனிதனின் குழுத் தொடர்பு முனைப்பினை விளக்குவதற்குப் பயன்படும் கொள்கை எது?**

மக்டுகலின் இயல்பூக்கக் கொள்கை.

**27. சமூகக் குழுமங்களில் முதன்மைக் குழுமங்களின் இயல்புகள் யாவை?**

i. தனிப்பட்ட நோக்கங்கள் முக்கியத்துவம் பெறுதல்.
ii. சமூகத் தொடர்புகள் முறைமையற்ற தன்மையுடன் காணப்படுதல்
iii. வலிமையானதும் நெருக்கமானதுமான தொடர்புகள் காணப்படுதல்.

iv. நேருக்கு நேர் தொடர்புகள் காணப்படுதல்.
v. ஏற்றுக் கொள்ளப்பட்ட நியமங்கள் காணப்படாமையும் நெகிழ்வுத் தன்மையுடையனவாக விருத்தலும்.

**28. சமூக முதன்மைக் குழுமங்களுக்கான உதாரணங்கள் எவை?**

குடும்பம், நெருக்கமான நண்பர்கள் குழுக்கள்

**29. 'முதன்மையான குழுமம் என்பது நேருக்கு நேர் தொடர்பு கொள்கின்ற, நெருக்கமாக ஒத்துழைக்கின்ற குழுமமாகும்' - இவ்வாறு குறிப்பிட்ட சமூகவியலாளர் யார்?**

**சீ.எச். கூகி C.H. Cooky - 1992**

**30. சமூக துணைநிலைக் குழுமங்களின் இயல்புகள் யாவை?**

i. பொதுவான குறிக்கோள்கள் முக்கியம் பெறல்.
ii. அங்கத்தவர்களின் அந்தஸ்து , பொறுப்பு ஆகியன வரையறுக்கப்பட்டிருத்தல்.
iii. சட்டபூர்வமான அடிப்படையில் பொறுப்புகள் தீர்மானிக்கப் படல்.
iv. குறித்த பணிகளை அடிப்படையாகக் கொண்டு தொடர்புகள் கட்டியெழுப்பப்படல்.
v. தனிப்பட்ட தொடர்புகள் மீது தீர்மானங்கள் மேற் கொள்ளாமை.
vi. வெவ்வேறு மட்டங்களில் தொடர்புகள் காணப்படுதல்.
vii. முறைமையான தொடர்பாடல் காணப்படுதல்.

**31. சமூகத் துணைநிலைக் குழுமங்களுக்கான உதாரணங்கள் எவை?**

பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், தொழிலகங்கள், பல்வேறு சங்கங்கள், கழகங்கள், ஆன்மீக நிலையங்கள்.

**32. தனிநபர் ஒருவரது பங்குபற்றல் துணைநிலைக் குழுமங்களில் எவ்வாறு காணப்படும்?**

துணைநிலைக் குழுமங்களிலேயே முதனிலைக் குழுமங்கள் தோன்ற இடமுண்டு. எனவே தனிநபர் ஒருவர் இருவிதமான குழுமங்களிலும் அங்கத்துவம் ஒரே காலத்தில் வகிக்க முடியும்.

**33. பாடசாலையானது ஒரு முறைமையான துணை நிலைக்குழுமம் என்ற வகையில் அதன் இயல்புகள் யாவை?**

i. ஏற்றுக் கொள்ளப்பட்ட சட்டதிட்டங்களும் மரபுகளும் காணப்படல்.

ii. குறிப்பான மானுடத் தொடர்புகள் காணப்படுதல்

ஆசிரியர் - மாணவர்

ஆசிரியர் - ஆசிரியர்

மாணவர் - மாணவர்

மாணவர் - ஊழியர்

iii. பொறுப்புகள், அதிகாரங்கள் முதலானவை குறிப்பிட்டவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருத்தல்.

iv. தொடர்புகளை அல்லது பொறுப்புகளைத் தேவைப்படின் ஏனையோரிடம் ஒப்படைக்க வசதியிருத்தல்.

v. அங்கத்தவர் தொகை மிக அதிகமாக இருத்தல்.

vi. தமது பண்பாட்டைப் பேணிவரும் தலைமை நிலையமாகவும், சமூகத்தினால் உருவாக்கப்பட்ட பிரதான நிறுவனமாகவும் செயற்படல்.

**34. பாடசாலை என்பது எவ்வாறு சமூகத் துணைநிலைக் குழுமமாக விளங்குகிறது?**

i. குறிப்பிட்ட குறிக்கோள்களை அடைவதற்காக ஒன்றுக்கு மேற்பட்டோர் இணைந்து செயலாற்றும் அமைப்பாக விளங்குகிறது.

ii. பல்வேறு வகிபாகங்களை ஒன்றிணைக்கும் சமூக அமைப்பாகவும் விளங்குகிறது.

**35. பாடசாலையொன்றின் ஒழுங்கமைந்த கட்டமைப்பு எவ்வாறு காணப்படுகிறது?**

i. பாடசாலையின் பருமனுக்குத் தக்கதாக அதன் முறைசார் கட்டமைப்பு வேறுபடும்.

ii. பாடசாலையின் உதவிப் பணியினரும் முறைசார்ந்த நிருவாகக் கட்டமைப்பில் அடங்குவர். அதிபர், பிரதியதிபர், பிரதிப் பொறுப்பாசிரியர்கள், பாடப் பொறுப்பாசிரியர்கள், தரப் பொறுப்பாசிரியர்கள், ஏனைய ஆசிரியர்கள், மாணவர் தலைவர்கள், வகுப்புத் தலைவர்கள், எனைய மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள் ஆகியோருக்கான பொறுப்புகள் ஒழுங்கமைக்கப்பட்டிருக்கும்.

iii. பாடசாலைச் செயற்பாடுகள் அனைத்திலும் ஒழுங்கமைப்புக் காணப்படும்.

iv. சமய அலுவல்கள் தொடர்பான அமைப்புகள், பழைய மாணவர் அமைப்புகள், நலன்புரி அமைப்புகள், சுகாதார அமைப்புகள் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் போன்றவற்றின் செயற்பாடுகளும் ஒழுங்கமைக்கப்பட்ட நியமங்களின் கீழ் முன்னெடுக்கப்படும்.

**36. பாடசாலையின் ஒழுங்கமைந்த கட்டமைப்பின் ஊடாகப் பாடசாலை மாணவர்களும், ஆசிரியர்களும், நிருவாக ஆளணியினரும் பெறக்கூடிய அனுபவங்கள் யாவை?**

i. மாணவர்கள் சமூகமயமாதல் மூலம் பல்வேறு அனுபவங்களைப் பெறல்.

ii. ஒவ்வொருவரும் தமது பொறுப்புகளை உணர்ந்து நடத்தல்.

iii. தமது பொறுப்புகளை அல்லது உரிமைகளை இனங்காணலும், பாதுகாப்புப் பெறலும்.

iv. தமக்கு மேலே அல்லது கீழே அமைந்துள்ள பிரிவினரோடு செயற்படும் வழிகளை இனங்காணல்

v. பதவிநிலை அடுக்கமைவுக்கு (Hierarchy) மதிப்பளித்தல்

vi. ஒத்துழைத்துக் கூட்டாகச் செயற்படல்

vii. சவால்களை வெற்றி கொள்ளல்

viii. பணிகளை, குறிக்கோள்களை அடையும் முனைப்புக் காணப்படல்.

**37. முறைமையில் குழுமங்கள் எத்தகையன?**

i. சட்டதிட்டங்களுக்கு அமைவான வகையிலே ஒழுங்கு முறையுடன் அமைந்திருப்பதில்லை.

ii. பரஸ்பர நம்பிக்கை, அங்கீகாரம், கௌரவம் ஆகியவற்றின் கீழ் கட்டியெழுப்பப்படும்.

**38. பாடசாலையொன்றில் காணப்படும் முறைமையில் குழுமங்கள் யாவை?**

i. மாணவர் குழுக்கள், ஆசிரியர் குழுக்கள், ஊழியர் குழுக்கள்

ii. ஆசிரியர் குழுக்கள், ஆசிரியைகள் குழுக்கள், மாணவர் குழுக்கள், மாணவிகள் குழுக்கள், பெண் ஊழியர் குழுக்கள், ஆண் ஊழியர் குழுக்கள்.

**39. பாடசாலை போன்ற முறையான ஓர் ஒழுங்கமைப்பிலும் முறைமையில் குழுமங்கள் தோன்றுவதற்கான காரணங்கள் யாவை?**

i. முறையான அமைப்பின் இறுக்கமான தன்மை காரணமாகத் தனியாளின் சமூகத் தேவைகள் நிறைவேற்றப்படாமை.
ii. பரஸ்பர உதவிகள் தேவைப்படல்.
iii. ஆட்கள் நெருக்கமாக வாழ்வதனால் தினமும் சந்திக்கக் கூடியதாக இருத்தல்.
iv. இனம், மதம், சாதி, பண்பாடு போன்றவை காரணமாகச் சிறப்பாற்றல்கள் வெளிப்படல்.
v. பல்வேறுபட்ட இயல்பூக்கங்கள், தேவைகள் காணப்படல்.
vi. விசேட செயல்களில் ஈடுபடல் (பாட இணைச் செயற்பாடுகள் போன்றவை).

**40. முறைமையில் குழுமமொன்றின் ஓர் அங்கத்தவன் என்ற வகையில் மாணவன் பெறக்கூடிய சமூகத் திறன்கள் யாவை?**

i. ஒத்துழைப்புடன் கூட்டாகச் செயற்படல்
ii. சுதந்திரமான தொடர்பாடல் திறன்கள்.
iii. பொது இலக்குகள், பொது அங்கீகாரங்கள் ஆகியவற்றை உருவாக்கிக் கொள்ளல்.
iv. சாதகமானவற்றை எதிர்கொள்ளக் கூடியதும், வெற்றி கொள்ளக் கூடியதுமான திறன்கள்.

**41. பாடசாலைகளில் முறைமையில் குழுமங்களின் செயற்பாடுகள் பற்றிக் கவனத்தில் கொள்ள வேண்டியிருப்பது ஏன்?**

முறையான பாடசாலை அமைப்பின் செயற்பாட்டில் இத்தகைய முறைமையில் குழுமங்கள் மறைமுகமான சக்தியாகச் செயற்படும் சந்தாப்பங்கள் உண்டு. அவ்வாறான பாதகமாயமையும் அவற்றின் செயற்பாடுகளை இனங்கண்டு, கட்டுப்படுத்துதல் முக்கியமானது.

**42. பாடசாலையொன்றில் முறைமையில் குழுமங்கள் ஏற்படுத்தக்கூடிய பாதகமான தாக்கங்கள் யாவை?**

i. முறைசார் அமைப்பான பாடசாலையின் இடைத் தொழிற் பாடுகளுக்குத் தடை ஏற்படுத்துதல்.
ii. பொதுக் குறிக்கோள்களை அடைவதற்குத் தடையாயி ருத்தல்.

iii. ஒற்றுமை குலைதலும் முரண்பாடுகள் உருவாதலும்.
iv. முறைசார்ந்த அதிகாரத்துக்குச் சவால் விடுதல்.

**43. பாடசாலையொன்றில் முறையில் குழுமங்கள் ஏற்படுத்தக்கூடிய சாதகமான செயற்பாடுகள் யாவை?**

i. அர்ப்பணிப்புடனான சேவையை வழங்கல்.
ii. முறைசார் பாடசாலை அமைப்பின் பணிகளை இலகுவாக்க உதவுதல்.
iii. விமர்சித்தல், கண்டித்தல் மூலம் அதிகாரத்துவத்தின் பொருத்த மற்ற நடவடிக்கைகளை மாற்றியமைத்தல்.
iv. மானுடத் தொடர்புகளை வலுவானதாக்கல்.

**44. முறைமையில் குழுக்களின் பாதகமான நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த முறைமையான அமைப்பொன்று மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகள் யாவை?**

i. குழுமங்கள் பாதகமான முறையில் வலுப்பெறுவதைத் தடுத்தல்.
ii. பாதகமான குழுமங்களின் சிறப்பாற்றல்களை இனங்கண்டு அவற்றுக்கேற்றதான பணிகளை ஒப்படைத்தல்.
iii. முறைமையில் குழுமங்களுடன் நெருக்கமான உறவைப் பேணல்.
iv. முறைமையில் குழுமங்களின் பாதகமான செயற்பாடுகளுக் கான காரணங்களை அறிந்து அவற்றை இழிவாக்குவதற்குப் பொருத்தமான முறைகளைக் கையாளல்.

**45. பாடசாலையில் காணப்படும் முறைமையில் குழுமங்கள் பாடசாலை மீதும், மாணவர் மீதும் செல்வாக்குச் செலுத்தும் விடயங்கள் யாவை?**

i. பாடசாலையினுள் முறையான நடத்தையில்.
ii. பாடசாலை வருகையிலும் இடைவிலகலிலும்.
iii. பாடசாலைக் கலாசாரத்தில்
iv. நடத்தை விருத்தியில்
v. ஏனைய மாணவர்களின் கற்றல் அடைவில்.
vi. ஆசிரியர் வகிபாகத்தில்.
vii. பாடசாலை தொடர்பாக ஏனைய பாடசாலைகளின் எதிர்பார்ப்பில்

viii. பாடசாலைத் தொடர்பாடலில்

ix. பாடசாலைக்கும் சமூகத்துக்கமான நல்லுறவில்.

**46. பாடசாலை வகுப்பறை ஒன்றின் சமூக உறவுத் தொடர்புக் கோலம் எவ்வாறு காணப்படுகிறது?**

i. வகுப்பறை ஒரு சமூகக் குழுமமாகும். அதில் ஒரு புறத்தே அனுபவமும், அறிவும், ஆற்றலும், ஆளுமை விருத்தியும் கொண்ட வயதிற் கூடிய ஆசிரியர் இருப்பார்.

ii. மறுபுறத்தில் இனம், மதம், ஆண் பெண் பாலியல்பு, சமூக அந்தஸ்து, கற்றல் திறன்கள் முதலானவற்றில் பல்வகைமை கொண்ட மாணவர்கள் இருப்பார்கள்.

iii. இத்தகைய ஆசிரியர் - மாணவர், மாணவர் - மாணவர் தொடர்புக் கோலங்கள் வகுப்பறைச் செயற்பாடுகளிலும், பாடசாலையின் ஏனைய செயற்பாடுகளிலும் செல்வாக்குச் செலுத்தும்.

**47. வகுப்பறையின் சமூகத் தொடர்புகளின் பிரதான வழிமுறைகள் யாவை?**

i. ஆசிரியர் - மாணவர் தொடர்புகள்

ii. மாணவர் - மாணவர் தொடர்புகள்

**48. ஆசிரியர் - மாணவர் தொடர்புகளில் பங்களிப்புச் செய்யும் மாறிகள் எவை?**

i. ஆசிரியரின் அல்லது ஆசிரியையின் பொதுவான (நேர் அல்லது மறை) வெளித்தோற்றம்.

ii. ஆசிரியரின் சொல் சார்ந்த தொடர்பாடல் (பேச்சு)

iii. மாணவர் தொடர்பாக ஆசிரியர் காட்டும் மனப்பாங்கு

iv. ஆசிரியரின் கற்பித்தல் பாங்கு

v. ஆசிரியரின் கூட்டுணர்வைக் கட்டியெழுப்பும் திறன்.

**49. வகுப்பறையில் மாணவர் - மாணவர் இடைத் தொடர்பினை இனங்காணுவதற்காகக் பயன்படுத்தக்கூடிய சோதனை முறை யாது?**

ஜே.எல்.மொரினோ (J.L.Morino) என்பவரால் முன்வைக்கப்பட்ட சமூகமான சோதனை முறையாகும்.

**50. சமூகமான முறைச் சோதனையினூடாக மாணவர்களுக் கிடையிலான தொடர்புகளை எவ்வாறு இனங்காணலாம்?**

ஒரு மாணவர், மற்றொரு மாணர் தொடர்பாகக் காட்டும் துலங்கல்களைப் பயன்படுத்தி, அவர்களுக்கு இடையிலான தொடர்புகளை அறிந்து கொள்ள முடியும். வகுப்பிலுள்ள மாணவரிடையே உங்களது குழுவில் சேர்த்துக் கொள்வதற்காக நீங்கள் விரும்பும் மூவரை, விருப்பு ஒழுங்கின்படி 1, 2, 3, எனக் குறிப்பிடுங்கள் எனக் கேட்பதனூடாக அவர்களின் துலங்கலை இனங்காண முடியும். இதனைச் சமூகமான அட்டவணை அல்லது சமூகமான வரையம் ஒன்றின் மூலம் எடுத்துக் காட்டித் தொடர்புபடுத்தலாம்.

**51. வகுப்பறையில் மாணவர்களுக்கிடையிலான தொடர்புகளை அறிவதற்கு ஆசிரியரொருவர் சமூகமான சோதனையை எவ்வாறு பயன்படுத்தலாம்.**

i. மாணவர்களது துலங்கலைப் பொறுதல்.
ii. சமூகமான அட்டவணையொன்றினை அல்லது சமூகமான வரையமொன்றினை அமைத்தல்.
iii. சமூகமான அட்டவணையை அல்லது வரையத்தைப் பகுத்தாராய்தல்.
iv. கற்றல் - கற்பித்தல் செயன்முறைகளுக்காகத் தொடர்பு களைப் பயன்படுத்தல்.

இத்தகைய படிமுறைகளினைப் பின்பற்றி ஆசிரியர் ஒருவர் மாணவர் - மாணவர் இடைத் தொடர்புகளை அறியவும், அதற்கேற்ற வகையில் கற்பித்தலை மேற்கொள்ளவும் முடியும்.

**52. குழு முறையின் மூலம் கட்டியெழுப்பக் கூடிய சமூகத்திறன்கள் இரண்டினைக் குறிப்பிடுக.**

i. சவால்களை எதிர்கொள்ளக் கூடிய சமூகத் திறன்கள்
ii. பகிர்தலும் காத்தலும் (Caring and Sharing)

**53. வகுப்பறையில் ஆசிரியர் - மாணவர் தொடர்பின் தன்மையைத் தீர்மானிக்கும் மாறிகளைக் குறிப்பிடுக.**

i. ஆசிரியரிடம் சிறந்த நடத்தை வெளிக்காட்டப்படல்.
ii. ஆசிரியர் - மாணவர்க்கிடையேயும், மாணவர் - மாணவர்க்கிடையேயும் தொடர்பாடலை உச்சமாக்குதல்.
iii. கூட்டுணர்வை இரு பகுதியாரிடமும் கட்டியெழுப்புதல்.
iv. ஆசிரியரின் கற்பித்தல் தன்மை.

**54. சமூக தொடர்பாகச் சமூகவியலாளர்களால் முன்வைக்கப்பட்ட கருத்துகள் யாவை?**

i. இடைத் தொழிற்பாடுகளையும், இடைத் தொடர்புகளையும் கொண்ட ஆட்களை உள்ளடக்கியது சமூகமாகும். எனவே தனியாளும், சமூகத் தொடர்புக் கோலங்களும் நிதமும் மாறுபடும். இத்தகைய மாறுதல்களினால் சமூகமும் நிதமும் வேறுபடும்.

ii. உலகில் காணப்படும் பல்வேறு சமூகங்களுள் ஒரு சமூகம், மற்றொரு சமூகத்திலிருந்து வேறுபடும். அதே போன்று குறித்ததொரு சமூகமும் காலத்துக்குக் காலம் வேறுபடும்.

iii. சமூகம் இயக்கத் தன்மையுடையது. சமூகம் மாற்றமடையும் போது அச்சமூகத்தில் காணப்படும் தொடர்புக் கோலங்களும் மாற்றமடையும். அதன் பண்பாடும் மாற்றமடையும்.

**55. சமூகமாற்றம் என்பதனை எவ்வாறு வரையறை செய்யலாம்?**

இடைத் தொழிற்பாடுகள், காலநகர்வுகள் காரணமாகச் சமூகமொன்றின் தொடர்புக் கோலங்கள், பண்பாடு முதலானவற்றில் ஏற்படுகின்ற வேறுபாடுகளைச் சமூகமாற்றம் எனலாம்.

**56. சமூகம் மாறுதலடைதல் தொடர்பாகச் சமூகவியலாளர்கள் வகுத்துள்ள கருத்துகள் யாவை?**

i. சமூக மாற்றம் இயல்பானது

ii. தனியாள் மாற்றமும், சமூகமாற்றமும் தொடர்ந்து நிகழ்ந்த வண்ணம் இருக்கும்.

iii. சமூகமாற்றங்களுக்குச் சமாந்தரமாகச் சமூகப் பண்பாடும் மாற்றமடையும்.

iv. சமூகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் சமூக மாற்றங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

v. சமூக மாற்றத்தில் வெவ்வேறு காரணிகள், வெவ்வேறான விதங்களில் செல்வாக்குச் செலுத்துகின்றன.

**57. சமூக மாற்றத்தில் செல்வாக்குச் செலுத்திய வேறுபட்ட காரணிகள் சிலவற்றை எடுத்துக் காட்டுக.**

i. வகுப்புப் போராட்டம் (வர்க்க) - கார்ல் மாக்ஸ்

ii. துப்பாக்கி ரவை - மாவோ சேதுங்

iii. உயிரியல் கூர்ப்பு - சார்ள்ஸ் டார்வின்

iv. அக, புற அறை கூவல்கள் - ஆர்னோல் டொயின்பீ, டல்கொட், பாசன்ஸ்

**58. சமூக மாற்றங்கள் தொடர்பான பகுப்பாய்வில் கடைப்பிடிக்கப்படும் இரண்டு விதங்களும் எவை?**

i. குறுகிய காலச் சமூகமாற்றங்கள்.
ii. நீண்டகாலச் சமூகமாற்றங்கள்

**59. குறுகிய காலச் சமூகமாற்றங்களுள் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் யாவை?**

i. சமூக, பண்பாட்டு ஒத்துடைப்பு இயக்கங்கள் - இவற்றுள் பல்வேறு கோரிக்கைகளும், நலன்புரி நோக்கங்களும் அடங்கும்.
ii. அரசியல் எதிர்ப்புக்கள் - இவை அரசியல் சார்ந்த இயக்கங்களால் நெறிப்படுத்தப்படுபவை.
iii. விளம்பரத் தன்மையான இயக்கங்கள் - இவை வர்த்தக விளம்பர நிறுவனங்களால் முன்வைக்கப்படுபவை.

**60. நீண்டகாலச் சமூக மாற்றங்களுள் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் யாவை?**

i. நவீனமயமாக்கம் (Modernization)
ii. கைத்தொழில் மயமாக்கம் (Industrialization)
iii. நகரமயமாக்கம் (Urbanization)
iv. மேற்கத்தேய மயமாக்கம் (Westernization)

**61. நவீனமாயமாக்கல் என்றால் என்ன?**

ஒரு நாட்டில் அகப்புறச் செல்வாக்குக் காரணமாகச் சமூகம் மாற்றமடையம் போது அரசியல், பொருளாதாரம், பொதுசனத் தொடர்பு போன்ற துறைகளில் முன்னேற்றங்காணுமாயின் அது நவீனமயமாக்கல் எனப்படும்.

**62. நவீனமயமாக்கலினால் சமூகத்தில் ஏற்படக்கூடிய விளைவுகள் யாவை?**

i. ஏற்கெனவே காணப்பட்ட சமூக அமைப்பு மாற்றமடைந்து புதிய சமூக அமைப்புகள் தோன்றும்.
ii. முதன்மைச் சமூகங்களிலும் பார்க்கத் துணை நிலைச் சமூகங்கள் (இரண்டாம்நிலை) முக்கியத்துவம் பெறும்.

iii. அரசியல், பொருளாதாரம், கல்வி , போக்குவரத்து, தொடர்பாடல் போன்ற பலதுறைகளிலும் நவீனமயமாக்கலைக் காணலாம்.

**63. கைத்தொழில் மயமாக்கம் என்றால் என்ன?**

உற்பத்தித் துறையை முதன்மையாகக் கொண்டு அதன் இயல்பு, செயற்பாடு போன்ற பலதுறைகளிலும் நிகழும் மாற்றங்கள் கைத்தொழில் மயமாக்கம் எனப்படும்.

**64. கைத்தொழில் மயமாக்கத்தினால் ஏற்படும் விளைவுகள் யாவை?**

i. உற்பத்தியின் தன்மை, உற்பத்திச் செயற்பாடு, உழைப்பாளிகள் சந்தை, ஒழுங்கமைப்பு, விளம்பரம் போன்ற பல்வேறு துறைகளிலும் மாற்றங்கள் நிகழும்.
ii. இவற்றின் மூலம் மரபுரீதியான சமூக முறைக்குப் பதிலாக உழைப்பை அடிப்படையாகக் கொண்ட வர்க்க முறை உருவாகி முரண்பாடுகள் தோன்றும்.
iii. முதலாளி, தொழிலாளி எனவும், எசமான், ஊழியன் எனவும் வேறுபாடு தோன்றுவதால் வகுப்பு (வர்க்க) முரண்பாடுகளும் உருவாகும்.
iv. வீட்டு வாழ்க்கை தொடக்கம் பேரளவுத் தொழிற்சாலைகள் வரையில் பௌதிக மாற்றங்களும், சமூகத் தொடர்பு மாற்றங்களும் ஏற்படும்.

**65. நகரமயமாக்கம் என்றால் என்ன?**

கிராமத்தை அடிப்படையாகக் கொண்ட சமூகத் தொடர்புகள், சிக்கலான அமைப்புடைய நகரத் தொடர்புடையனவாக மாற்றமடைதல் நகரமயமாக்கம் ஆகும்.

**66. நகரமயமாக்கத்தினால் ஏற்படும் பிரதான விளைவுகள் எவை?**

i. கிராமிய சமூகத் தொடர்புகள் மாற்றமடையும்.
ii. எளிமையான வாழ்க்கை முறை சிக்கலானதாக மாற்றமடையும்.
iii. தொடர்பாடல்கள் பன்முகத் தன்மை வாய்ந்தவையாக விளங்கும்.

**67. மேற்கத்தேய மயமாக்கம் என்பதனால் கருதப்படுவது யாது?**

அரசியல், பொருளாதார, சமூக , பண்பாட்டுத்துறைகளில் மேற்கத்தேய நாடுகளின் செல்வாக்குக்கு உட்படுதல் மேற்கத் தேய மயமாக்கம் எனப்படும்.

**68. மேற்கத்தேய மயமாக்கத்தின் விளைவுகள் யாவை?**

i. பெரும்பாலான ஆசிரிய, ஆபிரிக்க சமூகங்களின் மீது மாற்றத்துக்கான செல்வாக்கைச் செலுத்தியுள்ளது.

ii. நாடுகாண் பயணத்தின் மூலம் ஆரம்பித்த வணிகத்தின் மூலம் தமது அரசியல், பண்பாட்டுப் பிடிக்குள் உலகின் ஏனைய பிரதேசங்களை அடக்கியுள்ளது.

iii. இதனால் உருவான அதிகார வாதமும், பொதுவுடைமை வாதமும் பல சமூக மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன.

**69. சமூக மாற்றத்துக்கும் கல்விக்கும் இடையிலான தொடர்பு எவ்வாறானது?**

i. சமூக மாற்றம் ஏற்படுவதைத் தடுக்க முடியாத நிலையில் அதனால் சாதகமான விளைவுகளும், பாதகமான விளைவுகளும் உண்டாகின்றன.

ii. சமூகமாற்றங்களை நாட்டுக்குச் சாதகமாக மாற்றியமைத்து, அம்மாற்றங்களினால் ஏற்படக்கூடிய பிரச்சினைகளை அல்லது முரண்பாடுகளை இழிவளவாக்கிச் சமூகத்தைப் பாதுகாக்கும் பொறுப்பும், விருத்தி செய்யும் பொறுப்பும் கல்வியைச் சார்ந்தது.

iii. சமூக மாற்றங்களுடன் கூடவே முன்னோக்கிச் செல்வதற் கான ஆற்றல்களைக் கல்வியினூடாக ஒவ்வொருவர்க்கும் வழங்குதல் அவசியமானது.

**70. கல்விக்கும் சமூக மாற்றங்களுக்கும் இடையிலான தொடர்புகளை இனங்காணத்தக்க வழிமுறைகள் இரண்டும் எவை?**

i. சமூக மாற்றங்களுக்கு ஏற்ற வகையில் கல்வியை வகுத்தல்.

ii. கல்வியினூடாகச் சமூகமாற்றங்களை ஏற்படுத்துதல்.

**71. சமூக மாற்றங்களுக்கு ஏற்றதாகக் கல்வியைப் பொருத்தமுறச் செய்ய வேண்டியதன் அவசியம் யாது?**

i. மாற்றமடைந்து செல்லும் சமூகத்தில் தோன்றும் தேவை களை இனங்கண்டு, அச்சமூகத்தின் சவால்களையும், பிரச்சினைகளையும் வெற்றி கொள்ளத்தக்க திறமை களையும், ஆற்றல்களையும் மாணவரிடையே உருவாக் குவது பாடசாலையின் பொறுப்பாகும்.

ii. பாடசாலையினால் அப்பணியை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்குரிய கொள்கைகளை வகிப்பது கல்விக் கொள்கை வகுப்போரின் பொறுப்பாகும்.

iii. எனவே சமூக மாற்றங்களுக்குப் பொருத்தமான கலைத் திட்டங்களை ஒழுங்கமைத்தலும் செயற்படுத்தலும் இன்றியமையாததாகும்.

**72. சமூக மாற்றங்களுக்கு ஏற்றதாகக் கலைத்திட்டங்களை உருவாக்குகையில் கவனஞ் செலுத்த வேண்டிய விடயங்கள் யாவை?**

i. மாற்றமடைந்து செல்லும் விடய அறிவை வழங்கும் விதத்தில் கலைத்திட்டம் உருவாக்கப்படல். (கலைத்திட்டத்தைப் பொருத்தமாக மாற்றியமைத்தல் அல்லது மறுசீரமைத்தல்).

ii. தகவல் தொடர்பாடல், பல்பண்பாடு, சமாதானமும் சகவாழ்வும், பல்வேறு சமூகப் பிரச்சினைகள் தொடர்பான விளக்கத்தை வழங்குதல்.

iii. இயற்கை அனர்த்தங்கள், இயற்கையல்லாத அனர்த்தங்கள் போன்றவற்றை முகாமை செய்தல், சுற்றாடல் முகாமை ஆகியவற்றை மேற்கொள்ளும் திறனை வழங்குதல்.

iv. திறந்த பொருளாதாரப் பண்பாட்டு விழுமியங்களைப் பாதுகாக்கும் வழிவகைகளை உள்ளடக்குதல்.

v. பல்லினச் சமுதாயப் பண்புகளை விளங்கல், தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்பல், இணைந்து செயலாற்றல் முதலானவற்றைப் பெறும் வகையில் மனப்பாங்குகளை உருவாக்கல்.

vi. கல்வியை ஒரு முதலீட்டுச் செயன்முறையாக நடைமுறைப் படுத்தல்.

**73. கல்வியை ஒரு முதலீட்டுச் செயன்முறையாக நடைமுறைப் படுத்துவதில் அடங்கும் விடயங்கள் எவை?**

i. தொழில் முனைப்புக் கற்கை நெறிகள்.

ii. பாடசாலைக் கலைத்திட்டப் பன்முகப்படுத்துகை.

iii. கலைத்திட்டத்தின் செயன்முறை முனைப்பு.

iv. மனித, சமூக, இன முரண்பாடுகளைத் தீர்க்கும் திறன் விருத்தி.

v. சமாதானக் கல்வி.

vi. பால்நிலை சமூக சமத்துவம்.

vii. மனித உரிமைகளைப் பாதுகாத்தல்.

**74. சமூக மாற்றங்களுக்கு ஏற்ற விதத்தில் கல்விச் செயன்முறைகளை முன்னெடுக்கையில் கவனத்தில் கொள்ள வேண்டிய (கலைத் திட்டம், கல்வி ஒரு முதலீடு ஆகியவை தவிர்ந்த) வேறு முக்கியமான விடயங்கள் எவை?**

i. உள, சமூக ஆலோசனை வழங்கலும், அதற்கான திறன்களையும் மனப்பாங்குகளையும் வளர்த்தலும்.

ii. "கற்கும் சமூகம்" என்ற எண்ணக்கருவின் அடிப்படையில் பாடசாலைக் கல்விக்கு அப்பாலும் கற்பதற்கான சந்தர்ப்பங் களை வழங்கல்.

iii. பொதுசனத் தொடர்பு ஊடகங்கள் உட்படப் பல்வேறு சாதனங்களையும் பயன்படுத்திக் கற்கும் முறைமையில் கல்விக்கான சந்தர்ப்பங்களை உருவாக்குதல்.

iv. முறைசார் கல்வி வாய்ப்புகளை விரிவாக்குதல்.

v. வெளிநாடுகளில் கல்விபெறும் வாய்ப்புகளை வழங்குதல்.

vi. பின்தங்கிய சமூகப் பிரிவினருக்கான விசேட கல்வி வாய்ப்புகளையும், வசதிகளையும் விரிவாக்கல்.

vii. பல்கலைக்கழகக் கல்வியை விரிவுபடுத்தலும், வளர்முக நாடு களின் மாணவர்கள் அபிவிருத்தி அடைந்த (வளர்ந்த நாடு கள்) நாடுகளிலுள்ள பல்கலைக்கழகங்களில் பயிலக்கூடிய வாய்ப்புகளை ஏற்படுத்தலும்.

**75. சமூக மாற்றங்களை ஏற்படுத்தவும், சமூக மாற்றங்களுக்குப் பொருந்தக்கூடிய வகையிலும் பாடசாலைகள் எவ்வாறு மாற்றம் அடைய வேண்டும்?**

i. அறிமுகப்படுத்தப்பட்ட பாடசாலைக் கலைத்திட்ட நடை முறைக்கான பௌதிக வசதிகளை வழங்குதல்.

ii. கலைத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தல், விருத்தி செய்தல், மதிப்பீடு செய்தல் ஆகியவற்றினை ஆசிரியர் முன்னெடுத்தல்.

iii. சுய கற்றலின் பால் மாணவருக்கு வழிகாட்டல், பரிகாரக் கற்றல் சந்தர்ப்பங்களை வழங்குதல்.

iv. மாணவரின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான சிறந்த ஆலோசனைச் சேவையை வழங்குதல்.

v. நவீன கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்துதல்.

**76. சமூக முாற்றங்களுக்குப் பொருத்தமான பாடசாலைக் கற்பித்தலில் பயன்படுத்தக் கூடிய நவீன கற்பித்தல் முறைகள் யாவை?**

i. கணினியைப் பயன்படுத்தி இலகுவாக அறிவைக் களஞ்சியப் படுத்தல் இறுவட்டு (CD) க்கள் மூலம்.
ii. ஒலி ஊடக மாநாடு (Audio Conference)
iii. ஒளி – ஒலி ஊடக மாநாடு (Video Coference)

**77. இலங்கை நாட்டின் கல்வித்துறையானது எவ்வாறு சர்வதேச மயமாக்கலுக்கு (உலகமயமாதலுக்கு) உள்ளாகியுள்ளது?**

i. சமூக மாற்றங்களின் விளைவாகக் பல்தரப்பட்ட, பல்மட்ட (Multigrade and Multi Level) கற்பித்தல் காணப்படுகிறது.
ii. பல்வேறு சர்வதேச நிறுவனங்களும் இலங்கையின் கல்விக்குத் துணைபுரிகின்றன.
iii. ஆங்கில மொழிப் பயன்பாடு, கணினித் தொழில்நுட்பப் பயன்பாடு ஆகியவை கல்வித் துறையில் தவிர்க்க முடியாதன வாக விளங்குகின்றன.

**78. இலங்கின் கல்வி வளர்ச்சிக்கு உதவுகின்ற சர்வதேச நிறுவனங்கள் யாவை?**

i. உலக வங்கி (WB)
ii. ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB)
iii. ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (UNDP)
iv. ஐக்கிய நாடுகள் சிறுவர் அபிவிருத்தி நிதியம் (UNICEF)
v. ஐக்கிய நாடுகள் கல்வி, விஞ்ஞான, பண்பாட்டு அமையம் (UNESCO)

**79. சர்வதேச நிறுவனங்களின் உதவிகள் மூலம் இலங்கை பெற்றுக் கொள்ளக்கூடிய கல்விக்கான வழிகள் யாவை?**

i. சிறப்பறிவுச் சேவை
ii. புலமைப் பரிசில் வழங்கல்
iii. சர்வதேச மாநாடுகள்
iv. கண்காட்சிகள்
v. செயலமர்வுகள்
vi. சர்வதேச சஞ்சிகை வெளியீடு.

# 07. சமூகப் பல்வகைமையும் சமூக வளங்களுக்கு ஏற்பக் கற்றல் கற்பித்தல் செயன்முறையை மேற்கொள்ளலும்

**01. சமூகமொன்றின் பல்வகைமைக் கூறுகளாக இனங்காணக் கூடியவை யாவை?**

i. இனம், மதம், மொழி, சாதி போன்றவை
ii. ஆண், பெண் ஆகிய பாலியல்புகள்
iii. உயர்வகுப்பு, மத்தியவகுப்பு, கீழ் வகுப்பு முதலான வகுப்புப் பிரிவுகள்
iv. நகரம், கிராமம் முதலிய வாழ்விடக் கூறுகள்.

v. தன்மையைக் காட்டும் பாரிய மனிதக் குழுவே சமூக வகுப்பு ஆகும்" –**டேவிஸ், காட்னர்ஸ்** ஆகியோரின் கூற்று.
vi. "பொதுவான தொழில், வயது, கல்வி ஆகியவற்றில் ஒத்த, வாழ்க்கைப் பழக்கங்கள், உணர்வுகள், நடத்தைகளில் ஒத்த தனியாட்களின் குழுவே சமூக வகுப்பாகும்" - **கின்ஸ்பர்க்** கூற்று.

**02. சமூகத்தின் பல்வகைப் பண்புகளைப் பாதுகாக்கத் தக்கவாறு உலக நாடுகளில் தற்போது பின்பற்றப்படும் கல்வி முறை யாது?**

தேர்ச்சிகளை உருவாக்கும் கல்வி முறை

**03. சமூகமொன்று சமூக வகுப்புகளாகப் பிரியும்போது அடிப்படை யாகக் கொள்ளப்படும் நியதிகள் யாவை?**

i. தொழில்.
ii. பொருளாதார மட்டம்
iii. கல்வி மட்டம்

**04. சமூக வகுப்புப் பிரிநிலைக்கு அடிப்படையாகவுள்ள பிரதான காரணி எது?**

பொருளாதார நிலை

**05. சமூக வகுப்புப் பற்றிய சமூகவியலாளர்களின் வரையறைகள் யாவை?**

i. "ஒருவரையொருவர் அணுகுவதில் நெருக்கமான தன்மையைக் காட்டும் பாரிய மனிதக் குழுவே சமூக வகுப்பு ஆகும்" –**டேவிஸ், காட்னர்ஸ்** ஆகியோரின் கூற்று

ii. பொதுவான தொழில், வயது, கல்வி ஆகியவற்றில் ஒத்த, வாழ்க்கைப் பழக்கங்கள்,உணர்வுகள், நடத்தைகளில் ஒத்த, தனியாட்களின் குழுவே சமூக வகுப்பாகும்" - **கின்ஸ்பர்க்** கூற்று

**06. சமூகப் படையமைப்பு என்பதனை வரையறுக்குக.**

எந்தவொரு சமூகத்திலும் ஆட்களுக்கு இடையே காணப் படும் சமமின்மைகளே சமூகப்படையமைப்பு எனப்படும்.

**07. சமூகப் படையமைப்புக்கான உதாரணங்கள் சிலவற்றைக் குறிப்பிடுக.**

சாதி, சமயம்

**08. சமூகவியலாளர்கள் வகைப்படுத்தியுள்ள சமூக வகுப்புக்கள் எவை?**

i. உயர் சமூக வகுப்பு (Upper)
ii. நடுத்தர சமூக வகுப்பு (Middle)
iii. தாழ்தர சமூக வகுப்பு (Lower)

**09 சமூகப் பெயர்வு (பெயர்ச்சி) என்றால் என்ன?**

சமூகத்தின் ஒரு படை (நிலை)யிலிருந்து அடுத்த படைக்கு (நிலைக்கு) ஒருவர் செல்வதைச் சமூகப் பெயர்வு (Social Mobility) எனலாம். இப் பெயர்வானது கீழிருந்து மேலாகவும், மேலிருந்து கீழாகவும் நிகழும்.

**10. சமூகப் பெயர்வின் மூன்று படிநிலைகளும் எவை?**

i. கிடைப்பெயர்வு (ஒரு சமூக நிலையிலிருந்து அதை யொத்த வேறொரு சமூக நிலைக்குச் செல்லல்)
ii. நிலைக்குத்துப் பெயர்வு (ஒரு சமூக நிலையிலிருந்து அதைவிட உயர்ந்த சமூகநிலைக்குச் செல்லல்)
iii. தலைமுறையிடைப் பெயர்வு (யாதேனும் தலைமுறைக்கு உரிய சமூக நிலையிலும் பார்க்க உயர்வான சமூக நிலைக்குச் செல்லல்).

**11. கல்வியுடன் சமூகப் படையமைப்பையும், சமூகப் பகுப்பையும் ஒப்பிடும் சமூகவியலாளர்கள் முன்வைத்துள்ள இரு பிரதான கருத்துகள் எவை?**

i. சமூகத்தின் கல்வியானது சமூக வகுப்பினால் தீர்மானிக்கப் படுகிறது.

ii. சமூகத்தில் வகுப்பு வேறுபாடுகளை நீக்கிச் சமூகப் பெயர்வை ஏற்படுத்துவதில் கல்வி முதலிடம் வகிக்கிறது.

**12. சமூகப் பெயர்வை ஏற்படுத்தும் முதன்மைக் கருவி கல்வி என்பதனைக் கருத்திற் கொண்டு உலக நாடுகள் மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?**

i. சமமான கல்வி வாய்ப்பு

ii. கட்டாயக் கல்வியும் இலவசக் கல்வியும்

iii. பொதுக் கலைத்திட்டம் அல்லது பொதுக்கல்வி

iv. பொதுவான மதிப்பீட்டு முறைகள்

**13. இலங்கையில் கல்வித்துறையின் சமவாய்ப்பின்மைக்கான குறைபாடுகள் மூன்றினைக் குறிப்பிடுக.**

i. பாடத்துறைகளை விரும்பியவாறு தெரிவு செய்ய முடியாமை.

ii. பாடசாலைகளை விரும்பியவாறு தெரிவு செய்ய முடியாமை.

iii. கல்வி ஊடகமொழியை விரும்பியவாறு தெரிவு செய்ய முடியாமை.

**14. கல்வியில் சமூக வளங்கள் எனப்படுவதனால் கருதப்படுவது யாது?**

கல்வித் துறையில் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்தப்படும் சமூகத்தில் காணப்படும் பல்திறன்களுடைய தனியாட்கள், குழுக்கள், நிறுவனங்கள், நிலையங்கள், இடங்கள் அனைத்தும் சமூக வளங்களாகும்.

**15. கற்றல் சமூக வளப் பிரிவுகள் யாவை?**

i. பௌதிக (இயற்கை) வளங்கள்

ii. மனித வளங்கள்

iii. மனிதனாலாக்கப்பட்ட வளங்கள்

**16. சமூக வளங்கள் தொடர்பான ஆசிரியரின் பணியாது?**

i. கற்றல் - கற்பித்தல் செயன்முறையை வினைதிறனுடன் மேற்கொள்வும், விளைதிறனைப் பெற்றுக் கொள்ளவும் கூடிய சமூகவளங்களையும் இனங்காணல்.

ii. அவற்றைப் பொருத்தமாகப் பயன்படுத்துவதற்கான திட்டங்களைத் தீட்டி, நடைமுறைப்படுத்தல்.

**17. சமூகவளங்களைக் கல்விக்காக வெற்றிகரமாகப் பயன்படுத்திய கல்வியியலாளர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் யாவர்?**

ஜூலியஸ் நியரேரே, மாவோ சேதுங்

**18. சமூக வளங்களைக் கற்றல் - கற்பித்தல் செயன்முறைகளில் பயன்படுத்துவதால் கிடைக்கக் கூடிய அனுகூலங்கள் யாவை?**

i. கற்றல் இயல்பானதாய் இருத்தல்.

ii. மாணவர் நேரடியாக உண்மை அனுபவங்களைப் பெறக் கூடியதாயிருத்தல்.

iii. ஆசிரியரின் பணிகள் இலகுவானதாயிருத்தல்.

iv. கற்றலுடன் தொடர்புடைய சமூக நிறுவனங்களையும் வளங்களையும் இனங்காணக்கூடியதாயிருத்தலும் அவற்றுடனான இடைத் தொடர்புகளைப் பேணக்கூடியதாயிருத்தலும்.

**19. கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின் போது சமூகவளங்களை எவ்வாறு பயன்படுத்த வேண்டும்?**

i. சமூக வளங்களில் அடங்கியுள்ள சமூகமூலதனத்தை இனங்கண்டு, அதற்கேற்ற வகையில் செயற்படுவதற்கு மாணவரைப் பரிச்சயப்படுத்த வேண்டும்.

ii. தனியாட்கள், குழுக்கள் போன்ற சமூகவளங்களை கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டில் பயன்படுத்தும் போது அவர்களின் சிறப்பறிவு, திறன்கள், குணப்பண்புகள், உணர்வுகள் முதலானவைகளும் சமூகவளங்களாக அமையும் என்பதைக் கவனத்திற் கொண்டு, அவ்வித நடத்தைக் கோலங்களையும் மாணவர் பெற்றுக் கொள்ளக்கூடியவாறு வாய்ப்புகளை வழங்க வேண்டும்.

**20. தனியாட்கள், குழுக்கள் போன்ற சமூகவளங்களில் கிடைக்கத் தக்க சிறப்பான நடத்தைக் கோலங்கள் யாவை?**

i. நேரந்தவறாமை

ii. பணியை நிறைவு செய்தல்

iii. கூட்டுணர்வுடன் செயற்படல்

iv. நம்பகத்தன்மை

v. சவால்களை வெற்றி கொள்ளல்

vi. விடாமுயற்சி

vii. அர்ப்பணிப்பு

**21. மனித வளங்கள் எவ்வாறு (சமூக மூலதனங்கள்) சமூக வளங்களாகின்றன?**

சமூக அபிவிருத்தியில் பெரிதும் துணையாக அமையும் போது சமூக மூலதனமாகின்றன.

**22. சமூக மூலதனங்கள் மூலம் தணிக்கக்கூடிய சமூக முன்னேற்றத் துக்கான தடைகள் எவை?**

போட்டிநிலை, அவநம்பிக்கை, நெருக்கிடை, தன்னலப் போக்கு ஆகியன.

**23. வகுப்பறையில் இடைத் தொடர்புகளை விருத்தி செய்வதற்காக ஆசிரியர் தரவு சேகரிக்கும் முறைகள் எவை?**

i. அவதானித்தல் (Observation)
ii. சமூகமான சோதனை (Sociometric Tests)
iii. நேர்காணல் (Interview)

**24. வகுப்பறையில் மாணவரிடத்தே இடைத் தொடர்புகளை விருத்தியடையச் செய்யத்தக்க கற்றல் சந்தர்ப்பங்கள் யாவை?**

i. குழுமுறைக் கற்பித்தல்
ii. சகபாடி கற்றல்

**25. குழுமுறைக் கற்பித்தலில் அங்கத்தவர்கள் இடப்படுத்தும் முறைகள் யாவை?**

i. பல்வழிக் கோலம்
ii. இருவழிக் கோலம்
iii. சுழல்முறைக் கோலம்

**26. குழுமுறைக் கற்றலின் போது இடப்படுத்தல் தொடர்பாகக் கவனிக்க வேண்டிய விடயங்கள் யாவை?**

i. குழு அங்கத்தவர்களிடையே இலகுவான முறையில் இடைத் தொடர்பு ஏற்படும் விதத்தில் இடப்படுத்தல் அமைய வேண்டும்.
ii. இடைத் தொழிற்பாடு இலகுவாகவும் விளைதிறனுடைய தாகவும் இருக்கக் கூடிய வகையில் குழுக்களிடையே பல்வழிக் கோலம் அமைய வேண்டும்.
iii. குழு அங்கத்தவர்களிடையே சமநிலை பேணப்படுதல் வேண்டும் (மீத்திறனுடையோரோ, மெல்லக் கற்போரோ ஒரு குழுவில் இடம் பெறலாகாது).-

**27. வகுப்பறையில் குழுமுறையைப் பயன்படுத்துதால் ஏற்படக்கூடிய பயன்கள் யாவை?**

i. கற்க வேண்டிய குறிப்பிட்ட பகுதி தொடர்பாக ஆழமாகவும், பரந்துபட்ட வகையிலும் அறிவை விருத்தி செய்யலாம்.
ii. தமது கற்றல் செயற்பாடு தொடர்பாக மாணவரிடத்தே இறுக்கமான பின்னிணைப்பும் ஊக்கலும் ஏற்படும்.
iii. கற்றலில் பயன்படுத்தும் மூலாதாரங்கள், கற்றற் சாதனங்கள் ஆகியவற்றில் நேர்மனப் பாங்கு ஏற்படும்.
iv. இடைத் தொழிற்பாடுகளின் மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதற்கான செயன்முறைப் பயிற்சியும் அனுபவமும் கிடைக்கும்.

**28. குழுமுறைக் கற்றல் மூலம் மாணவரிடத்தே வளர்ச்சியடையக் கூடிய சமூகத்திறன்கள் யாவை?**

i. ஒருவரையொருவர் மதித்தல், செவிமடுத்தல்
ii. கூட்டாகச் செயற்படல்
iii. பொதுவான குறிக்கோளை இலக்காகக் கொண்டு செயற்படல்
iv. அறைகூவல்கள், சவால்கள் போன்றவற்றை வெற்றிகரமாக எதிர்கொள்ளக் கூடிய வாய்ப்புக் கிடைத்தல்.

**29. குழுக்கற்றல் முறையைக் கையாளும் போது கவனிக்க வேண்டிய இடப்படுத்தல் தவிர்ந்த ஏனைய விடயங்கள் யாவை?**

i. குழு அங்கத்தவர்களின் கருத்துக்கள், விருப்பங்கள் ஆகியவற்றைக் கவனத்திற் கொள்ளல்.
ii. குழுக்களுக்குரிய குறிப்பிட்ட பணிகளை ஒப்படைத்தல்
iii. குழுச் செயற்பாடுகளின் போது வழிப்படுத்தலுக்கான திட்டங்களை வகுத்துக் கொள்ளல்.
iv. வேலைகளை இலகுபடுத்தலும், விளைதிறனுடைய தாக்குதலும்.
v. தொடர்பாடல் திறன்களை விருத்தி செய்தல்
vi. குழு அங்கத்தவர்க்கிடையிலும், குழுக்களுக்கிடையிலும் இடைத் தொழிற்பாடு வெளிக் கொணரக்கூடியவாறு குழுக்களை அமைத்தலும், நெறிப்படுத்தலும்.

**30. சகபாடிக் கற்றல் (Peer Learning) என்றால் என்ன?**

சமவயதுடையவர்களுடன் கலந்துரையாடல், தேடலில் ஈடுபடுதல், கண்டறிதல், செய்துபார்த்தல் முதலானவற்றினூடாகக் கூட்டாகச் செயற்படுவதனால் அனுபவங்களைப் பெற்றுக் கொள்ளல் சகபாடிக் கற்றல் எனப்படும்.

**31. 5E செயற்பாட்டில் குழுக் கற்றல் சகபாடிக் கற்றல் இடம்பெறும் சந்தர்ப்பங்கள் எவை?**

கண்டறிதலின் (E2) போது குழுக்கற்றலும், விளக்க மளித்தலின் (E3) போது சகபாடிக் கற்றலும் நிகழும்.

**32. ஆசிரியரின் சமூக வகிபாகம் (Social role of the Teacher) என்பதில் அடங்குவன யாவை?**

i. கற்பித்தல் செயன்முறையை நெறிப்படுத்துபவர் ஆசிரியராதலால், அவரது பொறுப்புகள், அதிகாரங்கள், கடமைகள், ஒழுக்க நியமங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதே ஆசிரியரின் வகிபாகம் ஆகும்.

ii. வகுப்பறைக்கு வெளியேயும், பாடசாலைக்கு வெளியேயும் ஆசிரியருக்கான சமூகப்பணிகள் இதில் அடங்கும்.

**33. ஆசிரியரது வகிபாகத்துடன் தொடர்புடைய பண்புக் கூறுகள் யாவை?**

i. ஆசிரியரின் வகிபாகம் நிலையானதல்ல: இயங்குந்தன்மை உடையது.

ii. அந்தந்தச் சமூகச் சூழலுக்கும், காலத்திற்கும் ஏற்ற வகையில் மாறுபடும்.

iii. பொறுப்புகள், அதிகாரங்கள், கடமைகள், ஒழுக்க நியமங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியது.

iv. வெவ்வேறு பாத்திரப் பண்புகளைத் தாங்கிச் செயற்படுவது (கற்பிப்பவராக, ஆலோசகராக, இணைப்பாளராக, தீர்ப்பாளராக, உதவுபவராக)

v. ஆசிரியர் வகிபாகத்தில் மாணவர்கள், பெற்றோர்கள், மேலாளர்கள் போன்றவர்களின் எதிர்பார்ப்புகள் செல்வாக்குச் லுெத்தும்.

vi. பாடசாலையினுள்ளும், பாடசாலைக்கு வெளியேயும் ஆசிரியர் வகிபாகம் செயற்படுவது.

vii. ஆசிரியர் வகிபாகம் நேரடியாக, மறைமுகமாக, குறுகிய காலத்தில், நீண்ட காலத்தில், தனியாள் விருத்தியில், சமூகவிருத்தியில் பங்களிப்புச் செய்யும்.

**34. வகுப்பறையில் ஆசிரிய வகிபாகத்தில் செல்வாக்குச் செலுத்தும் சமூகத் தொடர்புடையவர்கள், நிறுவனங்கள் பெயர்களைப் பட்டியற்படுத்துக.**

i. அரசாங்கம், கல்வியமைச்சு அதிகாரிகள், வேறு அமைச்சு அதிகாரிகள், அரசியல்வாதிகள், பெற்றோர், குடும்பத்தினர், கல்வியியலாளர்கள், சமூகவியலாளர்கள், ஆய்வாளர்கள், தத்துவவியலாளர்கள், தோழர்கள் .

ii. மன்றங்கள், சங்கங்கள், வேறு கல்வி நிறுவனங்கள், சுயாதீன அமைப்புகள், சர்வதேச அமைப்புகள், தொடர்பு ஊடகங்கள், தொழிற்சங்கங்கள்.

iii. வகுப்பறை மாணவர்கள், ஏனைய மாணவர்கள், அதிபர், பிரதி அதிபர், பிரிவுத் தலைவர்கள், பாட இணைப்பாளர்கள், தர இணைப்பாளர்கள், ஆசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்கள்.

**35. ஆசிரியரின் பணிகள் தொடர்பான முக்கியமான மூன்று பிரிவுகளும் எவை?**

i. வகுப்பறையின் முழுச் செயற்பாடுகளுடன் தொடர்புடையது.

ii. பாடசாலை முழுவதற்குமான செயற்பாடுகளுடன் தொடர்புடையது.

iii. பாடசாலைக்கு வெளியேயான செயற்பாடுகளுடன் தொடர்புடையது.

**36. ஆசிரியர் வகிபாகம் தொடர்பாக முக்கியமான இரு பிரிவுகளின் கீழ் பகுப்பாய்வு செய்யலாம் எனக் கூறியவர் யார்?**

எரிக் சொயில்

**37. எரிக் சொயில் குறிப்பிட்ட இரு பிரதான ஆசிரியர் வகிபாகங்களும் எவை?**

i. தொழில் சார்ந்த வகிபாகம் (கற்பித்தலுடன் தொடர்புடையது)

ii. சமூகம் சார்ந்த வகிபாகம் (சமூகத்திலான இடைத் தொடர்பு களுடன் கூடியது)

**38. ஆசிரியர் வகிபாகம் தொடர்பான கருத்துகளின் வெளிப்பாடு எத்தகையன?**

i. ஆசிரியர் ஒரு சமூக விலங்கு

ii. ஆசிரியின் தொழில்சார் வகிபாகமும், சமூகம்சார் வகிபாக மும் முக்கியமானவை

iii. ஆசிரியர் பல்வேறு சமூகப் பொறுப்புகளை வகிப்பர்.

iv. ஆசிரியர் வகுப்பறையிலும், பாடசாலையிலும் வெவ்வேறு ஆட்கள் மற்றும் குழுக்களுடனும் பாடசாலைக்கு வெளியே வேறு ஆட்கள், குழுக்களுடனும் தொடர்புகளைப் பேணுபவர்.

v. முற்காலத்தில் ஏனையோருக்கு முன்மாதியாக விளங்கிய ஆசிரிய வகிபாகம், தற்காலத்தில் சமூகமாற்றங்களுடன் மாற்றமுறத் தொடங்கியது (கௌரவம், கணிப்பு, சமூகப் பொறுப்பு).

vi. இன்றைய ஆசிரியரின் வகிபாகமானது அவர் வாழும் சமூகத்துடனான சார்பளவைப் பொறுத்தே ஒப்பிடப் படுகிறது.

**39. பண்டைய ஆசிரிய வகிபாகத்தைப் போலிராது இன்றைய ஆசிரியர் வகிபாகம் மாற்றமடைந்திருப்பதற்கான காரணிகள் எவை?**

i. சமூகத் தேவைகள் சிக்கலடைந்துள்ளமை.

ii. நகரமயமாக்கம், பூகோள மயமாக்கம் போன்றவை.

iii. கல்வியில் நலன்புரிகை மற்றும் முதலீட்டு முனைப்பு

iv. தகவல் தொடர்புத் தொழினுட்ப விருத்தி.

**40. ஆசிரியர் சமூக வகிபாகத்தில் பிரச்சினைகள் ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை?**

i. வகிபாக ஆளுமை முரண்பாடு

ii. வகிபாகங்களுக்கு இடையிலான முரண்பாடு

iii. பண்பாடு, அரசியல் சார்ந்த முரண்பாடு.

**41. ஆசிரியர் சமூக வகிபாகத்தில் பிரச்சினைகள் ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை?**

எந்தச் சமூகத்திலும் தனியாள் ஒருவர் பல்வேறு பதவிகளை வகிப்பதுண்டு. ஆசிரியரும் அதற்கு விதிவிலக்கல்லர். ஒவ்வொரு பதவிக்கும் அதற்குரிய பொறுப்புகள், அதிகாரங்கள், கடமைகள், ஒழுக்கக் கோவை என்பன வரையறுக்கப் பட்டிருக்கும். இப்பதவிகளை வகிக்கும் போது வெவ்வேறு மனிதர்களுடன் , அவர்களது எதிர்பார்ப்புகளுடன், தேவைகளை நிறைவேற்றுதலுடன் முரண்பட நேரிடும். ஆசிரியர் இத்தகைய முரண்பாடுகளை எதிர்கொள்ளல், தீர்த்தல் போன்றவற்றை ஆளுமைத் திறனுடனும் சிறந்த அணுகுமுறையுடன் செயற்படுதவன் மூலம் நீக்க முடியும்.

**42. வகிபாக ஆளுமை முரண்பாடு என்றால் என்ன?**

ஆசிரியரின் வகிபாகத் தேவைகளுக்கும் தனிப்பட்ட எதிர்பார்ப்புகளுக்கும் இடையிலான பொருத்தப்பாடின்மை காரணமாக முரண்பாடுகள் தோன்றுதலாகும்.

பாடசாலையில் அதிக நேரம் கற்பித்தலில் ஈடுபட வேண்டியிருப்பதனால் குடும்பத்தின் தேவைகளை நிறைவேற்றுவதிலும், குடும்ப அங்கத்தவரிடையே கூடுதலான நேரம் தொடர்பாடலை மேற்கொள்வதிலும் குறைபாடுகள் தோன்றுதல் ஓர் உதாரணமாகும்.

**43. வகிபாக முரண்பாடு என்றால் என்ன?**

ஒரே நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட வகிபாகங்களை வகிப்பதனால் ஏற்படக்கூடிய பிரச்சினைகளாகும். ஓர் ஆசிரியர் தந்தையாக அல்லது தாயாகவும், சகோதரனாக அல்லது சகோதரியாகவும், மாணவன் அல்லது மாணவியாகவும், மகன் அல்லது மகளாகவும் வகிபாகங்களைக் கொண்டுள்ள போது ஏற்படக்கூடிய பிரச்சினை இதுவாகும்.

**44. பண்பாடு, அரசியல் சார்ந்த முரண்பாடுகள் எதனால் ஏற்படுகின்றன?**

பண்பாட்டு ரீதியிலான வேறுபாடுகள் ஏற்படும் போதும், அரசியல் மற்றும் சமூகச் செல்வாக்குக் காரணமாகவும் முரண் பாடுகளும் பிரச்சினைகளும் ஏற்படுகின்றன. அரசியல் ரீதியாக அல்லது சமூக ரீதியாக மேலதிகாரிகளின் செல்வாக்குக் காரண மாகத் தீர்மானம் எடுக்க முடியாமை இதற்கு உதாரணமாகும்.

**45. ஆசிரியரின் சமூக வகிபாகத்துடன் தொடர்புடைய முரண்பாடுகளைத் தீர்க்கக் கூடிய வழிவகைகள் யாவை?**

i. ஆசிரியரின் தொழில்சார் வகிபாகத்தை வெற்றிகரமாக ஆற்றுவதற்கு உதவிபுரிவதும், வழிகாட்டுவதும், சுய ஊக்கலை ஏற்படுத்தச் செய்வதும் ஆகிய செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

ii. இவற்றுக்கான தொழில்சார் தேர்ச்சிகளையும் சமூகத்திறன் களையும் ஆசிரியர் பயிற்சிக் கற்கை நெறிகளூடாக வழங்குதல்.

iii. ஏனைய சமூகக் கூறுகளுடன் செயற்படுவதற்கான விசேடமான பாசறைகள், பயிற்சி அமர்வுகள் போன்றவற்றி னூடாக இவற்றுக்கான சந்தாப்பங்களை வழங்குதல்.

# 08. பாடசாலைக்கும் சமூகத்துக்கும் இடையிலான தொடர்புகள்

**01. பாடசாலை என்னும் சமூக நிறுவனம் பற்றிக் கருதக்கூடியன யாவை?**

i. *பாடசாலை என்பது ஒரு சமூக முறைமை.*

ii. *பாடசாலையைச் சூழவுள்ள பரந்த சமூகத்தினுள் விசேட குறிக்கோள்கள், பணிகள், பாரம்பரியங்கள், பொறுப்புகள், அதிகாரங்கள் ஆகியவற்றைக் கொண்டுள்ள அங்கீகார முடைய சிறயதொரு சமூகமாகப் பாடசாலை விளங்குகிறது.*

iii. *பாடசாலை கல்விப் பணிகளைச் செய்வதுடன், வேறுபட்ட வயதுப்பிரிவினர், வேறுபட்ட நுண்மதியினர் ஆகியோரது ஒத்துழைப்புடன் செயற்படும் ஓர் சமூக அலகாகும்.*

iv. *பாடசாலை செயற்படும் விதமானது கிராமம் - நகரம் என்ற விதத்திலும், மக்கட்டொகைக்கு ஏற்றதாகவும், இன, மதச் சூழலுக்கு அமைவாகவும் வேறுபட்டதாகவுள்ளது.*

v. *பாடசாலையானது சமூகத்தின் தேவைகளை நிறைவேற்றுதல் வேண்டும்.*

vi. *சமூகத்தின் தேவைகள் மாற்றமடையும் போது பாடசாலையும் கலைத்திட்டம், கற்றல் - கற்பித்தல் முறைகள், மதிப்பீட்டு முறைகள் உட்பட முழுச் செயன் முறைகளிலும் மாற்றமடைதல் வேண்டும்.*

vii. *பாடசாலையின் மாற்றங்கள் சமூகத்தினூடு கடத்தப்பட வேண்டும்.*

viii. *பாடசாலைக்கும் சமூகத்திற்கும் இடையில் பரஸ்பர தொடர்பு நிலவுதல் அவசியாகும்.*

**02. சமுதாயம் (Community) என்னும் எண்ணக் கருவினை வரையறை செய்க.**

*இடைத் தொழிற்பாடுகள், இடைத் தொடர்புகள் மூலம் ஒன்றிணைந்து பரந்துபட்டதொரு பிரதேசத்தில் பரந்து காணப்படுவோரை உள்ளடக்கியது சமுதாயமாகும்.*

**03. சமுதாயம் என்ற எண்ணக்கரு வளர்ச்சியடைந்ததற்கான காரணிகள் எவை?**

i. தமது குடும்பம், தாம் பணியாற்றும் வேலைத்தளங்கள், தம்முடன் வேலை செய்யும் பிரதேசத்தில் வாழ்வோர் ஆகியோருக்கிடையிலான இடைத்தொடர்புகள்.

ii. நகரமயமாக்கம், கைத்தொழில் மயமாக்க, பூகோள மயமாக்கம் ஆகியன. சமுதாயம் என்பது வரையறுக்கப் பட்டதொரு தரைப் பிரதேசத்தில் வாழ்பவர்களைக் குறிப்பதன்று. அந்த எல்லையை மீறிய பரந்துபட்ட பிரதேசத்தில் பரந்து வாழ்பவர்களைக் குறிப்பதாகும்.

**04. பாடசாலை அயற் சமுதாயம் என்பதில் அடங்குபவர்கள் யாவர்?**

i. யாதேனுமொரு பாடசாலைக்குத் தமது பிள்ளைகளை அனுப்பும் பெற்றோர்.

ii. அப் பாடசாலைக்குத் தம் பிள்ளைகளை அனுப்பாத பெற்றோர்.

iii. வேறு தொழில் புரியும் வர்த்தகர்கள், அரசியல்வாதிகள், நலன் விரும்பிகள், சமய நிறுவனங்களைச் சேர்ந்தோர் முதலானவர்கள்.

**05. பாடசாலைக்கும் சமூகத்துக்குமான தொடர்புகளைக் கட்டியெழுப்பும்போது கவனிக்க வேண்டிய முக்கியமான விடயங்கள் யாவை?**

சமுதாயத்தின் தன்மை, அதன் தேவைகள் ஆகியவற்றை இனங்காணல்

**06. சமூகத்துக்கும் சமுதாயத்திற்கும் இடையிலான வேறுபாடு யாது?**

சமுதாயம் விரிந்த அலகாகவும், சமூகம் அதனுள் அடங்கிய அலகாகவும் விளங்கும். குறித்ததொரு நிலப்பரப்பில் வாழ்வது சமூகப் பண்பாகும். பரந்துபட்ட ரீதியில் இடைத் தொடர்புகளினால் வலுப்பெறுவது சமுதாயமாகும்.

**07. பாடசாலைக்கும் சமூகம் அல்லது சமுதாயத்திற்கும் இடையிலான தொடர்புகள் குறித்த விமர்சனங்கள் யாவை?**

i. பாடசாலையானது சமூகத்திலிருந்து அல்லது சமுதாயத்திலிருந்து விலகிச் செல்வதுடன், சமூகத் தேவைகளுக்குப் பொருத்தமாக அமையாமலும், வெளிப்படைத் தன்மையற்றும் காணப்படுகிறது.

ii. பாடசாலையின் சட்ட திட்டங்கள், பாடங்கள், கற்பித்தல் முறைகள் முதலானவை வெளிப்படைத் தன்மையற்றுக் காணப்படுகின்றன.

iii. குறித்ததொரு பிரிவினருக்குக் குறிப்பிட்ட காலத்துக்கென ஒதுக்கப்பட்டதாகப் பாடசாலை விளங்குவதால் சமூகத்தி லிருந்து தனித்த ஒரு நிறுவனமாகக் காணப்படுகின்றது.
iv. பாடசாலைச் செயற்பாடுகளினால் சமூகத்தின் தேவைகள் நிறைவு பெறாமை.
v. நடைமுறைச் சமூகத்தில் தேசியரீதியில், பூகோளரீதியில் தோன்றும் பொருளாதார, பண்பாட்டு, விஞ்ஞானபூர்வமான தேவைகளுக்குப் பொருந்தும் விதத்தில் கலைத்திட்டமோ, மதிப்பீட்டுமுறைகளோ தயாரிக்கப்படாமை.
vi. பாடசாலையானது கலைத்திட்டத்தை நிறைவேற்று வதையே பிரதான இலக்காகக் கொண்டு செயற்படல்.
vii. பொருளாதாரத் தேவை, தொழினுட்ப வளர்ச்சி காரணமாகச் சிறந்த தொடர்பாடலைப் பேண முடியாமை.

**08. சமூகமானது பாடசாலைக்கும் பாடசாலையானது சமூகத்திற்கும் இருவழித் தொடர்புள்ளதாக விளங்குமிடத்துப் பாடசாலை சமூகத்திடமிருந்து பெறக்கூடிய உதவிகள் யாவை?**

i. நாளாந்த பாடசாலை நடவடிக்கைகளுக்காக நிதி, பௌதிக, மனித, வளங்களைச் சமூகத்திடமிருந்து பெறல்.
ii. அரசு வழங்கம் வளங்கள் போதாத போது சமூகத்திடமிருந்து உதவி பெறல்.
iii. சமூகத்திலுள்ளவர்களை வளவாளராகப் பயன்படுத்தல்.
iv. சமூகத்தின் ஆலோசனைகளைத் தேவைப்படுமிடத்துப் பாடசாலை பெறல்.

**09. பாடசாலையானது சமூகத்திற்கு உதவக்கூடிய வழிகள் எவை?**

i. சமூகத்தினரைப் பாடசாலை நடவடிக்கைகளில் இணைப்பத னூடாகச் சமூக அறிவை விருத்தியாக்கல்.
ii. பாடசாலை வளங்களைச் சமூகமேம்பாட்டுக்குப் பயன் படுத்தல்.

**10. பாடசாலைக்கும் சமூகத்திற்கும் அல்லது சமுதாயத்திற்கும் இடையிலான தொடர்பு மட்டங்களின் வடிவங்கள் பற்றி லிண்டா ஏ.டவீ கூறுவது யாது?**

மிக நலிவான மட்டம், நலிவான மட்டம், உயர் மட்டம், உச்சமட்டம் என நான்கு மட்டங்களை ஏறுவரிசையில் கூறியுள்ளார்.

**11. உச்சமட்டமாகிய நான்காம் மட்டம் எவ்வாறு கருதப்படுகிறது?**

சமுதாயப் பாடசாலை (Community School) மட்டமாகும்.

**12. இலங்கையில் பாடசாலைக்கும் சமூகத்திற்குமான தொடர்பைத் தீர்மானிக்கும் காரணிகள் யாவை?**

i. கல்விக் கொள்கை வகுப்பின் சட்டத்திட்ங்கள்.
ii. சுற்றுநிருபங்கள்
iii. ஒழுங்குவிதிகள்
iv. பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
v. பழைய மாணவர் சங்கம்.

**13. பாடசாலைக்கும் சமுதாயத்துக்குமான தொடர்பை வலுவுள்ள தாக்கும் செயற்பாடுகள் யாவை?**

i. சமுதாய, பாடசாலைத் தேவைகளைத் தனித்தனியாக இனங்கண்டு, அத் தேவைகளை, முன்னுரிமைப்படி ஒழுங்கு படுத்தல்.
ii. ஒழுங்குபடுத்தப்பட்ட தேவைகளில் நடைமுறைப் படுத்தக் கூடிய செயற்றிட்டங்களைத் தெரிவு செய்தல்.
iii. பாடசாலையைச் சமுதாயத்தைக் கவரும் ஓர் இடமாக மாற்றுதல்.
iv. அதிபரின், ஆசிரியர்களின் சமூகத்திறன்களையும் மனப் பாங்குகளையம் கருத்தில் கொண்டு பாடசாலை – சமுதாய நல்லுறவை வளர்த்தல்.

**14. பாடசாலைக்கும் சமுதாயத்துக்கும் இடையிலான தொடர்புகளை வலுப்படுத்துவதில் ஆசிரியரின் பங்களிப்பு யாவை?**

i. ஆசிரியர் தனது பாடசாலைச் சமுதாயத்தை இனங்காணல், சமுதாயத் தேவைகளை இனங்காணல்.
ii. இனங்காணப்பட்ட தேவைகளை நிறைவேற்ற முறைசார், முறைசாரா மட்டங்களில் பங்களிப்புச் செய்தல்.
iii. சமுதாயத்தினருக்கு அறிவு, ஆலோசனைகள், வழிகாட்டல் கள் போன்றவற்றை வழங்கல்.
iv. பாடசாலைக்கும் சமுதாயத்துக்கும் இடையிலான நல்லுற வுக்குப் பாதகமான அம்சங்களை இனங்கண்டு நீக்க உதவுதல்.

v. பாடசாலை மற்றும் சமுதாயம் ஆகியவற்றுக்கான ஒருமைப்பாட்டைப் பேணுதல்.

**15. பாடசாலையைச் சுற்றியுள்ள சமுதாயத்துக்குரிய மக்கட் கூட்டங்கள் சிலவற்றைப் பட்டியலிடுக.**

i. சமய விவகார அமைப்புகள்
ii. பழைய மாணவர் அமைப்புகள்
iii. நலன்புரி அமைப்புகள்
iv. சுகாதார அமைப்புகள்
v. விளையாட்டுக் குழுக்கள்
vi. அரசியல்வாதிகள்
vii. கலைஞர்கள்
viii. பொழுது போக்கு அமைப்புகள்

**16. பாடசாலை - சமுதாயத் தொடர்பை வலுப்படுத்துவதற்காகப் பாடசாலை செய்யக்கூடிய பணிகள் சிலவற்றைக் குறிப்பிடுக.**

i. இணைப் பாடவிதான செயற்பாடுகளில் இணைத்தல்.
ii. பாடசாலை அபிவிருத்தி, கல்வி அபிவிருத்தி தொடர்பாக விளக்கமளித்தலும் பங்கேற்கச் செய்தலும்.
iii. சமூகத் தொண்டுகளில் ஈடுபடலும், சிரமதானம் போன்ற வற்றில் விழிப்புணர்வையூட்டுதலும்.
iv. விசேட வைபவங்கள், விழாக்கள் போன்றவற்றில் கௌர வித்தல்.
v. சமூக விழுமியங்களைப் பேணல்.
vi. விழிப்புணர்வுச் செயற்பாடு.



# 09. ஆசிரிய வாண்மைத்துவம்
# (Teacher Professionalism)

**01. 'வாண்மை' என்னும் பதம் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்டுள்ள கருத்துகள் யாவை?**

i. பல்வேறு தொழிற்றுறைகளில் வாண்மை என்னும் பதம் பயன்படுத்தப்படுகிறது.

ii. ஆனால் எல்லாத் தொழில்களும் வாண்மைத்துவம் நிறைந்த தாகக் கருதமுடியாது.

iii. வாண்மைத்துவம் என்பதை வரைவிலக்கணப்படுத்தல் கடினமானது.

iv. வாண்மைத்துவ அடிப்படை நியதிகள் காலம், குறிப்பிட்ட பணி என்பவற்றைப் பொறுத்து வேறுபடும்.

v. கற்பித்தல் என்பது ஒருவாண்மை முயற்சியாயினும், வாண்மையொன்று கொண்டிருக்க வேண்டிய பெரும்பாலான இயல்புகள் கற்பித்தலில் காணப்படாமையினால் அதனை வாண்மையாகக் கருத முடியாதென்ற கருத்தும் உள்ளது.

**02. பூரணமான வாண்மையின் இயல்புகள் யாவை?**

i. அர்ப்பணிப்பும் உணர்வும் கொண்டதான பொது மக்களுக் கான சேவையில் ஈடுபடல்.

ii. பொதுமகன் ஒருவனிடமுள்ள அறிவு, திறன் ஆகியவற்றிலும் பார்க்கக் கூடுதலான அறிவு, திறன் ஆகியவற்றைப் பெற்றி ருத்தல்.

iii. கோட்பாடுகளை நடைமுறைப் படுத்துபவராக இருத்தல்.

iv. நீண்டகாலச் சிறப்புப் பயிற்சி பெற்றிருத்தல்.

v. உரிய கௌரவமும் பொருளாதார உறுதிப்பாடும் இருத்தல்.

vi. சான்றுப்பத்திரம், தகைமைகள் பெற்றிருப்பதால் அத் தொழிற் பணிக்குக் கட்டுப்பட்டிருத்தல்.

vii. வாண்மையில் ஈடுபடுவோர் தொடர்பாகப் பொதுமக்களின் நம்பிக்கையும் தெளிவும் உயர்ந்த மட்டத்தில் காணப்படுதல்.

**03. இலங்கையில் கற்பித்தல் பணியின் ஒரு தர மேம்பாடாகக் கருதக்கூடிய விடயம் எது?**

இலங்கை ஆசிரியர் சேவையினை 06.10.1994 இல் ஆரம்பித்தமை.

**04. கற்பித்தல் என்பது ஒரு குறைவாண்மை எனக் குறிப்பிட்டவர் யார்? அதற்கான காரணங்கள் எவையென அவர் காட்டியள்ளார்?**

அன்ரியாட்டி எற்சியோனி

ஆசிரியர் பயிற்சிக்காலம் குறுகியதாயிருத்தல், சிறப்பான அறிவு குறைவாயிருத்தல், தாழ்ந்த அல்லது மத்திமப்பட்ட தொடர்பாடல் உரிமைகளுடன் ஆசிரியர் நிலை காணப்படுதல் போன்றவற்றால் ஆசிரியரின் கற்பித்தல் தொழில் குறை வாண்மை உடையது என்கிறார்.

**05. கற்பித்தல் தொழில் வாண்மை பற்றிய ரொபட் ஹொவ்ஸ்கி என்பவரின் கருத்து யாது?**

கற்பித்தல் என்பது ஒரு வாண்மையாக விருத்தி பெற்று வருகிறது. அது குறைவாண்மையை விட உயர்ந்த நிலையில் உள்ளது. அது வாண்மையை அண்மித்த வண்ணம் உள்ளது.

**06. கற்பித்தலை ஒரு வாண்மையாக விருத்தி செய்வதற்கு அரசு எடுத்துள்ள முயற்சி யாது?**

கற்பித்தலின் தரத்தை உயர்த்தும் பல்வேறு நடவடிக்கை களை எடுத்தமை.

**07. கற்பித்தல் தொடர்பான ஆசிரியரின் பொறுப்பு எத்தகையது?**

i. கற்பித்தல் ஒரு மேன்மையான தொழிலாகும்.
ii. ஆசிரியர்கள் பொறுப்புடனும் வகை கூறத்தக்க விதத்திலும் கற்பித்தலில் ஈடுபட வேண்டும்.
iii. ஆசிரியர் தமது கற்பித்தலின் தரத்தைப் பேண நடவடிக்கை எடுக்க வேண்டும்.
iv. ஒட்டு மொத்தச் சமூகத்திற்கும் தமது கற்பித்தல் தொடர்பாக வகை கூறக் கடமைப்பட்டுள்ளதை உணர்ந்து நடக்க வேண்டும்.
v. தமது வகிபாகத்துக்குரிய சட்டதிட்டங்கள், சுற்றுநிருபங்கள், ஆகியவற்றை அனுசரித்து நடக்க வேண்டும். அதற்கேற்ற வாறு நடத்தைகளை வழமையாக்க வேண்டும்.
vi. ஆசிரியர் தனது பொறுப்புகளை நிறைவேற்றுவதில் கண்ணுங் கருத்துமாய் இருத்தல் வேண்டும்.

**08. ஆசிரியர் பொறுப்புகளின் பிரதான மூன்று வகைகளும் எவை?**

i. ஒழுக்கம் சார்ந்த பொறுப்பு
ii. தொழில் சார்ந்த பொறுப்பு
iii. ஒப்பந்தம் (நியமனம்) சார்ந்த பொறுப்பு.

**09. ஆசிரியர் ஒழுக்கக் கோவை என்றால் என்ன?**

ஆசிரியர் தொழிலுக்கான சிறப்பான பணிகள், நடத்தைகள், பொறுப்புகள் ஆகிய மூன்று முக்கிய அம்சங்களும் அடங்கும் வண்ணம் தயாரிக்கப்பட்ட விதிமுறைகள் ஆசிரியர் தொழிலுக்கான ஒழுக்கக் கோவை எனப்படும்.

**10. ஆசிரியருக்கான ஒழுக்கக் கோவையின் அவசியம் யாது?**

i. ஆசிரியரொருவர் தாம் ஆற்ற வேண்டிய பணிகள், தமது பொறுப்புகள், தாம் பின்பற்ற வேண்டிய நடத்தைகள் பற்றி அறிந்து கொள்ள உதவும்.
ii. ஆசிரியர் சரியான செயற்பாடுகள் பற்றித் தெளிவாக அறிந்து வாழ்க்கைக் கோலமொன்றினைக் கட்டியெழுப்ப உதவும்.
iii. ஆசிரியர் தமது தொழிலினை இலகுவாகவும், இதமாகவும் செய்வதற்குத் துணை செய்யும்.
iv. சமூகமதிப்பினைத் தமது ஆசிரியத் தொழிலினூடாகப் பெற்றுக் கொள்ளவும் உதவும்.
v. இளஞ்சந்ததியினருக்கு முன்மாதிரியாக விளங்க உதவும்.
vi. பாடசாலையில் பண்பாட்டையும், ஒழுக்கத்தையும் பேண உதவும்.
vii. தமது தொழிலின் பெறுபேறு, வகைகூறல் ஆகியவற்றைப் பாதுகாத்துக் கொள்ள உதவும்.
viii. இறுதிக் குறிக்கோளையடையவும், அர்ப்பணிப்புடன் செயலாற்ற வும் உதவும்.
ix. சிறப்பான மானிடத் தொடர்புகளுக்கும் உதவும்.
x. ஆசிரிய வாண்மையின் கௌரவம் பேண உதவும்.

**11. ஆசிரியருக்கான ஒழுக்கக் கோவையில் இடம் பெறும் ஆசிரியருடன் தொடர்புடைய முக்கியமான துறைகள் யாவை?**

i. ஆசிரியருக்கான ஒழுக்க முறைமை.
ii. ஆசிரியர் – மாணவர் தொடர்பு
iii. ஆசிரியர் – ஆசிரியர் தொடர்பு
iv. ஆசிரியர் – பெற்றோர் தொடர்பு.

v. ஆசிரியர் – அதிகாரிகள் தொடர்பு
vi. ஆசிரியர் – மாணவர் உரிமைகள்
vii. ஆசிரியரது வரப்பிரசாதங்கள்
viii. ஆசிரியரது தொழிலுடன் இணைந்த பொறுப்புகள்.

**12. ஆசிரியர் ஒழுக்கம் எவ்வாறு அமைந்திருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது?**

i. ஆசிரியர் தமது உடையில் பகட்டில்லாமையும், அவைக்குப் பொருத்தமான தன்மையையும் வெளிப்படுத்த வேண்டும்.
ii. சாதி, இனம், மதம், சமூக அந்தஸ்து எதனையும் கருதாது எல்லா மாணவர்களையும் சமமாகவும், நியாயமாகவும் கருதி நடக்க வேண்டும்.
iii. ஆசிரியர் சொல்லாலும், செயலாலும் நேர்மையுடன் இருத்தல் வேண்டும்.
iv. தமது தொழிலுக்குப் பங்கம் விளைவிக்கும் துர்ப்பழக்கங் களில் இருந்து விலகி இருக்க வேண்டும்.
v. தமது நடத்தையானது அனைவரது கவனத்துக்கும், மதிப்புக்கும் உரியதாக விளங்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

**13. இலங்கையில் ஆசிரியருக்கான ஒழுக்கக் கோவையைத் தயாரிக்கையில் கவனத்திற் கொள்ள வேண்டியிருந்தது யாது?**

ஆசிரியரின் பொறுப்புகளுடன் தொடர்புடைய பல்வேறு துறைகளையும் கவனத்தில் எடுத்துக் கொண்டமையாகும்.

**14. ஆசிரியர் தொழிலுடன் இணைந்த உரிமைகள் இலங்கை அரசியலமைப்பின் மூலம் எவ்வாறு வரையறுக்கப்பட்டுள்ளன?**

i. அரசு எதிர்பார்க்கின்ற நியமனக் கடிதத்தைப் பெறுவதற்கான உரிமை.
ii. சேவைக்காலம், தகுதிகாண் காலம் ஆகியவற்றை உறுதி செய்வதற்கான உரிமை.
iii. கல்வி சார்ந்த சுதந்திரமும் (கற்பிப்பதற்கான பாடநூல்கள், கற்பித்தல் முறைகள் ஆகியவற்றைத் தெரிவு செய்யும் சுதந்திரம்) வாண்மையை விருத்தி செய்யும் சுதந்திரமும்.
iv. தொழிற் சங்கங்களைத் தாபிப்பதற்கும், அவற்றில் அங்கத்துவம் பெறுவதற்குமான உரிமை.
v. அரசியல் சுதந்திரத்தை நடைமுறைப்படுத்தும் உரிமை.
vi. வேலைநிறுத்தம், பேச்சுவார்த்தை செய்வதற்கான உரிமை.

vii. ஆசிரியர் பதவி நீக்கம் செய்யப்படும் போது தனது குற்றங்கள் தொடர்பான எழுத்து ரீதியான ஆவணம், தனது நிலைப் பாட்டை விளக்குவதற்கான கால அவகாசம், சாட்சிகளை முன்னிலைப் படுத்தல், சட்ட ஆலோசகர்களின் பிரதிநிதித் துவம், நடுநிலையாளர் முன் விசாரணை நடைபெறல், எழுத்து மூலம் பிரதிகளை முன்வைத்தல், சட்டரீதியாக உயர்மட்டம் வரை செல்லல் ஆகியவற்றைக் கோருவதற் கான உரிமை.

**15. இலங்கையில் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வரப்பிரசாதங் கள் (சலுகைகள்) யாவை?**

i. விடுப்பு (லீவு)
ii. கடமை விடுப்பு
iii. முழுச் சம்பளத்துடனான விடுப்பு
iv. பிரசவ விடுப்பு
v. இலவச புகையிரத ஆணைச்சீட்டு
vi. கடமை பிரயாணங்களுக்கான ஒன்றிணைந்த கொடுப்பனவு.
vii. ஓய்வூதியம்

**16. ஆசிரியர்களுக்கான பொறுப்புக்களில் அடங்கக் கூடியன யாவை?**

i. தமது பணியை உரிய நேரத்தில் ஆரம்பித்து உரிய நேரத்தில் முடித்தல்.
ii. மாணவர்களின் கௌரவத்தைப் பாதுகாப்பதற்கு ஆவன செய்தல்
iii. மாணவரைச் சுய கற்றலில் வழிப்படுத்தல்
iv. மாணவர்களின் தனிப்பட்ட தகவல்கள் பிரச்சினைகள் பற்றி அவர்களுக்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய விதத்தில் எவ்வேளையிலும் பயன்படுத்துவதைத் தவிர்த்தல்.
v. மாணவர் முன்னிலையில் நிர்வாகத்தை விமர்சிக்கா திருத்தலும், நிர்வாகத்துக்கு எதிராக மாணவரைத் தூண்டா திருத்தலும்.

**17. ஆசிரியர் - மாணவர் தொடர்பானது பயனுறுதி வாய்ந்ததாக விளங்குவதற்கான பண்புகள் யாவை?**

i. மாணவர்களின் முன்னேற்றத்துக்கு உதவக்கூடியதாக ஆசிரிய ரின் மனப்பாங்குகள், ஆற்றல்கள், கொள்கைகள் அமைந் திருத்தல்.
ii. மாணவர்களின் இயலுமை, இயலாமை ஆகியவற்றை விளங்கிச் செயற்படுபவராக ஆசிரியர் காணப்படல்.

iii. ஆசிரியர், மாணவர்களுக்குப் பெற்றோர் போலவும், மூத்தோர் போலவும், நண்பர் போலவும் செயற்படல்.

iv. மாணவர்களின் உடல், உள ரீதியான குறைபாடுகளை அறிந்து அதற்கேற்றாற் போல் ஆசிரியர் பணிபுரிய வேண்டும்.

v. இணைப்பாடவிதானச் செயற்பாடுகள், புத்தாக்கச் செயற்பாடுகள், பாடசாலைக்கு வெளியிலான சமூகச் செயற்பாடுகள் போன்றவற்றில் மாணவர்களின் ஆற்றலுக்குத் தக்கவாறு வாய்ப்புகளை வழங்கியும், ஆலோசனை கூறியும் ஆசிரியர் வழிகாட்ட வேண்டும்.

vi. மீத்திறன் மாணவர், மெல்லக் கற்போர் ஆகியோரையும் கவனத்திற் கொண்டு கற்றல் சாதனங்கள், கற்பித்தல் முறைகள், மதிப்பீடுகள் ஆகியவற்றை மேற்கொள்ளல் ஆசிரியரின் பணியாக அமைதல் வேண்டும்.

இவை போன்ற பல்வேறு செயற்பாடுகள் மூலம் ஆசிரியர் - மாணவர் தொடர்பு கட்டியெழுப்பப்படலாம்.

**18. ஆசிரியர் - ஆசிரியர் தொடர்பானது பாடசாலைகளில் உவப்பான முறையில் எவ்வாறு அமைய வேண்டும்?**

ஏனைய ஆசிரியர்களுடன் அன்பு, நட்புறவு, நம்பிக்கை, நேர்மை பேணல் , அறிவைப் பகிர்தல், ஆலோசனை பகிர்தல், ஊக்கமூட்டல், கணிப்புக் கொடுத்தல், இணைந்து செயற்படல், உதவுதல் முதலானவற்றின் மூலம் உவப்பான உறவுநிலையைக் கட்டியெழுப்பலாம்.

**19. ஆசிரியர் - பெற்றோர் தொடர்பானது பாடசாலையைப் பொறுத்த வரையில் எவ்வாறு அமைந்திருக்க வேண்டும்?**

i. மாணவர்களின் செயற்பாடுகள், குணாம்சங்கள், தேவைகள், முன்னேற்றங்கள் தொடர்பாக உவப்பான கலந்துரையாடல்களை நிகழ்த்தல்.

ii. மாணவர்களின் குறைபாடுகளை இருபகுதியினரும் இணைந்து தீர்த்து வைக்க முயலுதல்.

iii. அடிக்கடி மாணவர்களின் முன்னேற்றம் சம்பந்தமான தொடர்புகளைப் பெற்றோருடன் ஆசிரியர் பேணல்.

iv. கருத்தரங்குகள் போன்றவற்றில் பெற்றோரைக் கலந்து கொள்ளச் செய்தல்.

**20. ஆசிரியரொருவர், பரிவுணர்வுடன் செயற்படல் என்பதனால் விளங்கிக் கொள்வது யாது?**

i. பரிவு என்பது இன்னொருவரது இதயத்துடிப்புடன் ஒன்றி, அவரது வேதனைகளை ,அவர்க்கு ஏற்படும் விளைவுகளை அதே அளவில் தாமும் உணரும் நிலையாகும். இது மற்றொருவரின் உலகில் பிரவேசிக்கும் தன்மையாகும்.

ii. வகுப்பறையில் வெற்றிகரமாகச் செயற்பட்டு நல்ல விளைதிறனைப் பெறக்கூடிய ஆசிரியராய் விளங்குவதற்குப் பரிவுணர்வுடன் ஒவ்வொரு ஆசிரியரும் செயற்பட வேண்டும். அத்திறனை விருத்தி செய்தல் வேண்டும்.

iii. மாணவர்களுக்கு உதவுதல், மாணவரின் பிரச்சினைகளைத் தீர்த்தல், அவர்களின் நலன்களில் கரிசனைகாட்டுதல் ஆசிரியரின் பணியாகும்.

**21. முஸ்டாகாஸ் என்னும் தத்துவஞானி (1986) நாம் பிள்ளைகளுடன் செயற்படும் போது உருவாக்கிக் கொள்ள வேண்டிய பிரதானமான மூன்று நிபந்தனைகள் எவையெனக் கூறியுள்ளார்?**

i. உள்ளிருத்தல் (Being in)

ii. அவர்களுக்காக இருத்தல் (Being for)

iii. உடனிருத்தல் (Being with)

இதில் உள்ளிருத்தல் (Being in) என்பதனால் கருதப்படுவது பரிவுணர்வு ஆகும்.

**22. சிறுவர் மற்றும் மாணவரின் உரிமைகளாக உலக நாடுகளில் அறிமுகஞ் செய்யப்பட்டவை யாவை?**

i. கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம்.

ii. கூட்டம் கூடும் சுதந்திரம்

iii. ஒழுக்கம் - உடல் சார்ந்த தன்மை பற்றிய சுதந்திரம்

iv. காயமடைதல், சேதம் விளைதல் போன்றவற்றிலிருந்து பாதுகாப்பு.

v. கல்வியில் சமவாய்ப்புக் கிடைத்தல்.

(இவை பாடசாலைக்குப் புறம்பான சிவில் உரிமைகளாகும்)

**23. செயல்வழி ஆய்வு (Action research) என்பதனால் கருதப்படுவது யாது?**

i. வகுப்பறைச் செயற்பாடுகளின் போது ஆசிரியரொருவர் மாணவரிடையே இனங்கண்ட கற்றல் சார் பிரச்சினைகள், நடத்தைசார் பிரச்சினைகள் வகுப்பறை முகாமைசார் பிரச்சினைகள், ஆசிரியரின் கற்பித்தல் சார் பிரச்சினைகள்

முதலானவற்றில், குறிப்பிட்ட பிரச்சினைகளில் ஏற்படுத்த வேண்டிய மாற்றங்களை முன்னிறுத்தி அம்மாற்றங் களுக்கான செயற்பாடு களைத் திட்டமிட்டு நடைமுறைப் படுத்தி எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோளை அல்லது மாற்றத்தை அடைவதே செயல்வழி ஆய்வாகும். இங்கு ஆசிரியர் ஆராய்ச்சியாளராக மாறவேண்டிய அவசிய முள்ளது.

ii. வகுப்பறையில் ஆசிரியர் எதிர்நோக்கும் பல்வேறு கற்றல் - கற்பித்தல் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இது ஒரு சிறந்த ஆய்வு முறையாக விளங்குகிறது.

iii. பிரச்சினையை இனங்காணல், அதைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளை இனங்காணல், செயற்படுத்தல், தீர்வுகாணல் என்றவாறு செயல்முறை ஆய்வு உயிர்ப்புடன் விளங்கும்.

**24. செயல்முறை ஆய்வின் மூலம் கிடைக்க கூடிய அனுகூலங்கள் யாவை?**

i. மாணவரது பிரச்சினைகள் இனங்காணப்பட்டுத் தீர்க்கப்படும் அல்லது குறைக்கப்படும்.

ii. கற்றல் – கற்பித்தல் செயன்முறை வெற்றியடையும்.

iii. மாணவர் கற்றலின்பால் வழிநடத்தப்படுவர்.

iv. ஆசிரியர் – மாணவர் தொடர்பு உறுதி பெறும்.

v. மாணவர் பிரச்சினைகளை இனங்காணும் திறன், தீர்க்கும் திறன் ஆசிரியரிடத்தே விருத்தியடையும்.

vi. தமது கற்பித்தல் திறன் விருத்தியினூடாக ஆசிரியரிடம் வெற்றிகரமான கல்விப் பிரயோகங்கள் உருவாகும்.

vii. கல்விச் செயன்முறையின் போது ஆசிரியருக்குத் தலையீட்டு முறைமைக்கு முக்கிய இடம் கிடைக்கும்.

viii. ஆசிரியரிடம் ஆழ்சிந்தனை (Reflection- பிரதிபலிப்பு) த்திறன்கள் விருத்தியாகும்.

ix. கற்றல், கற்பித்தல் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வாய்ப்புகள் உருவாகும்.

x. ஆசிரியர் சிறந்த ஆய்வாளராவதற்குரிய திறன்கள் அனுபவ அடிப்படையில் அதிகரித்துச் செல்லும்.

**25. செயல்நிலை ஆய்வொன்றுக்கான மாதிரிச் செயற்பாட்டுப் படிநிலைகள் எவ்வாறு அமைய வேண்டும்?**

**இயல் 01 ஆய்வின் அறிமுகம்**

1.1. ஆய்வுத் தலைப்பு
1.2. ஆய்வின் நோக்கங்கள்/குறிக்கோள்கள்
1.3. ஆய்வின் சமகால முக்கியத்துவம்
1.4. ஆய்வுப் பிரச்சினை
1.5. ஆய்வின் நியாயப்பாடு
1.6. ஆய்வின் வடிவமைப்பு
1.6.1. ஆய்வின் கருதுகோள்கள்
1.6.2. ஆய்வின் எல்லை/வரையறை
1.6.3. ஆய்வு முறை
1.6.4. ஆய்வுக் கருவிகள்
1.6.5. ஆய்வு ஒழுங்கமைப்பு (இயற்பிரிவுகள்)

**இயல் 02 இலக்கிய மீளாய்வு**

2.1. ஆய்வுக்கான கோட்பாட்டுச் சட்டகம்
2.2. முன்னைய ஆய்வுகள் தொடர்பான விமர்சன நோக்கு
2.3. கல்விச் சிந்தனையாளர்களின் கருத்தாக்கம்
2.4. குறித்த ஆய்வு தொடர்பான நூல்களின் கருத்துகள்

**இயல் 03 ஆய்வின் முறையியல்**

3.1. ஆய்வு வடிவமைப்பும் அதன் தெரிவுக்கான நியாயப்பாடும்


3.2. கற்றல் இடக் குவியம்
3.3. தரவு சேகரிப்பு முறைகள்
3.3.1. நேர்காணல்
3.3.2. அவதானிப்பு
3.3.3. வினாக்கொத்து
3.3.4. கலந்துரையாடல்
3.3.5. தரவுப் பகுப்பாய்வு முறைகள்

**இயல் 04 தலையீட்டுச் செயன்முறை**

1.1. திட்டமிடலும் ஒழுங்கமைத்தலும்
1.2. தொடரும் செயலுக்கான கருதுகோள்களை உருவாக்கல்
1.3. மாணவர்களது அடைவு மேம்பாட்டுப் பயிற்சித் திட்டம்
1.4. புள்ளித்திட்டம்
1.5. நடைமுறைப்படுத்தல்
1.6. முற்சோதனை, பிற்சோதனைப் பகுப்பாய்வு
1.7. கருதுகோள்களைப் பரீட்சித்தல்.

**இயல் 05 முடிவுகளும் ஆலோசனைகளும்**

1.1. ஆய்வின் பெறுபேறு
1.2. செயற்பாடுகள் சார் திட்டங்கள் பயனுற ஆலோசனைகள்
1.3. ஆய்வு முடிவுகளின் நடைமுறைச் சாத்தியம்
1.4. எதிர்கால ஆய்வுகளுக்கான விதப்புரைகள்
1.5. நிறைவுரை. (இதுவொரு மாதிரி ஆய்வுச் செயற்பாட்டுப் படிமுறையாகும்)



# 10. இலங்கையின் கல்வி வரலாறு

**01. இலங்கையின் கல்வி வரலாற்றில் புராதனக் கல்வி முறை எவ்வாறு அமைந்திருந்தது?**

i. இலங்கையில் ஐரோப்பியரின் வருகை இடம் பெற்ற கி.பி 16ஆம் நூற்றாண்டுக்கு முந்தைய இரண்டாயிரம் ஆண்டு களின் கல்வி முறையானது பௌத்த தர்மத்துடனும், பௌத்த சம்பிரதாயங்களுடனும் கட்டியெழுப்பப்பட்டது.

ii. இலங்கையின் புராதனக் கல்வி முறையானது மூன்று நிறுவனங்களின் கீழ் செயற்பட்டது.

அ. கிராமப் பாடசாலைகள் - இவை ஆரம்பக்கல்வியை வழங்கின

ஆ. குருகுலப் பாடசாலைகள் - இவை இடைநிலைக் கல்வியை வழங்கின.

இ. பிரிவெனாக்கள் – இவை உயர்கல்வியை வழங்கின.

iii. இலங்கையின் புராதன தேசியக் கல்வி முறையானது சமயம், ஒழுக்கம் ஆகியன தொடர்பான கல்வியை வழங்கியதுடன் கைத்திறன் சார்ந்த கலைகள், கட்டடக்கலை, நீர்ப்பாசனம், வைத்தியம் முதலான துறைகளுக்குப் பொருத்தமான பொருளாதார, சமூக, பண்பாட்டுத் தேவைகளை நிறை வேற்றுவதையும் அடிப்படையாகக் கொண்டிருந்தன.

**02. இலங்கையில் முறையான பௌத்தக் கல்வி நிறுவன முறை எப்போது உருவானது?**

மகா விகாரை ஆரம்பிக்கப்பட்டது முதலாக, இடத்துக்கிடம் முறைசாரா முறையில் ஆசிரியர் வீட்டில் கற்பிக்கும் சம்பிரதாய கல்விமுறை அற்றுப் போனதுடன், பௌத்தக் கல்வி நிறுவன முறை உருவானது.

**03. ஆரம்பக் கல்வி நிறுவனங்களாகப் புராதன இலங்கையில் செயற்பட்டவை யாவை?**

கிராமங்களில் இருந்த பன்சாலைகள்.

**04. இலங்கையில் இடைநிலைக் கல்வியை வழங்கிய புராதன நிறுவனங்கள் யாவை?**

பல கிராமங்களுக்கு மத்தியில் ஒரு நகரத்தில் நிறுவப்பட்ட பிரிவெனாக்கள்.

**05. புராதன இலங்கையில் உயர்கல்வியை வழங்கிய நிறுவனங்கள் யாவை?**

*மாகாவிகாரைகள் ஆகும். ஆரம்பத்தில் பௌத்த பிக்குமார் மட்டும் கல்வி பெறக்கூடிய இடமாக இவை விளங்கினாலும், காலப்போக்கில் அனைவரும் கல்விபெறக் கூடியதாகத் திறந்து விடப்பட்டது.*

**06. புராதன இலங்கையில் உயர் கல்வியை வழங்கிய மகாவிகாரைகள் சிலவற்றின் பெயர்களைக் குறிப்பிடுக.**

*அநுராதபுரம் மகாவிகாரை, அபயகிரி விகாரை என்பன.*

**07. புராதன இலங்கையில் இந்துப் பாரம்பரியக் கல்வி வழங்கப்பட்ட முறைகள் யாவை?**

i. *குரு - சீடமுறை*
ii. *குருகுலக் கல்வி முறை*
iii. *திண்ணைப்பள்ளி முறை*

**08. ஐரோப்பியர் வருகைக்கு முன்னர் இலங்கையில் இஸ்லாமியக் கல்வியை வழங்கிய நிறுவனங்கள் யாவை?**

*பள்ளிவாசல்கள்*

**09. இலங்கையின் பண்டைக் காலக் கல்வி முறையின் பண்புகள் யாவை?**

i. *அறிவுள்ள பிரசையை உருவாக்கும் நோக்கத்துடன் கல்வி வழங்கப்பட்டது.*
ii. *நிறுவனமயமாக்கப்பட்ட ஆசிரியர் இல்லம் காணப்பட்டது.*
iii. *அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடியதாகக் கலைத்திட்டம் காணப்பட்டது. அதுவும் குறுகியதாகவே இருந்தது.*
iv. *கலைத்திட்டம் கோட்பாட்டு அறிவைக் கொண்டதாக அமைந்திருந்தது.*
v. *ஆசிரியர்களுக்கான ஏற்றுக் கொள்ளப்பட்ட கல்விக் கொள்கையொன்று காணப்படவில்லை.*
vi. *ஆசிரியர்க்கான பயிற்சிக்குப் பதிலாகக் குறித்த ஆசிரியரின் அறிவு அபிவிருத்தியையே கருத்தில் கொள்ளப்பட்டது.*
vii. *தேசியக் கல்விக் கொள்கையொன்று காணப்படவில்லை.*

**10. இலங்கையில் போத்துக்கேயர் ஆட்சிக் காலத்தில் காணப்பட்ட கல்விமுறையின் அம்சங்கள் யாவை?**

i. போத்துக்கேயரின் ஆட்சிக்குட்பட்டிருந்த (கி.பி 1505 - 1658) இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் மேலைத்தேயச் சம்பிரதாயத்துடன் கூடிய கல்விமுறை அவர்களால் கட்டியெழுப்பப்பட்டது.

ii. கத்தோலிக்க சமயத்தைப் பரப்புதலும், வர்த்தக இலாபம் ஈட்டுதலும் போத்துக்கேயரின் பிரதான நோக்கங்களாயிருந்ததால் கத்தோலிக்க மிஷனறிமாரின் கீழ் நடைமுறைப் படுத்தப்பட்டதாகக் கல்வி முறை காணப்பட்டது.

iii. கத்தோலிக்க தேவாலயங்களுடன் இணைந்ததாகப் பாடசாலைகள் அமைக்கப்பட்டு ஆரம்பக் கல்வி மாத்திரம் சுதேசிய மொழிகளில் அங்கு வழங்கப்பட்டது.

iv. கல்வி வழங்கும் பொறுப்பினை இலங்கைக்கு 1543 இல் வந்த பிரான்சிஸ்கன் சபையினரும், 1602 இல் வந்த ஜெஸூயிட்ஸ் சபையினரும், 1606 இல் வந்த டொமினிக்கன் சபையினரும், 1606 இல் வந்த ஓகஸ்தினியன் சபையினரும் ஏற்றுச் செயற்படுத்தினர்.

v. கிறிஸ்தவத் தேவாலயங்களை மையமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட பரிஷ் பற்றுப் பாடசாலைகளில் அல்லது கோவிற் பற்றுப் பாடசாலைகளில் அடிப்படைக் கல்வியும் சமயக் கல்வியும் வழங்கப்பட்டன. இவற்றுள் சுதேச மொழிகளில் கல்வி வழங்கப்பட்டது.

vi. போத்துக்கேயம், கிரேக்கம், இலத்தீன், அரபு முதலான பிறமொழிகளைக் கற்கக் கூடியதான ஆரம்பப் பாடசாலைகள் சிலாபம், மாதம்பை ஆகிய இரு இடங்களில் நிறுவப்பட்டன.

vii. பிரான்சிஸ்கன் சமய குருமார்களால் உயர்கல்வி நிறுவனங்களான **கல்லூரிகள்** சில கொழும்பு, யாழ்ப்பாணம், ஹேவாகம கோறளை முதலிய இடங்களிலும், ஜெஸூயிட்ஸ் குருமார்களால் கொழும்பிலும் ஆரம்பிக்கப்பட்டன.

viii. அநாதைகளான குழந்தைகளுக்காகக் கொழும்பு முகத்து வாரத்தில் ஒரு பாடசாலை அமைக்கப்பட்டது.

ix. வாசிப்பு, எழுத்து, பேச்சு, தர்க்கம், பேச்சுவன்மை முதலான பாடங்களுடன் சமய பாடங்களும் கற்பிக்கப்பட்டன. கத்தோலிக்க சமயமே முக்கியத்துவம் பெற்றிருந்தது.

x. பல்வேறு கத்தோலிக்க சமயப்பிரிவுகளைச் சார்ந்த

குருமார்களும், அவர்களால் பயிற்சி அளிக்கப்பட்ட குருமார்களும், சமயப் பக்தியுடைய குருமாரல்லாதவர்களும் ஆசிரியர்களாகப் பணியாற்றினர். இவர்களுக்கு அரசு வேதனத்தை வழங்கியது.

xi. மனனம் செய்தல், வினாவிடை முறை, நாடகம் மூலம் செய்து காட்டல் முதலிய கற்பித்தல் முறைகள் போத்துக்கேயர் காலத்தில் பின்பற்றப்பட்டன.

**11. போத்துக்கேயர் காலக் கல்வி முறையில் காணப்பட்ட குறைபாடுகள் யாவை?**

i. போத்துக்கேயர் ஆட்சிக்கு எதிரான யுத்த நிலைமைகள் காணப்பட்டதனால் கல்வித் துறையானது வினைத்திறனுடன் செயற்படாமையால் நல்ல விளைதிறனைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை.

ii. பாடவிதானம் குறுகியதாயிருந்தமை, சமய அடிப்படையில் கல்வி ஒழுங்கமைக்கப்பட்டிருந்தமை, இலௌகீகக் கல்வி இடம் பெறாமை, இடைநிலைக் கல்வியை வழங்கும் பாடசாலைகள் இல்லாமை, கல்வி வழங்கும் பொறுப்பை அரசு ஏற்றுக் கொள்ளாமல் கத்தோலிக்க சமயக் குருமாரிடம் வழங்கியமை, சமுதாயப் பாகுபாட்டிற்குக் கல்வி இடமளித்தமை, கட்டாயக் கல்வி முறை காணப்படாமை, முறையான பாடசாலை நிர்வாக முறை காணப்படாமை முதலான பலகாரணிகள் கல்வித்துறைக் குறைபாடுகளாக விளங்கின.

**12. போத்துக்கேயரின் கல்வி முறையினால் பிற்காலத்தில் ஏற்பட்ட செல்வாக்குகள் யாவை?**

i. போத்துக்கேய மொழிச் சொற்கள் சுதேச மொழிகளான சிங்களம், தமிழ் ஆகியவற்றில் கலந்தமை.

ii. இலங்கையில் போத்துக்கேயரின் பரம்பரையினர் புதிய இனமாக உருவாகியமை.

iii. இலங்கையில் கத்தோலிக்க மதம் பரவியதுடன் கத்தோலிக்க சமயத்தவர்களும் தோன்றியமை.

iv. போத்துகேயக் கலாசாரத்தைப் பின்பற்றுபவர்கள் உருவாகியமை.

v. புதிய திருமண முறைகள், கூத்து முறைகள் போன்றவை அறிமுகமாகியமை.

**13. இலங்கையில் ஒல்லாந்தர் ஆட்சிக்காலக் கல்விமுறை எவ்வாறு காணப்பட்டது.?**

i. இலங்கையின் கரையோரப் பகுதிகளை பி.பி 1658 - 1776 வரையுள்ள காலப்பகுதியில் ஆட்சி செய்த ஒல்லாந்தர் (டச்சுக்காரர்) காலத்தில் போத்துக்கேயரைப் போல இல்லாது அரசே நேரடியாகக் கல்வி வழங்குதலை மேற் கொண்டது.

ii. போத்துக்கேயரின் தேவாலயங்கள், பாடசாலைகள் ஆகியவற்றைச் சுவீகரித்துத் தங்களது புரொட்டஸ்தாந்து சமயத் தேவாலயங்களாகவும் பாடசாலைகளாகவும் மாற்றியமைத்ததுடன், புதியவற்றையும் உருவாக்கினர்.

iii. சுதேசிகளைப் புரட்டஸ்தாந்து சமயத்துக்கு மதம் மாற்றுதல், கத்தோலிக்க சமயச் செல்வாக்கைக் குறைத்தல், தமது சமயத்தைத் தழுவியோர்க்கு எழுத்து தொடர்பான ஆரம்பக் கல்வியை வழங்கல், சமயப் பிரசாரகர்களையும் ஆசிரியர் களையும் பயிற்றுவித்தல், தமக்கு நிர்வாகத்தில் உதவுவதற் காக ஒரு மத்திய வகுப்பினரை உருவாக்கல், அரசியலில் தமது ஆதிக்கத்தை வலுப்படுத்தல் முதலியவை ஒல்லாந்த ரது கல்வி நோக்கங்களாகக் காணப்பட்டன.

iv. சகல கல்வி நிறுவனங்களையும் அரசே நிர்வகித்தது.

v. பாடசாலைகளை ஒரு மத்திய நிர்வாக அமைப்பின் கீழ் கொண்டுவந்து அவற்றை நிர்வகிப்பதற்காக **ஸ்கொ லார்க்கல் கொமிசன்** (Scholarchal Commision) என்ற நிர்வாக அலகொன்று ஏற்படுத்தப்பட்டது.

vi. பாடசாலை நிர்வாக ஒழுங்கு, நன்கொடைகள், ஆசிரியர் களைச் சேர்த்தல், கற்பிக்கும் நேரம், நிறைவேற்ற வேண்டிய கடமைகள், போதனாமொழி, பாடவிதானம், கட்டாயக் கல்வியைச் செயற்படுத்தல், தண்டனைகள் ஆகியன யாவும் அரசின் பொறுப்பிலேயே இருந்தன.

vii. இலங்கையில் முதன் முதல் கட்டாயக் கல்வி முறையினைக் கொண்டு வந்தவர்கள் ஒல்லாந்தரேயாவர்.

viii. ஸ்கொலார்க்கல் கொமிசனுக்கான உறுப்பினர்கள் தேசாதி பதியால் நியமிக்கப்பட்டனர்.

ix. கல்வி நிறுவனங்களைப் பரிசோதித்தல், கிறிஸ்தவ சமயத்தைத் தழுவியோரைப் பரிசோதித்தல், கட்டடங்கள், வரவுசெலவு முதலியவற்றைப் பரிசோதித்தல், ஆசிரியர்கள் பணிகளைப் பரிசோதித்தல், ஆசிரியர்களின் பதவி உயர்வுகளைச் சிபார்சு செய்தல், தண்டனைகள் வழங்கல்,

சுதேசமக்களுக்கு ஞானஸ்தானம் வழங்கல், திருமணங் களை நிறைவேற்றலும் அவை தொடர்பான பிரச்சினை களைத் தீர்த்தலும் முதலிய பணிகளை ஸ்கொலார்க்கல் கொமிஷன் நிறைவேற்ற வேண்டியிருந்தது.

i. பாடசாலைகளின் தலைமையாசிரியர்களுக்குத் தோம்பு எழுதுதல்முதலான மேலதிகப் பணிகளும் வழங்கப் பட்டிருந்தன.

ii. ஒல்லாந்தரும் ஆரம்பக்கல்வி வழங்கலையே மேற்கொண்டனர். இடைநிலைக் கல்விக்கான ஏற்பாடு களை அவர்கள் செய்யவில்லை. பரிஷ் பாடசாலை களில் ஆரம்பக் கல்வி வழங்கப்பட்டது. சிங்களமும் தமிழும் போதனா மொழிகளாய் இருந்தன.

iii. ஐரோப்பிய நாட்டவர்க்கான தனியார் பாடசாலைகளில் ஐரோப்பிய மொழிகள் கற்பிக்கப்பட்டன.

iv. உயர்கல்விக்காகச் செமினறிப் பாடசாலைகள் நிறுவப் பட்டன. சமய குருமார்கள், எழுதுவினைஞாகள், போதகர்கள், மொழி பெயர்ப்பாளர்கள், சமயம் கற்பிக்கும் ஆசிரியர்கள் ஆகியோரை உருவாக்குவதே இப் பாடசாலைகளின் நோக்கமாகும்.கொழும்பு, யாழ்ப் பாணம் முதலான சில இடங்களில் மட்டும் இவை இயங்கின.

v. முதலியார், கிராமத்தலைவர் பதவிகளைப் பெறவிரும்பு வோரும், ஒல்லாந்த கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தில் சேவையாற்ற விரும்புவோரும், ஒல்லாந்தில் உயர் கல்வி பெறப் புலமைப் பரிசில் பெற விரும்புவோரும் கட்டாயமாகச் செமினறிப் பாடசாலைக் கல்வியைப் பெற்றிருக்க வேண்டியிருந்தது.

vi. **நோமல்** பாடசாலைகள் எனப்படும் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கும் நிறுவனமொன்று கொழும்பில் உருவாக்கப்பட்டது.

vii. **விஸ்கமிர்** எனப்படும் அநாதைப் பிள்ளை மடங்களும், வறிய பிள்ளைகளுக்கான இல்லங்களும் **(அறமென் ஹவுஸ்)** உருவாக்கப்பட்டன.

**14. ஒல்லாந்தர் காலப் பாடசாலைகளின் பாடவிதானம், கற்றல் - கற்பித்தல் முறைகள் எவ்வாறு காணப்பட்டன?**

பரிஷ் பாடசாலைகளின் பாடவிதானமானது சிங்களம், தமிழ், எழுத்து, வாசிப்பு, கிறிஸ்தவ சமயக் கோட்பாடுகள் ஆகியவற்றை உள்ளடக்கிய குறுகிய பாடவிதானமாகக் காணப்பட்டது. மனனம், வினாவிடை முதலிய கற்பித்தல் முறைகளே இங்கு பெரிதும் பேணப்பட்டது. செமினறிப் பாடசாலைகளின் கீழ்ப் பிரிவில் மொழி, இலக்கணம், கட்டுரை, கிரேக்க மொழி, ஹீப்ரு மொழி ஆகியவற்றுடன் சுதேச மொழியிலிருந்து ஒல்லாந்த மொழிக்கு மொழி பெயர்ப்பதும் கற்பிக்கப்பட்டது. மேற்பிரிவுகளில் இலத்தீனும் கிறிஸ்தவ சமயமும் கற்பிக்கப்பட்டன.

**15. ஒல்லாந்தர் காலக் கல்வி முறையில் காணப்பட்ட குறைபாடுகள் யாவை?**

i. வரையறையற்ற சமயச் சார்பு கல்வித் துறையில் காணப்பட்டமை.
ii. கட்டாயக் கல்வி மூலம் மதமாற்றத்தில் ஈடுபட்டமை.
iii. செயன்முறைக்கு இடமில்லாத குறுகிய பாடவிதானம் காணப்பட்டமை.
iv. புரட்டஸ்தாந்து சமயத்தைத் தழுவியவர்க்கே கல்வியில் பதவிகளை வழங்கியமை.
v. ஒரு சமூகத்துக்கு உரிமையாக்கிய கல்வியினூடாகப் பாகுபாட்டை வளர்த்தமை.

**16. ஒல்லாந்தரது கல்விக் கட்டமைப்பின் பிரதான அம்சங்கள் யாவை?**

i. ஸ்கொலார்க்கல் கொமிஷன்
ii. பரிஷ் பாடசாலைகள்
iii. செமினறிப் பாடசாலைகள்
iv. நோமல் பாடசாலைகள்
v. அநாதைகள் பாடசாலைகள்.

**17. இலங்கையில் ஐரோப்பியர் ஆட்சிக் காலங்கள் எவ்வாறு காணப்பட்டன?**

i. போத்துக்கேயர் காலம் கி.பி 1505 – 1658 (153 ஆண்டுகள்)
ii. ஒல்லாந்தர் காலம் கி.பி 1658 – 1796 (138 ஆண்டுகள்)
iii. ஆங்கிலேயர் (பிரித்தானியர்) காலம் கி.பி 1776 - 1948 (152 ஆண்டுகள்)

**18. இலங்கை முழுவதும் பிரித்தானியர் ஆளுகையின் கீழ் வந்த ஆண்டு எது?**

*கண்டி இராச்சியம் கைப்பற்றப்பட்ட கி.பி 1815 இல்*

**19. பிரித்தானியர் ஆட்சிக் காலக் கல்வி முறையின் முக்கியமான நான்கு கால கட்டங்களும் எவை?**

i. *கி.பி 1802 – 1832*
ii. *கி.பி 1832 – 1865*
iii. *கி.பி 1865 – 1931*
iv. *கி.பி 1931 – 1947*

**20. இலங்கையில் 1802 - 1832 காலப்பகுதியில் கல்வி முறை எவ்வாறு அமைந்திருந்தது?**

*1812 இல் சேர் றொபேட் பிரௌன்றிக் இலங்கையின் ஆளுநராக இருந்த போது மிஷனரிக் குழுக்கள் கல்வியின் மூலம் சமயம் பரப்பும் நோக்கத்துடன் இலங்கைக்கு வந்தன. அவையாவன.*

i. *இலண்டன் மிசனரிக்குழு (1805)*
ii. *பப்டிஸ்ற் மிசனரிக் குழு (1812)*
iii. *வெஸ்லியன் மிசனரிக் குழு (1814)*
iv. *அமெரிக்கன் மிசனரிக் குழு (1816)*
v. *கிறிஸ்தவ திருச்சபைக் குழு (1818)*

**21. ஆங்கிலேயர் காலத்தில் கல்விப் பணியாற்றிய கிறிஸ்தவ மிசனரிக் குழுக்கள் செயற்பட்ட இடங்கள் யாவை?**

*இலண்டன் மிசனரிக் குழுவினர் காலி, மாத்தறை, யாழ்ப்பாணம் முதலிய பிரதேசங்களிலும் பப்றிஸ்ட் மிசனரிக் குழுவினர் கொழும்பில் மாத்திரமும், வெஸ்லியன் மிசனறியினர் யாழ்ப்பாணம், கொழும்பு, காலி, மாத்தறை முதலான இடங்களிலும், அமெரிக்க மிசனரியினர் யாழ்ப்பாணக் குடாநாட்டினுள் மாத்திரமும், கிறிஸ்தவ திருச்சபைக் குழுவினர் மலை நாட்டில் பிரதானமாகவும் கொழும்பு, யாழ்ப்பாணம் போன்ற இடங்களிலும் செயற்பட்டனர்.*

**22. 1802 - 1832 காலகட்டத்தில் இலங்கையின் கல்வித்துறையில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் யாவை?**

i. மிசனறிக் குழுக்களிடம் கல்வி வழங்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டமை.
ii. புரஸ்டஸ்தாந்தவரான ஆங்கிலேயர் கிறிஸ்தவ சமயம் பரப்புதலுக்கு முக்கியத்துவம் அளித்தமை.
iii. ஆங்கிலப் பாடசாலைகளை நிறுவியமை.
iv. கிராமப் பாடசாலைகளான ஆரம்பப் பாடசாலைகளை நிறுவியமை
v. வதிவிடப் பாடசாலைகளை நிறுவியமை
vi. பெண்கள் பாடசாலைகளை நிறுவியமை.

**23. ஆங்கிலப் பாடசாலைகள் எவ்வாறு பேணப்பட்டன?**

இவை நகர்ப்புறங்களில் அமைந்திருந்த கட்டணம் அறவிடும் பாடசாலைகளாகும்.

**24. 1802-1832 காலகட்ட இலங்கையில் கிராமப் பாடசாலைகள் எவ்வாறு இயங்கின?**

இவை இலவசப் பாடசாலைகளாக விளங்கின. அடிப்படைக் கல்வியைச் சுதேச மாணவர்களுக்கு வழங்கின. இங்கு சுதேச மொழிகளில் கற்பிக்கப்பட்டது.

**25. 1802-1832 காலப்பகுதியில் இலங்கையில் வதிவிடப் பாடசாலைகள் எவ்வாறு செயற்பட்டன?**

இவற்றில் பெரும்பாலும் கிறிஸ்தவ சமயக் கல்விக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது. இலவசக் கல்வி வழங்கப்பட்டது. மாணவர்கள் தங்கியிருந்து கற்பதற்கான விடுதி வசதிகளும் காணப்பட்டன.

**26. ஆங்கிலேயராட்சி ஆரம்ப காலத்தில் பெண்கள் பாடசாலைகள் எவ்வாறு செயற்பட்டன?**

இவைகளும் இலவசமாகவே கல்வி போதித்தன. பப்ரிஸ்ற் குழுவினர் நிறுவிய மூவகைப் பாடசாலைகளில் இவையும் ஒன்றாகும்.

**27. 1832 - 1865 ஆண்டு காலப்பகுதியில் இலங்கையில் ஏற்படுத்தப்பட்ட முக்கியமான அரசியல் சீர்திருத்தம் எது?**

*1833 இல் மேற்கொள்ளப்பட்ட கோல்புறூக் - கமறொன் சீர்திருத்தம்.*

**28. 1833 இன் கோல்புறூக் சீர்திருத்தத்தில் காணப்பட்ட கல்வி தொடர்பான ஆலோசனைகள் யாவை?**

i. *கல்வி நிர்வாக நடவடிக்கைகளுக்காகப் பாடசாலை ஆணைக் குழுவொன்றினை நிறுவுதல்.*

ii. *போதனா மொழியாக ஆங்கிலத்தைப் பயன்படுத்தல்.*

iii. *ஆங்கிலக் கல்வியின் முன்னேற்றத்துக்காக ஆங்கிலக் கல்லூரியினை நிறுவுதல்.*

iv. *ஆங்கிலக் கல்வி பெற்றோருக்கு அரச தொழில் பெற்றுக் கொடுத்தல்.*

**29. இலங்கையில் பாடசாலை ஆணைக்குழு நிறுவப்பட்ட ஆண்டு எது?**

*1834*

**30. கோல்புறூக் சீர்திருத்த ஆலோசனைகளின் விளைவுகள் யாவை?**

i. *சுயமொழிக் கல்வி புறக்கணிக்கப்பட்டது.*

ii. *ஆங்கிலம், கற்பித்தல் மொழியாகப் பயன்படுத்தப்பட்டது.*

iii. *1836இல் கொழும்பு அக்கடமி புனரமைக்கப்பட்டு ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களைப் பயிற்றும் இடமாக்கப்பட்டது.*

**31. சுதேச மொழிக் கல்வியின் வீழ்ச்சியினைத் தடுப்பதற்கு ஆளுநர் ஸ்ருவட்மக்கன்சி முன்வைத்த கல்விச் சீர்திருத்த ஆலோசனை கள் யாவை?**

i. *அரச பாடசாலைகளை விருத்தி செய்தல்.*

ii. *மிசனரிப் பாடசாலை முறைகளை அரச பாடசாலை முறை களுடன் தொடர்புபடுத்தல்.*

iii. *சமயத்தைக் கவனியாது சகல பாடசாலைகளுக்கும் மாணவரை அனுமதித்தல்.*

iv. *சுதேச மொழிப் பாடசாலைகளை முன்னேற்றுதல்.*

v. *ஆசிரியர்களைப் பயிற்றுவிக்க ஒரு நிறுவனத்தை ஏற்படுத்துதல்.*

vi. *பாடசாலைப் பரிசோதகர்களை நியமித்தல்.*

vii. பாடசாலை ஆணைக்குழுவை விரிவுபடுத்தல்.

**32. ஆளுநர் றொபேட் மக்கன்ஸியின் ஆலோசனைகள் கல்வித் துறையில் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட்டன?**

i. பாடசாலை ஆணைக்குழு கலைக்கப்பட்டு 9 பேர் கொண்ட மத்திய பாடசாலை ஆணைக்குழு 1841 இல் நியமிக்கப் பட்டது.

ii. பரிஷ் பாடசாலைகளுக்குப் பதிலாக ஆரம்பப் பாடசாலைகள் தொடங்கப்பட்டன. இங்கு வறிய பிள்ளைகளும் ஆங்கிலக் கல்வியைப் பெற முடிந்தது.

iii. இரு மொழிப் பாடசாலைகள் உருவாக்கப்பட்டு ஆரம்பக் கல்வி தாய்மொழியிலும், இடைநிலைக் கல்வி ஆங்கிலத்திலும் வழங்கப்பட்டது.

iv. சுயமொழிப் பாடசாலைகளை மீண்டும் முன்னேற்றும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

v. உதவி நன்கொடை பெறும் பாடசாலை முறை ஆரம்பிக்கப் பட்டது.

vi. கொழும்பு, கண்டி, காலி முதலான பிரதான நகரங்களில் மத்திய கல்லூரிகள் (Central Schools) நிறுவப்பட்டன.

vii. பெண்கள் பாடசாலைகள் ஆரம்பிக்கும் நடவடிக்கை எடுக்கப் பட்டது.

viii. உயர் தொழில்கட்கு மாணவரைப் பயிற்றுவதற்காக கொழும்பு அக்கடமி தரமுயர்த்தப்பட்டது.

**33. 1865 இன் R. F மோர்கன் (Morhan) குழுவினரின் கல்வி ஆலோசனைகள் யாவை?**

i. பொதுக் கற்பித்தல் திணைக்களம் நிறுவுதல்.

ii. கல்வி வழங்கம் பொறுப்பை அரசிடம் ஒப்படைத்தல்.

iii. ஆரம்பக் கல்வியைத் தாய்மொழியிலும், இடைநிலை மற்றும் உயர்கல்வியை ஆங்கிலத்திலும் வழங்கல்.

iv. தொழினுட்பக் கல்லூரிகளை ஆரம்பித்தல்

v. பெண்களுக்குப் பாடசாலைகளை ஆரம்பித்தல்.

vi. ஆசிரியர் பயிற்சியை சுயமொழியிலும், ஆங்கிலத்திலும் மேற்கொள்ளல்.

vii. தனியார் பாடசாலைகளுக்கு உதவி நன்கொடை வழங்குதல்.

**34. இலங்கைப் பொதுக் கற்பித்தல் (போதனை) திணைக்களம் எப்போது நிறுவப்பட்டது?**

*1869 இல் இதுவே பின்னர் கல்வித் திணைக்களமானது. 1969 இல் இலங்கையில் கல்வி நூற்றாண்டு விழா கொண்டாடப் பட்டது.*

**35. சுயமொழிப் பாடசாலைகள் எவ்வாறு 1869 இன் பின் இயங்கின?**

*இலவசக் கல்வியை வழங்கிய போதிலும் குறுகிய கலைத்திட்டத்தையே கொண்டிருந்தன. அவை சமயம், வாசிப்பு, எழுத்து, எண் ஆகியவற்றைக் கற்பிக்கவே மட்டுப் படுத்தப் பட்டிருந்தன.*

**36. 1869 இல் மோர்கன் குழுவின் அறிக்கை நடைமுறைக்கு வந்தபின் இருமொழிப் பாடசாலைகள் எவ்வாறு காணப்பட்டன?**

*சுயமொழியில் கல்வியை ஆரம்பித்தல் பின்னர் ஆங்கில மொழிக்கு மாறக்கூடிய வகையில் முதலில் ஆரம்பக் கல்வியும், பின் இடைநிலைக் கல்வியும் வழங்கப்பட்டது.*

**37. மோர்கன் குழுவின் சிபார்சுகள் (1865) இலங்கையின் கல்வித் துறையில் ஏற்படுத்திய தாக்கங்கள் எவை?**

i. *முறையான கல்வி நிர்வாகத்துக்கான திணைக்களம் (முதலில் 1869 இல் பொதுக் கற்பித்தல் திணைக்களமாகவும் 1914 முதல் கல்வித்திணைக்களமாகவும் ) உருவாக்கப் பட்டமை.*

ii. *மூவகைப் பாடசாலை முறைகள் (ஆங்கில, இருமொழி, சுதேசமொழி) காணப்பட்டமை.*

iii. *நீண்டகாலத்திற்கு உறுதியான கல்வி நடிவடிக்கைகளுக்கு வித்திட்டமை.*

**38. இலங்கைக் கல்வித்துறையில் 1931 - 1947 காலகட்டத்தின் முக்கியத்துவம் யாது?**

*1931 இல் கொண்டுவரப்பட்ட டொனமூர்ச் சீர்திருத்தம், 1943 இன் C.W.W. கன்னங்கரா குழுவின் கல்வி ஆலோசனைகள், 1947 இன் சோல்பரிக் அரசியல் சீர்திருத்தம் முலானவை கல்வித்துறையின் பல மாற்றங்களுக்கு வித்திட்டமையாகும்.*

**39. 1931 இல் கொண்டுவரப்பட்ட டொனமூர் சீர்திருத்த யாப்பின் கீழ் நடைமுறைக்கு வந்த ஆலோசனைகள் யாவை?**

*1931 - 1947 காலப்பகுதியில் இலங்கை அரசாங்க சபையில் கல்வியமைச்சராகப் பதினேழு ஆண்டுகள் சீ.டபிள்யூ டபிள்யூ கன்னங்கரா அவர்கள் பணியாற்றினார். அவரது காலத்தில் கல்வி தொடர்பான முக்கியமான சீர்திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன.*

i. *1939 ஆம் ஆண்டின் கல்விச் சட்டமூலம்.*

ii. *கன்னங்கரா சீர்திருத்த ஆலோசனைகள் (1943).*

**40. 1939 கல்விச் சட்டத்தில் அடங்குவன யாவை?**

i. *மத்திய நிருவாக சபை உருவாக்கல்.*

ii. *தேசிய ஆலோசனைச் சபை, பிரதேச ஆலோசனைச் சபைகள் உருவாக்கல்.*

iii. *பெற்றோரின் அனுமதியின்றிச் சமயம் கற்பித்தலைத் தடைசெய்தல்.*

iv. *தோட்டப் பிரதேச மாணவர்களுக்கான கல்வி வழங்கும் பொறுப்பைத் தோட்ட நிர்வாகங்களுக்கு வழங்குதல்.*

**41. கன்னங்கரா கல்விச் சீர்திருத்த ஆலோசனைகள் யாவை?**

i. *இலவசக் கல்வியின் அறிமுகம்*

ii. *தாய்மொழிக் கல்வி.*

iii. *கட்டாயக் கல்வி*

iv. *கட்டாய சமயக் கல்வி*

v. *மத்திய மகா வித்தியாலயங்கள் அல்லது மத்திய கல்லூரிகள் நிறுவி விஞ்ஞானக் கல்விக்கு இடமளித்தல்.*

vi. *ஆசிரியர் பயிற்சிக்கான சந்தர்ப்பங்கள் வழங்கல்.*

vii. *கிராமியக் கல்வி.*

**42. இலங்கையில் இலவசக் கல்வி எப்போது அறிமுகப்படுத்தப்பட்டது?**

*1945 இல்*

**43. இலங்கையில் கன்னங்கரா ஆலோசனைகளின் பிரகாரம் உருவாக்கப்பட்ட மத்திய மகா வித்தியாலயங்கள் எத்தனை?**

*54*

**44. இலங்கையில் கிராமியக் கல்வித்திட்டம் முதன் முதலில் எங்கு நடைமுறைப்படுத்தப்பட்டது?**

*1932 இல் ஹெந்தஸ என்ற கிராமத்தில்.*

**45. இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரி எப்போது உருவானது?**

*1921 இல் கொழும்பில் ஆரம்பிக்கப்பட்டது.*

**46. இலங்கைப் பல்கலைக்கழகம் எப்போது உருவானது?**

*1942 ஆம் ஆண்டு கொழும்பில்*

**47. இலங்கை வைத்தியக் கல்லூரி நிறுவப்பட்ட ஆண்டு எது?**

*1870 ஆம் ஆண்டு*

**48. இலங்கையில் சட்டக் கல்லூரி எப்போது தொடங்கப்பட்டது?**

*1895 இல் கொழும்பில் தொடங்கப்பட்டது.*

**49. இலங்கையின் முதல் விவசாயக் கல்லூரி கொழும்பில் தொடங்கப் பட்ட ஆண்டு எது?**

*1884*

**50. இலங்கையில் மோர்கன் குழுவின் சிபார்சின்படி முதல் தொழில்நுட்பக் கல்லூரி எப்போது தொடங்கப்பட்டது?**

*1893 இல்*

**51. இலங்கையில் பௌத்த சமயப் பாடசாலைகளை நிறுவிப் பௌத்த சமய மறுமலர்ச்சிக்காகப் பாடுபட்டோரில் முன்னோடிகள் யாவர்?**

i. *கேணல் ஹென்றி ஸ்டீல் ஒல்கொட் ( அமெரிக்கர்)*
ii. *அநகாரிக தர்மபால*
iii. *ஏ.பி.குணவர்த்தனா*
iv. *ஹிக்கடுவ ஸ்ரீசுமங்கலதேரர்*
v. *மிக்கெடுவத்த குணானந்ததேரர்*
vi. *புலத்கம தர்மாலங்காரதேரர்*
vii. *ஆபா அப்புஹாமி*

**52. இலங்கையில் சைவப் பாடசாலைகளை அமைத்துச் சைவசமய மறுமலர்ச்சிக்காகப் பாடுபட்ட முன்னோடிகள் யாவர்?**

i. *ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்*
ii. *சேர்.பொன். இராமநாதன்*
iii. *சி.வை.தாமோதரம்பிள்ளை*

**53. இலங்கை இஸ்லாமியர்களின் கல்வி மறுமலர்ச்சிக்காகப் பாடசாலை கள் அமைத்த முன்னோடி யார்?**

*அறிஞர் எம்.ஸி . சித்திலெப்பை*

**54. சுதந்திரத்துக்குப் பிந்திய இலங்கையின் கல்வித்துறையில் இடம்பெற்ற முக்கியமான நடவடிக்கைகள் யாவை?**

i. *1950 கல்வி வெள்ளையறிக்கை*

ii. *பாடசாலைக் கலைத்திட்டம் தேசியமயமாக்கப்பட்டமை.*

iii. *1961 இல் உதவி பெறும் பாடசாலைகள், ஆசிரியர் கல்லூரிகள் அரசின் கீழ் கொண்டுவரப்பட்டமை.*

iv. *1964இல் இலங்கையின் எல்லாப் பிரதேசங்களிலும் மகாவித்தியாலயங்கள் நிறுவப்பட்டமை.*

v. *கலைத்திட்டத்தில் கன்னங்கரா சீர்திருத்தத்திற்குப் பின்னர் குறிப்பிடத்தக்க மாற்றங்களைக் கொண்டுவந்த 1972 இன் "புதிய பாதை"க் கல்விச் சீர்திருத்தம்.*

vi. *1981 இன் கல்வி வெள்ளை அறிக்கை.*

vii. *1992 தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கை*

viii. *2003 மனித விருத்தி, எதிர்கால நோக்குப் பற்றிய தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கை.*

**55. 1950 ஆம் ஆண்டின் கல்வி வெள்ளை அறிக்கையில் காணப்பட்ட பிரதான அம்சங்கள் யாவை?**

i. *மொழி வேறுபாடு கருதாது கல்வி வழங்குதல் ஆரம்ப, இடைநிலை, உயர்கல்வி என மூன்று கட்டங்களாகப் பிரிக்கப் பட்டது.*

ii. *1950 இன் கல்வி வெள்ளை அறிக்கைப்படி மூன்று கட்டங் களுக்குமான வகுப்பு, வயது எல்லைகள் வருமாறு:*

*ஆரம்பக் கல்வி*

*1. பாலர்கல்வி (5 – 7)*

*2. இரண்டாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்புவரை*

*இடைநிலைக் கல்வி*

*1. கனிஷ்ட இடைநிலை 6 – 8 வகுப்பு*

*2. சிரேஷ்ட இடைநிலை 8ஆம் வகுப்புக்கு மேல்*

*உயர்கல்வி – பல்கலைக்கழகக் கல்வி*

iii. S.S.C, H.S.C *பரீட்சைகளுக்கு மாணவர் தோற்ற முடியும். சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திர வகுப்பு வரையுள்ளவை*

சிரேஷ்ட பாடசாலைகள் என்றும், உயர் பாடசாலைத் தராதரப் பத்திரமுள்ளவை கல்லூரிகள் எனவும் அழைக்கப்பட்டன.

iv. கனிஷ்ட இடைநிலைக் கல்விக்குரிய மாணவர்கள் கல்வித் திணைக்களம் நடத்தும் பரீட்சையொன்றின் மூலம் தெரிவு செய்யப்பட்டனர். சித்தியடையாதோர் தொழினுட்பப் பாடசாலை களில் அனுமதி பெறக்கூடியதாக இருந்தது.

v. தாய் மொழி மூலம் கற்பித்தலின் முக்கியத்துவம், மூன்றாம் வகுப்பு முதல் ஆங்கிலம் கற்பித்தல், 5 - 14 வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்குக் கட்டாயக் கல்வி, ஆசிரியர் கலாசாலை களின் தரத்தை உயர்த்தல், சுயமொழிப் பாடசாலைகளுக்கு உதவி வழங்கல், மாவட்டக் கல்வி அலுவலகங்களுக்குச் சில அதிகாரங்களை வழங்கல், சகல தனியார் பாடசாலை களையும் பதிவு செய்தல் முதலான பல அம்சங்கள் காணப்பட்டன.

**56. இலங்கையில் பாலர் கல்வி வகுப்புகள் இல்லாமல் போன ஆண்டு எது?**

*1963 ஆம் ஆண்டுக்குப் பின்னர்.*

**57. 1972 இன் 'புதிய பாதை' க்கல்விச் சீர்திருத்தத்தில் இடம்பெற்றுள்ள முக்கிய விடயங்கள் யாவை?**

i. பாடசாலைகளுக்குப் பிள்ளைகளை அனுமதிக்கும் வயது ஆறு - அதுவரை முன்கல்வி பெறச்செய்தல்.

ii. 1 - 5 வகுப்பு வரை ஆரம்பக்கல்வி
6 - 9 வகுப்பு வரை கனிஷ்ட இடைநிலைக் கல்வி
10 - 11 வகுப்புவரை சிரேஷ்ட இடைநிலைக் கல்வி

iii. ஆரம்பக் கல்வியில் (6 - 11 பூர்த்தி வயதுவரை) சமயம், முதலாம் மொழி, இரண்டாம்மொழி, கணிதம், உடல் நல அழகியல் செயற்பாடுகள், ஆக்கத் தொழிற்பாடுகள், சுற்றாடற் செயற் பாடுகள் முதலான பாடங்கள் கற்பிக்கப்படுதல்.

iv. கனிஷ்ட இடைநிலையில் (12 - 15 பூர்தி வயது வரை) சமயம், முதலாம் மொழி, இரண்டாம்மொழி, கணிதம், விஞ்ஞானம், சமூகக்கல்வி, அழகியற் கல்வி, சுகாதாரமும் உடனல வியலும், தொழில் முன்னிலைப்பாடம் 1, தொழில் முன்னிலைப் பாடம் 2 ஆகிய பாடங்கள் கற்பிக்கப்படுதல்.

v. இரண்டாம் மொழியாகச் சிங்களம் அல்லது தமிழுடன், ஆங்கிலத்தையும் கற்க முடிதல். மூன்றாம் மொழியொன்றும் கற்க முடிதல் (ஆங்கிலம்).

vi. கனிஷ்ட இடைநிலைக் கல்வி 9ஆம் வகுப்புடன் முடிவடைகையில் பரீட்சைத் திணைக்களம் நடத்தும் பரீட்சைக்கு (தே.பொ.க.சா பரீட்சைக்கு) த் தோற்ற வேண்டும். இது தற்போதைய க.பொ.த (சா) தரப்பரீட்சைக்குப் பதிலானது. தேசிய பொதுக் கல்விச் சான்றிதழ் பரீட்சையாகும். 1975 இல் இப்பரீட்சை முதன் முதல் நடத்தப்பட்டது.

vii. தே.பொ.க.சா பரீட்சையில் சித்தி பெற்றோர் 10ஆம் வகுப்புக் கல்விக்காக சிரேஷ்ட இடைநிலையில் சேர்ந்து இரண்டு வருடங்கள் (10, 11 வகுப்புகள்) கற்க வேண்டும். நிறைவில் உயர் கல்வித் தேசிய சான்றிதழ் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். பத்தாம் வகுப்பிலேயே பௌதிகவியல், உயிரியல், சமூகக்கல்வி, வணிகக் கல்வி ஆகிய பல்வேறு துறைகளுக்கும் மாணவர் கற்க வசதி செய்யப்பட்டது.

viii. சிரேஷ்ட இடைநிலை வகுப்புகளில் தெரிவு செய்யப்பட்ட பாடத்துறைகளுடன் கட்டாய பாடங்கள் சிலவற்றையும் மாணவர்கள் கற்க வேண்டும். தகைமை பெறாதவர்கள் கனிஷ்ட தரத்துடன் தொழினுட்ப, வணிக, நுண்கலைக் கல்லூரிகளில் கற்க முடியும்.

ix. சிரேஷ்ட இடைநிலைக் கல்வியின் பின் பல்கலைக்கழகம் தெரிவான மாணவர்கள் அடிப்படைக் கற்கையொன்றினை 12 ஆம் வகுப்பில் கற்றுப் பல்கலைக்கழகத்துக்குத் தயாராக வேண்டும். அடுத்த வருடமே பல்கலைக்கழகம் புக முடியும்.

x. இதுவரை காலமும் தனித்தனிப் பாடங்களாக எண்கணிதம், கேத்திர கணிதம், அட்சர கணிதம் என இருந்தவை கணிதம் எனவும், சரித்திரம், பூமிசாஸ்திரம், அரசியல், பொருளியல் முதலானவை சமூகக்கல்வி எனவும், விஞ்ஞான பாடங்களான தாவரவியல், விலங்கியல், இரசாயனவியல், பௌதிகவியல் ஆகியன விஞ்ஞானம் எனவும் ஒருமைப்படுத்தப்பட்ட பாடங்களாகக் கனிஷ்ட இடைநிலை வகுப்புகளில் கொண்டுவரப் பட்டமையும், ஆரம்ப வகுப்புகளில் ஒன்றிணைந்த கற்பித்தல் முறையினை ஒரேயாசிரியர் கற்பிக்க வழி செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்க கலைத் திட்ட மாற்றங்களாகும்.

**58. 1972 'புதிய பாதை'க் கல்விச் சீர்திருத்தத்தையும், பல்கலைக்கழக அனுமதிக்கான தரப்படுத்தல் சட்டத்தையும் கொண்டு வந்த கல்வியமைச்சரின் பெயரென்ன?**

*டாக்டர் அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூத்*

**59. 1950 - 1972 காலப்பகுதியில் இலங்கையின் கல்வித்துறையில் மேற்கொள்ப்பட்ட பிரதான அறிக்கைகள், ஆலோசனைகள் யாவை?**

i. *1958 வித்யோதய, வித்தியாலங்கார (மசோதா) சட்டம்.*

ii. *1961 – 1962 தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கை*

iii. *1963 தொழினுட்பக் கல்வி ஆணைக்குழுவின் அறிக்கை.*

iv. *1960 உதவி நன்கொடை பெறும் பாடசாலைகள், ஆசிரியர் கலாசாலை விதிகள் சட்டம்.*

v. *1961 உதவி நன்கொடை பெறும் பாடசாலைகள், ஆசிரியர் கலாசாலைகள் (மேலதிக விசேட விதிகள்) சட்டம்.*

vi. *1964 தேசிய, கல்வி முறைக்கான ஆலோசனைகள்.*

vii. *1966 பொது, தொழினுட்பக் கல்விச் சீர்திருத்தங்களுக்கான சட்டம்.*

viii. *1966 உயர் கல்விச் சட்டம்.*

ix. *1972 கல்வியின் "புதிய பாதை"ச் சட்டம்.*

**60. 1981 கல்வி வெள்ளை அறிக்கையின் பிரதான அம்சங்கள் யாவை?**

i. *1981 கல்வி வெள்ளை அறிக்கையானது பொதுக்கல்வி, தொழினுட்பக் கல்வி, உயர் கல்வி ஆகிய மூன்று விடயங்களையும் உள்ளடக்கியது.*

ii. *மீண்டும் பாடசாலை அனுமதி வயதாக ஐந்து வயதுப் பூர்த்தி.*

iii. *மீண்டும் 11 வகுப்புகளைக் கொண்ட பொதுக் கல்வி முறை.*

*1–5 வரை ஆரம்பப் பாடசாலைக் கல்வி (10 வயது நிறைவு வரை)*

*6–8 வரை கனிஷ்ட இடைநிலைக் கல்வி (13 வயது நிறைவு வரை)*

*9–11 வரை சிரேஷ்ட இடைநிலைக் கல்வி (16 வயது நிறைவு வரை)*

iv. *12,13 வகுப்புகள் முன் பல்கலைக்கழகக் கல்வி (சிரேஷ்ட இடைநிலை உயர்தரம்).*

v. *மீண்டும் க.பொ.த (சா) தர, க.பொ.த (உயர்) தரப் பரீட்சைகள் அறிமுகம்.*

vi. கனிஷ்ட இடைநிலைப் பாடங்களாக முதல்மொழி, சமயம், கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம், சமூகக்கல்வி, அழகியற் கல்வி, வாழ்க்கைத் திறன்கள், சுகாதாரமும் உடனலக் கல்வியும்.

vii. சிரேஷ்ட இடைநிலை வகுப்புகளில் வாழ்க்கைத் திறன்களுக்குப் பதிலாகத் தொழினுட்பப் பாடம் அறிமுகம்.

viii. க.பொ.த (சா) தரப் பரீட்சையின் போது முதன் மொழி, கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம், சமூகக் கல்வி ஆகிய ஐந்து பாடங்களும் தேசிய மட்டத்திலும் ஏனைய பாடங்கள் மாவட்ட மட்டத்திலும் தொடர் மதிப்பீட்டினாலும் பரீட்சிக்கப் பட்டு A, B, C, D, E என்றவாறு பெறுபேறுகள் வழங்கப் படுதல்.

ix. புவியியல் ரீதியாக ஒரு மூலாதாரப் பாடசாலையையும் அதனுடன் இணைந்ததாகச் சில பாடசாலைகளையும் இணைத்துக் கொத்தணிப் பாடசாலை முறை கொண்டு வரப்படுதல்.

x. உயர்கல்வியில் மீண்டும் துறை சார்ந்த நான்கு பாடங்கள் அடங்கிய கற்றலும், பல்கலைக்கழக அனுமதியும்.

xi. கல்விச் சேவைகள் அமைச்சு உருவாக்கப்படுதல்.

xii. ஆசிரியர் கல்வித்துறை விரிவாக்கலில் தொலைக்கல்வி அறிமுகம்.

xiii. தொழினுட்பக் கல்விக்கான வாய்ப்புகள் அதிகரித்தல்.

**61. 1977 ஆம் ஆண்டு இலங்கையின் அரசியல் மாற்றமானது கல்வித் துறையில் ஏற்படுத்திய விளைவுகள் யாவை?**

i. 1981 கல்வி வெள்ளை அறிக்கைப் பிரகாரம் நடிவடிக்கைகள் மேற்கொண்டமை.

ii. 1978 இலிருந்து பழைய முறைப்படி பல்கலைக்கழக முறை ஒரே பல்கலைக்கழகமும் வளாகங்களும் என்ற முறை நீங்கிப் பல

iii. பல்கல்கலைக்கழக முறை ஏற்பட்டமை.

iv. பொதுக் கல்வியில் 11 வகுப்புகளும், உயர்தரத்தில் இரண்டு (12, 13) வகுப்புகளும் மீண்டும் ஏற்பட்டமை.

v. கல்வி நிர்வாகத்தில், கொத்தணிப் பாடசாலை முறை எற்பட்டமை.

vi. தொலைக்கல்வி மூலம் ஆசிரியர் பயிற்சி வழங்கப்பட்டமை.

**62. 1998 இன் புதிய கல்விச் சீர்திருத்த (கல்வி மறுசீரமைப்பு அறிக்கை) யோசனை களின் தேசிய இலக்குகள் யாவை?**

தேசிய இலக்கு

i. *தேசியப் பிணைப்பினையும், தேசிய முழுமைப்பாட்டினையும், தேசிய ஒருமைப்பாட்டினையும் எய்துதல் (தேசிய ஒற்றுமை).*

ii. *வியாபகப் பாங்குடைய சமூக நீதியை நிலை நிறுத்தல் (சமநீதி).*

iii. *ஓம்பக் கூடியதொரு வாழ்க்கைப் பாணி, ஓம்பக்கூடியதொரு வாழ்க்கைப் பாங்கு என்பதனைச் சிறக்கச் செய்தல். இது 2000 ஆம் ஆண்டுக்கும் அதற்கு அப்பாலும் உயர் நிலையாய் விளங்கக் கூடியது. அக்காலம் மனிதவர்க்கத்தின் வரலாற்றில் முதன் முதலாக வளியும் நீருந்தானும் கிடைக்கும் என்று கொள்ள முடியாத காலம் (வள நுகர்வுச் சிக்கனம்)*

iv. *ஒரே வேளையில் மேன்மையும், மனநிறைவும், தன்னிறைவும் தரக்கூடிய வேலை வாய்ப்புக்களை உருவாக்கல் (திருப்தியான வேலைவாய்ப்பு).*

v. *மேலே குறிப்பிட்ட பணிச் சட்டத்திலே நாட்டு வளர்ச்சியின் அமைப் பொழுங்கிற் கூட்டு விளைவு உண்டாவதற்கு வழி செய்யுமுகமாக மனிதவள விருத்தியில் யாவரும் பங்கு கொள்வதற்கான பல்வேறு வாய்ப்புகளை ஏற்படுத்துதல் (மனிதவளக் கூட்டுறவு அபிவிருத்தி).*

vi. *நாட்டு மேம்பாட்டுக்கான முயற்சிகளில் விறுவிறுப்பாகப் பங்கு கொள்ளலானது ஒருவர் மீது ஒருவர் வைத்திருக்கின்ற ஆழ்ந்த இடையறாத அக்கறையுணர்வு தொடர்ந்து பேணப்படுதலை உறுதி செய்தல் வேண்டும் (இணைந்து வாழல்)*

vii. *இன்று நாம் வாழ்ந்து கொண்டிருப்பதைப் போன்றதொரு விரைவாக மாறிவரும் உலகில் மாறுகின்ற நிலைமைகளுக்கு இணங்கி வாழக் கற்றல், மாற்றத்துக்கு இணக்கஞ் செய்கின்ற மூலக்கூறுகளைச் சிறப்பாக்கலும் வளர்த்தலும் இன்றியமையாதவை. ஒருவர் தமக்கும் பிறருக்கும் நலனளிக்கும் வகையில் மாற்றத்தை நெறிப்படுத்துந் தகைமைகளையும் மேற்கூறிய கற்றலுடன் இணைத்துக் கொள்ளல் வேண்டும் (மாற்றங்களுக்கு இசைவாக்கமடைதல்).*

viii. காப்பு உணர்வையும், உறுதிப்பாட்டு உணர்வையும் எய்தும் வகையில் சிக்கலானதும் எதிர்பாராததுமான நிலைமையைச் சமாளிக்கும் தகைமையை வளர்த்தல் (சிக்கல் நிலைமைகளைச் சமாளிக்கும் திறன்).

ix. சர்வதேச சமூகத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறக்கூடியதாக இந்தத் தகைமைகளை விருத்தி செய்தல் (சர்வதேச கௌரவம் பெறல்).

**63. 1998 கல்விச் சீர்திருத்தத்தில் இடம்பெற்றுள்ள தேசிய இலக்குகளை அடைவதற்கான அத்தியாவசிய தேர்ச்சிகள் யாவை?**

i. தொடர்பாடலை அறிதல் பற்றிய தேர்ச்சிகள்

ii. சூழலை அறிதல் தொடர்பான தேர்ச்சிகள்.

iii. ஒழுகலாறு, சமயம் தொடர்பான தேர்ச்சிகள்.

iv. விளையாட்டும் ஓய்வு நேரப் பயன்பாடும் பற்றிய தேர்ச்சிகள்

v. கற்கக் கற்றல் தொடர்பான தேர்ச்சிகள்.

**64. 2003 ஆம் ஆண்டு தேசிய கல்வி ஆணைக்குழுவின் பரிந்துரைக்கமைய திருத்தியமைக்கப்பட்ட தேர்ச்சிகளில் மேலதிகமாகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட இரண்டு தேர்ச்சிகளும் எவை?**

i. ஆளுமை விருத்திக்குத் தேவையான தேர்ச்சிகள்.

ii. எதிர்கால வேலை உலகுக்குப் பழக்கப்படுதல் தொடர்பான தேர்ச்சிகள்.

**65. தொடர்பாடல் பற்றிய தேர்ச்சியில் அடங்கும் மூன்று தொகுதிகளும் எவை?**

i எழுத்தறிவு (கவனமாகச் செவிமடுத்தல், கருத்தறிந்து வாசித்தல், தெளிவாகவும், திருத்தமாகவும் எழுதுதல் ஆகியவற்றை உள்ளடக்கியது).

ii. எண்ணறிவு (பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்தல், எண்ணல், ஒழுங்கு முறையாக அளத்தல் ஆகியவற்றை உள்ளடக்கியது).

iii. சித்திர அறிவு (கோடு, உருவம் என்பனவற்றின் கருத்தை அறிதலும் விபரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகியவற்றைக் கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும், பதிவு செய்தலும் ஆகியவற்றை உள்ளடக்கியது).

**66. சூழல் தொடர்பான தேர்ச்சிகளுள் அடங்குவன யாவை?**

i. உயிரற்ற சூழல் (வாழும் உலகம், மனிதர்கள், உயிரியற் றொகுதி என்பவை பற்றிய விழிப்புணர்வும், நுண்ணுணர்வும், திறன்களும் இதில் அடங்குவன. மரங்கள், காடு, கடல், நீர், வளி, உயிரினம், விலங்கு, மனிதர் போன்றவை).

ii. சமூகச் சூழல் (சமூக அங்கத்தவர் பற்றிய விழிப்புணர்வும், நுண்ணுணர்வும், திறன்களும், சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமான துமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புகள், கடமைகள், கடமையுணர்ச்சிகள் என்பன)

iii. பௌதிகச் சூழல் (இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள் ஆகியன பற்றிய விழிப்புணர்வும், நுண்ணுணர்வும், திறன்களும், பொருள்களும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, வதிவிடம், சுகாதாரம், வசதி, சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், கழிவுகள் போன்றவற்றுடன் கொண்டுள்ள தொடர்புகளும் அடங்குவன).

**67. ஒழுகலாறு, சமயம் தொடர்பான தேர்ச்சிகளில் இடம் பெறுவன யாவை?**

இவை விழுமியங்கள், மனப்பாங்குகள் என்பவற்றை உள்ளடக்குகின்றன. அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்த மானதைத் தெரிவு செய்தல், ஒழுக்கம், அறம், சமயம் சார்ந்த நெறிநடத்தைகள், சடங்குகள், சம்பிரதாயங்களுக்குப் பொருத்த மாகச் செயற்படல், தனியாள் விழுமியங்களை மனதில் பதித்து அதற்கேற்ப நடத்தல் முதலானவை இதில் அடங்குவனவாகும்.

**68. நான்காவது தொகுதித் தேர்ச்சிகளில் இடம்பெறுவன யாவை?**

மனித தொழிற்பாட்டுடனான இன்பநுகர்ச்சி, மகிழ்ச்சி என்பவற்றை ஏற்படுத்தக் கூடிய விளையாட்டுக்கள், ஓய்வுநேரப் பயன்பாடுள்ள செயற்பாடுகள் இதில் அடங்குகின்றன.

**69. கற்கக் கற்றல் தேர்ச்சிகளில் இடம்பெறுவன யாவை?**

கருதுகோள்களைக் கட்டியெழுப்பி சிந்தனை விரிவாக்கம் பெறுதலையே "கற்கக் கற்றல்" எனப்படுகிறது. விரைவாக மாறுகின்ற, நெருக்கடியான, சிக்கலான உலகில் காலத்துக்கேற்பக் கல்வி புதுப்பிக்கப்படுதலும், மீளாய்வு செய்யப்படுதலும் இன்றியமையாதனவாகும். இதற்கு ஒருவர் தமது அவதானத்தை விழிப்புடனும், திறமையுடனும், நுண்ணுணர்வுடனும் மேற்கொள்ள வேண்டும். குறித்த

நிலைமைகள் தொடர்பாக விருப்பம், விடாமுயற்சி இருத்தல் வேண்டும். வாழ்க்கை முழுவதும் கற்கக் கற்றல் தத்துவத்தின் அடிப்படை இதுவேயாகும்.

**70. வேலை உலகுக்குப் பழக்கப்படுதல் தேர்ச்சியில் எவை அடங்குகின்றன?**

பல்வேறு தொழில்களின் அனுபவங்கள், சிறப்புத் தேர்ச்சிகள், எதிர்காலத்தில் பொருளாதார நலன்களுக்ககாகச் சில தொழில்களை விருப்புடன், நுணுக்கவுணர்வுடன், திறமையுடன் செய்யக்கூடிய ஆற்றல் ஆகியவை இதில் அடங்குகின்றன.

**71. ஆளுமை விருத்திக்குத் தேவையான தேர்ச்சிகளில் காணப்படுவன யாவை?**

ஆளுமை என்பது ஒருவரின் விருப்புகள், வெறுப்புகள், உளச் சார்புகள், தோற்றம், மனவெழுச்சி, தொடர்பாடல், தலைமைத் துவம், செயற்பாடுகள் முதலானவற்றின் கூட்டு மொத்தத் தொகுதியாகும். ஆளுமைத் திறன்களை ஆளுமைக் கூறுகளாக வளர்த்தெடுக்கக் கூடிய தேர்ச்சிகள் பொருத்தமாக இனங்காணப் பட்டுச் செயற்படுத்துதல் இதில் இடம்பெறும்.

**72. இலங்கையின் அன்றைய கல்வி முறையில் காணப்பட்ட அம்சங் களுக்கும் இன்றைய கல்வி முறையில் காணப்படும் அம்சங்களுக் கும் இடையிலான வேறுபாடுகள் யாவை?**

i. அறிவுள்ள பிரசையை உருவாக்குதல் அன்றைய கல்வியின் குறிக்கோளாக அமைந்தது. இன்று, தேர்ச்சி நிறைந்த பிரசையை உருவாக்குதல் குறிக்கோளாகவுள்ளது.

ii. அன்று ஆசிரியர் இல்லம், பன்சாலை, பிரிவெனா, மகாவிகாரை முதலான நிறுவனமாக்கப்பட்ட இடங்கள் கல்வியை வழங்கின. இன்று 1AB, 1C , தரம் 2, தரம் 3 வகைப் பாடசாலைகளும், தனியார் (சுதேச, சர்வதேச) பாடசாலை களும் கல்வியை வழங்குகின்றன. மேலும் கிராம, நகர, தோட்டப் பிரதேசப் பகுதிகள் கல்வி வழங்கும் இடங்களாக மாறியுள்ளன. முன்னர் குறிப்பிட்ட இடங்கள் மாத்திரமே செயற்பட்டன.

iii. கோட்பாட்டு அறிவைக் கொண்டதும், அன்றாடத் தேவைகளை நிறைவேற்றுவதும் அன்றைய காலக்

கலைத்திட்டத்திற்குரியது. இன்றைய கலைத்திட்டமானது சமூக, தனியாள் அபிவிருத்தியையும், எதிர்காலத் தேவைகள், தற்காலச் சவால்கள் ஆகியவற்றை வெற்றி கொள்வதற்கான பாடத்துறைகள் மூலமான தேர்ச்சிகளையும் கொண்டமைந்தது.

iv. ஆசிரியர் கல்வியைப் பொறுத்த வரையில் அன்றைய கல்வி முறையில் ஏற்றுக் கொள்ளத்தக்க கல்விக் கொள்கை இருக்கவில்லை. பயிற்சிக்குப் பதிலாக ஆசிரியருக்குச் சில திறன்கள் மட்டும் வழங்கப்பட்டன. அதுவும் பல்வேறு நிறுவனங்கள் மூலம் வழங்கப்பட்டது. இன்றைய கல்வித் திட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆசிரியர் கொள்கை ஓரளவுக்குக் காணப்படுகிறது. ஆசிரியர்க்கான சேவை முன் பயிற்சி, சேவைக் காலத் தொடருறு பயிற்சி ஆகியன ஒழுங்கமைக்கப்பட்ட நிறுவனங்கள் மூலம் வழங்கப் படுகின்றன. ஆசிரியர் அபிவிருத்தி (வாண்மை விருத்தி)யும் கருத்திற் கொள்ளப்படுகிறது.

v. அன்றைய இலங்கையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட தேசிய கல்விக் கொள்கை இருக்கவில்லை. இன்றைய காலத்தில் அது பற்றிய உணர்வுடன் செயற்படுவதை அவதானிக்க முடிகிறது.

**73. ஆரம்பக் கல்வி என்பதனால் கருதப்படுவது யாது?**

எந்தவொரு பிள்ளையினதும் முறைசார்ந்த கல்வியின் தொடக்கமாக அமைவதும், பாடசாலைக் கல்வியின் முதற்படி நிலைக்குரியதும் ஆரம்பக் கல்வி எனலாம்.

**74. 1992 இன் தேசிய கல்வி ஆணைக்குழுவின் கலைத்திட்டச் சிபார்சுகள் ஆரம்பக் கல்வியைப் பொறுத்து நடைமுறைக்கு வந்த ஆண்டு எது?**

1998 இல் கம்பஹா மாவட்டத்தின் முந்நூறுக்கு மேற்பட்ட பாடசாலைகளிலும் (384), 1999 முதல் நாடு முழுவதிலும் நடைமுறைக்கு வந்தது. 2003 ஆம் ஆண்டின் நிறைவில் ஆரம்பக் கல்விக் கலைத்திட்டம் தரம் 5 வகுப்புவரையில் முதலில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

**75. புதிய கல்விச் சீர்திருத்தத்தின்படி ஆரம்பக் கல்வி முறை எவ்வாறுள்ளது?**

*தரம் 1 - 2 முதன்மை நிலை - 1*
*தரம் 3 - 4 முதன்மை நிலை - 2*
*தரம் 5 முதன்மை நிலை - 3*

**76. புதிய கல்விச் சீர்திருத்தத்தின்படி ஆரம்பக் கல்விக் கலைத்திட்டம் எவ்வாறு அமைந்துள்ளது?**

i. முதன் மொழி, கணிதம், சமயம், சுற்றாடல்சார் செயற்பாடுகள் என நான்கு தொகுதிகளாகப் பாடங்கள் காணப்படல்.

ii. சுற்றாடல் சார் செயற்பாடுகளில் ஆரம்ப விஞ்ஞானம், சுற்றாடல், ஆக்கச் செயற்பாடுகள், ஆங்கிலம், இரண்டாம்மொழி (சிங்களம்/தமிழ்), கணினி அறிமுகம் ஆகிய பாடங்கள் அடங்குகின்றன.

iii. முதன் நிலை 1 இல் விளையாட்டுச் செயல்கள் அதிகமாகவும் எழுத்து வேலைகள் குறைவாகவும் காணப்படும். முதனிலை 2 இல் இரண்டும் சமமாகவிருக்கும். முதனிலை 3 இல் எழுத்து வேலைகள் கூடுதலாகக் காணப்படும்.

iv. தரம் 1 வகுப்பிலிருந்தே கணினி அறிமுகமும், ஆங்கில பாடம் வாய்மொழி, மூலமாகவும் எழுத்து மூலமாகவும் இடம் பெறும் (இது 2003 வரை வாய்மொழிமூலமாகவேயிருந்தது. முதனிலை 2 இல்தான் எழுத்து முறை பேணப்பட்டது).

v. 2003 இலிருந்தே கணினி பற்றிய அறிவும் தரம் - 1 வகுப்பிலிருந்தே தொடங்கப்பட வேண்டும் எனக் கூறப்பட்டது.

**77. இடைநிலைக் கல்விக்குரிய வயதெல்லையாகப் பெரும்பாலான உலக நாடுகளால் ஏற்றுக் கொள்ளப்பட்ட வயதெல்லை எது?**

*11 - 12 வயது தொக்கம் 18 - 20 வயது வரையுள்ள காலப்பகுதி.*

**78. இடைநிலைக் கல்வித் திட்டம் எவ்வாறு அமைதல் வேண்டும்?**

i. கட்டிளமைப் பருவ மாணவரிடையே நிகழும் உடல், நுண்ணறிவு, சமூக மாற்றங்களுக்குத் தக்கதாக விசேட வாழ்க்கைக்கு ஆயத்தம் செய்யும் கலைத்திட்டமாக அமைதல்.

ii. எதிர்காலத் தொழில் தேவைகளுக்குக் கவனஞ் செலுத்துவதாக அமைதல்.

iii. கட்டிளைஞர்களின் தற்கால, எதிர்காலத் தேவைகளை நிறைவு செய்வதாக அமைதல்.

iv. வாழ்க்கைக்கு இசைவாக்கம் அடையக்கூடியதாக அமைதல்.

v. விசேட அறிவுக்கு அத்திவாரம் இடுவதாக அமைதல்.

vi. தொழிலொன்றினை முனைப்புடன் செய்யக் கூடிய திறன்களை வழங்குவதாக அமைதல்.

vii. பண்புசார் தனிமனித அபிவிருத்தியையும், ஆளுமையையும் ஏற்படுத்துவதாக அமைதல்.

**79. 1943 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட நோர்வுட் அறிக்கையில் இடைநிலைக் கல்வியில் கலைத்திட்டம் தொடர்பாகக் கூறப் பட்டிருப்பது யாது?**

"இடைநிலைப் பாடசாலை வேலைத்திட்டம் தொழில் சார்ந்ததல்லவராயினும் குறிப்பாகத் தொழிலுக்கு ஆயத்தப் படுத்துவது ஆகும்"

**80. இடைநிலைக் கல்விக் கலைத்திட்டத்தில் அடங்கியிருக்க வேண்டிய பண்புகள் பற்றிக் கூறியவர் யார்? அவரது கருத்துக் களில் அடங்கியவை யாவை?**

வோல் (1977) என்பவராவர். தற்கால, எதிர்காலத் தேவை நிறைவு, வாழ்க்கைக்கு இசைவாக்கமடைதல், விசேட அறிவுக்கு அத்திவாரமிடுதல், தொழிலொன்றில் முனைப்பு ஆகிய பண்புகள் பற்றி வோல் குறிப்பிட்டுள்ளார்.

**81. 1998 செப்டெம்பர் மாதம் முதல் இலங்கைப் பாடசாலைகளில் அறிமுகப்படுத்திய உயர்தர வகுப்புகளுக்கான கலைத்திட்டத்தில் இடம்பெற்றுள்ள பிரதான அம்சங்கள் யாவை?**

i. இதுவரையிருந்த நான்கு பாடங்கள் மூன்றாகக் குறைக்கப் பட்டன.

ii. பாடங்கள் பன்முகப்படுத்தப்பட்டன. கணிதத் துறையில் இணைந்த கணிதமும், விஞ்ஞானத்துறையில் உயிரியலும் புகுத்தப்பட்டன.

iii. குறித்த பாடங்களுக்கான செயன்முறை வேலைகள், செயற்றிட்ட வேலைகள் கட்டாயமாக்கப்பட்டன (குறைந்தது 02 செயற்றிட்டங்கள் கட்டாயம்).

iv. பொதுச் சோதனை வினாப்பத்திரமொன்று கிரகித்தல், பொது அறிவு ஆகியவற்றை உள்ளடக்கியதாக அறிமுகஞ் செய்யப்பட்டது.

v. பொது ஆங்கிலம் அறிமுகஞ் செய்யப்பட்டது.

**82. இன்று இலங்கையில் செயற்படும் புராதன தேசியக் கல்வி நிலையங்கள் யாவை?**

i. பௌத்த சமயஞ் சார்பானவை

மகாவிகாரை, பிரிவெனா, பன்சல

ii. இந்து சமயஞ் சார்பானவை

குருகுலப்பள்ளி, திண்ணைப் பள்ளி, மடாலயங்கள், சங்கங்கள்

iii. இஸ்லாம் சமயஞ் சார்பானவை

மக்தப் மதரசாக்கள்



# 11.விளைதிறன் மிக்க பாடசாலை

**01. வினைதிறன் என்றால் என்ன?**

கிடைக்கக் கூடிய மனித, பௌதீக வளங்களை விரய மாக்காது பயன்படுத்தி உச்சப் பயனை அடையச் செய்தல் வினைதிறன் எனப்படும்.

**02. விளைதிறன் என்றால் என்ன?**

தீர்மானிக்கப்பட்ட அல்லது எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அல்லது நோக்கங்களை வினைத்திறனுடைய செயற்பாட்டின் மூலம் அடைந்து கொள்ளுதல் விளைதிறன் எனப்படும். அதாவது உள்ளீடுகளை உச்ச அளவில் விருத்தி செய்து பெற்றுக் கொள்ளும் வெளியீடுகள் ஆகும்.

**03. விளைதிறனுடைய பாடசாலை என்பதனால் கருதப்படுவது யாது?**

ஒரு பாடசாலையானது எதிர்பார்க்கப்பட்ட அல்லது தீர்மானிக்கப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்ளுமாயின் அது விளை திறன் மிக்க பாடசாலை எனப்படும்.

**04. விளைதிறன் மிக்க பாடசாலையொன்று கொண்டிருக்க வேண்டிய பண்புகள் பற்றிக் குறிப்பிட்டுள்ள கல்வியியலாளர் சிலரின் பெயர்களைக் குறிப்பிடுக.**

i. கெலின்ஜர் (1987)
ii. பேர்க்கி, சிமித் ஆகியோர் (1983) Purkey and smith.
iii. பீட்டர் டோட்டோ
iv. எச்.லெவின், ஈ.லொக்ஹீட் ஆகியோர் (1993)

**05. இலங்கை தேசிய கல்வி நிறுவகம் 1992 இல் வெளியிட்ட 'நற்பாடசாலை' என்னும் நூலில் காணப்படும் விளைதிறன் மிக்க பாடசாலையின் பண்புகள் யாவை?**

i. சிறந்த அதிபர் காணப்படல்.
ii. நல்லாசிரியர் குழாம் காணப்படல்.
iii. மாணவரின் கல்வி எதிர்பார்ப்பு உயர்வாகக் காணப்படல்
iv. பாடசாலையுடனான பெற்றோர் - ஆசிரியர் தொடர்பு உயர்வாகக் காணப்படல்.
v. சிறந்த திட்டமிடல், ஒழுங்கமைப்பு காணப்படல்.
vi. செயற்றிறன் வாய்ந்த ஆய்வு கலாசாரம் காணப்படல்.
vii. பிரச்சினைகள் முறையாகத் தீர்க்கப்படல்.

**06. கெலினஜர் குறிப்பிட்டுள்ள விளை திறன் மிக்க பாடசாலை யொன்றின் ஏழு பண்புகளும் யாவை?**

i. தெளிவான இலக்கு இருத்தல்
ii. நன்கு திட்டமிடப்பட்ட கலைத்திட்டம் மூலம் மாணவர் விருத்தி காணப்படல்.
iii. ஆசிரியர் குழுவின் உயர்வான எதிர்பாக்கை நிலவுதல்.
iv. ஆசிரியர் குழுவின் உயர்வான அர்ப்பணிப்புக் காணப்படல்.
v. சிறப்பான பாதுகாப்புச் சூழல் காணப்படல்
vi. பொதுமக்களுடனான பாடசாலைத் தொடர்பு உயர் மட்டத்தில் இருத்தல்.
vii. பாடசாலையின் பிரச்சினைகள் தீர்க்கப்படல்.

**07. விளைதிறன் மிகக் பாடசாலை தொடர்பாகப் பெரிய பிரித்தானியா வின் பீட்டர் டோட்டோவின் கருத்துக்களில் காணப்படும் பிரதான அம்சங்கள் எவை?**

i. அதிபரின் நோக்கமும் தலைமைத்துவமும்
ii. பிரதி அதிபர் பாடசாலைச் செயற்பாடுகளில் வழங்கும் ஒத்துழைப்பு.
iii. ஆசிரியர்களின் பங்களிப்பு.
iv. ஆசிரியர்களுக்கிடையிலான சிறந்த இடைத் தொடர்பு.
v. நேர அட்டவணை சிறப்பாக நடைமுறைப்படுத்தல்.
vi. அறிவுவிருத்தியை அடைப்படையாகக் கொண்ட கற்பித்தல்.
vii. செற்பாட்டை அடிப்படையாகக் கொண்ட சூழல்
viii. ஆசிரியர் மாணவருக்கிடையிலான சிறந்த தொடர்பாடல்.
ix. அறிக்கையிடல்
x. பெற்றோர், பொதுமக்கள் ஆகியோரின் ஒத்துழைப்பு.
xi. பாடசாலையில் ஆக்கபூர்வமான நிலைப்பாடொன்று காணப்படல்.

**08. எச்.லெவீன், ஈ. லொக்ஹீட் ஆகியோர் குறிப்பிட்டுள்ள விளைதிறன் மிக்க பாடசாலையொன்றின் பண்புகள் யாவை?**

i. பாடசாலையின் கல்வித் தத்துவம்
ii. மாணவர் தேவைகளைப் பூர்த்தி செய்தல்
iii. ஆசிரியர்கள் பங்குபற்றல்
iv. சிறந்த தலைமைத்துவம்
v. வளமுகாமைத்துவம்
vi. பாடசாலையின் சிறந்த சூழ்நிலை.

**09. விளைதிறன் மிக்க பாடசாலையொன்றிற்கான ஆசிரியரின் பங்களிப்புக்குரிய பிரதான செயற்பாடுகள் யாவை?**

i. கலைத்திட்ட முகாமைத்துவத்தை இலகுபடுத்தும் ஒழுங் கமைப்பினைப் பேணல்.

ii. அன்னியோன்னியமான கற்றல் மேற்பார்வையை மேற் கொள்ளல்.

iii. நேரத்தை விரயமாக்காத கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடல்.

iv. மாணவரின் திறன் விருத்தியடையுமாறு பாடங்களைக் கற்பித்தல்.

v. பொருத்தமான எல்லா வேளைகளிலும் வகுப்பறையில் கற்றல் கற்பித்தல் உத்திகளைப் பயன்படுத்தல்.

vi. முறையான வேலைத்திட்ட அடிப்படையில் மாணவர்களுக்கு வீட்டு வேலை வழங்குதல்.

vii. மாணவர்களின் உயர்ந்த, தாழ்ந்த அடைவு மட்டங்களை அறிந்து அதற்கேற்பக் கற்றலை முன்னெடுத்தல்.

viii. அனைத்து மாணவர்களும் எல்லாப் பாடங்களிலும் குறைந்தபட்ச அடைவு மட்டத்தை அடைந்து கொள்ள உதவுதல்.

ix. மாணவர்களின் கற்றல் அடைவுநிலை தொடர்பாக அவ்வப்போது பெற்றோருக்கு விளக்குதல்.

x. கலைத்திட்டப் பிரச்சினைகள் தொடர்பாக மேல்மட்ட அதிகாரிகளுடன் கருத்துப் பரிமாறல்.

xi. உரிய காலத்தில் பாடத்திட்டத்தினை நிறைவு செய்தல்.

xii. இணைப் பாடவிதானச் செயற்பாடுகளை மகிழ்ச்சிகரமான முறையில் நடைமுறைப்படுத்தல்.

**10. விளைதிறன் மிக்க பாடசாலையொன்றில் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளை மாணவரிடையே முன்னெடுக்கும் போது ஆசிரியர் கவனத்திற் கொள்ள வேண்டியவை யாவை?**

i. மாணவரிடையே முழுமையான அபிவிருத்தி ஏற்படும் வித்தில் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளை நடைமுறைப் படுத்தல்.

ii. உடல், உள, மனவெழுச்சி, ஒழுக்க, சமூக வளர்ச்சியி னூடாகச் சமநிலை ஆளுமையை ஏற்படுத்தக் கூடியவாறு இணைப்பாடவிதானச் செயற்பாடுகளை மாணவரிடையே முன்னெடுத்தல.

iii. இணைப் பாடவிதானச் செயற்பாடுகளினூடாக அழகியல், தொழில்சார் விடயங்களில் மாணவரின் ஆற்றலை வளர்த்தெடுத்தல்.

iv. இணைப் பாடவிதானச் செயற்பாடுகளைப் பாடசாலை நேரம் தவிர்ந்த வேளைகளில் நடைமுறைப்படுத்தல்.

v. வகுப்பறைமட்டம், பாடசாலை மட்டம் ஆகியவற்றில் மாணவரிடையேயான பல்துறைசார் போட்டிகளை ஒழுங்கமைத்தல்.

vi. கோட்டம், மாவட்டம், மாகாணம், அகில இலங்கை ஆகிய மட்டங்களிலான போட்டிகளில் மாணவரைப் பங்குபற்றச் செய்தலும் ஊக்குவித்தலும்.

vii. இணைப் பாடவிதானச் செயற்பாடுகளின் போது மாணவர்களுடன் ஆசிரியர்களும் பங்குபற்றலை மேற்கொள்ளல்.

viii. மாணவர்களினிடையே காணப்படும் தனியாள் வேறுபாடுகளையும் ஆற்றல்களையும் இனங்கண்டு, அதற்கேற்றவாறு பொருத்தமான துறைச் செயற்பாடுகளில் அவர்களை அபிவிருத்தி செய்தல்.

ix. பாரபட்சங் காட்டாது அனைத்து மாணவர்களுக்கும் இணைப் பாடவிதானச் செயற்பாடுகளில் சமவாய்ப்பு, சமநீதி என்பவற்றை நிலை நாட்டல்.

இத்தகைய செயற்பாடுகளைக் கவனத்திற் கொண்டு ஆசிரியர் இணைப் பாடவிதான செயற்பாடுகளை மேற்கொள்வது, விளைதிறன் மிக்க பாடசாலையொன்றில் காணப்படும் உயரிய பண்பாகும்.

**11. விளைதிறன் மிக்க பாடசாலையொன்றில் ஆசிரியர்களின் அபிவிருத்தி தொடர்பாக அதிபர் மேற்கொள்ள வேண்டிய பணிகள் யாவை?**

i. தொடர்ச்சியானதும், ஒழுங்கமைக்கப்பட்டதுமான செயற்பாடுகளின் மூலம் ஆசிரியர்களின் அபிவிருத்தி ஏற்படச் செய்தல் வேண்டும்.

ii. அதிபரால் பாடசாலை மட்டத்தில் ஆசிரியர் அபிவிருத்திக்கான நிகழ்ச்சிகள் ஒழுங்கமைக்கப்படல் வேண்டும்.

iii. ஆசிரியரின் வாண்மை விருத்திக்குகந்த பாடரீதியான , முகாமைரீதியான, தொடர்பாடல் ரீதியான, ஒழுக்க ரீதியான செயலமர்வுகளைப் பொருத்தமான வேளைகளில் ஏற்பாடு செய்ய வேண்டும்.

iv. ஆசிரியர்கள் தாம் சார்ந்த துறைகளில் மேற்படிப்பினை மேற்கொள்வதற்கு அதிபர் துணைபுரிதல் வேண்டும்.

v. ஆசிரியர்களின் ஆளுமை விருத்திக்கான வாய்ப்புகளையும் பாடசாலைச் செயற்பாடுகளுக்குப் பாதிப்பு ஏற்படாவண்ணம் பாரபட்சமின்றி வழங்கி உதவ வேண்டும்.

vi. ஆசிரியரிடையேயான மேற்பார்வை மூலம் அவர்களின் இயலுமைகள், இயலாமைகள் ஆகியவற்றை இனங்கண்டு அபிவிருத்தி செய்தல் வேண்டும்.

vii. ஆசிரியர்கள் தொடர்பான பிரச்சினைகளை அக்கறையுடன் தீர்த்து வைத்தல் மூலம் அவர்களது ஒத்துழைப்பைப் பெறல் வேண்டும்.

**12. வெற்றிகரமான (விளைதிறன் மிக்க) பாடசாலையொன்றின் ஒழுங்கமைப்பு எவ்வாறு காணப்படுதல் வேண்டும்?**

i. சனநாயகத் தன்மையுடன் காணப்படல் வேண்டும்.

ii. நம்பகத்தன்மை வாய்ந்ததாக விளங்குதல் வேண்டும்.

iii. வேலை செய்வதற்கு இலகுவானதாய் அமைதல் வேண்டும்.

iv. மேலிருந்து கீழ்நோக்கி விரிவடையும் அபிவிருத்திப் போக்குக்குப் பதில் சமாந்தரமான அல்லது வலையமைப்பு ரீதியான அபிவிருத்திக் கட்டமைப்பு காணப்படல் வேண்டும்.

v. வினைத்திறன் வாய்ந்த முறையில் பணிகள் நடைபெற வேண்டும்.

vi. நிர்வாகக் கட்டமைப்பில் வினைத்திறனுடைய தொடர்பாடல் முறையொன்று காணப்படல் வேண்டும்.

vii. ஒவ்வொரு மட்டத்திலுமுள்ள ஆளணியினரிடையே சிறப்பான தொடர்புகள் கட்டியெழுப்பப்படல் வேண்டும்.

viii. நபர்களுக்கிடையே புரிந்துணர்வும் ஒத்துழைப்பும் காணப்பட வேண்டும்.

ix. பாடசாலைக்கும் மக்களுக்கும் இடையிலான தொடர்பு உயர்வான மட்டத்தில் இருத்தல் வேண்டும்.

x. சிறப்பான பௌதிகவள முகாமைத்துவமும் காணப்பட வேண்டும். மேம்பாடுள்ள சமூக, உளவியற் சூழலுடன் காணப்பட வேண்டும்.

**13. விளைதிறன் மிக்க உவப்பான பாடசாலைச்சூழலுடன் கூடிய பாடசாலையொன்றின் மக்கள் தொடர்பு உயர்ந்த மட்டத்தில் இருப்பதற்கான சூழ்நிலைகள் எவ்வாறு காணப்பட வேண்டும்?**

i. பாடசாலையின் சுற்றாடலிலுள்ள அல்லது பிரதேசத்திலுள்ள எல்லாப் பிள்ளைகளும் அங்கு கல்வியைப் பெற்றுக் கொள்வதற்கு இடமளித்தல்.

ii. பாடசாலையின் அமைவிடச் சூழலிலுள்ள மக்களின் குறைபாடுகளை, பலவீனங்களை பாடசாலை முகாமை அறிந்திருத்தல். அதே போன்று அவர்களது பலங்களையும், ஆற்றல்களையும் முகாமை அறிந்திருத்தல்.

iii. பாடசாலை மக்களுக்கும், மக்கள் பாடசாலைக்கும் பயன் பெறத்தக்க நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தல்.

iv. பாடசாலைப் பணிகளுக்காக மக்களின் ஒத்துழைப்பைப் பெறல்.

v. பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பெற்றோர்கள், பழைய மாணவர் சங்கத்தினர், நலன்விரும்பிகள் ஆகியோரது பாடசாலைக்கான பங்குபற்றலையும், ஒத்துழைப்பையும் வினைத்திறன் வாய்ந்ததாகக் கட்டியெழுப்பல்.

vi. பாடசாலையின் தனித்துவமும், நற்பெயரும் காப்பாற்றப்படக் கூடியவாறு அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழையமாணவர்கள், ஏனைய பாடசாலைச் சமூகத்தினர் யாவரும் ஒருங்கிணைந்து அர்ப்பணிப்புடன் செயற்படல்.

**14. பாடசாலை ஒன்றுக்கும் அதனைச் சார்ந்த மக்களுக்கும் இடையில் உவப்பான நல்லுறவு பேணப்படுவதனால் கிடைக்கக் கூடிய நன்மைகள் யாவை?**

i. மாணவரிடையே அபிவிருத்தி ஏற்படல்.

ii. கற்றல் – கற்பித்தல் செயன்முறையில் அபிவிருத்தி ஏற்படல்.

iii. பாடசாலையில் அபிவிருத்தி ஏற்படல்.

iv. பாடசாலை சார்ந்த அறிவும் ஆற்றலுமுள்ள மக்கட் சமூகம் உருவாதல்.

**15. விளைதிறன் மிக்க பாடசாலையினால் உருவாக்கப்படும் மாணவர் எதிர்காலத்தில் எவ்வாறு காணப்படுவார் என நம்பப்படுகிறது?**

i. நாட்டின் பொருளாதாரத்திற்கு.

ii. எதிர்கால உலகத்துக்கு.

iii. உலகின் நவீன தொழினுட்பங்களுக்கு இசைவடைபவர்களாக விளங்குவர் என நம்பப்படுகிறது.

**16. இலங்கையில் தேசிய கல்வி ஆணைக்குழு எப்போது தாபிக்கப்பட்டது?**

*1991 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்கத் தேசிய கல்வி ஆணைக்குழுச் சட்டத்தின் பிரகாரம் தாபிக்கப்பட்டது.*

**17. தேசிய கல்வி ஆணைக்குழுவின் பிரதான பணிகள் யாவை?**

i. *இலங்கையின் கல்விக் கொள்கைகள், திட்டங்களை மீளாய்வு செய்தல்.*

ii. *தேசிய கல்விக் கொள்கைகள் தொடர்பாகச் சனாதிபதிக்கு விதப்புரை செய்தல்.*

iii. *சனாதிபதியினால் கல்வி ஆணைக்குழுவுக்கு வழிப்படுத்தப் படும் கல்வி தொடர்பான விடயங்களில் சனாதிபதிக்கு ஆலோசனை வழங்கல்.*

**18. தேசிய கல்வி ஆணைக்குழுவானது கல்வி தொடர்பாகச் சனாதிபதிக்கு வழங்கக் கூடிய ஆலோசனைகளுக்கு உதாரணங்கள் தருக.**

i. *தொழில் வாய்ப்பு, கைத்தொழில்கள், சமூகத் தேவைகள் முதலானவற்றுக்குப் பொருந்தக்கூடிய விதத்தில் கலைத் திட்டம், கற்பித்தல் முறைகள் போன்றவற்றில் ஏற்படுத்த வேண்டிய மாற்றங்கள் பற்றி ஆலோசனை கூறல்.*

ii. *கல்வி நிறுவன மாணவர்களுக்கு, அவர்களது சுய ஆற்றலைப் பூரணமாக விருத்தி செய்து கொள்ளத்தக்கவாறு வழிகாட்டல், ஆலோசனை கூறல்.*

iii. *ஆசிரியர்கள், கல்விப்பணியாளர்கள் ஆகியோரது வாண்மை விருத்திக்கேற்ற நடிவடிக்கைகள் பற்றி ஆலோசனை கூறல்.*

iv. *நடைமுறைக் கல்விச் செயற்பாடுகளிலுள்ள குறைபாடுகளை இனங்கண்டு அவற்றை நீக்குவதற்கான வழிமுறைகள் தொடர்பாக ஆலோசனை கூறல்.*

**19. இலங்கையின் பிரதான கல்வி சார்ந்த நிறுவனங்கள் யாவை?**

i. *தேசிய கல்வி ஆணைக்குழு.*

ii. *கல்வி அமைச்சு.*

iii. *தேசிய கல்வி நிறுவகம்.*

iv. *மாகாணக் கல்வி அமைச்சுக்கள்.*

v. *மாகாணக் கல்வித் திணைக்களங்கள்.*

vi. *வலயக் கல்வி அலுவலகங்கள்.*

vii. தேசிய கல்விக் கல்லூரிகள்.
viii. ஆசிரியர் கல்லூரிகள் (கலாசாலைகள்)
ix. ஆசிரியர் மையங்கள் Teachers centers.
x. கோட்டக் கல்வி அலுவலகங்கள்.
xi. பல்கலைக்கழகங்கள்.
xii. பாடசாலைகள்.
xiii. தொழினுட்பக் கல்லூரிகள்.
xiv. விசேட துறைசார் பயிற்சிப் பாடசாலைகள்.

**20. இலங்கைக் கல்வியமைச்சின் பொறுப்பாக விளங்குவன யாவை?**

i. இலங்கைக் கல்வித்துறைக்கான கல்விக் கொள்கைகளை வகுத்தல்.
ii. கல்வி நிருவாகம்.
iii. கலைத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தல்.
iv. நாட்டுக்குப் பொருத்தமான தேசியக் கல்வி முறையொன்றினை வினைத்திறனுடனும் விளைதிறனுடனும் நடைமுறைப்படுத்தல்.

**21. இலங்கையில் கல்வித் துறை சார்ந்து செயற்படும் அமைச்சுக்கள் எவை?**

i. கல்வி அமைச்சு.
ii. உயர் கல்வி அமைச்சு.
iii. கல்விச் சேவைகள் அமைச்சு.

**22. இலங்கைத் தேசிய கல்வி நிறுவகம் எப்போது நிறுவப்பட்டது?**

*1985* ஆம் ஆண்டு *28* ஆம் இலக்கத் தேசிய கல்வி நிறுவகச் சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்டது.

**23. தேசிய கல்வி நிறுவகத்தின் பிரதான நோக்கங்கள் அல்லது குறிக்கோள்கள் யாவை?**

i. இலங்கையில் கல்வி அபிவிருத்திக்கான திட்டங்கள், வேலைத்திட்டங்கள், செயற்பாடுகள் தொடர்பாகக் கல்வி அமைச்சருக்கு ஆலோசனை வழங்கல்.
ii. கல்வியின் வெவ்வேறு சிறப்புத் துறைகளில் பட்டப்பின் கல்வியை வழங்குதலும், மேம்படுத்துதலும்.
iii. கல்விக் குறிக்கோள்களை நடைமுறைப்படுத்துதல், விடய உள்ளடக்கம், கல்வியின் சமூக, பொருளாதார அம்சங்கள்,

ஏனைய அம்சங்கள் தொடர்பாக ஆய்வு செய்தலும், ஊக்கப்படுத்தலும்.

iv. கல்விச் செயற்பாடுகளுக்காகத் தொழினுட்பத்தைப் பிரயோகித்தலும், புதுமைப்பாட்டுச் செயன்முறைகளை ஆரம்பித்தலும், அவற்றை விருத்தி செய்தலும்.

v. கல்வித்துறையில் ஈடுபட்டுள்ள பணியாளர்களின் தொழில்சார் வாண்மை விருத்திக்கும், முகாமைத்துவ விருத்திக்கும் ஆவன செய்தல்.

vi. அரசுக்கும் ஏனைய அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களுக்கும் கல்வி தொடர்பான நிபுணத்துவ சேவையை வழங்குதல்.

vii. கல்வி அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட கல்வி வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

viii. ஒத்த குறிக்கோள்களைக் கொண்ட பிற நிறுவனங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளல்.

**24. தேசிய கல்வி நிறுவகத்தின் நோக்கக் கூற்று (Vision) யாது?**

"To be a centre of excellence in providing leadership for quality education in a pluralistic and dynamic society".

**25. தேசிய கல்வி நிறுவகத்தின் பணிக்கூற்று (Mission) யாது?**

"To provide quality education for all by developing curricular, enhancing professionalism and engaging in research to empower learners to realize their potential to build a humane society"

**26. தேசிய கல்வி நிறுவகத்தினால் கல்வியின் தரத்தை உயர்த்துவதற்காக மேற்கொள்ளப்படும் பணிகள் யாவை?**

i. கலைத்திட்டத்தை ஒழுங்கமைத்தல்.

ii. ஆசிரியர்களை வலுவூட்டல் செய்தல்.

iii. கல்வியில் துறைசார் நிபுணத்துவம் பெறச் செய்தல்.

iv. கல்வித் தரத்தை மேம்படுத்தும் ஆய்வுகளில் ஈடுபடுதல்.

v. முகாமைத்துவப் பயிற்சி வழங்குதல்.

**27. தேசிய கல்வி நிறுவகத்தின் கீழ் செயற்படும் கல்வித் துறைகள் யாவை?**

i. கல்வி நிருவாக - முகாமைத்துவக் கல்வித்துறை.

ii. ஆசிரியர் கல்வித்துறை.

iii. தொலைக் கல்வித்துறை.
iv. விசேட கல்வித்துறை.
v. ஆரம்பக் கல்வித்துறை
vi. ஆங்கிலக் கல்வித்துறை.
vii. அழகியற் கல்வித்துறை.
viii. மொழிகள், சமயங்கள் , சமூகக்கல்வித்துறை.
ix. முறைசாராக் கல்வி, தொழிற்கல்வித்துறை.
x. விஞ்ஞான, கணிதத்துறை.
xi. கணினிக் கல்வித்துறை.

**28. தேசிய கல்வி நிறுவகத்தினால் மேற்கொள்ளப்படும் ஆசிரியர் களுக்கான பயிற்சி நெறிகள் யாவை?**

i. பட்டப்பின் கல்வி டிப்ளோமாப் பயிற்சி நெறி.
ii. கல்விப் பட்டப் பாடநெறி (கல்விமாணி).
iii. தொலைக்கல்விச் சேவை மூலம் பயிற்றப்படாத ஆசிரியர் களுக்கான பயிற்சி நெறி.
iv. விசேட கல்வி தொடர்பான கல்வியியல் பட்டப் பாடநெறி.
v. இரண்டாம் மொழியாக ஆங்கிலம் கற்பித்தலுக்கான டிப்புளோமாப் பயிற்சி நெறி.

**29. தேசிய கல்வி நிறுவகமானது ஆசிரியர்களின் தொழில்சார் அபிவிருத்திக்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை?**

i. பட்டதாரி ஆசிரியர்களுக்காகப் பட்டப்பின் கல்வி டிப்புளோமாவை நடத்துததல்.
ii. பயிற்றப்படாத ஆசிரியர்களுக்காகத் தொலைக்கல்வி மூலமான பயிற்சிகளை வழங்குதல் (தற்போது இப் பயிற்சி நிறுத்தப்பட்டுள்ளது).
iii. கல்வித்துறையில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள், அதிகாரிகள், ஆலோசகர்கள் ஆகியோருக்கான B.Ed, M.Ed, MSC, முதலான பட்டநெறிகளை நடத்துதல்.
iv. ஆசிரியர்களின், கல்வியியலாளர்களின் தொழில்சார் அபிவிருத்திக்காகக் கருத்தரங்குகள், செயலமர்வுகள் ஆகியவற்றை ஒழுங்கமைத்தல்.
v. ஆசிரியர் கல்வி நிறுவனங்களின் கலைத்திட்டங்களைப் பதிப்பித்தல்.

vi. ஆசிரியர் கல்வி தொடர்பான பத்திரிகைகள், சஞ்சிகைகளை வெளியிடல்.

vii. ஆசிரியர் கல்வி தொடர்பான நிறுவனங்களுக்கு ஆலோசனைச் சேவைகளை வழங்குதல்.

viii. ஆசிரியர்கள், கல்வியியலாளர்கள் ஆகியோரின் தொழில் சார் அபிவிருத்திக்கான புதிய அறிவு, அனுபவம் ஆகிய வற்றையும், பொருட்களையும் பெற்றுக் கொடுத்தல்.

**30. கல்வி முகாமைத்துவம், நிர்வாகம் தொடர்பான செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள அதிபர்கள், கல்வி நிர்வாக சேவை உத்தியோகத் தர்கள் முதலியோரின் தொழில்சார் அபிவிருத்திக்காகத் தேசிய கல்வி நிறுவகம் வழங்கும் வேலைத்திட்டங்கள் யாவை?**

i. கல்வி முகாமைத்துவம் தொடர்பான பட்டப்பின் டிப்புளோமாப் பாடநெறித் திட்டம்.

ii. முகாமைத்துவ முதுமாணிப் பட்டப் பாடநெறித் திட்டம்.

iii. அதிபர்கள், கல்வி நிர்வாக சேவை அதிகாரிகள் ஆகியோருக் கான பயிற்சியளித்தல்.

iv. வெளியீட்டு முகாமைத்துவச் செய்திட்டத்தினை மேற் கொள்ளல்.

v. அதிபர்களுக்கான தொலைநிலை முகாமைத்துவச் செய்திட்டத்தினை மேற்கொள்ளல்.

vi. ஆராய்ச்சிகள், வெளியீடுகள் தொடர்பான செய்திட்டங் களை நடைமுறைப்படுத்தல்.

**31. தேசிய கல்வி நிறுவகத்தின் முகாமைத்துவச் செயன்முறைக் கட்டமைப்பு எவ்வாறு அமைந்துள்ளது?**

i. தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் சபையின் கீழ் பணிப்பாளர் நாயகம் செயற்படுவார்.

ii. பணிப்பாளர் நாயகத்தின் கீழ் பிரதிப் பணிப்பாளர் நாயகம் செயற்படுவார்.

iii. பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் கீழ் ஆறு பிரிவுகள் இயங்குகின்றன. அவை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு உதவிப் பணிப்பாளர் நாயகம் பொறுப்பாக இருக்கிறார்.

அந்த ஆறு முக்கிய பிரிவுகளும் வருமாறு:

1. மொழிகள், மனிதத்துவம், சமூக விஞ்ஞானத்துறை.
2. விஞ்ஞான, தொழினுட்பத்துறை.
3. கல்வித் தலைமைத்துவ அபிவிருத்தியும் ஆசிரியர் கல்வித்துறையும்.

4. எல்லோருக்குமான கல்வித்துறை.
5. ஆய்வுத் திட்டமிடலுக்கும் அபிவிருத்திகளுமான துறை.
6. பொது நிதியும் நிர்வாகத் தொழினுட்பமும் சார்ந்த துறை.

iv. முதலாவது பிரிவில் சிங்களம், தமிழ், ஆங்கிலம், அழகியல், சமயங்கள், சமூகவிஞ்ஞானம், முன் பிள்ளைப் பருவமும் ஆரம்பக் கல்வியும் ஆகியவற்றுக்கான திணைக்களங்கள் காணப்படுகின்றன.

v. இரண்டாவது பிரிவில் விஞ்ஞானம், சுகாதாரமும் உடற் கல்வியும், கணிதம், தொழினுட்பக் கல்வி, வணிகக் கல்வி, தகவல் தொழினுட்பம் ஆகியவற்றுக்கான திணைக்களங்கள் காணப்படுகின்றன.

vi. மூன்றாவது பிரிவில் பாடசாலை முகாமைத்துவம், கல்வி நிர்வாகம், ஆசிரியர் வாண்மை, நிறுவன அபிவிருத்தி, பரீட்சைகள் ஆகியவற்றுக்கான திணைக்களங்கள் காணப்படுகின்றன.

vii. நான்காவது பிரிவில் திறந்த பாடசாலை, இலத்திரனியல், இடைவிலகல், நூலகமும் வெளியீடுகளும், கல்விப் பெறுமானம் முதலானவற்றுக்கான திணைக்களங்கள் காணப்படுகின்றன.

viii. ஐந்தாவது பிரிவில் ஆய்வும் அபிவிருத்தியும், திட்டமிடலும் மதிப்பீடும் ஆகியவற்றுக்கான திணைக்களங்கள் காணப் படுகின்றன.

ix. ஆறாவது பிரிவில் நிதி, நிர்வாகம், பொறியியற் சேவை என்பனவற்றுக்கான திணைக்களங்கள் காணப்படுகின்றன.

**32. மாகாணக் கல்வி அமைச்சின் நிர்வாகப் பணிகள் எவ்வாறு அமைந்துள்ளது?**

i. மாகாணங்களின் கல்வி அமைச்சுச் செயலாளர்களின் தலைமையில் மாகாணக் கல்வி நிர்வாகம் மேற்கொள்ளப் படுகிறது. இலங்கையில் ஒன்பது மாகாணங்களும் அவற்றுக் கான மாகாண சபைகளும் இயங்குகின்றமை குறிப்பிடத் தக்கது.

ii. மாகாணக் கல்வி அமைச்சினால் குறிப்பிட்ட மாகாணத் தினுள் நியமனங்கள், இடமாற்றங்கள், பதவியுயர்வுகள் ஆகிய அனைத்தும் செயற்படுத்தப்படும்.

iii. மாகாணத்தில் ஆசிரியர்களை ஒழுங்கமைக்கும் போது மாகாணக் கல்விப் பணிப்பாளரின் சிபார்சுகள் பெறப்படும்.

iv. மாகாணத்தினுள் பௌதிக வளங்களைப் பகிர்ந்தளித்தல், அவற்றை இணைப்பாக்கம் செய்தல் ஆகியவை மாகாணக் கல்வி அமைச்சினால் மேற்கொள்ளப்படும்.

v. மாகாணக் கல்வியமைச்சின் செயலாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர், மாகாண மேலதிகக் கல்விப் பணிப்பாளர், உதவிக் கல்விப்பணிப்பாளர்கள் என்றவாறு நிர்வாக நடைமுறை காணப்படும்.

**33. மாகாணக் கல்வித் திணைக்களத்தின் பணிகள் யாவை?**

i. மாகாணக் கல்வியமைச்சின் கீழ் அந்தந்த மாகாணக் கல்வித் திணைக்களம் இயங்குகிறது. மாகாணக் கல்விப் பணிப் பாளர் அதன் தலைவராவர். மாகாணக் கல்வியமைச்சு மற்றும் கல்வி அமைச்சு ஆகியவற்றுடனான இணைப் பாக்கம் செய்யும் பணியை இவரே மேற்கொள்வார்.

ii. மாகாணக் கல்வித் திணைக்களத்தின் பிரதான பணிகள் சில வருமாறு:

1. திட்டமிடல்.
2. பொதுவான நிருவாக அலுவல்கள்.
3. கல்வி நிருவாக அலுவல்கள்.
4. நிறுவன அலுவல்கள்.
5. பௌதிக வளங்கள் பற்றிய அலுவல்கள்.
6. கற்றல் கற்பித்தல் சாதனங்கள் தொடர்பான அலுவல் கள்.
7. கல்விச் சேவை அலுவல்கள்.
8. கல்வி அபிவிருத்தி அலுவல்கள்.
9. பாடசாலை மேற்பார்வை அலுவல்கள்.
10. பரீட்சைகள் சார்ந்த அலுவல்கள்.

**34. வலயக் கல்வி அலுவலகங்களின் செயற்பாடுகள் எத்தகையன?**

i. கோட்டக் கல்வி அலுவலகங்கள் சிலவற்றை உள்ளடக்கிய தாக வலயக் கல்வி அலுவலகங்கள் அமைந்துள்ளன. ஒரு சில விதி விலக்குகள் இருப்பினும், பிரதேச செயலர் பிரிவு ஒவ்வொன்றுக் கும் ஒவ்வொரு கோட்டக் கல்வி அலுவலகம் இயங்குகிறது.

ii. உதாரணமாக பதின்மூன்று கோட்டக்கல்வி அலுவலகங்களை உள்ளடக்கியதாக ஐந்து வலயக் கல்வி அலுவலகங்கள் யாழ்ப்பாண மாவட்டத்தில் இயங்குகின்றன. வட மாகாணத்தில் பன்னிரண்டு வலயக் கல்வி அலுவலகங்கள் செயற்படுகின்றன.

iii. வலய மட்டத்தில் கல்வி தொடர்பான சகல விடயங்களும் வலயக் கல்வி அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படும்.

iv. வலயக் கல்விப் பணிப்பாளரின் பணிகள் எட்டு வகையாக முன்வைக்கப்பட்டுள்ளன.

1. மேற்பார்வை அலுவல்கள்
2. இணைப்பாக்க அலுவல்கள்
3. திட்டமிடல் அலுவல்கள்
4. தரவு, தகவல் சேவை அலுவல்கள்
5. பொதுவான நிருவாக அலுவல்கள்.
6. கல்விசார் மற்றும் அபிவிருத்தி அலுவல்கள்.
7. நிறுவன அலுவல்கள்.
8. பௌதிகவள விநியோக அலுவல்கள்.

**35. இலங்கையில் தற்போதுள்ள அரச பாடசாலைகளின் எண்ணிக்கை யாது?**

*ஏறத்தாழ 9870 ஆகும் (பாடசாலை எண்ணிக்கை தளம்பல் நிலைக்குரியது*

**36. இலங்கையில் தற்போதுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை யாது?**

*சுமார் இரண்டு இலட்சத்து இருபத்தாறாயிரம் (2,26,000)*

**37. இலங்கையில் தேசிய கல்விக் கல்லூரிகள் எப்போது உருவாக்கப்பட்டன?**

*1986 ஆம் ஆண்டு.*

**38. இலங்கையில் தற்போதுள்ள தேசிய கல்விக் கல்லூரிகளின் எண்ணிக்கை யாது?**

*17 இல் தான் கற்கை நெறிகள் நடத்தப்படுகின்றன. தற்போது மகரகம தேசிய கல்விக் கல்லூரி ஆங்கில பாடத்துக்காக செயற்படவுள்ளது. மேலும் குருநாகலில் விசேட தேவையுள்ளோருக்கான கல்விக் கல்லூரியும் இயங்கவுள்ளது.*

**39. இலங்கையில் தற்போதுள்ள தேசிய கல்விக் கல்லூரிகள் எவை?**

i. அட்டாளைச்சேனை.
ii. மட்டக்களப்பு.
iii. பேருவளை தர்காநகர்
iv. ஹப்பிட்டகம
v. யாழ்ப்பாணம்
vi. மகாவலி (பொல்கொல்ல)
vii. நில்வள
viii. பஸ்கந்தர
ix. புளரிஸ்பர
x. றுகுண
xi. ருவான்புர
xii. சரிபுத்த
xiii. சியானே
xiv. ஸ்ரீபாத
xv. ஊவா
xvi. வவுனியா
xvii. வயம்ப
xviii. மகரகம

**40. தேசிய கல்விக் கல்லூரிகள் வழங்கும் பயிற்சி எத்தகையது?**

i. இவை ஆசிரியர்களுக்கான சேவைமுன் பயிற்சிக் கற்கை நெறிகளை நடத்துகின்றன.
ii. ஒவ்வோராண்டும் நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சையின் Z புள்ளி அடிப்படையில் குறிப்பிட்ட சில பாடநெறிகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மாணவர்கள் உள்வாங்கப்பட்டு இங்கு பயிற்சி வழங்கப்படுகிறது.
iii. ஆங்கிலம், கணினிக் கல்வி முதலான சில பாடநெறிகளுக்கு போட்டிப் பரீட்சைப் புள்ளிகளை அடிப்படையாகக் கொண்டு மாணவர் உள்வாங்கப்படுவர்.
iv. அழகியற் கல்வி, உடற்கல்வி, போன்றவற்றிற்குத் திறன்களை அடிப்படையாகக் கொண்டும் மாணவர் உள்ளீர்க்கப்படுவர்.
v. கல்விக் கல்லூரியில் பயிலுநர்களுக்கு ஆசிரியர் ஆவதற் கான பயிற்சியே வழங்கப்படுகிறது. இரண்டு வருடகால நிறுவனப் பயிற்சியும், ஒருவருடகால கட்டுறுப் பயிற்சியும்

(Internship) வழங்கப்படுவதுடன் பயிற்சி நிறைவில் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு கற்பித்தல் தேசிய டிப்புளோமா சான்றிதழும் வழங்கப்படுகிறது.

**41. இலங்கையில் ஆசிரியர் கல்லூரிகளின் (ஆசிரியர் கலாசாலைகள்) பணிகள் எவ்வாறு முன்னெடுக்கப்படுகின்றன?**

i. *இவை பயிற்றப்படாத ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கும் கல்வி நிறுவனங்களாகும்.*

ii. *தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிமூலங்களில் இரண்டு வருடகால வதிவுநிலைப் பயிற்சி இங்கு வழங்கப்படுகிறது.*

iii. *இலங்கையில் குடியேற்றவாத அரசுகளின் காலத்திலேயே ஆசிரியர் கல்லூரிகள் தோற்றம் பெற்றுவிட்டன. சுதந்திரத் துக்குப் பிந்திய காலத்தில் அதிகளவிலான ஆசிரியர் கல்லூரிகள் இயங்கி வந்தன. படிப்படியாக அவற்றின் பணிகள் நிறுத்தப்பட்டுப் ஆசிரியர் கல்லூரிகள் பல மூடப்பட்டன. தேசிய கல்விக் கல்லூரிகளின் தோற்றத்துடன் இன்னும் பல கல்லூரிகள் தமது பணியை நிறுத்திக் கொண்டன. தராதரப் பத்திரமற்ற ஆசிரியர் நியமனங்களை அரசு தற்போது வழங்காமையும் இதற்குக் காரணமாக அமைந்தது. ஆயினும் பல பாடசாலைகளில், குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் மலை நாட்டிலும் தொண்டராசிரியர்கள் பலர் சேவை செய்வ தாலும், அவர் களுக்கு ஆசிரிய நியமனங்கள் வழங்கப்பட்டு வருவதாலும் ஆசிரியர் கல்லூரிகள் தொடர்ந்தும் இயங்குகின்றன.*

iv. *வதிவிடப் பயிற்சி என்பது சில ஆசிரியர் கல்லூரிகளில் வசதிக் குறைவினால் நடைமுறைப்படுத்த முடியாமற் காணப்படுகிறது.*

**42. இலங்கையில் தற்போது இயங்கும் ஆசிரியர் கல்லூரிகள் எத்தனை? அவை யாவை?**

*எட்டு ஆசிரியர் கல்லூரிகள் தற்போது இயங்ககின்றன.*

*அவையாவன:*

| | | |
|---|---|---|
| *1. கோப்பாய்* | *2. மட்டக்களப்பு* | *3. அட்டாளைச்சேனை* |
| *4. கொட்டகல* | *5. உணவட்டுவ* | *6. பேருவளை* |
| *7. பலப்பிட்டிய* | *8. கிராகம (அழகியல்)* | |

**43. ஆசிரியர் மையங்களின் (Teachers centres) பணிகள் யாவை?**

i. பாடசாலைகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்குத் தொடர்ச் சியான பயிற்சிகளை வழங்கும் நோக்குடன் ஒவ்வொரு கல்வி வலயத்திலும் ஆசிரியர் மையங்கள் தோற்றுவிக்கப்பட்டுச் செயற்படுகின்றன.

ii. ஆசிரியர்களின் வாண்மைத் திறனை மேம்படுத்தும் பயிற்சிகள் இங்கு வழங்கப்படுகின்றன.

iii. சுமார் 100 ஆசிரியர் மையங்கள் நாடளாவிய ரீதியில் தாபிக்கப்பட்டுள்ளன.

iv. ஒவ்வொரு ஆசிரியர் மையத்துக்கும் பொறுப்பாக முகாமையாளர் செயற்படுவார். இவரின் கீழ் ஒருதொகுதி ஆசிரியர்கள் வளவாளராகப் பணியாற்றுவார்கள்.

v. ஆசிரியர் மைய முகாமையாளர்களாக இலங்கைக் கல்வியியலாளர் SLTES சேவையைச் சேர்ந்தவர்களே பெரும் பாலும் பணியாற்றுகின்றனர். அத் தரத்தினர் இல்லாவிடத்து ஆசிரிய சேவையைச் சேர்ந்தவர்கள் பணிபுரிகின்றனர்.

vi. ஒரு நாட்பயிற்சி, சில நாட்பயிற்சி, வதிவிடப் பயிற்சி என்ற வாறு ஆசிரியர்களுக்கான பாடரீதியான பயிற்சிகள் இங்கு வழங்கப்படுகின்றன.

**44. கோட்டக் கல்வி அலுவலகங்களின் செயற்பாடுகள் எவ்வாறு காணப்படுகின்றன?**

i. கல்வி நிர்வாக அமைப்பில் பாடசாலைகளை நிர்வகிக்கும் மிகச் சிறிய அலகாகக் கோட்டக் கல்வி அலுவலகங்கள் விளங்குகின்றன.

ii. இவை நாடு முழுவதும் பிரதேச செயலர் பிரிவுக்கு ஒன்றாக அமைந்துள்ள போதிலும், சில விதிவிலக்குகளும் காணப்படுகின்றன.

iii. கல்வி நிர்வாகப் பொறுப்புகளைப் பன்முகப்படுத்தும் இன்னுமொரு படிமுறையாக இவை கருதப்படுகின்றன.

iv. கோட்டக் கல்வி அலுவலகங்கள் 1990 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டன.

v. பாடசாலைகளில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்திப் பதே இவற்றின் முக்கிய பணியாகும். இலவசப் புத்தகங்கள் வழங்குதல், ஆசிரியர்களின் சம்பள உயர்வுக்கான சிபார்சுகள், இடமாற்றம் தொடர்பான சிபார்சுகள், வளப் பகிர்வுகள் முதலான பலவும் கோட்டக் கல்வி அலுவலகங் களினூடாகவே மேற்கொள்ளப்படுகின்றன.

# 12. அனர்த்த முகாமைத்துவக் கல்வி

**01. அனர்த்தம் (Hazards) என்றால் என்ன?**

இயற்கையால் அல்லது மனிதனால் மக்களின் உயிர்கள், பொருள்கள், உடைமைகள், சொத்துக்கள் போன்றவற்றிற்கு ஏற்படக்கூடிய இடர் அல்லது அச்சுறுத்தல் நிகழ்வு "அனர்ததம்" எனப்படும்.

**02. அனர்த்த முகாமைத்துவம் என்றால் என்ன?**

அனர்த்தங்களைக் குறைப்பதற்காக மேற்கொள்ளப் படுகின்ற முன்னாயத்த நடவடிக்கைகள் அனைத்தும் அனர்த்த முகாமைத்துவம் எனப்படும்.

**03. அனர்த்த முகாமைத்துவத்தில் உள்ளடங்க வேண்டிய பொறிமுறைகள் யாவை?**

i. அனர்த்தம் தொடர்பான அறிவைப் பெறல்.
ii. அனர்த்தம் தொடர்பான நடிவடிக்கைகளைத் திட்டமிடல்.
iii. அனர்த்தம் தொடர்பான நடிவடிக்கைகளை ஒழுங்கமைத்தல்.
iv. அனர்த்தம் தொடர்பான நடிவடிக்கைகளை நடைமுறைப் படுத்தல்.
v. அனர்த்த நடைமுறைப்படுத்தல்களை மதிப்பீடு செய்தல்.

**04. இலங்கையில் அனர்த்த முகாமைத்துவச் சட்டம் நிறைவேற்றப் பட்ட ஆண்டு எது?**

*2005*

**05. இலங்கையில் தற்போது எதிர்நோக்கப்படுகின்ற அனர்த்தங்கள் எவை?**

i. மண்சரிவு
ii. சூறாவளி
iii. வெள்ளம்
iv. வறட்சி
v. சுனாமி
vi. யுத்தம்
vii. கைத்தொழில் அனர்த்தங்கள்
viii. உள்நாட்டுக் கிளர்ச்சிகள்
ix. வான் வெளி ஆபத்துக்கள்
x. கடலரிப்பு
xi. கொள்ளை நோய்கள
xii. இரசாயன விபத்து

xiii. கதிரியிக்க அபாயம்
xiv. கடல், தரை ஆகியவற்றில் ஏற்படும் எண்ணெய்க் கசிவுகள்

xv. அணுவாயுதங்கள் xvi. புவிநடுக்கம்
xvii. கரையோர ஆபத்துக்கள் xviii. தீ
xix. வெடிகுண்டு xx. இடிமின்னல் தாக்கம்
xxi. தோனாடோ.

**06. இலங்கை எதிர்நோக்கும் அனர்த்தங்களின் பிரதான இரண்டு வகைகள் எவை?**

i. *மனித அனர்த்தங்கள்.*
ii. *இயற்கை அனர்த்தங்கள்*

**07. இலங்கையைப் பெருமளவு பாதிக்கும் இயற்கை அனர்த்தங்கள் எவை?**

i. வறட்சி
ii. வெள்ளப் பெருக்குகள்
iii. மண் சரிவுகள்
iv. சூறாவளிகள்
v. கடலரிப்புகள்.

**08. இலங்கையில் கடல்சார் ஆபத்து இருப்பதை உறுதிப்படுத்திய அனர்த்த நிகழ்வு எது?**

*2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26 ஆந் திகதி இடம்பெற்ற சுனாமிப் பாதிப்பு.*

**09. இலங்கையில் புவிநடுக்கம் ஏற்பட்ட ஆண்டு எது?**

*1614*

**10. இலங்கையில் மிக நீண்ட காலத்துக்குப் பின்னர் புவிநடுக்கம் பற்றிச் சிறிய அளவில் உணரப்பட்ட ஆண்டு எது?**

*1993*

**11. சமகால இலங்கையில் இயற்கை அனர்த்தங்களுடன் கூடிய மனித நடிவடிக்கைகளால் ஏற்படும் அனர்த்தங்கள் எவை?**

i. *சுற்றாடல் மாசடைதல்.*

ii. *சுகாதாரச் சீர்கேடுகள்*

iii. *தொற்று நோய்கள்*

iv. *ஒழுக்கக் குறைவினால் ஏற்படும் எயிட்ஸ், எபோலா போன்ற நோய்கள்.*

**12. இலங்கையின் அமைவிடம் எத்தகையது?**

*இலங்கையானது இந்திய உப கண்டத்திற்குத் தெற்கே அண்ணளவாக வட அகலாங்கு $5^0$ 10' இற்கும், கிழக்கு நெட்டாங்கு $79^0$ 82' இற்கும் இடையில் அமைந்துள்ள தீவாகும்.*

**13. இலங்கையின் நிலப்பரப்பு எவ்வளவு?**

*65610 சதுர கிலோ மீற்றர்.*

**14. தற்போதைய இலங்கையின் மக்கட்தொகை எவ்வளவு?**

*20.2 மில்லியன் (இரண்டு கோடி இரண்டு இலட்சம்)*

**15. இலங்கை மழைவீழ்ச்சியைப் பெற்றுக் கொள்ளும் பருவக் காற்றுகள் எவை?**

*வடகீழ்ப் பருவக்காற்று, தென்மேல் பருவக்காற்று.*

**16. இலங்கையானது மழைவீழ்ச்சியைப் பெற்றுக் கொள்ளும் பருவக் காற்றுகள் தவிர்ந்த காரணி எது?**

*மேற்காவுகை*

**17. இலங்கையின் வானிலை பாதிப்புள்ளாகி இயற்கை அனர்த்தங்கள் ஏற்படுவதற்கான சிறப்புக் காரணி எது?**

*ஒக்டோபர் - டிசம்பர் மாதங்கள் வரையிலான காலப் பகுதியில் தெற்கு வங்காள விரிகுடாவில் தாழமுக்கம், சூறாவளி ஆகியன ஏற்படுவதனால் இலங்கையின் வானிலை பாதிப்புக்குள்ளாகி அனர்த்தங்கள் ஏற்படுகின்றன.*

**18. இலங்கையில் அடிக்கடி ஏற்படும் மோசமான அனர்த்தம் எது?**

*வறட்சி*

**19. இலங்கையின் மலைச்சரிவுகள், தாழ்நிலங்கள் ஆகியவற்றில் மண் சரிவுகள், வெள்ளப் பெருக்குகள் என்பன ஏற்படுவதற்கான காரணிகளாக அமைந்த அண்மைக்கால நடவடிக்கைகள் யாவை?**

i. *பாரிய நீர்த்தேக்கங்கள் அமைக்கப்பட்டமை.*

ii. *பயிர்ச் செய்கைக்காக நிலங்கள் பயன்படுத்தப்பட்ட முறைகள்.*

**20. இலங்கையைச் சூழவுள்ள கடற்கரையின் நீளம் எவ்வளவு?**

*சுமார் 1600 கி.மீற்றர்.*

**21. இலங்கையில் கடலரிப்புக்குள்ளாகும் கடற்கரைப் பகுதிகளும், அவற்றின் அளவும் யாவை?**

*இலங்கையின் வடக்கு, கிழக்கு , மேற்கு, தெற்கு ஆகிய பகுதிகளிலுள்ள கடற்கரைகளில் கடலரிப்புகள் ஏற்படுகின்றன. இவை சுமார் 5 வீதமளவில் (மொத்தமான கடற்கரை நீளத்தில்) இருக்கிறது.*

**22. அனர்த்த பாதுகாப்புக் கல்வி ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர்க்கு அவசியமாய் இருப்பதற்கான காரணங்கள் யாவை?**

i. *எந்தவொரு நாட்டின் பிரசையும் தனது நாட்டில் அல்லது உலகத்தில் பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய அனர்த்தங்கள் பற்றிய அறிவையும், விளக்கத்தையும் பெற்றிருக்க வேண்டியது அவசியமாகும்.*

ii. *அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான அடிப்படைக் கூறுகளை இனங்கண்டு கொள்ள வேண்டிய தேவை எந்தவொரு நாட்டின் மக்களுக்கும் உரியதாகும்.*

iii. *ஒரு நாட்டின் கல்வி முறைக்கூடாக அனர்த்த முகாமைத் துவச் செயற்பாட்டு நுட்பங்களை வழங்குவது எளிதான தொரு பணியாகையால், கல்வி வழங்கலுடன் தொடர்புடைய ஆசிரியர் களுக்கும், மாணவர்களுக்கும் அனர்த்த முகாமைத்துவக் கல்வி அத்தியாவசியமானதாகும்.*

iv. *காலத்தின் தேவைகருதி முன்மாதிரியான அனர்த்த முகாமையாளர்களாகப் பாடசாலை ஆசிரியர்களும் மாணவர் களும் விளங்கவும், பாடசாலைகள் அனர்த்த முகாமைத்துவ நிறுவனங்களாக விளங்கவும் முடிவதாலும் அனர்த்த பாதுகாப்புக் கல்வி ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் அவசியமாகின்றது.*

**23. பாடசாலை மாணவர்களை அனர்த்த முகாமைத்துவச் செயற்பாடுகளில் எவ்வாறு பங்களிப்பு நல்கச் செய்யலாம்?**

i. *இயற்கை அனர்த்தங்களின் போது கவனத்திற் கொள்ள வேண்டிய முக்கியமான குழுவினராகக் காணப்படும் பாடசாலை மாணவர்களுக்கு, அனர்த்த முகாமைத்துவம் பற்றிய அறிவும், விளக்கமும் கிடையாதிருப்பதும், போதுமான அனுபவங்கள் கிடைக்காதிருப்பதும் பாதகமான விடயங்களாகும். இதனால் கலைத்திட்டத்தினூடாக அனர்த்த முகாமைத்துவ அறிவு, விளக்கம், அனுபவம் கிடைக்கச் செய்தல் வேண்டும்.*

ii. இதன் மூலம் பாடசாலை மாணவர்கள் தமது பெற்றோர்கள், மூத்தோர்கள், அயலவர்கள், நண்பர்கள் முதலானோருக்கு அனர்த்த முகாமைத்துவம் பற்றியும், முற்பாதுகாப்புப் பற்றியும் எடுத்துக் கூறுவதற்கும், தீர்வுகளை வழங்குவதற்கும் உரிய பங்களிப்பை வழங்க முடியும்.

**24. பாடசாலை ஆசிரியர்களுக்கு அனர்த்த முகாமைத்துவக் கல்வியினால் கிடைக்கக் கூடிய பயன்பாடுகள் யாவை?**

i. ஆசிரியர்கள் தமது உயர் வாழ்க்கைத் திறனைக் கட்டியெழுப்ப முடிகிறது.

ii. பாடசாலைக் காலத்தில் மாத்திரமன்றி வாழ்நாள் முழுவதும் பின்பற்றக் கூடிய ஆற்றல்களைப் பெற்றுக் கொள்ள முடிகிறது.

iii. தற்காலத்தில் இயற்கை, மனித அனர்த்தங்கள் உலகெங்கும் அதிகரித்து வருவதால் தம்மையும், பாடசாலைச் சமூகத்தையும், ஏனையோரையும் பாதுகாக்கக் கூடிய திறனை அளிக்கக் கூடியதாக உள்ளது.

**25. 'பேரழிவு' (Disaster) என்பதனால் கருதப்படுவது யாது?**

பாதிக்கப்பட்ட சமுதாயத்தின் அல்லது குழுவினர் தமது சொந்த வளங்களால் ஈடுசெய்ய முடியாத அளவிலான பாரிய மனித, பொருள் வளங்களை அல்லது சூழல் சார்ந்த இழப்புகளை ஏற்படுத்தும் கடுமையான அழிவைக் குறிப்பதாகும்.

**26. பாதிப்புறு தன்மை (Vulnerabilities) என்பது யாது?**

யாதேனுமொரு அனர்த்தத்தின் விளைவாக, ஆபத்து நடந்த இடத்திற்கு அண்மையில் இருந்தமையால் அல்லது ஆபத்தை விலக்கக் கூடிய வளங்கள் இன்மையால் ஒரு சமூகம், கட்டமைப்பு, சேவைகள், புவியியற் பிரதேசம் அழிவுக் குள்ளாகும் அல்லது குழப்பமடையும் அளவினை "பாதிப்புறு தன்மை" என்பது குறித்து நிற்கிறது.

**27. 'கொள்ளளவு ஆற்றல்' என்பதனால் விளங்கிக் கொள்வது யாது?**

ஒரு சமூகம், இடையூறுகளை எதிர் கொள்ளக் கூடிய தனது ஆற்றல்களை அதிகரிக்கக் கூடிய சாதகமான நிலைமைகள் "கொள்வனவு ஆற்றல்" எனப்படும்.

**28. அனர்த்தப் பாதுகாப்புப் பாடசாலை எவ்வாறு அமைந்திருத்தல் வேண்டும்?**

i. அனர்த்த ஆபத்து இல்லாத இடத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.

ii. அனர்த்தம் ஏற்படுமாயின் அதிலிருந்து பாதுகாப்புப் பெறும் வகையில் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

iii. அனர்த்தம் ஏற்பட்டாலும் அழியாமல் பாதுகாப்பானதாக இருக்கக் கூடியதாக அமைந்திருத்தல் வேண்டும்.

**29. பாடசாலை அனர்த்த முன்பாதுகாப்புத் திட்டம் (முகாமைத்துவ) என்றால் என்ன?**

பாடசாலை ஒன்றில் அனர்த்தம் ஒன்று நிகழ்வதற்கு முன்னர், நிகழ்வின் போது, நிகழ்வின் பின்னர் சமூகமானது அந்த அனர்த்தத்தை எதிர்கொள்வதற்கு முன்கூட்டியே ஆயத்தமாக இருக்கும் திட்டம், “அனர்த்த முற்பாதுகாப்புத் திட்டம்” எனப்படும்.

**30. பாடசாலைகளில் அனர்த்த முற்பாதுகாப்புத் திட்டத்தினை மேற்கொள் வேண்டியதன் முக்கியத்துவம் யாது?**

i. பாடசாலைகள் அனர்த்தங்களால் ஆபத்துக்கள் ஏற்படக் கூடிய இடங்களாகும்.

ii. அனர்த்தங்களால் அதிக அளவில் பாதிப்புறும் குழுக்களில் பாடசாலை மாணவரும் அடங்குகின்றனர்.

iii. அனர்த்தமொன்று ஏற்படும் போது இழக்கப்படும் உயிர்கள், சொத்துக்கள் ஆகியவற்றின் அளவும் பெறுமதியும் உயர்ந்ததாகும்.

iv. அனர்த்த முற்பாதுகாப்புத் திட்டத்தினால் பாடசாலைகளின் பாதிப்புறு தன்மை குறையக் கூடியதாகவுள்ளதுடன், அவற்றின் கொள்ளளவு ஆற்றலும் அதிகரிக்கிறது.

**31. பாடசாலை அனர்த்த முற்பாதுகாப்புத் திட்டம் ஒன்றினைத் தயார் செய்வதனால் கிடைக்கும் பயன்கள் யாவை?**

i. அனர்த்தங்களின் போது உதவக்கூடிய உதவிக் குழுக்கள் அமைக்கலாம்.

ii. அனர்த்தத்திற்கு உட்படக்கூடிய பாடசாலையின் அனர்த்த வரலாறு, தற்போதைய நிலைமை, எதிர்கால நிலைமை தொடர்பாக ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

iii. அனர்த்த நடவடிக்கையின் போது பாடசாலைக்கு மட்டுமன்றிச் சமூகத்திற்கும் உதவக் கூடியதாயிருக்கும்.

**32. பாடசாலை அனர்த்த முற்பாதுகாப்பு வேலைத்திட்டத்தில் முதலில் செய்ய வேண்டிய பணி அல்லது நடவடிக்கை எது?**

பாடசாலை அனர்த்த பாதுகாப்புக் குழுவை அமைத்தல்.

**33. பாடசாலை அனர்த்த பாதுகாப்புக் குழுவின் பணிகள் யாவை?**

பாடசாலையின் அதிகார பூர்வ ஒழுங்கமைப்புக் குழுவாக இது விளங்கும். பாடசாலையில் அனர்த்தங்கள் ஏற்படும் போது பொருத்தமான நடவடிக்கைகளுக்காகத் தீர்மானம் எடுத்தல், திட்டங்களைத் தயரித்தல், செயற்படுத்தல் ஆகிய பணிகளை இக் குழு நிறைவேற்றும்.

**34. பாடசாலை அனர்த்த பாதுகாப்புக் குழுவின் கட்டமைப்பில் உள்ளடங்கும் உறுப்பினர்கள் யாவர்?**

- தலைவர் (அதிபர்)
- பிரதியதிபர், ஆரம்பப் பகுதித் தலைவர், கனிட்ட பிரிவுத் தலைவர்.
- வலயக் கல்வி அதிகாரி அல்லது பிரதி வலயக் கல்வி அதிகாரி.
- (பெற்றோர் ஆசிரியர் சங்க) பாடசாலை அபிவிருத்திச் சங்கத் தலைவர்.
- 1 - 2 வரையிலான பெற்றோர் (குறைந்தது ஒரு பெண் இடம்பெறல்).
- 4 மாணவர்கள் (அனர்த்த அறிவூட்டற் குழுத் தலைவர், பாடசாலை மாணவர் தலைவர் அல்லது தலைவி, அனர்த்தத் திற்கு எதிரான செயற்பாட்டுக் குழு உறுப்பினர்கள்).
- நிவாரண அனர்த்த முகாமைத்துவ திணைக்கள, மாவட்ட அனர்த்த முகாமை இணைப்பு அலகு பிரதிநிதி, மாவட்ட நிர்வாக, பிரதேச அமைப்புப் பிரதிநிதிகள்.
- தீயணைப்புப் படையினரின் கிட்டிய தீயணைப்பு நிலையப் பிரதிநிதி
- பொலிஸ் பிரதிநிதி (கிட்டிய பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த)
- சுகாதாரத் திணைக்களப் பிரதிநிதி
- பிரதேச சமூக நலன்புரி உத்தியோகத்தர்.

- ❖ பாடசாலை அலுவலக நிருவாக, பணி இணைப்பு அலகுப் பிரதிநிதி.
- ❖ பிரதேச வதிவிட நலன்புரி நிலையப் பிரதிநிதிகள்
- ❖ பிரதேச வைத்தியர் அல்லது வைத்தியர்கள்
- ❖ தேவைக்கேற்பத் தெரிவு செய்யப்படுவோர் (பிரதேச நலன் விரும்பிகள், கிராம அலுவலர், கிராமத் தலைவர்கள் முதலியோர்).
- ❖ பிரதேசத்தில் செயற்படும் அரசசாரா அமைப்புகளின் பிரதிநிதிகள்.
- ❖ பிரதேச வர்த்தக சங்கப் பிரதிநிதிகள்.

**35. பாடசாலை அனர்த்த முற்பாதுகாப்புத் திட்டத்தின் இரண்டாவது நடிவடிக்கையாக அமைவது எது?**

பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், ஏனைய பாடசாலை ஆசிரியர்கள் ஆகியோருக்கு விழிப்புணர்வுக் கூட்டம் பாடசாலையில் நடத்துவது ஆகும்.

**36. பாடசாலையில் நடைபெறும் அனர்த்த முற்பாதுகாப்பு விழிப்புணர்வுக் கூட்டத்தில் பங்கு பற்ற வேண்டுமென எதிர்பார்க்கப்படும் முக்கியமானவர்கள் யாவர்?**

பாடசாலை அதிபர்
பிரதி அதிபர்கள் ஃஉப அதிபர்கள்
நிர்வாகப் பணிக்குழு
சகல ஆசிரியர்களும்
மாணவர் தலைவர்கள் (கழகங்கள், மன்றங்கள், சங்கங்கள்)
சிரேஷ்ட மாணவர் தலைவர்கள் (மாணவர் மன்றத் தலைவர்கள், இல்லத் தலைவர்கள் உட்பட)

**37. அனர்த்த (முகாமைத்துவ) முற்பாதுகாப்பு விழிப்புணர்வுக் கூட்டத்தில் மேற்கொள்ளப்படும் நடிவடிக்கைகள் யாவை?**

i. அனர்த்த முற்பாதுகாப்புக்கான திட்ட மொன்றைத் தயாரித் தல்.

ii. அதனை நடைமுறைப்படுத்தும் ஒழுங்குகளை மேற்கொள் ளல்.

**38. பாடசாலை அனர்த்த பாதுகாப்புத் திட்டமொன்றின் பிரதான படிமுறைகள் யாவை?**

i. பாடசாலைச் சமூகத்திற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம்.
ii. அனர்த்தப் பாதுகாப்புக் குழுக்கள்.
iii. அனர்த்தம் நிகழக்கூடிய சூழ்நிலைகளைக் கண்டறிதல்.
iv. ஊழியக் குழுக்களுக்கான பயிற்சிகள் அல்லது பட்டறைகள்.
v. பாதுகாப்புத் தொடர்பான வரைபடத்தைக் காட்சிப்படுத்தல்.

**39. பாடசாலை ஒன்றில் அனர்த்தப் பாதுகாப்புத் திட்டமொன்றினைத் தயாரித்துக் கொள்வதன் மூலம் கிடைக்கும் அனுகூலங்கள் யாவை?**

i. அனர்த்தங்களின் போது உதவக்கூடிய உதவிக் குழுக்கள் அமைத்துச் செயற்படல்.
ii. அனர்த்தம் பற்றிய வரலாறு, ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ள உதவுதல்.
iii. பாடசாலைக்கு மட்டுமன்றிச் சமூகத்திற்கும் அனர்த்தத்தின் போது உதவக் கூடியதாக இருத்தல்.
iv. அனர்த்தத்தின் போது பாதிக்கப்படக்கூடிய இடங்களைக் கண்டறிய உதவுதல்.



# 13. கலைத்திட்டம், கற்றல் - கற்பித்தல் முறைகள், கற்றல் வளங்கள்

**01. கலைத்திட்டம் என்றால் என்ன?**

i. கல்விக்குறிக்கோள்களை அடைவதற்காகப் பாடசாலை மூலம் மேற்கொள்ளப்படும் அனைத்துவிதமான அனுபவத் தொகுதியின் கூட்டுச் சேர்வையாக விளங்குவது கலைத் திட்டமாகும்.

ii. பாடசாலையில் வகுப்பறைக்கு உள்ளேயும் வெளியேயும் நடைமுறைப்படுத்தப்படும் சகலவிதமான செயற்பாடுகளும் கலைத்திட்டம் எனப்படும்.

**02. பாடசாலைக் கலைத்திட்டம் ஒன்று உருவாக்கப்படுவதன் அவசியம் யாது?**

கலைத்திட்டமானது பின்வரும் தேவைகளின் பொருட்டு உருவாக்கப்படுதல் அவசியமாகிறது.

i. தனியாள் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக.
ii. சமூகத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக.
i. சமகாலப் பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதற்காக.
ii. எதிர்காலத் தேவைகளை நிறைவேற்றுவதற்காக.
iii. தேசியத் தேவைகளை நிறைவேற்றுவதற்காக.
iv. கலாசாரத் தேவைகளை நிறைவேற்றுவதற்காக.
v. பாடசாலைச் சமூகத்தின் உளவியல் தேவைகளை நிறைவேற்று வதற்காக.

**03. கலைத்திட்டம் (பாடவிதானம்) தயாரிக்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் யாவை?**

i. கோட்பாடுகள், கொள்கைகள்.
ii. சமூகக் காரணிகள் :- சமகாலத் தேவைகள், கலாசாரப் பெறுமானங்கள், மனப்பாங்குகள், வரலாற்றுப் பின்னணி, மதத் தாபனங்களின் விருப்புகள், மொழி, கலை இலக்கியங்கள், சிந்தனைகள்.
iii. உளவியற் காரணிகள் :- சிறுவர் விருத்திக் கட்டங்கள், நுண்மதி, பக்குவம், ஆளுமை, ஊக்குவிப்பு, ஞாபகம், கற்றல்.

iv. தத்துவக் காரணிகள் :- ஏற்றுக் கொள்ளப்பட்ட கல்விக் கோட்பாடுகள் தத்துவவியலாளர்களின் நோக்கங்கள், தீர்வுகள், உத்திகள், வழிமுறைகள், மதிப்பீடுகள், எண்ணக் கருக்கள்.

v. அரசியற் காரணிகள் :- சமகால அரசியற் கொள்கைகள், நடைமுறையிலுள்ள அரசாங்கத்தின் நோக்கங்கள்.

vi. விஞ்ஞான தொழினுட்ப வளர்ச்சி.

vii. முழுமையான ஆளுமையைக் கட்டியெழுப்பல்.

இவையனைத்தையும் கருத்தில் கொண்டு கலைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும்.

**04. கலைத்திட்ட அபிவிருத்தி மாதிரிகள் யாவை?**

i. பாட மையக் கலைத்திட்டம்.

ii. ஆசிரியர் மையக் கலைத்திட்டம்.

iii. மாணவர் மையக் கலைத்திட்டம்

**05. கலைத்திட்ட மாதிரியைக் கற்பதன் மூலம் ஆசிரியர் பெறக்கூடிய நன்மைகள் எவை?**

i. கல்வி நோக்கங்களையும் குறிக்கோள்களையும் அடைதல்.

ii. சமூக, பொருளாதார, கலாசார , கல்விச் சீர்திருத்தங்களைத் தேசத்தின் நலன்களுக்கு உகந்த விதத்தில் விளைதிறனுடையவைகளாகக் கலைத்திட்டத்தினூடாக அமுற்படுத்தல்.

iii. கற்றல் - கற்பித்தலில் கலைத்திட்டம் பிரிக்க முடியாதது என்பதை விளங்கிக் கொள்ளல்.

iv. முழுமையான ஆளுமை வளர்ச்சிக்கு ஏற்ற வகையில் தேர்ச்சிகளை இனங்கண்டு அவற்றை அடைந்து கொள்வதில் ஈடுபட முடிதல்.

v. தேசியக் கொள்கைகளுக்கமைய, பாடசாலை இலக்கிற்கமைய பூரண கலைத்திட்டத்தை மாணவர் மத்தியல் வேரூன்றச் செய்தல்.

**06. கலைத்திட்ட மூலங்களாக விளங்குபவை யாவை?**

i. கல்வி நோக்கங்கள், இலக்குகள், குறிக்கோள்கள்.

ii. கற்றல் – கற்பித்தல் முறைகள்

iii. பரீட்சைகள், மதிப்பீடுகள், கணிப்பீடுகள்.

iv. கல்வித் தொழினுட்பமும் கல்வியில் தொழினுட்பமும்.

v. கற்றல் வளங்கள்.

**07. கலைத்திட்ட மாதிரிகளைச் சமர்ப்பித்துள்ள கல்வியியலாளர் நால்வரின் பெயர்களைக் குறிப்பிடுக.**

i. K.W. ரெயிலர் *(1947)*
ii. K.D. வீலர் *(1967)*
iii. கேர் (Kerr)
v. ஸ்கில்பெக் *(1939)*

**08. ரெயிலரின் கலைத்திட்ட மாதிரியில் அடங்குவன யாவை?**


மாணவர், சமகால வாழ்க்கை முறை, நிபுணர்களின் கருத்துகள், கோட்பாடுகள், உளவியல் ஆகியவற்றைக் கவனத்திற் கொள்ள வேண்டும். அதன்படி

i. குறிக்கோள்களை அடையாளப்படுத்தல்.
ii. பாடத்தின் அளவு
iii. ஒழுங்கமைப்பு
iv. மதிப்பீடு என்றவாறு படிமுறையிலான செயற்பாடுகள் அமையும்

மாணவர், சமகால வாழ்க்கை முறை, நிபுணர்களின் கருத்துகள் - கோட்பாடுகள், உளவியல் } குறிக்கோள்களை அடையாளப் படுத்தல் → பாடத்தின அளவு → ஒழுங்கமைப்பு → மதிப்பீடு

**09. 1967 ஆம் ஆண்டு வீலர் என்பவரால் முன்வைக்கப்பட்ட கலைத் திட்ட மாதிரி எவ்வாறு அமைந்துள்ளது?**

வட்ட அமைப்பிலான மாதிரியில் குறிக்கோள் பகுதியில் மதிப்பீட்டை வைத்துள்ளனர். இதனால் காலத்ததுக் கேற்றவாறு கலைத்திட்டத்தை மாற்றியமைக்க முடியும்.




**10. கேர் (Kerr) கலைத்திட்ட மாதிரி எவ்வாறு அமைந்துள்ளது?**

i. இது விரிவானதும் சிக்கலானதும் ஆகும்.

ii. குறிக்கோள், அறிவு, கற்றல், அனுபவம், மதிப்பீடு ஆகிய கூறுகளின் தன்மைகளைத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது.

iii. இதில், குறிக்கோளானது அறிவுசார் துறைக்கு மட்டுமல்லாது அறிவு, மனவெழுச்சி, மனப்பாங்கு முதலிய துறைகளுக்கும் விரிவாக்கப்பட்டுள்ளது.

iv. பாடங்கள் தெரிவு செய்யும் போதும், கற்றல் செயற்பாட்டின் போதும் மாணவர்களுக்கு அடிப்படைக் கோட்பாடுகளையும் எண்ணக்கருக்களையும் பற்றிய விளக்கங்களைப் பெற்றுக் கொடுப்பது முக்கியமாகும்.

v. இதில் அனுபவம் சார் விடயங்களுக்கும் முக்கியம் அளிக்கப் பட்டுள்ளது. அதனால் கற்பித்தல் முறைகள், பாடக் குறிப்புகள், முன்னாயத்தம், தனியாள் வேறுபாடு, இடைத் தொடர்பு, மாணவர்கள் கண்டறிதல், பார்வையிடுதல் போன்றவைகளும் சிந்தனைச் சக்தியை விரிவடையச் செய்கின்றன எனக் கூறப்பட்டுள்ளது.

vi. மேலும், எழுத்துப் பரீட்சைகள் மூலம் மதிப்பீடு செய்வதைத் தவிர்த்து ஒப்படைகள், நேர்காணல்கள் போன்ற பல்வேறு மதிப் பீட்டு முறைகளுக்கும் முக்கியத்துவம் அளிக்கப் பட்டுள்ளது.

**11. ஸ்கில் பெக்கின் கலைத்திட்ட மாதிரியின் பண்புகள் யாவை?**

சம்பிரதாய பூர்வ நிலையிலிருந்து மாறுபட்டு தனித்துவமான அமைப்பை இது கொண்டுள்ளது. மாணவர்களின் கலாசார பண்புகள் அவர்களது சிந்தனைகள், செயற்பாடுகள் ஆகியவற்றை இணைக்கும் முயற்சி மேற்கொள்ளப் பட்டுள்ளது. ஸ்கில்பெக்கின் கலைத்திட்ட மாதிரி பின்வருமாறு காணப் படுகின்றது.

i. தற்போதைய நிலையைப் பகுப்பாய்வு செய்தல்.
ii. நோக்கம் உருவாக்கல்
iii. கலைத்திட்டத்தைத் தயாரித்தல்
iv. பொருள் விளக்கமும் அமுலாக்கமும்
v. கண்காணித்தல்
vi. பின்னூட்டல், மறுசீரமைப்பு, கணிப்பீடு.

**12. இனங்காணப்பட்டுள்ள கலைத்திட்ட வகைகளில் முக்கியமான இரு பகுதிகளும் யாவை?**

i. மரபுக் கலைத்திட்ட வகைகள் (பாரம்பரியமானவை)
ii. நவீன கலைத்திட்ட வகைகள்

**13. மரபுக் கலைத்திட்ட வகைகள் யாவை?**

i. பாடக் கலைத்திட்டம் ( Subject Curriculum)
ii. மையக் கலைத்திட்டம் (Core Curriculum)
iii. சிறப்புக் கலைத்திட்டம் (Special Curriculum)
iv. ஒருங்கிணைந்த கலைத்திட்டம் (Intergrated Curriculum)
v. செய்ம்முறைக் கலைத்திட்டம் (Experience Curriculum)
vi. இணைக் கலைத்திட்டம் (Co - Curriculum)
vii. மறைக் கலைத்திட்டம் (Hidden Curriculum)

**14. நவீன கலைத்திட்ட வகைகள் யாவை?**

i. சுழலேணிக் கலைத்திட்டம்
ii. ஓடுபாதைக் கலைத்திட்டம்
iii. வகுப்பல்லாத கலைத் திட்டம்

**15. பாடக் கலைத்திட்டத்தின் பண்புகள் யாவை?**

i. பல்வேறு பாடங்களும், அவற்றுக்கான கற்றல் - கற்பித்தல்

முறைகளும், மதிப்பீட்டு முறைகளும் காணப்படும்.

ii. பாடத்துக்குரிய பாடத்திட்டம், நேரசூசி, தனித்தனியாகப் பாடத்தினைக் கற்பித்தல், தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள் முதலான அம்சங்கள் பின்பற்றப்படும். எளிமையில் தொடங்கி சிக்கலானது வரை பண்புத்தர அடிப்படையில் பாடப்பரப்பு ஒழுங்குபடுத்தப்படும்.

**16. மையக் கலைத்திட்டம் எவ்வாறு காணப்படும்?**

i. குறிப்பிட்டதொரு நோக்கத்தினை அடைவதற்காகவும், அனைவரும் பின்பற்றக்கூடிய பாடத்திட்டத்தினை உடையதாகவும், முன்னுரிமை பெற வேண்டிய விடயங்களில் அதிக கவனம் செலுத்தப்பட்டும் காணப்படும்.

ii. நேரசூசியானது தளம்பல் நிலைக்குரியதாகவும் காணப்படும்.

**17. சிறப்புக் கலைத்திட்டம் என்பது யாது?**

குறிப்பிட்டதொரு கற்கை, விடயம், பாடப்பரப்பு தொடர்பானதும், அதில் மட்டும் கூடிய கவனஞ் செலுத்துவதாகவும் அமைந்த கலைத்திட்டம் இதுவாகும்.

**18. ஒன்றிணைந்த கலைத்திட்ட முறை எவ்வாறானது?**

i. பாடங்களாகப் பிரிக்கப்படாமல் எல்லா விடயங்களையும் ஒன்றிணைத்துக் கற்பிக்கப்படும்.

ii. செயற்பாடுகள் அலகுகளாக வகுக்கப்பட்டுக் கூடிய கவனம் செலுத்தப்படும்.

iii. அறிவு, திறன், மனப்பாங்கு விருத்தியில் கவனம் செலுத்துவதுடன் நெகிழ்ச்சியுடைய நேரசூசியும் பின்பற்றப்படும்.

iv. பல்துறை அனுபவம் மிக்க ஆசிரியர்களின் பங்களிப்பும், குழுச் செயற்பாடுகளும், இறுக்கமான ஆசிரியர் - மாணவர் தொடர்பும் காணப்படும்.

**19. செயன்முறைக் கலைத்திட்டத்தின் அல்லது பிரயோகக் கலைத்திட்டத்தின் பண்புகள் எவை?**

i. மாணவரை மையமாகக் கொண்ட பல்வேறு செயற்பாடுகள் காணப்படுதல்.

ii. மாணவர்கள் குழுக்களாகச் செயற்படுதல்.

iii. நெகிழ்ச்சியுடைய நேரசூசி பின்பற்றப்படுதல்
iv. செயற்பாடுகளுக்கு ஏற்றதாக வகுப்பறை ஒழுங்குபடுத்தப் படல்.
v. பாடப்பரிவுகளின்மையும், பாட எல்லை நெகிழ்வுத்தன்மை யுடையதுமாகவும் விளங்கல்.

**20. இணைக் கலைத்திட்டம் என்பது யாது?**

பாடக் கலைத்திட்டத்துக்குப் புறம்பாக மாணவரிடம் ஏற்படுத்த வேண்டிய தேர்ச்சிகளுக்கான செயற்பாடுகளை உள்ளடக்கியது இணைக் கலைத்திட்டமாகும்.

**21. மறை கலைத்திட்டம் எனப்படுவது யாது?**

பாடசாலை மாணவரிடமும், பாடசாலையின் பழைய மாண வரிடமும் பாடசாலை விழுமியங்கள், தனியாள் தொடர்பு சம்பந்தமாக ஏற்படுத்தக் கூடிய நடத்தைக் கோலப் பண்புகள் மறை கலைத்திட்டத்தினுள் அடங்கவன.

**22. மையக் கலைத்திட்டம், ஒன்றிணைந்த கலைத்திட்டம், செயன் முறைக் கலைத்திட்டம் என்பவற்றுக்கான உதாரணங்கள் தருக.**

i. மையக் கலைத்திட்டம் ⟶ விவசாய அபிவிருத்தி, பொருளாதார அபிவிருத்தி, கைத்தொழில் அபிவிருத்தி, பண்பாட்டு அபிவிருத்தி போன்ற கருப் பொருள்களை முன்னிறுத்திக் கற்பது கட்டாய பாடங்களும் இதிலடங்கும்.
ii. ஒன்றிணைந்த கலைத்திட்டம் ⟶ 1972 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் ஆரம்ப வகுப்புகளில் பின்பற்றப்படும் கலைத்திட்டம்.
இடைநிலை வகுப்புகளில் விஞ்ஞானம், கணிதம், சமூகக் கல்வி ஆகிய பாடங்கள் பல பாடப்பிரிவுகளை இணைத்து உருவாக்கப்பட்டமை.
iii. செயன்முறை கலைத்திட்டம் ⟶ இலங்கையின் ஆரம்பக் கல்விக் கலைத்திட்டம்.

**23. இணைக் கலைத்திட்டச் செயன்முறைகள் சிலவற்றை இனங்காட்டுக.**

i. கல்விச் சற்றுலாக்கள்

ii. விளையாட்டுப் போட்டி
iii. முதலுதவி
iv. சாரணியம்
v. மாணவர் மன்றச் செயற்பாடுகள்
vi. பொருட்காட்சி அல்லது கண்காட்சி
vii. பல்வேறு மன்றங்கள் அல்லது கழகங்களின் செயற்பாடுகள்
viii. விழாக்கள்

**24. மறைகலைத்திட்டத்தில் அடங்கக் கூடிய விடயங்கள் எவை?**

i. பாடசாலைக் கொடி, பாடசாலைக் கீதம் முதலானவற்றுக்கு மதிப்பளித்தல்.
ii. எப்போதும் பாடசாலையின் பெருமையைப் பாதுகாக்கும் உணர்வைப் பெற்றிருத்தல்.
iii. பாடசாலை விழுமியங்களைப் பேணல்.

**25. கலைத்திட்ட ஒழுங்கமைப்பு என்றால் என்ன?**

பிள்ளைகளின் முதிர்வு, விருப்பு, வெறுப்பு, அபிவிருத்திக் கட்டங்கள் என்பவற்றிற்கேற்பப் பாடசாலைக் கல்வியைக் குழந்தைப் பருவம், ஆரம்பக் கட்டம், இடைநிலைக் கட்டம் என்றவாறு பகுத்து ஒழுங்கமைக்கப்பட்ட கலைத்திட்ட அபிவிருத்தியே கலைத்திட்ட ஒழுங்கமைப்பு எனப்படும்.

**26. கட்டாயக் கலைத்திட்டம், தெரிவுக்குரிய கலைத்திட்டம் என்பவற்றால் விளங்கிக் கொள்வது யாது?**

எல்லா மாணவர்களாலும் கட்டாயமாகக் கற்க வேண்டிய பாடங்களான தாய்மொழி, கணிதம், சமயம் போன்றவை மையக் கலைத்திட்டம் எனப்படும். மாணவர்கள் தமது ஆற்றல், விருப்பம் ஆகியவற்றுக்கேற்பத் தெரிவு செய்து கற்கும் பாடங்கள் (நடனம், சித்திரம், விவசாயம், சங்கீதம், தையல் போன்றவை) தெரிவுக்குரிய கலைத்திட்டமாகும்.

**27. பூரண கலைத்திட்டம் என்றால் என்ன?**

முறைசார் பாடவிதான செயற்பாடுகள், இணைப் பாடவிதானச் செயற்பாடுகள், பாடசாலைச் சம்பிரதாயங்கள், சட்டத்திட்டங்கள், கலாசாரம் முதலானவற்றை உள்ளடக்கி மாணவரின் நடத்தைக் கோலங்களை உருவாக்கும் செயற்

*பாடுகள் அனைத்தும் பூரண கலைத்திட்டமாகும்.*

பூரண கலைத்திட்டம்

- முறையான கலைத்திட்டம் Formal Curriculum
- முறைசாராக் கலைத்திட்டம் Informal Curriculum
  - இணைக் கலைத்திட்டம் Co – Curriculum
    - மேலதிக பாடஞ்சாரா கலைத்திட்டம் Extra Curriculum
  - மறைகலைத்திட்டம் Hidden Curriculum

**28. தனியாள் கற்றல் முறைகள் யாவை?**

i. *படிமுறைக் கற்றல் அல்லது நிரலித்த கற்றல்* - Programmed Learning

ii. *கண்டறிமுறைக் கற்றல்* - Drscovery Learning

iii. *பிரச்சினை தீர்த்தல் மூலம் கற்றல்* - Problem Solving Learning

iv. *போல அமைத்துக் கற்றல்* - Simulation Learning

v. *ஒப்படை மூலம் கற்றல்* - Assesment Learning

**29. குழுவாகக் கற்கும் முறைகள் எவை?**

i. *குழுமுறைக் கற்றல்* - Group Learning

ii. *பிரச்சினை தீர்த்தல் மூலம் கற்றல்* - Problem Solving Learning

iii. *செய்திட்ட முறைக் கற்றல்* - Project Merthod Learning

iv. *கண்டறிமுறைக் கற்றல்* - Discovery Learning

**30. கற்பித்தல் முறைகளாக இனங்காணக்கூடியவை யாவை?**

i. *செய்துகாட்டல் முறை* – Demonstration Method

ii. *விரிவுரை முறை* – Lecture Method

iii. *கலந்துரையாடல் முறை* – Discussion Method

iv. *விரிவுரை - கலந்துரையாடல் முறை* – Lecture – Discussion Method

v. வினவுதல் முறை – Questioning Method
vi. கூறுதல் முறை – Telling Method
vii. நுண் முறைக் கற்பித்தல் – Micro Teaching Method
viii. நாடகமாக நடித்தல் முறை - Dramatization Method
ix. சிந்தனையைக் கிளறும் முறை – Brain Stroming Method
x. அணிமுறைக் கற்பித்தல் - Team Teaching
xi. பல்தரக் கற்பித்தல் முறை – Multigrate Teaching Method
xii. களக் கற்பித்தல் முறை – Field Teaching Method

**31. விரிவுரை முறைக் கற்பித்தலின் அனுகூலங்கள் எவை?**

i. அதிகளவு மாணவர்களுக்கு ஒரே நேரத்தில் கற்பிக்க முடியும்.
ii. கூடுதலான பாடவிடயங்களை விரைவாகக் கற்பிக்க முடியும்.
iii. பாட அறிமுகம், பாட இடைவெளிகளை நிரப்பல், பாட சாராம்சம் போன்றவற்றை எளிதாக மேற்கொள்ள முடியும்.

**32. விரிவுரை முறைக் கற்பித்தலின் குறைபாடுகள் யாவை?**

i. பாரம்பரியமான, ஆசிரியர் மையக் கல்வியாக அமைந்த, உயிர்ப்பற்ற கற்றல் முறையாகக் காணப்படும்.
ii. மாணவர்களின் செயற்பாடுகளுக்கும் விருப்பங்களுக்கும் தேவைகளுக்கும் இடமளிக்கப்படாது.
iii. மாணவர்களின் அடைவுநிலை பற்றியோ, விளங்கிக் கொண்ட தன்மை பற்றியோ, அக்கறை பற்றியோ அறிவதற்கு வாய்ப் பில்லை.
iv. ஆசிரியர் சொல்பவராகவும் (தகவல்களை வழங்கு பவராகவும்), மாணவர்கள் கேட்பவராகவும் (தகவல்களைப் பெறுபவராகவும்) காணப்படுவர்.

**33. விரிவுரைமுறைக் கற்பித்தலின் குறைபாடுகளை நீக்குவதற்கான வழிமுறைகள் யாவை?**

i. விரிவுரையுடன் கலந்துரையாடல், கேள்வி கேட்டல், காட்சிப் படுத்தல், குழுமுறை செய்து காட்டல் முறை ஆகியவற்றைத் தொடர்புபடுத்திக் கற்பிக்கலாம்.
ii. கலந்துரையாடலில் கற்ற, கற்கப் போகின்ற விடயங்கள் தொடர்பான கருத்தாடல்களை மேற்கொள்ளலாம்.
iii. நவீன கற்பித்தல் சாதனங்களை இடைக்கிடையே பயன் படுத்திக் கருத்துப் பரிமாற்றம், விளக்கமளித்தல் ஆகிய வற்றை மேற் கொள்ளலாம்.

**34. குழுமுறைக் கற்பித்தலின் பயன்பாடுகள் யாவை?**

i. சமவயதுப் பிள்ளைகள் இணைந்து செயற்படுவதால் உயிர்ப்பும், செயற்பாடும் நிறைந்ததாகக் காணப்படும்.

ii. தேடியறிதல், ஒப்படை, விளையாட்டுமுறை முதலான வற்றில் இம் முறை கட்டாயம் இடம்பெற வேண்டும். தற்காலப் பாடசாலைகளில் '5E' மாதிரியில் கண்டறிதல் முறை பின்பற்றப்படுவது முக்கியமானதாகும்.

iii. மாணவரிடையே கூட்டுறவு, தலைமைத்துவம் முதலான பண்புகளும் குழுமுறைக் கற்றல் - கற்பித்தலினூடாக வளர்ச்சியடையும்.

**35. குழுமுறைச் செயற்பாடுகளில் இடம் பெறக்கூடிய குறைபாடுகள் எவை?**

i. ஒரு சில மாணவர் செயற்படவும், ஏனையோர் அக்கறை யின்றி இருக்கவும் வாய்ப்பேற்படும்.

ii. கூடுதலான நேரம் விரயமாக்கப்படும்.

iii. தேவையற்ற விடயங்களிலும், தர்க்கங்களிலும் கவனஞ் செலுத்தப்படும்.

**36. வினாவிடை முறைக்கற்பித்தலின் நன்மைகள் யாவை?**

i. மாணவர்களின் ஞாபகம், கிரகித்தல், பகுக்கும் திறன் ஆகியவற்றை அறிந்து கொள்ள ஆசிரியர் வினாக் கேட்க முடிதல்.

ii. சந்தேகங்களை நிவர்த்தி செய்ய மாணவர்கள் ஆசிரியரிடம் வினவ முடிதல்.

iii. பொருத்தமான விடைகளை இனங்காண்பதற்கும் வினா - விடை முறை உதவுதல்.

iv. மாணவரின் பாடரீதியான கவனிப்பையும் அக்கறையையும் ஏற்படுத்தவும் ஆசிரியர் வினா - விடை முறையினைப் பயன்படுத்தல்.

v. ஆசிரியர் – மாணவர் தொடர்பு வலுவடையவும் உதவுதல்.

**37. செய்துகாட்டல் முறையினைக் கற்றலில் பயன்படுத்தும் போது கவனிக்க வேண்டியன யாவை?**

i. செய்து காட்டலின் குறிக்கோளை மாணவர் விளங்கிக் கொள்ளல்.

ii. மாணவரை ஆர்வமூட்டக் கூடியதாகவும், தெளிவாகவும் அமைதல்.

iii. படிமுறையாகச் சமர்ப்பிக்கப்படல்.

iv. தேவையான கற்றல் சாதனங்களைத் தயார்ப்படுத்தி வைத்திருத்தலும், ஒத்திகை பார்த்திருத்தலும்.

v. கலந்துரையாடலுக்கு மேலதிக சந்தர்ப்பம் வழங்கல்.

vi. மாணவர் செய்கையில் ஈடுபடும் போது அதிக கவனம் செலுத்தல்.

vii. தேவைப்படின் மீண்டும் செய்து காட்டல்.

**38. கற்றல் - கற்பித்தலில் கலந்துரையாடல் முறையின் சாதக - பாதகங்கள் யாவை?**

i. மாணவர்மையக் கற்றலாக உயிர்ப்புடன் விளங்கும்.

ii. குறிப்பிட்ட பிரச்சினை பற்றிக் கலந்துரையாடுவதற்குரிய தகவல்களைப் பெறும் பொருட்டு நேரகாலத்துடன் அறிவிக்க வேண்டும், இல்லையேல் பாதிப்புகள் ஏற்படும். நேர விரயம் உண்டாகும்.

iii. மாணர்கள் ஆர்வமுடன் பங்குபற்ற வாய்ப்புண்டு. இருப்பினும் குறிப்பட்ட விடய எல்லை தாண்டிவிடாது நெறிப்படுத்தல் அவசியம்.

iv. ஆசிரியர் – மாணவ தொடர்பு வலுவடையும்.

**39. கோட்டிமுறைக் கற்பித்தல் எனப்படுவது யாது?**

படிமுறைக் கற்பித்தல் அல்லது நிரலித்த கற்பித்தல் முறை

**40. படிமுறைக் கற்பித்தல் எவ்வாறு அமைகிறது?**

இதில் ஒவ்வொரு பாடமும் பல்வேறு படிகளாகப் பிரிக்கப்பட்டுக் கற்பிக்கப்படும்.

**41. படிமுறைக் கற்பித்தல் அல்லது நிரலித்த கற்பித்தலின் பயன் பாடுகள் யாவை?**

i. ஒவ்வொரு மாணவனதும், மாணவியினதும் வேகத்திற்கு ஏற்றதாகக் கற்பிக்க முடியும்.

ii. கற்பிக்கப்படும் ஒவ்வொரு படிநிலையிலும் மாணவரை மேம்பாட்டையச் செய்ய முடியும்.

iii. குறித்ததொரு படிநிலைக்குரிய பாட அலகினைத் தெளிவாக விளங்கிக் கொண்டே அடுத்த அலகுக்குச் செல்ல முடியும். உதாரணமாகக் கணிதபாடத்தில் கூட்டல், கழித்தல், பெருக்கல், பிரித்தல் என்றவாறு படிநிலையில் அமையும்.

**42. நுண்முறைக் கற்பித்தல் என்பதனால் கருதப்படுவது யாது?**

கற்றல் - கற்பித்தல் செயன்முறையின் போது குறிப்பிட்ட விடயத்தினை விளங்கிக் கொள்ள முடியாத மாணவரொருவருக்கு அல்லது சிறுகுழுவினருக்குக் குறிப்பிட்ட விடயம் தொடர்பான கற்றல் அனுபவத்தினைச் சில நிமிட நேரங்களுக்குள் (5 அல்லது 6 நிமிடங்கள்) பெற்றுக் கொடுப்பது நுண்முறைக் கற்பித்தலாகும்.

உதாரணமாக

i. பாகைமானியைப் பயன்படுத்தி அளக்கத் தெரியாத மாணவருக்கு அதனைப் பயிற்சி மூலம் தெரியவைத்தல்.
ii. தமிழிலுள்ள சில எழுத்துக்களை உறுப்பமைய எழுத முடியாதவர்களுக்கு எழுதிக் காட்டல்.
iii. நீள, அகலங்களை மீற்றர் சட்டத்தினால் அளக்க முடியாதவர்களுக்கு மீற்றர் சட்டத்தினை பயன்படுத்தி அளந்து காண்பித்தல்.
iv. கணிதபாடக் கணக்கொன்றில் இடர்ப்படுவோருக்கு அதனைச் செய்யக்கூடிய நுட்பங்களை எழுத்துக் காட்டல்.

**43. சிந்தனையைக் கிளறும் கற்பித்தல் முறையின் இயல்பு யாது?**

யாதேனுமொரு பிரச்சினை அல்லது முரண்பாடு தொடர்பாக மாணவர்களின் எல்லாத் துலங்கல்களையும் (கருத்துக்களையும்) தெரிவிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்கி அவர்களின் சிந்தனையைத் தூண்டிவிடுவது சிந்தனையைக் கிளறும் கற்பித்தலாகும். இதில் சரியாக, பிழையாகத் தெரிவிக்கப்படும் கருத்துகள் பற்றிக் கலந்துரையாடி முடிவுக்கு வர இயலும்.

உதாரணமாக

இடைநிலை வகுப்பு மாணவர்களுக்குப் பாலியற் கல்வி அவசியமா? என்பதைக் கொள்ள முடியும்.

**44. பாத்திரமேற்று நடித்தல் (நாடகமாக நடித்தல்) கற்பித்தலின் பண்புகள் யாவை?**

இது முழுவதும் மாணவர்கள் பின்பற்றத் தக்கவாறு, யாதேனும் ஒரு கதா பாத்திரத்தைத் தேர்நதெடுத்து, அதற்குரிய குணாம்சங்களுடன் நடிப்பினூடாக வெளிப்படுத்தப்படுவதாகும். அரச நாடகங்கள், இலக்கிய நாடகங்கள், உரையாடல்கள் இதற்குரியவை.

**45. போலச் செய்தல் மூலமான கற்றலும் கற்பித்தலும் எவ்வாறு காணப்படும்?**

இதன் போது நேரடியான அனுபவத்தைப் பெறமுடியும். ஆசிரியரால் செய்து காட்டப்படும் அனுபவம் மாணவரைச் சென்றடைதலாகும். பாவனை செய்தலை இது குறிக்கும். ஆரம்ப வகுப்புகளுக்கு மிகவும் பொருத்தமானதாகும்.

**46. விளையாட்டு முறை மூலமான கற்றல் எவ்வாறு நிகழுகின்றது?**

ஆரம்ப வகுப்புகளில் பின்பற்றத்தக்க இக் கற்றல் – கற்பித்தல் முறையினூடாக மாணவர்கள் ஆர்வத்துடனும், மகிழச்சியுடனும் கற்க முடியும். கணிதம், தமிழ், அழகியல் முதலான பல பாடங்களையும் இம் முறை மூலம் கற்பிக்க முடியும்.

**47. கண்டறிதல் முறை மூலமான கற்றல் எனப்படுவது யாது?**

இடைநிலை வகுப்புகளுக்குப் பொருத்தமானது இம்முறையாகும். யாதாயினுமொரு பிரச்சினையை அல்லது நிகழ்ச்சியைத் தேர்ந்தெடுத்து, அது தொடர்பான எல்லாத் தகவல்களையும் சேகரித்து, அவற்றைப் பகுப்பாய்வு செய்வதனூடாகப் பதிலை அல்லது அறிவைப் பெற்றுக் கொள்வதாகக் கண்டறிதல் முறை விளங்குகிறது. இதுவும் பரிசோதனை முறையினை ஒத்த பண்புகளுடன் காணப்படுவதை உணரமுடியும்.

**48. கூட்டுக் கற்பித்தல் அல்லது பல்தரக் கற்பித்தல் எனப்படுவது யாது?**

i. இம்முறை ஆசிரியர் பற்றாக்குறையாகவுள்ள பாடசாலை களிலும், மாணவர்கள் குறையாகவுள்ள பாடசாலைகளிலும் பின்பற்றப் படும்.

ii. ஒத்த பாடங்கள், ஒத்த தலைப்புகள் ஆகியவற்றினை அண்மிய தரங்களிலுள்ள மாணவர்களை ஒன்றிணைத்துக் கற்பிக்க முடியும்.

iii. கட்டுரை எழுதுதல், கடிதம் எழுதுதல், சுருக்கம் எழுதுதல் முதலான பொது விடயங்களை சிரேஷ்ட இடைநிலை வகுப்புக்குரிய தரம் 9, 10, 11 மாணவர்களை ஒன்றிணைத்து மொழிப் பாடத்திற்காகக் கற்பிக்க முடிவது ஓர் உதாரண மாகும்.

**49. அணிமுறைக் கற்பித்தல் முறையினைத் தெளிவுபடுத்துக.**

பாடசாலையில் இருக்கும் வளங்களை உச்ச அளவில் பயன்படுத்தும் நோக்கத்துடன் ஒன்றுக்கு மேற்பட்ட ஆசிரியர்கள் இணைந்து செயற்படும் கற்பித்தல் முறையிதுவாகும். ஆரம்ப - இடைநிலை வகுப்புகளில் பல்வேறு பாடங்களின் போதும் இதனைப் பயன்படுத்த முடியும். பாடசாலை நேரசூசி, ஒவ்வொரு வகுப்பின் மாணவர் தொகை ஆகியவற்றை இடைக்கிடை மாற்றியும் இக் கற்பித்தலை மேற்கொள்ள வேண்டியிருக்கும். உதாரணமாக வரலாற்றுப் பாடத்தின் போது விளக்கமளிக்கும் ஆசிரியருடன், புறவுருவப் படங்களை நன்கு வரையக்கூடிய ஆசிரியரும் சேர்ந்து செயற்பட முடியும்.

**50. ஒப்படை முறைக் கற்றலின் பண்புகள் யாவை?**

i. இடைநிலை, ஆரம்ப நிலை கல்வியில் தனியாளாகவோ, குழுவாகவோ ஒப்படை முறைக் கற்றலை மேற்கொள்ள முடியும்.
ii. இது ஒரு மாணவர்மையக் கற்றல் முறையாகும்.
iii. பாடப்புத்தகம், வேலைத்திட்டம் ஆகியவற்றின் அடிப்படையில் ஆலோசனைகள், வரையறைகள் ஆகியவற்றுக் கேற்றதாகக் கருத்துகளைத் தேடித் தொகுக்கும் முயற்சி மேற்கொள்ளப்படும்.
iv. குறித்த நோக்கத்தை அறிந்து மாணவர் செயற்படல், உயிர்புடன் செயற்படல் முக்கியமானது.
v. மாணவரின் அறிவு, திறன், மனப்பாங்கு ஆகியவற்றுக்கும் நேரத்துக்கும் பொருந்துவதாக அமைதல் வேண்டும்.

**51. வெளிக்களக் கற்றல் என்பது யாது?**

ஆரம்ப, இடைநிலை வகுப்புகளுக்கான கற்றல் வேலைத் திட்டங்களுக்கு அமைவாக மேற்கொள்ளப்படும் குறுகிய காலத்துக்குரிய களச் சுற்றுலாக்கள், களச் செயற்பாடுகள் ஆகியன வெளிக்களக் கற்றலில் அடங்கும். வரலாற்று இடங்கள், சமயத்தலங்கள், பெறுமதி வாய்ந்த கட்டடங்கள், நினைவிடங்கள், சூழல்கள், புவியமைவுகள் போன்றவற்றை நேரடியாகப் பார்த்து அறிவும், அனுபவமும் பெறும் விதமாக இக் கற்றல் முறை காணப்படும்.

**52. முன்வைத்தல்(Presentation) கற்றல் முறை எவ்வாறு மேற் கொள்ளப்படுகிறது?**

i. இது தனியாளின் ஆற்றலை, தகைமையை வெளிப்படுத்தும் ஓர் அணுகுமுறையாகும்.

ii. பாடம், தலைப்பு, விடயம் தொடர்பாகத் தாம் செவிமடுத்தவற்றை, பெற்றுக் கொண்ட தகவல்களை ஒழுங்குபடுத்தி வகுப்பறையில் முன் வைத்தலாகும்.

iii. 5E மாதிரியில் குழுமுறையிலான கண்டறிதலின் பின்னர் மாணவர்களில் ஒருவர் விளக்கமளித்தல் முறையும் இத்தகையதேயாகும்..

**53. ஆசிரியர் ஒருவர் கற்பித்தல் முறையினைத் தெரிவு செய்யும் போது கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள் யாவை?**

i. பாடத்தின் தன்மை

ii. பாடத்தின் நோக்கம்

iii. மாணவர்களின் தன்மை

iv. வகுப்பு மட்டங்கள்

v. வளங்கள்

vi. சூழற்காரணிகள்

**54. வகுப்பறையில் மாணவரிடையே விருத்தி செய்யப்பட வேண்டி தேர்ச்சிகளாக எதிர்பார்க்கப்படும் KASP என்பன யாவை?**

i. அறிவு (Knowledge)

ii. மனப்பாங்கு (Attitude)

iii. திறன் (Skill)

iv. பயிற்சி (Practice)

**55. தர உள்ளீடுகள் (கற்றல் துணைச்சாதனங்கள்) எனப்படுபவை யாவை?**

வகுப்பறைக் கற்றல் செயற்பாட்டின் தரத்தினை மேம்பாட டையச் செய்யும் பொருட்டு துணையாகப் பயன்படுத்தப் படும் பௌதீக, மனித வளங்களான கருவிகள் அனைத்தும் தர உள்ளீடுகள் அல்லது கற்றல் துணைச் சாதனங்கள் எனப்படும்.

**56. கற்றலின் போது தர உள்ளீடுகளைப் பயன்படுத்துவதால் ஏற்படும் நன்மைகள் யாவை?**

i. கற்றல் வேகமடையும்.

ii. மாணவரை ஊக்குவித்துக் கவனத்துடனும் ஆர்வத்துடனும் கற்கச் செய்யலாம்.

iii. சிக்கலான எண்ணக்கருக்களை விளங்கிக் கொள்ள முடியும்.

iv. சொற்கள் மூலம் பெறுவதைவிட ஆழமான விளக்கத்தைப் பெறலாம்.

v. ஆசிரியர் - மாணவர் தொடர்பு வலுவடையும்.

vi. சிக்கனமாக நேரத்தைச் செலவிட முடியும்.

vii. ஆசிரியரின் சொல்லாடற் குறைபாட்டை நீக்க முடியும்.

viii. கண்காணிப்பு, தூண்டல், அவதானிப்பு, இரசனை, வாசிப்பு முதலான அறிவைத் திரட்டும் ஊடகங்களைப் பயன்படுத்த மாணவர் தூண்டப்படுவர்.

ix. நிதர்சனமான அனுபவக் கற்றலுக்கு வழிவகுக்கும்.

x. எட்கார் டேலின் அனுபவக் கூம்பு நிலைக்கேற்ப பருப்பொருள் நிலை, கருத்து நிலை, எண்ணக்கரு நிலை ஆகியவற்றுடனான அனுபவம் பெறமுடியும்.

**57. தர உள்ளீடுகள் (கற்பித்தல் சாதனங்கள்) எவ்வாறு வகைப்படுத்தப்படும்?**

i. கட்புல சாதனங்கள் (Visual Materials)

ii. செவிப்புல சாதனங்கள் (Audio Materials)

iii. கட்புல - செவிப்புல சாதனங்கள் (Visual – Audio Materials)

iv. மாதிரியுருக்கள் (Models)

v. தன்வகைகள் (Specimans)

vi. செய்துகாட்டல்கள் அல்லது காட்சிப்படுத்தல்கள் (Demon strations)

vii. நிஜவாழ்க்கை அனுபவங்கள் (Real Life Experiences)

**58. கட்புல சாதனங்களில் அடங்குபவை யாவை?**

அ. எறிவையில் சாதனங்கள் (ஒளியை ஊடுபுகவிடாதவை) (Mon – Projector Materials) கரும்பலகை (Black board), பச்சைப் பலகை (Green Board), காந்தப் பலகை (Magnetic Board), காந்தச் சுண்ணப் பலகை (Magnetic chalk board), நிழற் பிரதிப் பலகை (Print – out Board), பிளனல் பலகை (Flannel Board), செய்திப் பலகை (Bulletin Board).

ஆ. எறிவைச் சாதனங்கள் (ஒளியை ஊடுபுகவிடுபவை) (Projector Materials):

i. மேந்தலை எறிவை (Over Head Projector)
ii. வழுக்கிகள் / வழுக்கி எறிவை (Slides/Slide Projector)
iii. படச்சுருள்கள் /படச்சுருள் எறிவை (Films/ Film Projector)
iv. பெட்டிகை நாடா எறிவை (Cassette Projector)
v. மௌனப் படச்சுருள் எறிவை (ஊமைப்படச்சுருள்) (Silent Cinema Projector)
vi. நுணுக்கெறிவை (Micro Projector)

இ. வரைதல் சார் பொருட்கள் (Drawing Materials):

i. ஒளிப்படங்கள் (Photographs)
ii. சித்திரங்கள் (Drawings)
iii. விளக்கப்படங்களும் அட்டவணைகளும்
iv. சுவரொட்டிகள் (Posters)
v. வரைபுகள் (Graphs)
vi. தேசப்படங்கள் (Maps)

**59. செவிப்புல சாதனங்களாகக் கற்றலுக்குத் துணை செய்பவை யாவை?**

i. ஒலிப்பதிவுத் தட்டு (Records)
ii. ஒலிப்பதிவு நாடாக்கள் (Audio tapes)
iii. ஒலிப்பதியி/ இறுவட்டு (Audio Cassette)
iv. வானொலி (Radio)

**60. கற்றல் - கற்பித்தலுக்குப் பயன்படும் கட்புல - செவிப்புலச் சாதனங்கள் யாவை?**

i. பேசும் படம் (Sound Cinema Talke)
ii. தொலைக்காட்சி (Television)
iii. திறந்த சுற்றுக்கள் (Open Circuits)
iv. மூடிய சுற்றுக்கள் (Closed Circuits)
v. வீடியோ பதியி/வீடியோ இறுவட்டு (Video Cassette)
vi. கணினி ( Computer)
vii. இணையம் (Internet)
viii. பல்லூடக எறியி (Multimedia Projector)

**61. கற்பித்தலுக்காகப் பயன்படும் மாதிரியுருக்களின் வகைகள் யாவை?**

*சிறிதாக்கப்பட்ட மாதிரியுருக்கள் , பெரிதாக்கப்பட்ட மாதிரி யுருக்கள், குறுக்குவெட்டு மாதிரியுருக்கள், செயற்படு மாதிரியுருக்கள்.*

**62. கற்பித்தல் துணைச் சாதனமான தன்வகைகள் (Specimens) எனப்படுபவை யாவை?**

*நேரடியாகக் காட்சிப்படுத்தப்படும் உண்மைப் பொருட்கள்*

**63. கற்பித்தலின் போது நிஜவாழ்க்கை அனுபவங்களாகப் பயன் படுத்தக்கூடியவை யாவை?**

i. *நாடகபாணி அனுபவங்கள்* (Dramatized Experiences)

ii. *இயல்பான நாடகங்கள்* (Real Experiences)

iii. *நாடகங்கள்* (Stylized Drama)

iv. *பொம்மலாட்டம்* (Puppetry)

v. *வெளிக்களச் சுற்றுலாக்கள்/கல்விச் சுற்றுலாக்கள்* (Field Trips/Education tours)

vi. *நேரடியான சொற்பொழிவுகள், பேச்சுக்கள், உரையாடல் கள், இசைக்கச்சேரிகள் முதலானவை.*

**64. எறிவையில் கட்புல சாதனங்களின் இயல்புகள் யாவை?**

i. *கருப்பு நிறமாகவுள்ளதும் சுண்ணக் கட்டி (வெண்கட்டி) மற்றும் நிறக் கட்டிகள் கொண்டு எழுதத்தக்கதும் கரும்பலகையாகும். இதனைச் சுண்ணப்பலகை எனவும் அழைக்கலாம்.*

ii. *கண்ணுக்குக் குளிர்ச்சிதரக்கூடிய பச்சை நிறத்தினைப் பயன்படுத்தப்படும் பலகை, பச்சைப் பலகையாகும்*

iii. *காந்தச் சுண்ணப் பலகையும் கரும்பலகை போன்றதே. சுண்ணக் கட்டியினால் இதில் எழுதலாம். இது உலோகத் தகட்டினால் தயாரிக்கப்பட்டிருக்கும். இந்த உலோகத் தகட்டில் காந்தத் துண்டின் உதவியுடன் வரைபடங்களை நிறுத்த முடியும்.*

iv. *உலோகத் தகட்டினால் தயாரிக்கப்பட்ட காந்தப்பலகை பெரும்பாலும் அலுவலகங்களில் பயன்படுத்தப்படும். காந்தத் துண்டின் உதவியுடன் இதில் உபகரணங்களை நிறுத்த முடியும். இதன் மேற்பரப்பு வெண்மை நிறமுடைய தாகையால் எழுதுவதற்கு ஃபெல்ட்பேனா* (Felt Pen) *பயன்படுத்தப்படும்.*

v. பிளனெல் துணியினால் மூடித் தயாரிக்கப்பட்ட பிளனெல் பலகையில் கடதாசி, துணி போன்றவற்றாலான படங்களை அரத்தாள்கள் மூலம் இப்பலகையில் பொருத்திக் காட்சிப் படுத்தலாம்.

vi. அறிவித்தல் பலகை போன்றது செய்திப் பலகையாகும். சமகாலத் தகவல்கள் இதில் காட்சிப்படுத்தப்படலாம்.

vii. ஒலிப்பிரதிப் பலகை என்பது உயர்தரப் பொறித் தொழினுட்பத்துடன் கூடியது. மின்சாரத்தினால் செயற்படுவது. இதன் மேற்பரப்பு வெண்மையானது ஃபெல்ட்பேனாவைப் பயன்படுத்தி எழுதக்கூடியது. நான்கு திரைகளைக் கொண்டது. ஒரு திரையில் எழுதிமுடிந்ததும் பொத்தானை அழுத்தியதும் மறு திரை தோன்றும்.

**65. தகவல் தொழினுட்ப வளர்ச்சி காரணமாகச் சமகாலத்தில் பின்பற்றக்கூடிய கற்றல் முறைகள் யாவை?**

i. இணையம் மூலம் கற்றல்

ii. தோடர் முறையில் (Online) கற்றல்.

iii. இலத்திரனியல் தபால் (E - mail) மூலம் கற்றல்

iv. கைபேசிகளில் தகவல்களைச் சேமித்து வைத்துக் கற்றல்

v. மின் பத்திரிகைகள், சஞ்சிகைகள் மூலம் கற்றல்.

vi. இறுவட்டுகள் மூலம் கற்றல்.

**66. இலங்கையில் தற்போதுள்ள பாடசாலை வகைகள் யாவை?**

அ. 1AB தரப் பாடசாலைகள் (விடுதி வசதியுடன் கூடியதும், க.பொ.த உயர்தரத்தில் கணிதம், விஞ்ஞானம், வர்த்தகம், கலை ஆகிய பிரிவுகளைக் கொண்டவையுமாகும்).

ஆ. 1C தரப் பாடசாலைகள் (க.பொ.த உயர்தரத்தில் கலை, வர்த்தகப் பிரிவுகளைக் கொண்டவை).

இ. இரண்டாந்தரப் பாடசாலைகள் - தரம் 1 - 11 வரையிலான வகுப்புகளையுடையவை.

ஈ. மூன்றாந்தரப் பாடசாலைகள் - தரம் 1 - 5 வரையிலான வகுப்புகளையுடையவை

**67. இலங்கையில் தற்போதுள்ள பாடசாலைகளின் அண்ணளவான எண்ணிக்கை யாது?**

i. அரசாங்கப் பாடசாலைகள் – 9870

ii. பௌத்த பிரிவேனாப் பாடசாலைகள் – 561

iii. உதவி நன்கொடை பெறும் தனியார் பாடசாலைகள் – 33

iv. உதவி நன்கொடை பெறாத தனியார் பாடசாலைகள் – 33
இவைதவிரச் சர்வதேசப் பாடசாலைகளும் காணப்படுகின்றன.

**73. இலங்கையில் ஆசிரியர்களுக்கான பயிற்சியை வழங்கும் நிறுவனங்கள் யாவை?**

அ. ஆசிரியர் கலாசாலைகள்
ஆ. தேசிய கல்விக் கல்லூரிகள்
இ. திறந்த பல்கலைக்கழகம்.
ஈ. மரபுசார் பல்கலைக்கழகங்கள்.
உ. இலங்கைத் தேசிய கல்வி நிறுவகம்.
ஊ. ஆசிரியர் நிலையங்கள்.

**74. இலங்கையின் ஆசிரியர் கலாசாலைகளுக்கும், தேசிய கல்விக் கல்லூரிகளுக்கும் ஆசிரியர் பயிற்சி வழங்குவதில் காணப்படும் வேறுபாடு யாது?**

கல்விக் கல்லூரிகள் ஆசிரியர் ஆவதற்குரிய சேவை முன் பயிற்சியை வழங்குகின்றன. ஆசிரியர் கலாசாலைகள் ஆசிரிய சேவையிலுள்ள பயிற்றப்படாதவர்களுக்கான சேவைக்காலப் பயிற்சியை வழங்குகின்றன.

**75. இலங்கையில் கல்வித்துறைக்கான பீடமுள்ள பல்கலைக்கழகம் எது?**

கொழும்புப் பல்கலைக்கழகம்.

**76. இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கை யாது?**

திறந்த பல்கலைக்கழகம் உட்படப் பதினைந்து (15).

**77. இலங்கையிலுள்ள மரபுசார் பல்கலைக்கழகங்கள் எவை?**

i. கொழும்புப் பல்கலைக்கழகம் (ஸ்ரீபாளி வளாகம் உட்பட)
ii. பேராதனைப் பல்கலைக்கழகம்.
iii. ஸ்ரீ ஜயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.
iv. களனிப் பல்கலைக்கழகம்
v. மொறட்டுவைப் பல்கலைக்கழகம்
vi. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் (வவுனியா வளாகம், இராமநாதன் நுண்கலைக் கழகம் உட்பட)
vii. கிழக்குப் பல்கலைக்கழகம் (திருகோணமலை வளாகம் உட்பட)

viii. தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.
ix. ரஜரட்டப் பல்கலைக்கழகம்
x. சப்பிரகமுவப் பல்கலைக்கழகம்.
xi. வயம்ப பல்கலைக்கழகம்
xii. ஊவா வெல்லஸ பல்கலைக்கழகம்
xiii. கொழும்பு கட்புல, அரங்கேற்றக் கலைகள் பல்கலைக் கழகம்.

**78. இலங்கைப் பல்கலைக்கழகச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லாத உயர்கல்வி நிறுவனங்கள் எவை?**

i. சுதேச மருத்துவ நிறுவகம்.
ii. கம்பஹா விக்ரமாராய்ச்சி ஆயுர்வேத நிறுவகம்.
iii. கொழும்பு பல்கலைக்கழகக் கணினிக் கல்லூரி.
iv. சுவாமி விபுலாநந்தர் அழகியற் கற்கை நிறுவகம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

**79. பொது அல்லாத பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்கள் எவை?**

i. இலங்கைப் பௌத்த பாளிப் பல்கலைக்கழகம் (ஹோமகம - மேல் மாகாணம்)
ii. இலங்கைப் பிக்குமார் பல்கலைக்கழகம் (அநுராதபுரம் - வடமத்திய மாகாணம்)
iii. ஜெனரல் சேர்.ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம் (இரத்மலானை - மேல் மாகாணம்).
iv. இலங்கைத் தொழில், தொழினுட்பப் பல்கலைக்கழகம் (இரத்மலானை - மேல் மாகாணம்).

**80. இலங்கையில் காணப்படும் தொழினுட்பக் கல்லூரிகளின் எண்ணிக்கை யாது?**

37 (சில புதிய கல்லூரிகளும் உருவாக்கப்பட்டுள்ளன)

**81. இலங்கையிலுள்ள தேசியப் பாடசாலைகளின் எண்ணிக்கை யாது?**

சமீபகாலங்களில் பல பாடசாலைகள் தேசியப் பாடசாலைகளாக மாற்றங்கண்டு வருகின்றன. இதனால் இந்த எண்ணிக்கை மாறுபடக்கூடியதாகும். தற்போது 374 தேசியப் பாடசாலைகள் உள்ளன.

**82. மூன்றாம் நிலைக் கல்வியின் கீழ் செயற்படும் நிறுவனங்கள் எவை?**

*பல்கலைக்கழகங்கள், உயர் தொழில்நுட்பக் கல்லூரிகள், மானிய ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட உயர்கல்வி நிறுவனங்கள்.*

**83. இலங்கையின் பாடசாலை நிர்வாகப் பொறுப்புகள் எவ்வாறு காணப்படுகின்றன?**

i. *மத்திய அரசாங்கப் பாடசாலைகள்*
ii. *மாகாணப் பாடசாலைகள்*
iii. *தனியார் பாடசாலைகள்.*

**84. இலங்கைத் தேசியப் பாடசாலைகள் எவற்றின் கீழ் இயங்கு கின்றன?**

*மத்திய கல்வியமைச்சின் கீழ் இயங்குகின்றன.*

**85. இலங்கையில் ஆசிரியர் கலாசாலைகள், கல்விக் கல்லூரிகள் ஆகியவற்றுக்குப் பொறுப்பான அமைச்சு எது?**

*மத்திய கல்வியமைச்சு*

**86. இருபத்தோராம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து இலங்கைப் பாடசாலைகளிடையே மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி முறைமை கள் எவை?**

i. *மாதிரிப் பாடசாலைகள்*
ii. *முன்மொழியப்பட்ட பாடசாலைகள்*
iii. *நவோதயாப் பாடசாலைகள்*
iv. *வெளிச்ச வீட்டுப் பாடசாலைகள்*
v. *பிள்ளை நேயப் பாடசாலைகள்*
vi. *ஆயிரம் பாடசாலைத்திட்டம்.*

**87. 1985 ஆம் ஆண்டின் 28ஆம் இலக்கச் சட்டத்தின் பிரகாரம் இலங்கையில் நிறுவப்பட்ட கல்வி நிறுவனங்கள் எவை?**

*தேசிய கல்விக் கல்லூரிகள்*

**88. இலங்கையில் முதலாவது தமிழ்மொழி மூலமான தேசிய கல்விக் கல்லூரி எப்போது அமைக்கப்பட்டது?**

*1992 இல் (வவுனியா பூந்தோட்டத்தில்)*

**89. இலங்கையில் கல்விக் கொள்கைகள், நடைமுறைகள், மேற் பார்வைகள் என்பவற்றுக்குப் பொறுப்பாகத் தேசிய கல்வி அதிகார சபை (NATE) எப்போது நிறுவப்பட்டது?**

*1993 இல் (தற்போது செயற்படவில்லை)*

**90. இலங்கையில் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் பயிற்சிகள் எவை?**

*முன்சேவைப் பயிற்சி, சேவைக்காலப் பயிற்சி (தொடருறு பயிற்சி)*

**91. தற்போது இலங்கையிலுள்ள தேசிய கல்விக் கல்லூரிகளின் எண்ணிக்கை யாது?**

*பத்தொன்பது (19)*

*18வது தே.க.கல்லூரி வாண்மைத்துவம் தொடர்பான குறுகிய காலப் பயிற்சியையும், மும் மொழிகளுக்கான பயிற்சியையும் வழங்கும் பொருட்டுப் பேராதனையிலுள்ள பனிதனிய* **(Panethaniya)** *என்னுமிடத்தில் இயங்குகிறது. 19வது தே.க. கல்லூரியானது வணிகமும் கணக்கியலும் பயிற்சிக்காக மகரகமவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 20வது தே.க கல்லூரி யானது விசேட தேவைகள் பயிற்சிக்காக குருநாகலையில் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.*

**92. இலங்கையில் தற்போது செயற்படும் ஆசிரியர் நிலையங்கள் எத்தனை?**

*100*

**93. ஆசிரியர் கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள் இலங்கையில் முன்னெ டுக்கப்படும் பல்கலைக்கழகங்கள் எவை?**

*கொழும்பு, பேராதனை, யாழ்ப்பாணம், கிழக்கிலங்கை (மட்டக்களப்பு), தென்கிழக்கு (ஒலுவில்), திறந்த பல்கலைக் கழகம் ஆகியன.*

**94. இலங்கைப் பல்கலைக்கழகங்களிலும், தேசிய கல்வி நிறுவகத் திலும் வழங்கப்படும் ஆசிரியர்களுக்கான கல்விசார்ந்த பட்டங்கள் யாவை?**

*பட்டப்பின் கல்வி டிப்புளோமா, கல்விமாணி, முது கல்விமாணி, கல்வியியல் முதுவிஞ்ஞானமாணி, கல்வித்தத்துவ முதுமாணி, கல்வித் தத்துவகலாநிதி ஆகியன.*

# 14. கல்விசார் குறிப்புகள்

01. "கல்வி என்னும் ஞாயிற்றுத் தொகுதியின் சூரியன் பிள்ளை யாகும்" எனக் கூறியவர் ஜோன் டூயி ஆவர்.

02. பிள்ளையின் ஆசைகளுக்கும் ஆற்றல்களுக்கும் ஏற்பக் கற்றல் முறைகளைத் தயார் செய்ய வேண்டும் என மரியா மொன்ரிசோரி அம்மையார் குறிப்பிட்டுள்ளார்.

03. மாணவனுக்குச் சுயமாகக் கற்கத் தேவையான சுதந்திரத்தைப் போல் சுற்றாடலையும் வழங்க வேண்டும் எனப் பெஸ்டலோசி கூறியுள்ளார்.

04. பாடசாலையினால் நிறுவப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றும் பாடசாலை பயனுறுதி வாய்ந்த பாடசாலையாகும்.

05. கல்வி நிர்வாகப் பொறுப்புகளைப் பன்முகப்படுத்தும் போது பாடசாலைக்கு மிகக் கிட்டிய நிர்வாக அலகு கோட்டக்கல்வி அலுவலகமாகும்.

06. கொலிஜி அல்லது மொனாஸ்ரறி என்னும் உயர்கல்வி நிறுவகம் ஆரம்பிக்கப் பட்டது அநுராதபுரக் காலத்திலாகும்.

07. இலங்கையில் தேர்ச்சிமட்டப் பாடவிதானம் அறிமுகஞ் செய்யப்பட்டது 1998 இல் ஆகும்.

08. தற்கால வகுப்பறையில் ஆசிரியர் வசதிப்படுத்துனராகச் செயற்பட வேண்டும்.

09. தொல்லைகளின்றி அல்லது தொல்லைகளுக்குத் தாக்குப் பிடிக்கக் கூடிய பாடசாலை, பாதுகாப்பான பாடசாலை எனப்படும்.

10. ஒழுக்க, ஆத்மீகப் பண்புகளைக் கொண்டவரை உருவாக்கல் தேசிய விழுமியக் கல்வியின் நோக்கமாகும்.

11. ஒரு குறித்த நபர் சமூகத்தின் ஒரு தளத்திலிருந்து இன்னொரு தளத்திற்குச் செல்லல் சமூகப் பெயர்வு எனப்படும்.

12. வகுப்பறையில் ஆசிரியர் எதிர்கொள்ளும் பல்வேறு கற்றல் - கற்பித்தல் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உகந்த பிரவேசமாகச் செயல்நிலை ஆய்வு பயன்படுத்தப்படலாம்.

13. கல்வி அபிவிருத்திக்கான நிகழ்ச்சித் திட்டங்கள் பற்றிக் கல்வி அமைச்சருக்கு ஆலோசனையளித்தல் தேசிய கல்வி நிறுவகத்தின் பிரதான நோக்கமாகும்.

14. டொனமூர் அரசியலமைப்புச் சீர்திருத்தங்களின் கீழ் அரச கழகத்தில் (State Council) கல்விக்குப் பொறுப்பாயிருந்த அமைச்சர் C.W.W. கன்னங்கரா அவர்கள்.

15. யாழ்ப்பாணப் பிரதேசத்தில் (குடாநாட்டில்) மட்டும் செயற்பட்ட கிறிஸ்தவ மிசனறி, அமெரிக்கன் மிசனறியாகும்.

16. பாடசாலைத் தொகுதியில் பணியாற்றும் ஆசிரியர்களின் தொடர்ச்சியான பயிற்சிகளுக்காகப் பிரதேச ரீதியில் அமைக்கப்பட்ட நிறுவகம் ஆசிரிய மத்திய நிலையம் எனப்படும்.

17. முன்சேவை ஆசிரியர் பயிற்சிப் பாடநெறிகளை நடத்தும் முக்கிய நிறுவனங்கள் தேசிய கல்வியியற் கல்லூரி, பல்கலைக்கழகம் (கல்விமாணிப் பட்டநெறி) ஆகியன.

18. தற்கால இலங்கையில் தேசிய கல்விச் செயலொழுங்கின் மூலம் நிறைவேற்றிக் கொள்ள எதிர்பார்க்கின்ற தேசிய பொதுக் குறிக்கோள்களின் எண்ணிக்கை 08 ஆகும்.

19. பாடசாலைப் பிள்ளைகளுக்கு இடர் முகாமைத்துவம் தொடர்பான அறிவை வழங்கும் பிரதான பாடங்கள் விஞ்ஞானமும் புவியியலுமாகும்.

20. ஐ.நா சபையின் மனித உரிமைகள் பற்றிய வெளியீட்டின் 26ஆம் இலக்கச் சரத்தின் மூலம், "அனைவரும் கல்வி பெற உரித்துடையர்" என்னும் மனித உரிமை வலியுறுத்தப் பட்டுள்ளது.

21. கல்வியின் மூலம் விரிவுபடுத்த வேண்டிய மூன்று புலங்கள் அறிவு, திறன், மனப்பாங்கு ஆகும்.

22. வார்தாக் கல்வி முறையை அறிமுகஞ் செய்தவர் மகாத்மா காந்தி ஆவார்.

23. அறிவுசார் துறையின் பாகுபாட்டை முன்வைத்த கல்வியியலாளர் பெஞ்சமின் புளூம் அவர்கள்.

24. தவணை முடிவில் நடத்தப்படும் மதிப்பீடு, திரண்ட மதிப்பீடு ஆகும்.

25. பல்வகை நுண்ணறிவு விதியை முன்வைத்த கல்வியாளர் ஹொவார்ட் காட்னர்.

26. அடைவுச் சோதனையொன்றில் அடங்க வேண்டிய இரண்டு அடிப்படை இயல்புகள் நம்பகமும் தகுதியும் ஆகும்.

27. பாடசாலை மட்டக் கணிப்பீட்டின் மூலம் மாணவர்கள்

   i. தேர்ச்சியை அளவிடல்.

   ii. இயலாமையை இனங்காணல் ஆகிய அனுகூலங்களைப் பெறலாம்.

28. கல்வியுடன் தொடர்புடைய பல்வேறு எண்ணக்கருக்களை ஆழமாகப் பகுப்பாய்ந்து கருத்தறிவிப்பது தத்துவங்களின் மூலமாகும்.

29. இன்று இலங்கையில் பாவனையிலுள்ள ஆரம்ப, இடைநிலைப் பாடசாலைக் கலைத்திட்டங்கள் தேர்ச்சிமையக் கலைத்திட்டங் களாகும்.

30. பல்வகையான கஷ்டங்களினால் பாடசாலைக் கல்விக்கான வாய்ப்பற்றுப்போன அல்லது தடைப்பட்ட நபர்களுக்கு, மீண்டும் தாம் விரும்பிய எளிய வழிகளினூடாகக் கல்வியைப் பெற இடமளித்தல் திறந்த கல்வி எனப்படும்.

31. இலங்கையின் முன்பள்ளிக் கல்வியானது முறைசார் கல்விச் செயற்பாட்டின் ஒரு மட்டமாகப் பேணப்படுகிறது.

32. சமூகம் நவீனமடைய உதவும் கல்விச் செயற்பாடுகளில்

   i. புதிய தொழினுட்பங்களைப் பயன்படுத்தல்.

   ii. புதிய ஆக்கத்திறன்

   iii. பன்மொழிகளைக் கற்றல்

   iv. புதிய கண்டுபிடிப்புகள்

   v. தேர்ச்சிமையக் கல்வி ஆகியனவும் அடங்குகின்றன.

33. சர்வதேச மனித உரிமைகள் சட்டத்திற்கு அடிப்படையான பிரதான பிரகடனங்களாக

i. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பிரகடனம்

ii. ஐக்கிய நாடுகள் சிறுவர் உரிமைகள் பிரகடனம் ஆகியவை விளங்குகின்றன.

34. இன்றைய இலங்கைக் கல்வி முறையினுள்

i. கல்வியில் சமசந்தர்ப்பம் இன்மை

ii. கல்வியில் தரமின்மை

iii. கல்வியில் வீண்விரயம்

iv. மாணவர் இடைவிலகல்

v. அரசியல் தலையீடு

vi. தரம் - 1 இற்கான மாணவர் அனுமதியில் குறைபாடு ஆகியவை பிரதான பிரச்சினைகளாகக் காணப்படுகின்றன.

35. கல்விப் பிரவேசங்களில்

i. மாணவர் மையப் பிரவேசம்

ii. பாடமையப் பிரவேசம்

iii. சமூக மையப் பிரவேசம்

iv. திறன் சார்மையப் பிரவேசம்

v. ஆசிரியமையப் பிரவேசம் என்பன முக்கியமானவைகளாகும்.

36. "கல்வி என்பது வகுப்பறை ஆராய்ச்சி" எனச் சோக்கிரட்டீசும், இலட்சியமான கருத்து உண்மையின் மீது கல்வி கட்டியெழுப்பப்படுதல் வேண்டும் என்று பிளேட்டோவும், "கல்வியின் நோக்கம் அறிவு" என்று அரிஸ்டோட்டலும் வரையறை செய்துள்ளனர்.

37. நூல்களை வாசிப்பதனால் பெறக்கூடிய நன்மைகளாவன்

குறைவான மன அழுத்தம், அறிவு வளர்ச்சி, கிரகிக்கும் ஆற்றல், சொல்வள அதிகரிப்பு, ஞாபகசக்தி அதிகரிப்பு, பகுப்பாயும் சிந்தனைத்திறன், நுண்ணறிவு வளர்ச்சி, கவனச்சிதறல் ஏற்டாது தவிர்த்தல், எழுத்தாற்றல் வளர்ச்சி, அமைதி.

38. இலங்கையில் C.W.W. கன்னங்கரா குழுவின் ஆலோசனைகள் 01.10.1945 இல் அமுலுக்கு வந்தன.

39. கன்னங்கரா சீர்திருத்தின் அடிப்படையில் 54 மத்திய கல்லூரிகள் நிறுவப்பட்டன. முதன் முதலில் மாத்தளையின் அம்பறம்பொட என்னுமிடத்தில் 1943 இல் மத்திய கல்லூரி அமைக்கப்பட்டது.

40. ஆரம்ப வகுப்பு மாணவரிடையே ஆர்வத்தையும், மகிழ்சியையும் ஊட்டத்தக்க விதத்தில் விருப்புடன் செயற்பாடுகளில் ஈடுபடக்கூடியவாறு ஒழுங்கமைக்கப்பட்ட பாடசாலையைப் பிள்ளை நேயப் பாடசாலை எனலாம்.

41. தொலைக்கல்வி (Distance Education) முறையானது முதலில் ஐக்கிய அமெரிக்காவின் இராணுவ வீரர்களுக்காக ஆரம்பிக்கப் பட்டது. தூரகிழக்கு நாடுகளான அவுஸ்ரேலியா, நியூஸிலாந்து போன்றவற்றில் பணிபுரியும் அமெரிக்க வீரர்கள் தொலைக்கல்வி முறையில் உயர்கல்வியைப் பெற வாய்ப்பு ஏற்பட்டது. இம் முறை இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் உலகம் எங்கணும் பின்பற்ற முடிந்தது. இந்தியாவில் இந்திராகாந்தி பல்கலைக் கழகத்தின் தொலைக் கல்வித்துறையினூடாகப் பல்லாயிரம் மாணவர்கள் பயன்பெற்றனர். இலங்கையில் 1980 ஆம் ஆண்டு அளவில் பயிற்றப்படாத ஆசிரியர்கள் தொலைக்கல்வி மூலம் பயிற்சி பெற வாய்ப்பேற்பட்டது.

42. தொலைக்கல்வியானது வயது வேறுபாடின்றி எவரும் கற்கவும், தூர இடத்தில் இருந்து கொண்டு கற்கவும், ஒப்படைகள், நாட் பாடசாலைகள் ஆகியவற்றைப் பேணவும், செலவு குறை வாயிருக்கவும், சுயகற்றலினூடாகப் பரீட்சைக்குத் தோற்றவும் வாய்ப்புகளை வழங்குகிறது. தற்காலத்தில் ஆசிரியர் – மாணவர் நேருக்கு நேர் சந்திக்காமலேயே இலத்திரனியல் சாதன உதவியுடன் கற்க முடிகிறது.

43. இலங்கையில் தேசிய கல்வி நிறுவகம், திறந்த பல்கலைக்கழகம் ஆகியவை தொலைக்கல்வியை வழங்குகின்றன.

44. மீண்டும் எழும் கல்வி அல்லது புனரமைப்புக் கல்வியென்பது உரிய காலத்தில் பெறமுடியாமற் போன கல்வியை மீண்டும் பெற்றுக் கொள்ளுதலாகும் தேவையைப் பொறுத்து விட்ட

இடத்திலிருந்து தொடரவோ, புதிய பகுதிகளை இணைத்துக் கற்கவோ முடியும்.

45. நாட்டுக்கு நாடு தெரிவு செய்யப்படும் அரசியல் கொள்கைகளுக் கேற்றதாகக் கல்வியிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. முன்னுரிமை வகிக்கும் அரசியல் நோக்குகளாகப் பொது வுடைமை நோக்கு, சனநாயக நோக்கு, முதலாளித்துவ நோக்கு, ஏகாதிபத்திய நோக்கு ஆகியன விளங்குகின்றன.

46. 2000 ஆம் ஆண்டில் அனைவருக்கும் கல்வி என்ற கோட்பாடு 1972 ஆம் ஆண்டு யுனெஸ்கோவினால் முன்மொழியப்பட்டது.

47. வாழ்க்கையின் எல்லாப் பருவங்களுக்கும் ஏற்றதாக வாழ்நாள் முழுவதும் வழங்கப்படும் கல்வியே பூரணமான கல்வி அல்லது நிறை கல்வி எனப்படும்.

48. இன்று உலகம் தகவல் தொழினுட்ப வளர்ச்சி காரணமாக உலகக் கிரமமாக (Global Village) மாறிவருகிறது. உலகம் முழுவதுக்குமான கலாசாரம் தோன்றியுள்ளது. எனவே பூகோள (உலக) சமுதாயத்திற்கு இசைவான கல்வி வழங்கப்பட வேண்டிய தேவை அதிகரித்துள்ளது. இத்தகைய கல்வி முறை மையே பூகோள சமுதாயத்திற்கான கல்வி (Education for a Global Society) எனப்படும்.

49. பல்வேறு சமூகங்கள் வாழுகின்ற, பல்லினப் பண்பாடு காணப்படு கின்ற நாடுகளில் மக்களிடையே புரிந்துணர்வு, விட்டுக்கொடுப்பு, பொறுமை, சகிப்புத் தன்மை, பிற பண்பாடுகளை மதித்தல் முதலானவற்றை ஏற்படுத்தும் பொருட்டுப் பல் கலாசாரக் கல்வி (Multi Cultural Education), சமாதானக் கல்வி (Peace Education) என்பன முன்னெடுக்கப்படுகின்றன.

50. கற்பித்தல் துணைச் சாதனங்கள் ஆபத்தில்லாதவையாகவும், எளிதாகக் கையாளக் கூடியவையாகவும், விடயத்திற்கு மிகவும் பொருத்தமானவையாகவும், தயாரிப்புச் செலவு மிகவும் குறைந்தவையாகவும், மீள் பயன்பாட்டுக்கு உரியவையாகவும், கவர்ச்சிகரமானவையாகவும் இருத்தல் வேண்டும்.

51. உண்மையான பொருட்களின் பிரதி வடிவங்களாக முப்பரிமாணங்களில் உருவாக்கப்படும் மாதிரியுருக்கள், மாணவர்கள் பொருத்தமான எண்ணக்கருவைப் பெறவும், கற்றல்

இலகுவாக்கப்படவும் உதவுகின்றன. இவை பெருத்த, சிறுத்த, வெட்டுமுகத் தோற்றங்களில் காணப்படுவன.

52. இலங்கையில் இலவசப் பாடநூல் திட்டம் 1980 ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வந்தது.

53. இலங்கையில் பாடசாலை மாணவர்க்கான இலவசச் சீருடை விநியோகம் 1993 ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்தது.

54. கல்வித்துறையில் கட்டுருவாக்க (Constructive) கல்வியலாளர்களாக ஜோன்டுயி, பெஞ்சமின்புளூம், புரூணர், மரியா மொண்டிசோரி போன்றோர் முக்கியத்துவம் பெறுகின்றனர்.

55. இலங்கையில் 2000 ஆம் ஆண்டுமுதல் உலக வங்கி உதவித்திட்டத்தின் கீழ் பாடசாலைகளின் தர உள்ளீடுகளுக்காக (Quality inputs) நிதி ஒதுக்கும் பணி ஆரம்பமானது.

56. மாணவர்கள் அனைவரையும் ஒரு குறிப்பிட்ட, குறைந்தபட்ச மட்டத்துக்கேனும் உந்தித் தள்ளி விடுவதைக் கருத்திற் கொண்டே முன்முகவூட்டல் (Feed Forward), பின்னூட்டல் (Feedback) ஆகியன வழங்கப்படுகின்றன.

57. வகுப்பறையில் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின் போது "5E" மாதிரியைப் பின்பற்றுகையில் அதன் செயற்பாட்டுத் திட்ட மாதிரியில் பின்வருவன அடங்குதல் வேண்டும்.

1. தேர்ச்சி

1.1. தேர்ச்சி மட்டம், நேரம், தரவிருத்தி உள்ளீடுகள், கற்றல் - கற்பித்தல் செயன்முறை படிமுறை

1.1.1. இணைத்தல் (Engagement)

1.1.2. தேடல் (Exploration), கணிப்பீட்டுப் படிமுறை (Assess ment)

1.1.3. விளக்குதல் (Explanation), மதிப்பீடு (Evalution)

58. 5E' மாதிரிக் கற்றல் - கற்பித்தலில் தேடல் அல்லது கண்டறிதலின் போது கணிப்பீட்டையும், விளக்கமளித்தலின் போது மதிப்பீட்டையும் ஆசிரியர் மேற்கொள்ள முடியும்.

59. இலங்கை அரசாங்கத்தினால் பாடசாலை மாணவர்களுக்காக நடத்தப்படும் பொதுப் பரீட்சைகளாக

i. ஐந்தாந்தரப் புலமைப்பரிசில் பரீட்சை

ii. க.பொ.த (சாராரண) தரப்பரீட்சை

iii. க.பொ.த (உயர்தரப்) பரீட்சை ஆகியன விளங்குகின்றன.

60. இலங்கையில் விஞ்ஞானக் கல்வியை வழங்கும் நிறுவனங்களாக

i. பாடசாலைகள்

ii. பல்கலைக்கழகங்கள்

iii. விதாதாவளநிலையங்கள்

iv. நெனசல அறிவகங்கள்

v. விஞ்ஞான சங்கங்கள் போன்றவை செயற்படுகின்றன.

61. விஞ்ஞான தொழினுட்ப அறிவைக் கிராமங்களுக்கும் கொண்டு செல்லும் பொருட்டு ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் விதாதா வள நிலையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மஹிந்த சிந்தனைத் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட இவற்றின் செயற்பாடுகள் பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களினூடாக மேற்கொள்ளப் படுகின்றன. இவை விஞ்ஞான தொழினுட்ப அமைச்சினூடாக நிர்வகிக்கப் படுகின்றன.

62. 2008 ஆம் ஆண்டு நெனசல அறிவகங்கள் நாடு முழுவதும் உருவாக்கப்பட்டன. இவைகளும் மஹிந்த சிந்தனை வேலைத் திட்டத்தின் கீழ், சனாதிபதி செயலகத்தின் நேரடிக் கண்காணிப்பில் செயற்படுகின்றன. "உலக அறிவு கிராமத்திற்கு" என்னும் தொனிப்பொருளில் தகவல் தொழினுட்பக் கூடங்களாக (கணினி) விளங்குகின்றன.

63. இலங்கையில் பாடசாலை மட்டத்திலான கணனிக்கல்வி 1983 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. 1998ஆம் ஆண்டு கல்விச் சீர்திருத்தத்தில் பாடசாலைகளிலும் பல்கலைக்கழகங்களிலும்

ஒன்றிணைந்த தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் (Intergrated ICT) அறிமுகப்படுத்தப்பட்டது.

64. இலங்கையின் எழுத்தறிவு வீதம் 94 ஆகும் (2015).

65. 2015 இல் இலங்கைப் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 40 இலட்சமாகும்.


66. இலங்கையில் ஐந்நூற்றுக்கு மேற்பட்ட 1AB பாடசாலைகளும், இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட 1C பாடசாலைகளும் காணப் படுகின்றன. ஐயாயிரத்துக்கு மேற்பட்ட தரம் ii பாடசாலைகளும் உள்ளன.

67. பொதுக் கல்வியுடன் விசேட கல்வியையும் இணைத்து வழங்குதல் உள்ளடக்கக் கல்வி எனப்படும்.

68. இலங்கையில் இரண்டேகால் இலட்சம் முதியவர்கள் பாடசாலைப் பக்கமே போகாதவர்கள் என்பதை புள்ளி விபரங்கள் (2015) எடுத்துக் காட்டுகின்றன. இது மொத்தச் சனத்தொகையில் 10 வீதத்திற்கும் அதிகமானதாகும்.

69. சர்வதேச எழுத்தறிவு தினம் ஆகஸ்ட் 08 ஆகும். 1965 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15 ஆம் திகதி இது யுனெஸ்கோவினால் பிரகடனப்படுத்தப்பட்டு 66 ஆம் ஆண்டு முதல் கொண்டாடப்பட்டு வருகின்றது.

70. இலங்கையின் கல்வித் துறையில் 2017 ஆம் ஆண்டு முதல் புதிய மாற்றங்களை கொண்டு வருவதற்கு தேசிய கல்வி நிறுவகம் தீர்மானித்துள்ளது. தரம் 11, 12 வகுப்புகளில் கல்வி பயிலத் தகைமை பெறாத மாணவர்கள் (40 வீதத்தினர்) வேறு பாடங்களைத் தெரிவு செய்து கற்பதற்கு வசதியளிக்கப்பட உள்ளது. எதிர்காலச் சவால்களைச் சமாளிக்கக்கூடியதாக கல்வித்துறை மாற்றங்களை ஏற்படுத்தத் தேசிய மட்டத்தில் குழு நியமிக்கப்படும். அதன் கீழ் ஆரம்ப, கனிஸ்ட இடைநிலை, சிரேஸ்ட இடைநிலைப் பாடத் திட்டங்களுக்காக மூன்று உப குழுக்கள் நியமிக்கப்படும். இதற்குத் தொழில்சார், கல்விசார் அறிஞர்கள் நியமிக்கப்படுவர்.



ISBN 978 - 955 - 42642 - 0 - 5

ஸ்ரீ மாருதி பதிப்பகம்